116645

தமிழ்நாடு
சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
செயலக வெளியீடு

மார்ச் 24, 1997 தொகுதி 24
எண் 3

©

D
211,31'N97
N97.24.3
216642

வெளியீடு 30-4-98 Issued 30-4-98

1156/98

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

**திங்கட்கிழமை, மார்ச் 24, 1997 - தொகுதி 24 - எண் 3**

**Monday the 24th March, 1997 - Volume 24 - No. 3**

... மன்றப் பேரவைச் செயலகம், சென்னை - 600 009
**...ve Assembly Secretariat, Fort St. George,**
**Chennai-600 009**

**[Price Rs. 3.00**

D.
24,31 N97
N97.24.3
211147

1156/98

**24-3-1997**

## உள்ளடக்கம்


| | பக்கங்கள் |
| --- | --- |
| 1. வினாக்கள்—விடைகள்— | |
| உடுக்குறியிட்ட வினாக்கள் | 445-491 |
| 2. சிறப்புக் கவன ஈர்ப்பு— | |
| (அ) நாகை-காயிதே மில்லத் மாவட்டம், திருமுல்லைவாசல் கிராம நடுநிலைப் பள்ளி மாணவிகள் சிலர் கற்பழிக்கப்பட்டமை. | 492-497 |
| (ஆ) சென்னை அமைந்தகரையில் 23-3-1997 அன்று காவல் துறையினருக்கும் வேறு சிலருக்கும் மோதல் ஏற்பட்டமை. | 497-500 |
| 3. அறிவிப்பு— | |
| (அ) உறுப்பினர் கொடுத்துள்ள அறிவிக்கை குறித்து | 500 |
| (ஆ) தமிழ்நாடு நில மேம்பாட்டு வாரிய நிர்வாகக் குழு உறுப்பினர்கள் நியமனம் | 503 |
| 4. கவன ஈர்ப்பு- | |
| ஏ.டி. பன்னீர்செல்வம் மாவட்டம், திருத்துறைப்பூண்டி தொகுதி, திருத்தங்கூர் ஆரம்ப சுகாதார நிலையத்தில் போதிய மருத்துவர்கள் இன்மை | 500-503 |
| 5. மானியக் கோரிக்கைகள், 1997-98, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி. | |
| (அ) கோரிக்கை எண் 35—பாசனம் | 503-611 |
| (ஆ) கோரிக்கை எண் 36—பொதுப் பணிகள், கட்டிடங்கள் | |
| (இ) கோரிக்கை எண் 55—பாசனம் குறித்த மூலதனச்செலவு | |
| (ஈ) கோரிக்கை எண் 56—பொதுப் பணிகள் கட்டிடங்கள் குறித்த மூலதனச்செலவு | |

| | பக்கங்கள் |
|---|---|
| 6. மானியக் கோரிக்கைகள், 1997-98, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி. | |
| *மாண்புமிகு திரு. துரைமுருகன் | 504, 508, 511, 515, 518, 524, 527, 528, 579-603 |
| *திரு. பா. வேல்துரை | 515, 519-528 |
| *திரு. ஏ. ஜி. சம்பத் | 529-534 |
| *திரு. டி. மணி | 507, 511, 535-540, 605,607 |
| *திரு. துரை. சந்திரசேகரன் | 540-546 |
| *திரு. பி. என். வல்லரசு | 546-552 |
| *திரு. கொ. வி. நன்னன் | 552-557 |
| திரு. வை. சிவபுண்ணியம் | 509, 557-561, 604, 606 |
| திரு. கே. வேணு | 561-564 |
| திரு. ஜி. நிஜாமுதீன் | 506, 510, 514, 517, 564-567, 605, 607, 609, 610 |
| *திரு. என். பெரியசாமி | 509, 513, 567-570, 606, 608, 610 |
| திரு. ஜி. கே. மணி | 506, 510, 514, 517, 570-574, 605, 607, 609 ,610 |
| திரு. சொ. கருப்பசாமி | 574-575 |
| திரு. டி. அமரமூர்த்தி | 575, 576-579 |
| 7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.— | 611 |


216647

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

**பங்குனி 11, தாது—திருவள்ளுவர் ஆண்டு 2028**

**1997 மார்ச் 24, திங்கட்கிழமை**

மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. பி.டி.ஆர். பழனிவேல் ராஜன்** அவர்கள் தலைமையில் காலை 9-30 மணியளவில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

"ஆள்வினையும் ஆன்ற அறிவும் எனஇரண்டின்
நீள்வினையால் நீளும் குடி"

ஆழ்ந்த அறிவும், விடாமுயற்சியும் கொண்டு ஒருவன் அயராது பாடுபட்டால் அவனைச் சேர்ந்துள்ள குடிமக்களின் பெருமை உயரும்.

## 1. வினாக்கள்-விடைகள்

### நட்சத்திரக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 301, திரு. இரா. ஆவுடையப்பன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**301—**

**கனரகத் தொழிற்சாலைகள் அமைத்தல்**

***2195—திரு. இரா. ஆவுடையப்பன் :**

மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டத்தில் கனரகத் தொழிற்சாலைகள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இம்மாவட்டத்தில் அரசு தொடர்புடைய நிறுவனம் ஏதும் புதிதாக கனரகத் தொழிற்சாலைகள் தொடங்கும் செயற்குறிப்பு இல்லை. ஆனால் தனியார் நிறுவனம் ஏதும் அங்கே கனரகத் தொழிற்சாலை தொடங்க முன்வந்தால் தொழில் வளர்ச்சியை ஊக்குவிக்கும் வகையில் அனைத்து உதவிகளையும் அரசு செய்யும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. கு. ரவி அருணன்.

**திரு. கு. ரவி அருணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெல்லை மாவட்டம் அம்பாசமுத்திரம் பகுதியிலே கூட்டுறவு சர்க்கரை ஆலை அமைக்கும் பணி எந்நிலையில் உள்ளது என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, இது கனரகத் தொழிற்சாலை பற்றிய கேள்வி. இதில் சர்க்கரை வராது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. பா. வேல்துரை.

**திரு. பா. வேல்துரை :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெல்லை-கட்டபொம்மன் மாவட்டத்தில் கடந்த 20 ஆண்டுகளுக்கு முன்பாகத் துவங்கப்பட்ட தொழில்களைத் தவிர புதிதாக எந்தத் தொழிலும் துவங்கப்படவில்லை. தற்போது, தமிழக முதல்வர் அவர்கள் தமிழ்நாட்டை தொழில் வளர்ச்சியிலே முன்னேற்றுகின்ற வகையில் பல தொழில்களை உருவாக்கும் முயற்சியில் ஈடுபட்டிருக்கிறார்கள். தொழில் துறையிலே பின்தங்கிய மாவட்டங்களில், வேலை வாய்ப்பு இல்லாத இளைஞர்களுக்கு சமமான வேலை வாய்ப்பை அளிக்கும் வகையில் இந்தத் தொழில்கள் துவங்குவதிலே வாய்ப்பு அளிக்கப்படுமா என்று நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, நெல்லை–கட்டபொம்மன் மாவட்டத்தில், மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டது போல, ஏற்கனவே 16 பஞ்சாலைகள் உட்பட 22 பெரிய மற்றும் நடுத்தரத் தொழிற்சாலைகள் இயங்கி வருகின்றன. நெல்லை நகரை ஒட்டியுள்ள பேட்டை என்கிற இடத்தில் ஒரு தொழிற்பேட்டை இயங்கி வருகிறது. அங்கே 46 தொழிற்கூடங்கள் செயல்பட்டு வருகின்றன. அம்பாசமுத்திரத்தில் 10 சிறிய தொழிற்கூடங்களைக் கொண்ட ஒரு தொழிற்பேட்டை இயங்கி வருகிறது. இப்போது கங்கைகொண்டான் தொழில் மையம் ஒன்றை (Industrial Centre) அமைப்பதற்கான முயற்சிகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன. இந்தத் திட்டத்தினுடைய மதிப்பீடு ரூ. 32.40





கோடியாக இருந்தது. திருத்தப்பட்ட மதிப்பீடாக இப்போது ரூ. 39.68 கோடியாக இந்த கங்கைகொண்டான் `Industrial centre' உருவாக்கப்பட இருக்கிறது. என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. ஏ. ராசேந்திரன்.

**திரு. ஏ. ராசேந்திரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வடாற்காடு மாவட்டத்திலிருந்து திருவண்ணாமலை–சம்புவராயர் மாவட்டம் பிரியும்போது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தொழிற்சாலைகளை எல்லாம் வடாற்காடு மாவட்டத்திலே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இது நெல்லை மாவட்டம் குறித்த கேள்வி.

**திரு. ஏ. ராசேந்திரன்:** தொழிற்சாலைகள் என்ற காரணத்திற்காக கேட்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** உட்காருங்கள், திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு மாநிலத்தின் வளர்ச்சியில் `Heavy Industries' மிக முக்கிய பங்காற்றுகிறது. எனவே தமிழ்நாட்டில் `Heavy Industries' உருவாக்குவதற்குரிய சிறப்புத் திட்டம் ஏதேனும் அரசின் பரிசீலனையில் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, முதலீடுகளின் மதிப்பீட்டில்தான் இப்போது கனரகத் தொழிற்சாலைகள் நிர்வகிக்கப்படுகின்றன. அந்த வகையிலே தமிழகத்தைப் பொறுத்தவரையில், கடந்த 6, 7 மாதங்களில் 2, 3 பெரிய தொழிற்சாலைகளுக்கான திட்டங்கள் வகுக்கப்பட்டு, அவை தொடங்கப்பட்டு, நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளன. மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டது போன்ற தொழிற்சாலைகளை அமைப்பதற்கு மத்திய அரசு முன்வரவேண்டும். அதற்கு மாநில அரசு முயற்சிகளை மேற்கொள்ளும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கனரகத் தொழிற்சாலைகள் எவை எவை என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இங்கே அறிவிப்பார்களா? எங்களுடைய வடாற்காடு–அம்பேத்கர் மாவட்டத்தைப் பொறுத்தவவரையில்—நம்முடைய மண்ணின் மைந்தர் இப்போது மத்திய `Heavy Industries' அமைச்சராக இருக்கிற

நேரத்தில்—வேலூர் தாலுக்காவில் புதிய கனரகத் தொழில்கள் அமைக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 9-35

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மூலக்கேள்வி நெல்லை மாவட்டம் சம்பந்தமானது. அது தொடர்பாகத்தான் கேட்க வேண்டும். கனரகம் என்றால் என்னவென்று கேளுங்கள், அதற்கு வேண்டுமானால், முதலமைச்சர் அவர்கள் பதில் சொல்வார்கள். உங்களுடைய வடாற்காடு மாவட்டத்திற்குச் சொல்ல முடியாது. திரு. ப. ரங்கநாதன்.

**திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஐந்து ஆண்டுத் திட்டத்தில் மத்திய அரசு மூலமாக, நேரடியாக, அவர்களுடைய மூலதனத்தில், தமிழகத்திலே, ஹெவி இண்டஸ்டிரீஸ் துவங்குவதற்கு செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?, அதே போன்று சேலத்திலே இரும்பு ஆலையை விரிவாக்கும் திட்டம் ஏதாவது மத்திய அரசினுடைய செயற் குறிப்பிலே உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அருமையான கேள்விகள், ஆர்வம் மிக்க கேள்விகள். இதனைத் தொழில் மானிய விவாதத்திலே வைத்துக்கொள்ளலாம். (சிரிப்பு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வினா எண் 302, திருமதி ஏ. ஆர். வேடம்மாள், டாக்டர் காஞ்சனா கமலநாதன், மற்றும் திரு. கு. மனோகரன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**302—**

**'மாலிப்டினம்' தொழிற்சாலை தொடங்குதல்**

***2400—திருமதி ஏ.ஆர். வேடம்மாள், டாக்டர் (திருமதி) காஞ்சனா கமலநாதன், திரு. கு. மனோகரன் :**

மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரூர் வட்டத்தில் 'மாலிப்டினம்' தொழிற்சாலை தொடங்கும் திட்டம் அரசின் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,





(அ) ஆம்.

(ஆ) அரூர் மக்களின் வேண்டுகோளுக்கிணங்க, தருமபுரி மாவட்டம், அரூர் வட்டம், வெளாம்பட்டி கிராமத்தில், இத்தொழிற்சாலையை அமைக்க அரசு முடிவு எடுத்து மேல் நடவடிக்கை எடுத்து வருகிறது.

**திருமதி ஏ. ஆர். வேடம்மாள் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிய மாலிப்டினம் தொழிற்சாலையானது எத்தனை கோடி ரூபாய் முதலீட்டில், எப்போது செயல்படத் தொடங்கும்? இதில் எத்தனை பேருக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும் என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போதுதான் அதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. இந்தத் திட்ட மதிப்பீடுகள் எல்லாம் பின்னர் வெளியிடப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** டாக்டர் காஞ்சனா கமலநாதன்.

**டாக்டர் காஞ்சனா கமலநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலக கனிமச் சந்தையில், மிக மிக முக்கியமான இடத்தை வகிக்கும் தரத்தைப் பெற்றுள்ள இந்த மாலிப்டினம் மெட்டல், தருமபுரி மாவட்டத்தின் கனிம வரைபடத்தில் அடிக்கோடிடப்பட்டு, உயர்த்தி அடையாளம் காட்டப்பட்டு, பெருமை ஈட்டித் தரப் போகிறது. இந்தக் கனிமத்தை எடுத்துப் பிரித்துப் பார்த்து, இந்திய புவியியல் கழக அமைப்புகளுடன் தமிழ்நாடு கனிம நிறுவனம் கருத்தொருமித்த ஒப்பந்தம் ஏதேனும் போட்டு இருக்கிறதா, பூர்வாங்க அறிக்கை ஏதேனும் பெறப்பட்டுள்ளதா என்ற விவரத்தைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மாலிப்டினம் பற்றி இந்த அவையிலுள்ள உறுப்பினர்கள் பலருக்கும் கூட அவ்வளவாகத் தெரியாது என்று கருதுகிறேன். (குறுக்கீடு) எல்லோரும் ஆமாம் என்று சொல்கிறார்கள். எனக்குக்கூட சமீபத்திலேதான் தெரியும் அதைப்பற்றி. ஏனென்றால், விமானத் தொழிற்சாலை மற்றும் விண்வெளிக்கலங்களில் அதிக அளவில் பயன்படுத்தப்படுகிற ஒரு உலோகம் மாலிப்டினம் என்பது ஆகும். இதை எஃகுத் தொழிற்சாலைகளிலே கூட அதிக அளவிலே பயன்படுத்துகிறார்கள். இந்தியாவினுடைய வருடாந்திரத் தேவையான 400 டன் மாலிப்டினம், அமெரிக்கா மற்றும் கனடா நாடுகளிலிருந்துதான் இறக்குமதி

செய்யப்படுகிறது என்பதையும் இந்த அவைக்குத் தெரிவிக்க வேண்டியவனாக இருக்கிறேன். தமிழ்நாட்டில் இந்த மாலிப்டினம் கனிமம், மாண்புமிகு உறுப்பினர் காஞ்சனா அவர்கள் குறிப்பிட்டதைப் போல, தருமபுரி மாவட்டத்தில், அரூர்க்கு தெற்கிலும், ஊத்தங்கரைக்கு வடக்கில் உள்ள பகுதிகளிலும், முக்கியமாக அரூர் வட்டம், வெளாம்பட்டி தெற்குப் பகுதியிலும் திண்டுக்கல் மன்னர் திருமலை மாவட்டத்தில், கரடிக்குட்டம் மற்றும் அழகுப்பட்டிப் பகுதியிலும், வடாற்காடு-அம்பேத்கர் மாவட்டத்தில், ஆலங்காயம் பகுதியிலும் காணப்படுகிறது. குறிப்பாக, தருமபுரி மாவட்டத்திலே, அரூர் வட்டத்தில், வெளாம்பட்டி தெற்குப் பகுதியில் 200 ஹெக்டேர் பரப்பளவிலே மாலிப்டினம் கனிமத்திற்கு சோதனை ஆய்வு நடத்த தமிழ்நாடு கனிம நிறுவனத்திற்கு உரிமம் வழங்கப்பட்டிருக்கிறது என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றேன். அரூர் வட்டத்திலே, வெளாம்பட்டி தெற்குப் பகுதியிலே மாத்திரம், இந்திய புவியியல் ஆய்வு அமைப்பினால், விரிவான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு அதன் மூலம் சுமார் 160 மீட்டர் ஆழத்திற்கும் கீழ் மாலிப்டினம் கனிமம் கிடைப்பதாகக் கண்டறியப்பட்டுள்ளது. வடாற்காடு-அம்பேத்கர் மாவட்டத்தில், ஆலங்காயம் பகுதிகளில் கனிமம் கொண்ட பகுதி சுமார் 27 கி.மீ. நீளத்திற்கு இருப்பதாகவும் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. இதனுடைய ஆய்வுகள் எல்லாம் நடைபெற்று வருகின்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. கு. மனோகரன்.

**திரு. கு. மனோகரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரி மாவட்டத்திற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முன்பு முதலமைச்சராக இருந்தபோது, ஒசூர் சிப்காட் வளாகம், அதேபோல இரண்டு சர்க்கரை ஆலைகள், இப்போது மாலிப்டினம் தொழிற்சாலை எல்லாம் வழங்கியுள்ளீர்கள். வேலை வாய்ப்பிலே பின்னுக்குத் தள்ளப்பட்ட இந்த மாவட்டத்திற்கு இவையெல்லாம் வழங்கியதற்கு நன்றி தெரிவிக்கும் அதே வேளையில், தருமபுரி மாவட்டத்திலே, தீர்த்தமலைப் பகுதியில் சிறப்பான வெள்ளைக் கல் படிவங்களும், ஊத்தங்கரைப் பகுதியில் இரும்புத் தாதுவும் கிடைக்கின்றன. எனவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒரு சிறப்பான ஆய்வினை மேற்கொள்ள ஒரு உத்தரவு வழங்கி அதனடிப்படையில் துணைத் தொழில்கள் தொடங்கிட ஆவன செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.



முற்பகல் 9-40

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாலிப்டினம் என்பது என்னவென்று எல்லோருக்கும் தெரியாமல் இருக்கும்போதே இந்த அரசு அங்கே தொழிற்சாலையை உருவாக்க முனையும்போது, அதற்கான ஆய்வுகள் நடத்திக் கொண்டிருக்கும்போது, மற்ற தொழிற்சாலைகளை நிறுவுவதற்குத் தயங்காது என்பதனை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி. கே. மணி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தர்மபுரி மாவட்டம் தொழில் வளர்ச்சியில் மிகவும் பின்தங்கிய மாவட்டம் என்பதற்காக நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த மாலிப்டினம் தொழிற்சாலையைத் துவங்குவது வரவேற்கக்கூடியது. அதற்காக மாவட்ட மக்களின் சார்பிலே மனதார நன்றியைத் தெரிவித்துக் கொள்கிற அதே நேரத்தில், அந்தத் தொழிற்சாலையை அதிக அளவு வேலைவாய்ப்பு கொடுக்கக்கூடிய வகையிலே மிகப்பெரிய தொழிற்சாலையாக நிறுவ ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆய்வுகள் முடிவுற்ற பிறகு ஆவன செய்யப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 303, திரு. வி. பி. இராசன், திரு. ஆ.மு. முனிரத்தினம், திரு. கே. மணிவர்மா மற்றும் திரு. செ. இராமலிங்கம் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

**303—**

## கோயில்களுக்கு இலவச மின்சாரம்

***1788—திரு. வி.பி. இராசன்:**
**திரு. ஆ.மு. முனிரத்தினம்:**
**திரு. கே. மணிவர்மா:**
**திரு. செ. இராமலிங்கம்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[1997 மார்ச் 24

வருமானம் இல்லாத கோயில்களுக்கு இலவச மின்சாரம் வழங்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

**திரு. வி.பி. இராசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'இறைவனிடம் கையேந்துங்கள் அவன் இல்லையென்று சொல்லுவதில்லை' என்று சொல்வார்கள். அதுபோல, மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கையேந்துகிறோம். வருமானம் இல்லாத கோயில்களுக்கு விளக்கேற்றி வைத்த பெருமை உங்களுக்குச் சேரும். குடிசைகளுக்கு வழங்குவதுபோல ஒரு விளக்காவது கோயில்களுக்கு வழங்கும் முயற்சியில் அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இறைவனிடம் கையேந்துங்கள் என்று சொல்வது போல, என்னிடம் கையேந்துவதாக உறுப்பினர் குறிப்பிட்டார். இப்போது, ஏற்கெனவே தமிழ்நாட்டில் விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் கொடுத்துக்கொண்டிருக்கிறோம். 20 இலட்சம் குடிசைகளுக்கு இலவச மின்சாரம் தருகிறோம். ஆலயங்களுக்கும் இலவச மின்சாரம் கொடுத்தால், பிறகு வாரியத்தை ஆண்டவனால் கூடக் காப்பாற்ற முடியாது.

**திரு. கே. மணிவர்மா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு கிராமத்திலும் பழமையான கோயில்கள் ஒன்றிரண்டுதான் இருக்கின்றன. அவை அனைத்தும் இருண்டு கிடக்கின்றன. மின்சார இணைப்புகள் இருந்தும், மின் கட்டணம் செலுத்த முடியாமல் இருண்டு கிடக்கின்றன. எனவே, மின்சாரக் கட்டணத்தை ரத்துசெய்து, அந்தக் கோயில்கள் ஒளி பெறுவதற்கும், கிராமங்களிலே இருக்கிற மக்கள் வாழ்வில் வளம் பெறுவதற்கும், ஆன்மீகத்தில் இருக்கிறவர்கள் எல்லாம் தினந்தோறும் காலையிலும் மாலையிலும் ஆண்டவனைத் தரிசித்து அவர்கள் பயன்பெறுவதற்கும் இந்த அரசு, கோயில்களுக்கு மின் கட்டணத்தை ரத்து செய்து, இலவச மின்சாரம் வழங்குவதோடு, மாண்புமிகு முதல்வர் அவர்கள் கடவுளுக்கும் கருணையுள்ளத்தோடு கிராமப்புறங்களிலே சீர்கெட்டுக் கிடக்கின்ற கோயில்களுக்குத் திருப்பணி செய்ய ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.



1997 மார்ச் 24]

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆலயத்திலே உள்ள ஆண்டவனுடைய தலையைச் சுற்றியே ஒளி வட்டம் இருக்கிற காரணத்தால் இந்த ஒளி தேவையில்லை என்று நான் கருதுகிறேன். (சிரிப்பு)

**திரு. செ. இராமலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நலிவடைந்த பல்வேறு பிரிவினர்களின் வாழ்க்கையில் ஒளியேற்றிய மாண்புமிகு முதல்வர் அவர்கள்—நலிவடைந்த, வருவாய் குன்றிய கோயில்களுக்கு தற்போது மின் கட்டணம் 'கமர்ஷியல் டேரிப்' அடிப்படையில் வசூலிக்கப்படுகிறது. அதையாவது மாற்றி, டொமஸ்டிக் சர்வீஸ்களுக்கு வசூலிக்கிற அளவு, சிங்கிள் டாரிப்-ஆக வசூலிக்க ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆலயங்களைப் பொறுத்தவரையில், எல்லா ஆலயங்களுக்கும் கமர்சியல் டாரிப் வசூலிப்பது இல்லை, ஆலயங்களுக்கு, டாரிப்-7-ன் கீழ் மின்சாரக் கட்டணத்தை வசூல் செய்து வருகிறோம். ஆனால், ஆலயங்களைச் சுற்றிக் கடைகள் கட்டியிருப்பார்களேயானால் அந்தக் கடைகளுக்குப் டாரிப்-9-ன் கீழ் மின் கட்டணம் வசூல் செய்யப்படுகிறது. எனவே, ஆலயங்களைப் பொறுத்தவரையில், விளக்குகள் போட்டு அங்கே மின்சாரத்தைப் பயன்படுத்தினால் டாரிப் 7-ன் கீழ் தான் மின் கட்டணத்தை வசூல் செய்து கொண்டிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண். 304, திரு. சி.டி. தண்டபாணி, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

**304—**

**தனியார் துறையில் மின் நிலையம் துவங்குதல்**

***4080—திரு. சி.டி. தண்டபாணி:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூரில் தனியார் துறையில் மின் நிலையம் துவங்க அனுமதி கோரப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதற்கு அனுமதி அளிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : தனியார் துறையில் பலதரப்பட்ட எரிபொருளைக் கொண்டு குறுகிய காலத்தில் மின்சாரம் தயாரிப்பதற்காக ஒரு அனல் மின் நிலையத்தை கோயம்புத்தூரில் சிறுமுகை என்ற இடத்தில் நிறுவுவதற்கு தொழில் வளர்ச்சிக் கழகம் நடவடிக்கை எடுத்து வருகிறது.

முற்பகல் 9-45

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. சி.டி. தண்டபாணி, இருக்கையில் இல்லை. திரு. எஸ்.எஸ். பொன்முடி.

**திரு. எஸ்.எஸ். பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மாவட்டத்தில் பல்லடம், போத்தனூர் ஆகிய பகுதிகளில் தனியார்கள் காற்றாலைகள் வைத்து மின்சாரம் தயாரித்து வந்தனர். தற்போது தடைப்பட்டிருக்கிறது. அதற்கான காரணம் என்ன என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட பகுதிகளில் ஏராளமாக காற்றாலைகள் மூலம் மின்சாரத்தைத் தயார் செய்து, அதை மின்சார வாரியத்திற்கு வழங்கிக் கொண்டிருக்கிறார்கள். அதற்கு எந்தவிதமான தடையும் கிடையாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வினா எண் 305, திரு. எம். ஆண்டி அம்பலம், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

**305—**

**புன்செய் நிலங்களைத் தரிசாக மாற்றி பட்டா வழங்குதல்**

***4330—திரு. எம். ஆண்டி அம்பலம்:**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



நத்தம் தொகுதி, செங்குறிச்சி ஊராட்சி மாமரத்துப்பட்டியில் பொதுமக்கள் விவசாயம் செய்து வரும் அரசு தீர்வை ஏற்படாத சுமார் 400 ஏக்கர் புன்செய் நிலங்களை தரிசாக மாற்றி பட்டா வழங்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

'தீர்வை ஏற்படாத தரிசு', 'கரடு' என்று வகைபாடுள்ள இந்த 400 ஏக்கர் புன்செய் நிலங்கள் ஒப்படை செய்யக்கூடாது என்ற நிபந்தனையுடன் தடையாணைப் பதிவேட்டில் பதியப்பட்டுள்ள (Prohibitory Order Book) நிலமாக உள்ளதாலும் வனத் துறைக்கு அந்த நிலத்தை வழங்குவது பரிசிலனையில் உள்ளதாலும் இவற்றை ஒப்படை வழங்க இயலாத சூழ்நிலை உள்ளது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எம். ஆண்டி அம்பலம் இருக்கையில் இல்லை.

வினா எண். 306, திரு. அ. வெங்கடாசலம், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

**306—**

**விவசாயக் கிடங்கு அமைத்தல்**

***697—திரு. அ. வெங்கடாசலம்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர், கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடி தொகுதி, வெண்ணவால்குடியில் விவசாயக் கிடங்கு அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. சோ. ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) வினா எழவில்லை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அ. வெங்கடாசலம், இருக்கையில் இல்லை.

வினா எண். 307 திரு. பொ. முருகேசன், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

**307—**

**விவசாயிகளுக்கு மருத்துவ வசதி**

***3509—திரு. பொ. முருகேசன்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

விற்பனைக் குழுக்களுக்கு வேளாண்மைப் பொருட்களைக் கொண்டு வரும் விவசாயிகளுக்கு மருத்துவ வசதி அளிக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு.சோ. ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

வரும் நிதி ஆண்டில் முதற்கட்டமாக 10 ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் விற்பனைக் குழுக்களுக்கு வேளாண்மைப் பொருட்களைக் கொண்டு வரும் விவசாயிகளுக்கு இலவச மருத்துவ வசதி செய்ய அரசு அனுமதி வழங்கியிருக்கிறது.

**திரு. பொ. முருகேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். அதே வேளையில் அரசு மருத்துவமனையில் அரசு ஊழியர்களுக்கு தனியாக வார்டுகள் ஒதுக்கித் தருவதுபோல, விவசாயிகளுக்கும் அரசு மருத்துவமனைகளில் தனி வார்டுகள் அமைத்துக் கொடுக்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சோ. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களுக்கு, விவசாயிகள் தங்களுடைய உற்பத்திப் பொருட்களை விற்பதற்காகக் கொண்டு வருகிறபோது, உடல்நலம் பாதிக்கப்பட்டால், ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் நியமிக்கப்பட்டுள்ள மருத்துவர்கள், அவர்களுக்கு சிகிச்சை - வைத்தியம் செய்கிறார்கள். வைத்தியம் அளிப்பது ஒழுங்குறை விற்பனைக் கூடங்களில்தான். மருத்துவமனையில் அல்ல



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கு. மனோகரன்.

**திரு. கு. மனோகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் விற்பனை செய்யப்படும் விவசாயிகளின் விளைபொருட்களுக்கு, வியாபாரிகள் உடனடியாகப் பணம் கொடுக்க இயலாததால், 10, 15 நாட்கள் காலதாமதமாகிறது. இதனால் விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர். இந்நிலையை மாற்றிட வங்கியிலுள்ள விற்பனைக் குழுக்களின் உபரி நிதியிலிருந்து உடனடியாக விவசாயிகளுக்கு வழங்க அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சோ. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் விவசாயிகள் பொருட்களைக் கொண்டு வந்து, அதை விற்பனை செய்தால் உடனுக்குடன் அவர்களுக்குப் பணம் கொடுக்க வேண்டும் என்பதற்காகத்தான் கணிப்பொறி கூட இப்போது வாங்கியிருக்கிறோம். கையிலே கணக்குப் போடுவதால் நேரம் அதிகமாகிறது என்கிறபடியால், கணிப்பொறிமூலம் கணக்கிட்டு அன்றைக்கே விரைவாக விவசாயிகளுக்குப் பணம் கொடுக்க வேண்டுமென்று இந்த அரசு ஆணையிட்டுள்ளது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இரா. மணிமாறன்.

**திரு. இரா. மணிமாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள், பிரிக்கப்படாமல் ஒன்றுபட்ட மாவட்டங்களின் தலைநகரங்களில் இயங்கி வருகின்றன. இப்போது மாவட்டங்கள் பிரித்திருக்கக்கூடிய நிலையில், ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் பிரிக்கப்பட்டு அந்தந்த மாவட்டத் தலைநகரங்களுக்கு மாற்றப்படுமா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 9-50

**மாண்புமிகு திரு. சோ. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் இப்போது மாவட்ட விற்பனைக் கூடங்கள் 14 இருக்கின்றன, ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் 270 இருக்கின்றன. துணை ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் 15, சோதனைச் சாவடிகள் - செக் போஸ்ட் 44, வாணிபப் பொருள் தரம் பிரிப்பு மையம் 96, பருத்தி தரம் பிரிப்பு மையம் 11, புகையிலை தரம் பிரிப்பு மையம் 1 இப்போது இருக்கின்றன. இருப்பினும் புதிதாக இந்த ஆண்டு 3 மாவட்டங்களிலே பிரிக்க நாம் அனுமதித்து இருக்கின்றோம். இன்னும்

உள்ள மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்த இருக்கின்றோம். மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை பரிசீலிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தின் துறையிலே 65 கோடி ரூபாய் உபரியாக இருப்பதாகவும், அந்தத் தொகை நீண்டநாள் பயன்படுத்தப்படாமல் இருப்பதாகவும் அறிகிறேன். அதை போக்குவரத்து நிதிக் கழகத்திடம் ஒப்படைத்து இருப்பதாகவும் அறிகிறேன். அந்தப் பணத்தைக் கொண்டு ஆந்திராவில் இருப்பதுபோல நெல் வணிக வளாகம் அமைக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன். ஆந்திராவிலே வணிக வளாகத்திற்கு வராமல் நெல்லை களத்திலே விற்பனை செய்ய முடியாது. அந்தமாதிரி ஒரு கட்டுப்பாட்டு முறை தமிழகத்திலே கொண்டுவந்தால் அரிசியினுடைய விலையையும் குறைக்க முடியும். ஆகவே, இந்த நெல் வணிக வளாகத்தை மாவட்டத் தலைநகரங்களிலே இந்தத் தொகையைக் கொண்டு அமைக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சோ. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அரசு 1989-லே பொறுப்பு ஏற்ற பிறகும், இப்போது பொறுப்பு ஏற்ற பிறகும் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தின் மூலம் விவசாயிகளுக்கு பல்வேறு உதவிகளைச் செய்ய வேண்டும் என்று நாங்கள் தீவிரமாக கவனம் செலுத்தி வருகின்றோம். அந்த அடிப்படையிலேதான் இந்த ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தின் மூலம் - மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக் காட்டியதைப் போல், இருக்கின்ற நிதியைக் கொண்டு, விவசாயிகள் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்திற்கு வந்தால் அவர்களுக்கு உடல்நலம் பாதித்தால், அவர்களுக்கு வைத்தியம் செய்ய வேண்டும் என்று வழி வகை செய்துள்ளது. அதைப் போல அறுவடை காலத்திலே விவசாயிகளுக்கு களம் இல்லாத ஒரு நிலை ஏற்படுகிறது. அதற்காகத்தான் உலர் களம் அமைப்பது; அதைப்போல வணிக வளாகங்கள் அமைப்பது; இதுபோன்ற வசதிகளை இந்த நிதியிலே இருந்துதான் அவர்களுக்கு இப்போது செய்வதற்கான நடவடிக்கைகளை வேகமாக நாம் எடுத்துக் கொண்டிருக்கின்றோம். அந்த அடிப்படையிலே மாண்புமிகு உறுப்பினர் சொல்கின்ற அந்தக் கருத்தை இந்த அரசு பரிசீலிப்பதோடு, முன்பு மாண்புமிகு உறுப்பினர், திண்டுக்கல் மன்னர் திருமலை மாவட்டத்திலே தனியாக ஒரு ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் அமைக்கப்படுமா என்று கேட்டார்கள். அது திண்டுக்கல்லிலே





இந்த ஆண்டு ஆரம்பிக்க அனுமதிக்கப்பட்டு இருக்கிறது என்று இந்தக் கேள்வியைப் பயன்படுத்தி நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. வ. அன்பழகன்.

**திரு. வ. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்திற்கு வரக்கூடிய விவசாயிகள் காலையிலே வந்தால் மாலை வரை இருந்து தன்னுடைய விளைபொருள்களை விற்றுவிட்டு செல்ல வேண்டிய நிலை இருக்கிறது. அங்கு ஓய்வு எடுப்பதற்கு இடவசதி இல்லாத காரணத்தால், ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்திற்கு வரக்கூடிய விவசாயிகள் ஓய்வு எடுப்பதற்கு ஓய்வுக்கூடம் அமைக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சோ. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது புதிதாகக் கட்டப்படுகின்ற வணிக வளாகங்களில் விவசாயிகளுக்கு அல்லது வணிகர்களுக்கு ஓய்வு எடுப்பதற்கான அறைகளும் கட்டப்படுகின்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இ. கணேசன்.

**திரு. இ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலேயே திருச்செங்கோடு வேளாண்மை உற்பத்தியாளர்கள் சங்கம் மிகச் சிறப்பாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. அதிலே எடப்பாடி தொகுதியில் உள்ள கொங்கணாபுரத்தில் விற்பனை நிலையத்திற்கு வரக்கூடியவர்கள் கர்நாடகத்தைச் சேர்ந்தவரும், ஆந்திராவைச் சேர்ந்தவரும், கேரளாவைச் சேர்ந்தவரும் பருத்தியைக் கொண்டுவருகிறார்கள். கிட்டத்தட்ட 3,4 நாட்கள் கொங்கணாபுரத்திலே அவர்கள் தங்கி தங்களுடைய விளைபொருட்களை விற்று பணத்தை வாங்கிச் செல்ல வேண்டிய நிலை இருக்கிறது. அவர்களுக்கு மருத்துவ வசதியினை இந்த அரசு இந்த நிதி ஆண்டிலே செய்து கொடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சோ. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபோன்ற நிலைமைகளை எல்லாம் இந்த அரசு பரிசீலித்துத்தான் முதல்கட்டமாக இந்த ஆண்டு 10 ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களிலே இந்த மருத்துவ வசதியை அளித்து நடைமுறையில் இதைவிட இன்னும் சிறப்பாக அல்லது எப்படி விரைவுபடுத்தலாம் என்று பரிசீலித்து, தொடர்ந்து எல்லா ஒழுங்குமுறை

விற்பனைக் கூடங்களிலும் இதுபோன்ற வைத்திய வசதி செய்யக் கூடியதை நிச்சயமாக இந்த அரசு பரிசீலிக்கும், நடவடிக்கை எடுக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஏ. ராசேந்திரன்:

முற்பகல் 9-55

**திரு. ஏ. ராசேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் அன்றே பணம் கட்டுவதற்குக் கணிப்பொறிகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் வியாபாரிகள், அவர்களுக்குள்ளாக ஒரு ஒப்பந்தம் செய்து கொண்டு அன்றே பணத்தைத் தருவதில்லை. ஒரு வாரம், பத்து நாள் பொறுத்துக்கூட பணத்தைத் தருகின்றார்கள். குறிப்பாக, போளூர், சேத்பட், திருவண்ணாமலை, வேட்டவலம், அவலூர்பேட்டை மற்றும் செஞ்சி போன்ற பகுதிகளில் 10 நாள் கழித்துதான் பணம் தருகிறார்கள். இதையெல்லாம் தீர்ப்பதற்கு இந்த அரசு என்ன நடவடிக்கை எடுக்கப்போகிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சோ. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொன்ன அந்தக் குறைபாடு திருவண்ணாமலை போன்ற பகுதிகளில் இருந்தால் அரசு அதைப் பரிசீலித்து நடவடிக்கை எடுக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆர். சொக்கர்.

**திரு. ஆர். சொக்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களுக்கு விவசாயிகள் பொருளைக் கொண்டுவருகிறபோது, பல்வேறு சந்தர்ப்பங்களில் அந்தப் பொருள்களை வாங்கிச் செல்லும் வணிகர்கள், இன்றைக்கு 10 டன் கொள்முதல் செய்வோம் என்ற எண்ணத்துடன் போகிறவர்கள், அன்றைக்கு உள்ள சரக்கின் தரம் நன்றாக இருந்தால், 30 டன் 40 டன் என்று கூட கொள்முதல் செய்யக்கூடிய நிலைக்கு ஆசைப்படுகிறார்கள். ஆனால் அதற்குரிய பணத்தை அன்று அவர்கள் கொண்டு வந்திருக்கமாட்டார்கள். இதற்காக அவர்கள் பொருளைக் கொள்முதல் செய்தவுடன் 25 சதவீதம் வணிகர்களிடமிருந்து வாங்கி, மீதி 75 சதவீதத்தை வேளாண்மைத் துறையே கூட கட்டிவிட்டு, 48 மணி நேரத்தில் மீதி அந்த 75 சதவீத பணத்தையும் வணிகர்கள் வேளாண்மைத் துறைக்குச் செலுத்தி அந்தப் பொருள்களை எடுத்துச் செல்லலாம் என்று சொன்னால்,



விவசாயிகளுக்குப் பொருள்களுக்கான விலை கூடுதலாகக் கிடைக்கும் வாய்ப்பு உண்டு, அதே நேரத்தில் வணிகர்களும் பணம் கொண்டுவரவில்லை என்றாலும் இரண்டு நாட்களில் அந்தப் பணத்தைப் திருப்பிச் செலுத்தி விட்டு பொருள்களை எடுத்துச் செல்லும் வாய்ப்பும் ஏற்படும். வேளாண்மைத் துறையில் உபரியாக உள்ள பணத்தை இந்த முறையில் பயன்படுத்துவதால் ஒரு கட்டணத்தை அதற்காக வசூல் செய்வதன் மூலம் வேளாண்மைத்துறைக்கும் வருமானம் கூடுதலாக வரும் வாய்ப்பும் இருக்கிற காரணத்தால், இந்தக் கருத்தை அரசு பரிசீலனை செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சோ. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. விவசாயிகள் ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களுக்குப் பொருள்களைக் கொண்டுவருகிறபோது, உரிய விலை அவர்களுக்குக் கிடைக்காவிட்டால், அவர்கள் அந்தப் பொருளை வைத்து ஈட்டுக்கடனாகப் பெறுகின்ற வசதியைத்தான் இப்போது நாம் செய்து கொடுத்திருக்கிறோம். அதைத் தவிர, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே சொல்வது ஒரு ஆலோசனை, அதை அரசு பரிசீலிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வினா எண் 308, திரு. இரா. பெர்னார்டு, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

**308—**

**கடற்கரைச் சாலை அமைத்தல்**

***920—திரு. இரா. பெர்னார்டு:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் கீழமணக்குடி கிராமம் முதல் நீரோடி வரை செல்லும் பகுதியில் கடற்கரைச் சாலை அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் தற்போதைய நிலை என்ன?

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) தற்போது இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**திரு. இரா. பெர்னார்டு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டம், கீழமணக்குடி கிராமம் முதல் நீரோடி வரையுள்ள கடற்கரை இணைப்புச் சாலையை அமைத்தால், சுமார் 50 மீனவ கிராமங்கள் பலன்பெறும். தற்போது ஒரு மீனவ கிராமத்திலிருந்து இன்னொரு மீனவ கிராமத்திற்குச் செல்லவேண்டுமானால் நாகர்கோவில் போன்ற நகரங்களுக்குச் சென்று 15, 20 கிலோ மீட்டர் சுற்றிக் கொண்டு செல்லவேண்டியிருக்கிறது. இதனால் பெரும் சிரமங்கள் ஏற்படுகின்றன. இணைப்புச் சாலை இருந்தால், குறைந்த கட்டணத்தில் விரைவாகச் செல்வதோடு, பொருளாதார மேம்பாட்டுக்கும் அது பேருதவியாக இருக்கும். ஆகவே, பின்தங்கிய மீனவ மக்களின் நலனைக் கருத்தில் கொண்டு பல்வேறு நலத் திட்டங்களை அறிவித்திருக்கிற கலைஞர் அரசு இந்த இணைப்புச் சாலைகளையும் மறுபரிசீலனை செய்து அமைத்துத்தர முடியுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரி இருக்கிற சாலையை அமைக்கவேண்டுமானால், அதற்கு 63 கிலோ மீட்டர் நீளம் சாலை தேவைப்படுகிறது. குறுக்கே இரண்டு புதிய பாலங்கள் கட்டவேண்டும். பழையாற்றின் குறுக்கே மணக்குடிக்கு அருகில் ஒரு பாலத்தை அமைக்கவேண்டிய அவசியம் ஏற்படுகிறது. மாண்புமிகு முதல்வர் அவர்கள் இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையில் பழையாற்றின் குறுக்கே மணக்குடிக்கு அருகில் 6 கோடி ரூபாய் செலவில் பாலம் கட்டுவதற்கு அனுமதி அளித்திருக்கிறார்கள். முதல் கட்டமாக அந்தப் பணி நடைபெறும். மேலும், தாமிரபரணி ஆற்றின் குறுக்கே ஒரு பாலத்தைக் கட்டுவதற்கு 10 கோடி ரூபாய் செலவாகும். ஆகவே, அந்தப் பணிகளை முடிக்க 44.9 கோடி ரூபாய் செலவாகும் என்று மதிப்பீடு செய்யப்பட்டிருக்கிறது. இந்த அதிகத் தொகையை ஒரே நேரத்தில் செலவிட இயலாத காரணத்தால், முதல் கட்டமாக மணக்குடி அருகில் பாலத்தைக் கட்டுகின்ற பணி, முதல்வர் அவர்கள் ஆணையிட்டிருக்கிறபடி இந்த ஆண்டு தொடரும். வருகிற காலங்களில் இந்தச் சாலையை அகலப்படுத்துவதற்கான முயற்சியை அரசு படிப்படியாக மேற்கொள்ள சாத்தியக்கூறுகள் உள்ளன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் நீரோடி வரையிலும் நடைபெறவேண்டிய கடற்கரை சாலை சம்பந்தமாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒரு



கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். நெல்லையிலிருந்து கன்னியாகுமரி வரையிலும் அந்தப் பணி ஆரம்பிக்கப்பட உள்ளதா? அது எப்போது முற்றுப்பெறும்? அது போன்று, நீரோடி வரையில் அடுத்த மாநிலமான கேரள மாநிலம், அவர்கள் அந்தக் கடற்கரைச் சாலையை கிட்டத்தட்ட பூவாறு வரையில் கொண்டு வந்தாகி விட்டது. எனவே இந்த இணைப்பு ஏற்படுகிறபோது அந்தப் பகுதியில் இருக்கிற ஆயிரக்கணக்கான மீனவ மக்களுக்கு அது பல்வேறு தொழில்கள் செய்வதற்கான வாய்ப்புகளை உருவாக்கும். அந்தவகையில் அரசு இதனைப் பரிசீலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10.00

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு தலைவர் அவர்களே, நெல்லை மாவட்டத்திலிருந்து கன்னியாகுமரி வருகிற அந்தச் சாலையானது கிழக்கு கடற்கரைச் சாலைத் திட்டத்தின்கீழ் 4-வது நிலையில்தான் உள்ளது. இப்போதுதான் முதல் கட்டப் பணியான சென்னையிலிருந்து கடலூர் வரை செய்கிற பணி முடிவுறும் நிலையில் இருக்கிறது. இரண்டாவது கட்டமாக கடலூரிலிருந்து நாகப்பட்டினம் வரையில், மூன்றாவது கட்டமாக நாகப்பட்டினத்திலிருந்து தூத்துக்குடி வரையில், நான்காவது கட்டமாக தூத்துக்குடியிலிருந்து கன்னியாகுமரி வரை செய்ய இருக்கிறோம். இது கிழக்கு கடற்கரைச் சாலையோரத் திட்டம். மேற்கு பகுதியிலிருக்கிற சாலையோரப் பணிகள் கேரளா அரசாங்கம் செய்து முடித்திருந்தாலும், மற்றப் பணிகளைச் செய்வதற்கான நிதியாதாரங்கள் இப்போது இல்லாத காரணத்தால், வருகிற காலங்களில் இதைப்பற்றி அரசு பரிசீலிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 309, திரு. பே.வே.ஸ்ரீ. வெங்கடேசன் மற்றும் திரு. பி. வெங்கடசாமி, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

**309—**

### தேசிய நெடுஞ்சாலையை நான்கு வழிச்சாலையாக மாற்றி அமைத்தல்

**3726—திரு. பே. வே. ஸ்ரீ. வெங்கடேசன் : திரு. பி. வெங்கடசாமி:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கிருஷ்ணகிரி - ஒசூர் தேசிய நெடுஞ்சாலையை நான்கு வழிச்சாலையாக மாற்றியமைக்கும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா?

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஆம். திட்ட அறிக்கை பற்றிய மதிப்பீடுகள் மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டு இருக்கின்றன. அதுகுறித்து பணிகள் தொடர்ந்து நடைப்பெற்று கொண்டிருக்கின்றன.

**திரு. பே. வே. ஸ்ரீ. வெங்கடேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1982-ஆம் ஆண்டு ஒசூரிலிருந்து சேலம் வரை செல்கிற தேசிய நெடுஞ்சாலை எண் 7-ல் பணம் கொடுத்து சில தனியார் நிலங்களை சாலை விரிவாக்கும் திட்டத்தில் அரசு எடுத்துக்கொண்டது. ஆனால், இன்றுவரையில் அந்தப் பணிகள் எதுவும் தொடராமல் இருக்கிற காரணத்தால் மீண்டும் அந்த இடத்தில் ஆக்கிரமிப்புகள் நடைபெற்று கொண்டிருக்கின்றன. ஆகவே, விரைவில் தேசிய நெடுஞ்சாலையை நான்கு வழிப் பாதையாக அமைத்தால் அந்த ஆக்கிரமிப்புகளை அகற்ற முடியும். இல்லையென்றால், ஆக்கிரமிப்புகளையாவது அகற்றக்கூடிய வாய்ப்பு தற்போது அரசாங்கத்திடம் உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 61 கி.மீ. நீளமுள்ள, ஒசூரிலிருந்து கிருஷ்ணகிரி வரையுள்ள இந்தச் சாலையானது, நான்கு வழிப்படுத்துவதற்கான திட்டம் மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டு, அவர்களும் அதற்கான அனுமதியை அளித்து, நிலத்தைக் கையகப்படுத்துவதற்கு அவசர சட்டத்தை அவர்கள் ஆணை மூலம் பிறப்பித்து இருக்கிறார்கள். அந்தப் பணிகள் இப்போது தொடங்கப்பட இருக்கின்றன. இந்த ஆண்டிலேயே அந்தப் பணிகள் எடுத்துக் கொள்ளப்படும். மாண்புமிகு உறுப்பினர் இங்கே சுட்டிக்காட்டியதைப்போல, எங்காவது ஆக்கிரமிப்புகள் இருக்குமானால் இந்த அரசு நிச்சயமாக அவற்றை அகற்றுவதற்கான முயற்சிகளை மேற்கொள்ளும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : திரு. டி. நடராஜன்.

**திரு. டி. நடராஜன்:** பேரவைத் தலைவர் அவர்களே, கிருஷ்ணகிரி ஒசூர் சாலையை தேசிய நெடுங்சாலையாக்கும்போது பாண்டி-கிருஷ்ணகிரி சாலையை-செஞ்சி, திருவண்ணாமலை வழியாகச் செல்லும் சாலையையும் தேசிய நெடுஞ்சாலையாக்கும் திட்டம் அரசின் குறிப்பில் உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.



**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு தலைவர் அவர்களே, இதையும் தேசிய நெடுஞ்சாலையாக்க வேண்டுமென்ற கருத்துருவை மத்திய அரசுக்கு இந்த அரசு அனுப்பி இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களும் மத்திய அமைச்சர் அவர்களோடு தொடர்புகொண்டு இதை விரைவில் பெற்றுத் தந்தால் அரசுக்கு உதவியாக இருக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பா. துரைசாமி.

**திரு. பா. துரைசாமி:** மாண்புமிகு தலைவர் அவர்களே, சென்ற நிதியாண்டில் சென்னை - திருச்சி தேசிய நெடுஞ்சாலையை நான்கு வழிச் சாலையாக நம்முடைய அரசு அறிவித்தது. அந்தத் திட்டம் எப்போது செயல்படுத்தப்படும்? அதிலே விழுப்புரம் ரெயில்வே கிராசிங், உளுந்தூர்பேட்டை ரெயில்வே கிராசிங் போன்ற இடங்களில் போக்குவரத்து நெரிசல் அதிகமாகக் காணப்படுகிறது. அந்த இடங்களில் மேம்பாலங்கள் கட்டித்தர அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு தலைவர் அவர்களே, இதற்கான பரிட்சார்த்தமான பேச்சுவார்த்தைகள் உலக வங்கியோடு நடைபெற்று கொண்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட இரண்டு ரெயில்வே மேம்பாலங்கள் குறித்து மத்திய ரெயில்வே அமைச்சர் அவர்களிடம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மனுவைக் கொடுத்து இருக்கிறார்கள். விரைவில் இந்த ஆண்டே அந்தப் பணிகளை எடுப்பதற்கான சாத்தியக்கூறுகள் இருக்கின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : திரு. பி. என். சுப்பிரமணி.

**திரு. பி. என். சுப்பிரமணி:** மாண்புமிகு தலைவர் அவர்களே, ஆற்காடு விழுப்புரம் சாலையில் இராணிப்பேட்டை பெல் தொழிற்சாலையிலிருந்து திருச்சி பெல் தொழிற்சாலைக்குக் கனரக வாகனங்கள் செல்வதால் ஆற்காடு-விழுப்புரம் சாலையை அகலவழிப் பாதையாக அமைக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு தலைவர் அவர்களே, 'நபார்டு' திட்டத்தின்கீழ் இது எடுத்துக்கொள்ளப்பட இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : டாக்டர் காஞ்சனா கமலநாதன்.

**டாக்டர் காஞ்சனா கமலநாதன்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, கிருஷ்ணகிரியிலிருந்து தர்மபுரி செல்கிற நெடுஞ்சாலை மேம்பாட்டுத் திட்டம் ஏற்கனவே தொடங்கப்பட்டது. நடுவில் நீண்டகாலம் அது நின்றுபோய், சமீபத்தில் 5 மாத காலமாக மீண்டும் பணி தொடங்கப்பட்டிருக்கிறது. இதற்குத் தனிப்பட்ட காரணம் ஏதேனும் இருக்கிறதா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-05

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிருஷ்ணகிரியிலிருந்து தருமபுரி வரையிலான சாலைகளைத் தரப்படுத்துவதற்கு இந்த அரசினால் 8 கோடி 23 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருந்தது. கடந்த கால அரசின்போது அதற்கு 'டெண்டர்' கோரப்பட்டதிலே 14.86 சதவிகிதம் அதிகமாகக் கேட்டிருந்தார்கள். மாண்புமிகு முதலமைச்சரவர்கள் அதிக டெண்டர் கோரியிருந்தவைகளை யெல்லாம் மீண்டும் மறு ஒப்பந்தத்திற்கு விடவேண்டுமென்று ஆணையிட்டதன் அடிப்படையில் மறு ஏலத்திற்கு விடப்பட்டது. அந்த அடிப்படையில் இப்போது, 10-3-1997இல் 12.2% அதற்குக் குறைவாக வந்திருக்கிறது. ஏறத்தாழ இரண்டரைகோடி ரூபாய்க்கும் குறைவாக அந்தப் பணியை எடுத்திருக்கிறார்கள். இது நெடுஞ்சாலைத்துறை சம்பந்தப்பட்டது என்பதால் இதற்கான அனுமதி மத்திய அரசாங்கத்திடம் இருந்து வரவேண்டும்; வந்த பிறகு அந்தப் பணிகள் விரைவில் மேற்கொள்ளப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோ. தளபதி.

**திரு. கோ. தளபதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை-மதுரை போக்குவரத்து நெரிசலைக் கருத்திற்கொண்டு சென்னை-மதுரை நான்கு வழிச்சாலைத்திட்டத்தினை நிறைவேற்றித் தர அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதற்கான முழு முயற்சியை அரசு எடுத்து வருகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இறுதியாக, திரு. பே. வே. ஸ்ரீ. வெங்கடேசன்.



**திரு. பே. வே. ஸ்ரீ. வெங்கடேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிருஷ்ணகிரி-ஒசூர் நான்கு வழிப்பாதையைப் போல கிருஷ்ணகிரியிலிருந்து சேலம் செல்கின்ற தேசிய நெடுஞ்சாலை நான்கு வழிப்பாதையாக ஆக்கப்படுமா? காவேரிப்பட்டினத்திலே இட நெருக்கடியின் காரணமாக போக்குவரத்து அடிக்கடி பாதிக்கப்படுகிறது. ஆகவே, புறவழிச்சாலை அமைக்கும் திட்டம் ஏதேனும் அரசிடம் உள்ளதா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசிடம் தற்போது இது குறித்த செயற்குறிப்புகள் எதுவுமில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 310, டாக்டர் பத்மா, மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

**310—**

## கூட்டுறவுத் துறைகளில் வேலை நீக்கம்

***1148—டாக்டர் பத்மா:**

மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) 1991 முதல் 1996 வரை தமிழ்நாட்டில் கூட்டுறவுத் துறைகளில் கையாடல் வழக்குகளில் வேலை நீக்கம் செய்யப்பட்டு மீண்டும் வேலைக்கு எடுத்துக் கொண்ட அதிகாரிகள் எத்தனை பேர்?

(ஆ) மொத்த கையாடல் தொகை எவ்வளவு?

(இ) கையாடல் செய்த அதிகாரிகள் மீண்டும் வேலைக்கு எடுத்தபோது அவர்கள் வேலையற்று இருந்த நாட்களுக்குச் சம்பளம் வழங்கப்பட்டனவா?

(ஈ) அச்சம்பளம் மாதா மாதம் வழங்கப்பட்டனவா அல்லது மொத்தமாக வழங்கப்பட்டனவா?

**மாண்புமிகு திரு. கே. என். நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) 1991ஆம் ஆண்டு முதல் 1996ஆம் ஆண்டு வரை தமிழ்நாட்டில் கூட்டுறவுத் துறையில் கையாடல் வழக்குகளில் வேலை நீக்கம்

செய்யப்பட்டு மீண்டும் வேலைக்கு எடுத்துக்கொண்ட அதிகாரிகள் எவரும் இல்லை. எனினும், கையாடல் வழக்குகள் தொடர்பாக 18 அதிகாரிகள் தற்காலிகப் பணி நீக்கம் (suspension) செய்யப்பட்டு மீண்டும் பணியில் சேர்ந்து பணியாற்றி வருகின்றனர்.

(ஆ) மொத்த கையாடல் தொகை ரூ. 33.39 இலட்சமாகும்.

(இ) மற்றும் (ஈ): மேலே குறிப்பிட்டுள்ள 18 அதிகாரிகளில் 8 அதிகாரிகளின் மீதான ஒழுங்கு நடவடிக்கை முடிக்கப்பட்டு தண்டனைகள் அளிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள 10 அதிகாரிகள் மீதான ஒழுங்கு நடவடிக்கைகள் இன்னும் நிலுவையிலுள்ளன. ஒழுங்கு நடவடிக்கையின் பாதியில் சம்பந்தப்பட்ட அதிகாரிக்கு சாதாரணமாக, அதாவது தற்காலிக பணிநீக்கம் இருந்த காலத்தை பணிக்காலமாகக் கருதி ஆணை வெளியிடும் பட்சத்தில், அந்த அதிகாரியின் தற்காலிக பணி நீக்கத்திற்குரிய முழு மாதச் சம்பளத்தைக் கணக்கிட்டு, அதிலிருந்து ஏற்கெனவே பட்டுவாடா செய்யப்பட்ட பிழைப்பூதியத் தொகையினைக் கழித்து மீதமுள்ள தொகை ஒட்டுமொத்தமாக வழங்கப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. குழந்தை. தமிழரசன்.

**திரு. குழந்தை. தமிழரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கையாடல் செய்த அதிகாரிகள் தற்காலிக பணி நீக்கம் செய்யப்பட்டாலும் சரி, அல்லது நிரந்தரமாக பணி நீக்கம் செய்யப்பட்டாலும் சரி, எந்த விதத்திலும் அவர்களுக்கு அரசுப் பணத்தை மீண்டும் சம்பளமாக வழங்கக்கூடாது என்பது எல்லோருடைய எண்ணம். எனவே, அந்தத் தொகையை அவர்களுக்கு சம்பளமாக வழங்காமல் இருக்க இந்த அரசு முன்வருமா? இரண்டாவது, நியாயவிலைக் கடைகளில் பணிபுரிகின்ற விற்பனையாளர்கள் ஏழை மக்களுடைய வயிற்றிலே அடிக்கின்ற அளவிற்கு அவர்கள் தவறு செய்கின்றபோது, அந்த ஷார்ட்டெஜ் தொகையை கட்டினால் மீண்டும் அவர்களுக்குப் பணியைக் கொடுத்துவிடுகிறார்கள். எனவே, எளிதாக அந்தப் பணத்தைக் கட்டிவிட்டு மீண்டும் வேலைக்கு வருகிறார்கள். அதுமிக எளிய தண்டனையாக இருப்பதால் தொடர்ந்து அந்தத் தவறுகளைச் செய்கிறார்கள். எனவே, அவர்கள் ஒரு தடவை தவறு செய்தால் அவர்களை நிரந்தரமாகப் பணியிலிருந்து விடுவிக்க அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன். தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியிலே பணிபுரிகிற . . . . . . . . . . .



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் ஒரு வினாதான் கேட்கவேண்டும். மூன்று வினாக்களைக் கேட்கக்கூடாது, உட்காருங்கள். மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கே. என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசுப் பணியாளர்கள் பணியாற்றுகிறபோது பெரிய தவறாக இருந்தால், திரும்பவும் வேலையில் எடுத்துக் கொள்ளாத அளவிற்கு நிரந்தரமாகப் பணி நீக்கம் செய்யப்படுகிறார்கள். குறிப்பிட்ட அளவிற்கு, மிகச் சிறிய தவறுகள் செய்யப்பட்டால், அவர்கள் தற்காலிகப் பணிநீக்கம் செய்யப்பட்டு அதற்குரிய தண்டனையை தந்து, மீண்டும் அவர்கள் வேலைக்கு அமர்த்தப்படுகிறார்கள். இதுதான் இதுவரை நடைமுறை. ஆனால், நியாயவிலைக் கடைகளிலே பணியாற்றுகின்ற அந்தத் தொழிலாளர்கள் ஐயாயிரம் ரூபாய்க்குக் குறைவாக தவறு செய்திருந்தால் இரட்டிப்பு தொகையை அபராதமாகப் பெற்றுக்கொண்டு, மீண்டும் பணியிலமர்த்தப்படுகின்ற ஒரு முறை இருந்து கொண்டிருக்கிறது. அத்தொகைக்கு அதிகமாக தவறு செய்பவர்களிடம் இரட்டிப்புத் தொகையை வசூலித்துக்கொள்வது மட்டுமின்றி அவர்கள் அத்தியாவசியப் பொருட்கள் சட்டத்தின்கீழ் குற்ற விசாரணைக்கு ஆட்படுத்தப் படுகிறார்கள். குற்றத்திற்கான தண்டனையும் வழங்கப்படுகிறது. இதிலே, இடையிலே தொடர்ந்து ஆங்காங்கு பணியிலே அமர்த்தப்படாத காரணத்தால், காலியிடங்கள் அதிகமாக இருந்த காரணத்தால் அவர்கள் தவறு செய்தாலும், மீண்டும் அவர்களுக்கு வேலை தரக்கூடிய ஒரு சூழ்நிலை இருந்துகொண்டிருக்கிறது. இன்றைக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் எந்தெந்த பணியிடங்கள் காலியாக இருக்கின்றனவோ அங்கெல்லாம் ஆள் நியமிக்கப்பட வேண்டுமென்று ஒரு உத்தரவிடப்பட்டு, அந்தப் பணி நிறைவேற்றப்பட இருக்கிறது. அவர்களெல்லாம் வேலைக்கு அமர்த்தப்படுவார்களேயானால் அதிகமான அளவிலே தவறு செய்த ஊழியர்கள் மீண்டும் பணியிலே அமர்த்தப்படமாட்டார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-10

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. குத்தாலம் பி. கல்யாணம்.

**திரு. குத்தாலம் பி. கல்யாணம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கழக ஆட்சியிலே நியமனம் பெற்றவர்கள் என்ற ஒரே காரணத்திற்காக, 1989 ஆம் ஆண்டு முதல் 1991 ஆம் ஆண்டு வரை நியமனம் செய்யப்பட்டு, இடையிலே வந்த ஆட்சியாளர்களால் பணி

நீக்கம் செய்யப்பட்டவர்கள் மீண்டும் பணிக்கு எடுத்துக் கொள்ளப்படுவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது இருக்கின்ற காலி இடங்களுக்காக வேலைவாய்ப்புத் துறையின் மூலம் நாம் ஆட்களைக் கேட்டிருக்கிறோம். அவர்களும் இன்னும் ஓரிரு வாரங்களில் அனுப்புவதாக உறுதி அளித்து இருக்கிறார்கள். அப்படி அழைக்கப்படுகின்றபோது, பத்திரிகைகளிலே விளம்பரம் செய்து, கழக ஆட்சியிலே சேர்க்கப்பட்டவர்கள் மீது வேண்டுமென்றே நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தால், அவர்களை எல்லாம் விளம்பரத்தின் மூலமாக இந்த நேர்முகத் தேர்விலே கலந்து கொள்ள வைத்து, அதிலேயும் அவர்கள் தேர்வு செய்யப்பட்டால், அவர்களுக்கு எல்லாம் பணி அளிக்கப்படும் என்பதைத் ,தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி. ஆர். சுந்தரம்.

**திரு. பி. ஆர். சுந்தரம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொது விநியோகத் திட்டத்தின் மூலமாக நடக்கின்ற கடைகளிலே எடை குறைவு மற்றும் திருட்டு போன்ற விஷயங்கள் காரணமாக அந்தத் துறையிலே கீழ்மட்டத்திலே இருக்கின்ற ஊழியர்கள் மீது, இந்த அரசு பதவி ஏற்றதிலிருந்து இந்த — 10 மாத காலத்திற்குள்ளாக — எத்தனை பேர்கள் மீது நடவடிக்கை எடுத்திருக்கிறது? மேலும் கீழ்மட்டத்திலே இருக்கின்ற ஊழியர்கள் மீது மட்டும் நடவடிக்கை எடுத்தால் போதாது. அவர்கள் கூறும் காரணம், மேலே இருக்கின்ற உயர் அதிகாரிகள் "எங்களுக்கு மாதம் இவ்வளவு கொடுக்க வேண்டும் என்று கட்டாயப்படுத்துகின்ற காரணத்தால்தான் இதுபோன்ற செயல்களில் நாங்கள் ஈடுபடுகிறோம்" என்றுகூட கூறிக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, இந்த அரசு பதவி ஏற்றதற்குப் பிறகு, உயர் அதிகாரிகள் மீது என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதைத் தங்கள் மூலமாகக் கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூலக்கேள்வி 1991 ஆம் ஆண்டுக் காலத்திலிருந்து 1996 ஆம் ஆண்டுக் காலம் வரை பணியாற்றிய அதிகாரிகளைப் பற்றியது. அதைப் பற்றிதான் இப்போதைக்குப் பதில் சொல்ல இயலும். இப்போது நடைபெற்றதைப் பற்றி அறிய வேண்டுமானால், தனிக் கேள்வி கேட்கவும்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** டாக்டர் மு. தேவராஜன்.

**டாக்டர் மு. தேவராஜன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராமப்புற கூட்டுறவு வங்கிகளில் பணியாற்றும் செயலாளர்கள் மாறுதல் இல்லாமல் அந்த வங்கிகளிலேயே நீண்ட காலங்களாக பணியாற்றுவதால், அந்தப் பகுதி மக்களுடைய பலவீனங்களை அறிந்து கொண்டு, அதிகமான அளவில் தவறுகள் செய்கின்றனர். ஆகவே, அத்தகைய செயலாளர்கள் இடமாற்றம் செய்யப்படுவார்களா எனத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. என். நேரு :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது இருக்கின்ற சட்டமுன்வடிவின்படி அவர்களை இடமாற்றம் செய்ய இயலாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. வி. ஜி. தனபால்.

**திரு. வி. ஜி. தனபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொடக்க கூட்டுறவு வங்கிகளில், நிலவள கூட்டுறவு வங்கிகளில், வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளில், செயல்புரியும் இந்தச் செயலாளர்கள் ஒரே இடத்தில் பணி செய்து கொண்டிருப்பதால் தவறுகள் நடக்க வாய்ப்பு இருக்கின்றது. எனவே, இனிமேலாவது அவர்களைப் பணிமாற்றம் செய்ய அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. என். நேரு.:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதைப்பற்றிய உறுப்பினருடைய கருத்து ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன்:

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறிப்பாக சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் நடத்துகின்ற கடைகளிலே இதுபோன்ற குறைபாடுகளோ, கையாடல்களோ இல்லாமல் இருக்கின்றன. ஆனால், கூட்டுறவுச் சங்கம் மூலமாக நடைபெறுகின்ற கடைகளிலேதான் இப்படிப்பட்ட தவறுகள் நடக்கின்றன. அதற்குக் காரணம் சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் கடைகளில் பணியாற்றுகிறவர்களுக்கு 3,000 ரூபாய் வரையில் சம்பளம் கிடைக்கிறது. ஆனால், அதே வேலையைச் செய்யக்கூடிய இவர்களுக்கு 1,000 ரூபாய் வரையில்தான் சம்பளம் கிடைக்கிறது. இந்தச் சம்பளக் குறைவுதான் இதுபோன்ற திருட்டுகளுக்கும்

கையாடல்களுக்கும் துணை போகிறது என்கிற நிலை இருக்கின்ற காரணத்தாலே, கூட்டுறவுச் சங்கங்களின் மூலமாக நடைபெறுகின்ற கடைகளில் பணியாற்றுகின்றவர்களுக்கும், சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் கடை ஊழியர்களைப் போல், 3 ஆயிரம் ரூபாய் சம்பளம் கொடுத்தால், இதுபோன்ற குறைபாடுகளைத் தவிர்க்க இயலும். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அவர்களுக்கும் இணையான சம்பளம் வழங்க ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் மூலமாக நடத்தப்படுகின்ற பொது விநியோகக் கடைகள் மொத்தம் தமிழகம் முழுவதும் 1,102 கடைகள்தான் இருக்கின்றன. ஆனால், கூட்டுறவுச் சங்கங்களின் சார்பாக நடத்தப்படுகின்ற கடைகள்—கிட்டத்தட்ட 21,927 ஆகும். அதில் இருக்கின்ற பணியாளர்களுக்கு இணையான சம்பளம் இவர்களுக்கு அளிக்கப்படுமா என்றால், அதற்கு கொஞ்சம் நிதிச் சுமை அதிகமாக அரசுக்கு இருக்கும். காரணம் உணவுத் துறையினுடைய மானியமாக அரசு அளிப்பது 1,000 கோடி ரூபாய். மேலும் அதிகமான அளவுக்கு நிதிச்சுமை தாங்காது என்ற காரணத்தால்தான், கடந்த ஆண்டுகூட மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 100 ரூபாயை அவர்களுடைய சம்பளத்திலே கூட்டித் தந்திருக்கிறார்கள். தொடர்ந்து, அதைப்பற்றிய ஆய்வு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அதைமட்டும்தான் இப்போதைக்குத் தெரிவிக்க முடியும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எல். சந்தானம்.

முற்பகல் 10-15

**திரு. எல். சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவுக் கடைகளிலே எல்லா இடங்களிலும் தவறு நடக்கிறது. அங்கு இருக்கின்ற அதிகாரிகள் அதன் பணத்தைக் கையாடல் செய்து கொண்டு, திரும்பவும் கட்டிவிட்டால் பணி கிடைக்கும் என்கின்ற நிலை இருக்கின்ற காரணத்தால், மேலும் மேலும் அந்தத் தவறுகள் நடந்துகொண்டே இருக்கின்ற காரணத்தால் அந்தத் தவறுகள் நடைபெறாத அளவிற்கு ஒரு கையாடல் என்று வருகின்றபோதே அவர்களுக்குக் கடுமையான தண்டனையை வழங்கி, அவர்களைப் பதவி நீக்கம் செய்ய அரசு முன்வருமா? அப்படி தவறுகள் நடைபெறாது இருக்க நடவடிக்கை எடுக்குமா என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்



**மாண்புமிகு திரு. கே. என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான்காவது முறையாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்றுக் கொண்ட பிறகு, நுகர்பொருள் துறையிலும், கூட்டுறவுத் துறையிலும் அவர்கள் நல்ல பல காரியங்களை நேர்மையான முறையில் நடத்த வேண்டுமென்பதற்காக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. பொதுவாக அதிகாரிகளைப் பதவி நீக்கம் செய்வது என்பது கடந்த காலத்திலே அவர்கள் செய்திருக்கின்ற, அந்தத் துறைக்கு ஆற்றியிருக்கின்ற பணி சிறப்பாக இருந்து ஏதாவது ஒரு இடத்திலே சிறிய தவறு செய்திருந்தால், மீண்டும் அவர்களை வேலையிலே அமர்த்திக் கொள்ளக் கூடிய ஒரு வாய்ப்பு அவர்களுக்கு இருக்கிறது. ஆனால் தொடர்ந்து பெரிய அளவிலே தவறு செய்திருப்பார்களேயானால் நிரந்தரமாகப் பணி நீக்கம் செய்து கொண்டுதான் இருக்கிறோம். இப்போது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டதுபோன்று நியாய விலைக் கடைகளில் பணியாற்றுகின்ற அந்தப் பணியாளர்களுக்கு மட்டும்தான் ரூ. 5,000-க்குக் குறைவாக அவர்கள் கையாடலோ அல்லது தவறோ செய்திருந்தால், இரட்டிப்புத் தொகையாக அபராதமாகப் பெற்றுக் கொண்டு மீண்டும் அவர்களுக்குப் பணி தந்து கொண்டிருக்கின்றோம். அத்தொகைக்கு அதிகமாக தவறு செய்பவர்களிடம் இரட்டிப்புத் தொகையை வசூலித்துக் கொள்வது மட்டுமின்றி அவர்கள் அத்தியாவசியப் பொருட்கள் சட்டத்தின்கீழ் குற்ற விசாரணைக்கு ஆட்படுத்தப்படுகிறார்கள். குற்றத்திற்கான தண்டனையும் வழங்கப்படுகிறது. மீண்டும் இதைவிட அதிகமான அளவிற்குக் கையாடல் செய்திருந்தால், மீண்டும் அவர்களுக்கு பணி தரக் கூடிய ஒரு சூழ்நிலை எதனால் ஏற்பட்டது என்றால், ஆங்காங்கே காலியாக இருக்கின்ற இடங்களில் ஆட்களை நியமிப்பதற்கு ஒவ்வொரு மாவட்டத்திலும் அவர்கள் நீதிமன்றத்திற்குச் சென்று தடையாணை பெற்றிருக்கின்ற காரணத்தினால், புதிய ஆட்களை நியமிக்க முடியாமல் இருக்கின்ற காரணத்தால், எப்படியும் திட்டத்தை நிறைவேற்றவேண்டும், அந்தக் கடைகளை நடத்த வேண்டுமென்ற காரணத்தினால்தான் மீண்டும் மீண்டும் அதுபோன்ற நபர்களுக்குப் பணி தரப்பட்டது. இப்போது இந்த ஆட்சி வந்த பிறகு, இருக்கின்ற காலி இடங்கள் அத்தனையையும் நிரப்புவதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வேலைவாய்ப்புத் துறையின் மூலமாக இன்றைக்கு ஆட்கள் கேட்கப்பட்டிருக்கிறார்கள், விரைவிலே நியமிக்கப்படுவார்கள். இனி வருங்காலங்களில் அதிகமான தவறு செய்கின்ற ஊழியர்களை நிச்சயமாக மீண்டும் எடுத்துக் கொள்ளக் கூடிய நிலைமை வராது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வ. வேலுசாமி.

**திரு. வ. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. கிராமங்களில் இருக்கக் கூடிய கூட்டுறவுச் சங்கங்களில் ஏற்கெனவே Special Officers என்று சொல்லக் கூடிய தனி அதிகாரிகள் இருந்தார்கள். இப்போது தலைவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுவிட்ட காரணத்தினால் அவர்கள் எல்லாம் வேலையில்லாமல் விடுப்பிலே இருந்து கொண்டிருக்கிறார்கள். சுமார் 4 மாத காலமாக இருக்கக் கூடிய அவர்களுக்கு வேறு வேலைகள் கொடுக்கப்படுமா? அல்லது மாற்று அலுவல் ஏதாவது வேறு வகையிலே அவர்களுக்குக் கொடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிட்டத்தட்ட கடந்த காலத்தில் தேர்தல் இல்லாத காலத்தில் சிறப்பு அதிகாரிகளாக அங்கே பணியாற்றியவர்களுக்கு உடனடியாக மாற்று வேலை தருவதிலே பல சிரமங்கள் இருந்த காரணத்தால், ஒவ்வொரு வங்கியிலுமே எம்.டி. என்ற அளவிலே ஒரு பதவி உருவாக்கப்பட்டு, அவர்கள் எல்லாம் அங்கே அமர்த்தப்பட்டார்கள். தேர்ந்தெடுக்கப்பட்டு வந்த சில தலைவர்கள் எல்லாம் தொடர்ந்து எதிர்ப்பு தெரிவித்ததன் காரணமாக மாற்றுப் பணியிலே அமர்த்துவதற்கும் இன்றைக்கு மொத்தம் இருக்கின்ற 400 பேரிலே 80 பேர்கள் மட்டும்தான் வேலையில்லாமல் இருக்கிறார்கள். மற்றவர்களுக்கு வேலையளிக்கப் பட்டிருக்கிறது. அந்த 80 பேர்களுக்கும் வேலை தருவதற்குரிய முயற்சியை விரைவிலே எடுத்து, அவர்களுக்கு வேலையளிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ப. ரங்கநாதன்.

**திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் பதில் சொல்கின்ற நேரத்தில் சிவில் சப்ளைஸ் கார்ப்பொரேஷன் மூலமாக 1000 கடைகள் என்றும், கூட்டுறவுத் துறையின் மூலமாக 21,000 கடைகள் என்றும் குறிப்பிட்டுள்ளார். ஆனால் இரண்டு துறையிலேயும், இரண்டு கடைகளிலேயும் பணி செய்பவர்களுக்கு ஒரே வேலைதான். ஆகவே அவர்களுடைய பணியினுடைய நிமித்தத்தைப் பார்த்து, அவர்களுக்கு 3,000, 4000 ரூபாய் என்று சம்பளம் வழங்குகின்றது அரசாங்கம். ஆனால் கூட்டுறவுத் துறையில் பணியாற்றுகின்ற தொழிலாளர்களுக்கு ரூ. 1,000-க்கும் குறைவாகத்தான் சம்பளம் கிடைக்கிறது. இதைக் கருத்திலே கொண்டு,





மாண்புமிகு அமைச்சரவர்கள் இந்தக் கூட்டுறவுத் துறையிலே பணியாற்றுகின்ற தொழிலாளர்களுக்குக் கூடுதலாக ரூ. 1,000 அல்லது 1,500/- உயர்த்திக் கொடுப்பார்களா என்று நான் கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நுகர்பொருள் வாணிபக் கழகப் பணியாளர்கள் அரசின் சார்பாக. நேரடியாகத் தேர்வு செய்யப்படுகிறார்கள். ஆனால் கூட்டுறவுத் துறையில் பணியாற்றுகின்ற தொழிலாளர்கள்—ஆங்காங்கே இருக்கின்ற சங்கங்கள் 'லீட் சொசைட்டி' மூலமாகவும், தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியின் மூலமாகவும் 21,000 கடைகள் நடைபெறுகின்றன.—இந்தச் சங்கங்கள் வாயிலாகத்தான் வேலையில் அமர்த்தப் பட்டிருக்கிறார்கள். இன்றைக்கு இதைவிட 'ஹோல்சேல் ஸ்டோர்ஸ்' மொத்த விற்பனை பண்டகசாலைகள் மூலமாகவும் அமர்த்தப் பட்டிருக்கிறார்கள். அந்தந்தச் சங்கத்தினுடைய வருவாய்க்கு ஒப்பதான், அவர்களுக்குச் சம்பளம் தர ஏதுவாக இருக்குமே தவிர, ஒரேயடியாக நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் பணியாற்றுகின்றவர்களுக்கு நிகராக சம்பளம் தரப்படுமானால், அங்கு இருக்கின்ற தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியோ அல்லது மொத்த விற்பனை பண்டகச்சாலையோ நொடிந்து விடக்கூடிய சூழ்நிலை வந்துவிடும். அதையெல்லாம் கருத்தில் கொண்டுதான் இங்கு அரசின் சார்பாக தரப்படக்கூடிய மானியங்களை உயர்த்துவதற்கு இந்த அரசு முடிவு செய்திருக்கிறது. அதை மாண்புமிகு முதல்வர் அவர்களோடு கலந்து பேசி விரைவில், வரவிருக்கின்ற மானியக் கோரிக்கையிலே, நல்லதொரு தீர்ப்பு அல்லது நல்லதொரு நிலையை இந்த அரசு எடுக்கும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 10-20.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி ஆர். சரஸ்வதி.

**திருமதி ஆர். சரஸ்வதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராமக் கூட்டுறவு அங்காடியில் எடையாளர்கள் 10 வருடங்களாகப் பணிபுரிந்தும், பணியாளர்கள் நிரந்தரம் செய்யப்படாமல் இருப்பதை அரசு அறியுமா, அவர்களைப் பணி நிரந்தரம் செய்ய அரசு ஆவன செய்யுமா என்பதை அறியவிரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 5 ஆண்டுகாலம் பணியாற்றுகின்ற தொழிலாளர்ககளுக்கு 'Consolidated Pay' என்ற வகையில் பில் கிளார்க்கு ரூ. 950/-,

எடையாளர்ககளுக்கு ரூ. 850 என்று வழங்கப்பெற்று, 5 ஆண்டுக் காலத்திற்கு மேலாகப் பணியாற்றுகின்றவர்கள் இன்றைக்கு 2000 ரூபாய் சம்பளம் பெறக் கூடிய சூழ்நிலைதான் இருந்து கொண்டிருக்கின்றது. அவர்கள் எல்லாம் நிரந்தரமாகத்தான் அங்கு பணியாற்றிக் கொண்டு இருக்கிறார்கள்.'

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** பேரவைத் தலைவர் அவர்களே, நுகர்பொருள் வாணிபக் கழகத்திலும், கூட்டுறவுத் துறையிலும் பணியாற்றுகின்ற ஊழியர்கள் ஒரே வேலையைத்தான் செய்கிறார்கள். தர்க்க ரீதியாகவும், சரி, சட்ட ரீதியாவும் சரி, ஒரே வேலைக்கு இரு சம்பள அளவுகோல் என்பது பொருத்தம் இல்லை. ஆனாலும், இந்த நியாயமான கோரிக்கையை ஏற்றுக் கொள்கிற நிதி நிலைமையில் அரசும் இல்லை என்பதையும் நான் அறிவேன். இருந்தாலும், நான் கேட்டுக் கொள்ள விரும்புவதெல்லம் ரூ. 100 சம்பள உயர்வு என்று அறிவித்திருக்கிற நிலையை மாநில அரசு மறு பரிசீலனை செய்ய வேண்டும். அதே நேரத்தில், மாநில அரசுக்கு இருக்கின்ற நிதி நெருக்கடிகளைத் தொழிற்சங்கங்கள் உணர்ந்திருக்கின்றன. மாநில அரசின் நிதிநிலைமைக்கு ஒத்தபடி செயல்பட, நல்ல கருத்தோட்டத்தோடு இருந்து கொண்டிருக்கிற அந்தத் தொழிற்சங்கங்களை அழைத்துப் பேசி, அரசு தன் முடிவை மறுபரிசிலனை செய்து, மாநில அரசின் நிதி நிலைக்குத் தக்கபடியும், தொழிற்சங்கங்களின் எதிர்பார்ப்பிற்குத் தக்கபடியும் புதிய முடிவை அறிவிக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதையுமே கேட்காமல் கொடுத்துப் பழக்கப்பட்ட அரசுதான் தலைவர் கலைஞர் அவர்களுடைய அரசு. அவர்கள் சம்பளம் கூட உயர்த்திக் கேட்கவில்லை. கடந்த முறை, நிதிநிலை அறிக்கை அளிக்கப்பட்டபோது, மாண்புமிகு அமைச்சர் திரு. வே. தங்கபாண்டியன், முதல்வர் அவர்களிடம் சென்று விவாதித்தபோது, வெகுநாட்களாக அவர்களுக்கெல்லாம் சம்பளம் உயர்த்தித் தரப்படவில்லை என்பதை அறிந்து 100 ரூபாய் சம்பளம் சேர்த்துத் தரச் சொல்லி கடந்த ஆண்டு முதல்வர் அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள். தொடர்ந்து, மாண்புமிகு உறுப்பினர் அவர்களும் அரசினுடைய நிதிநிலையைப் பற்றி நன்கு தெரிந்து, இங்கு சொல்லி இருக்கின்றார்கள். அதை எவ்வாறு செய்ய முடியும் என்பதை அவர்களை அழைத்துப் பேசி ஒரு சிறப்பான முடிவை நாம் எடுக்கலாம்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 311, திரு. இ. கணேசன், மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

**311—**

## திருச்செங்கோடு வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கம்

***4889—திரு. இ. கணேசன்:**

மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், திருச்செங்கோடு வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தில், வருடந்தோறும் நடத்தப்பட வேண்டிய மகாசபைக் கூட்டம், கடந்த 3 ஆண்டுகளாக நடத்தப்படவில்லை என்பது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் காரணம் என்ன?

**மாண்புமிகு திரு. கே. என். நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) 1993-94 ஆம் ஆண்டிற்கான தணிக்கை 10-1-1995 அன்று முடிக்கப்பட்டது. தனி அலுவலர் மாற்றம் செய்யப்பட்டு, அப்பதவி கூடுதல் பொறுப்பில் இருந்து வந்ததால் மகாசபைக் கூட்டம் நடைபெறுவதில் காலதாமதம் ஏற்பட்டது. இதற்கிடையில் திருச்செங்கோடு கூட்டுறவு விற்பனைச் சங்கத்தின் நிர்வாகக் குழுவிற்கு தேர்தல் நடத்துவதற்கெதிராக சென்னை உயர்நீதி மன்றத்தில் திரு. கே. பச்சமுத்து என்பவரால் தொடரப்பட்ட நீதிப் பேராணை மனு எண் 12661/96-ல் தடை ஆணை வழங்கப்பட்டிருந்தது. மேற்படி, தடையாணைக்குப் பின்பு சென்னை உயர்நீதிமன்றம், இவ்வகையான கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல் தொடர்பான வழக்குகளில் ஒட்டுமொத்தத் தீர்ப்பு 19-11-1996-ல் வழங்கியது. இத்தீர்ப்புப் படி, 18-5-1997-க்குள் இச்சங்கத்திற்குத் தேர்தல் நடத்தி முடிக்க திட்டமிடப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுவருகிறது. தேர்தலுக்குப் பின்னர் தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாகக் குழு, பொதுக் குழுவைக் கூட்டி நடவடிக்கை மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[1997 மார்ச் 24

**திரு. இ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்செங்கோடு வேளாண்மை உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம் கிட்டத்தட்ட ஆண்டு ஒன்றுக்கு 100 கோடி ரூபாய்க்கு மேலே வரவு செலவு செய்யக் கூடிய சங்கம். அதனால், அந்தச் சங்கத்தினுடைய மகா சபையை ஆண்டாண்டுக் காலம் நடத்தினால்தான் ஊழலற்ற முறையிலே அந்தச் சங்கம் சிறப்பான முறையிலே செயல்பட முடியும். அப்படியிருக்கையிலே, தனி அதிகாரிகளால் நடத்தப்படக் கூடிய 3 ஆண்டுக்காலம் மகா ச்பை கூட்டப்படாமல் இருப்பதனால் பல ஊழல்கள் நடந்திருப்பதாக அங்கே பணியாற்றுகிறவர்களும் பொது மக்களும் சொல்கிறார்கள். ஆகவே, அந்த மகா சபையைக் கூட்டி, தவறு செய்தவர்களைக் கடுமையாகத் தண்டிக்கக் கூடிய வகையிலே சட்டம் திருத்தப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-25.

**மாண்புமிகு திரு. கே. என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதிலே சட்டம் திருத்தப்படும் என்பதற்கு ஏதும் இல்லை. 1993-94 ஆம் ஆண்டிற்கான தணிக்கை 10-1-1995 அன்று முடிக்கப்பெற்று மகாசபைக் கூட்டத்தினைக்கூட்ட நடவடிக்கை மேற்கொள்ளும் சமயத்தில் கடந்த காலத்திலே இருந்த அரசு சங்கத்தின் தனி அலுவலரை மாற்றிவிட்டார்கள் மாற்றி விட்டு வேறொரு அதிகாரியை அதற்கென்று நியமித்திருந்தால் உடனடியாக மகாசபை கூட்டம் கூட்டப்பட்டிருக்கும். தணிக்கை அறிக்கை முடிக்கப்பட்டிருக்கும். ஆனால் அதற்கென்று தனியாக ஒரு அதிகாரியை நியமிக்காமல் வேறொரு பதவியில் இருந்த அதிகாரி கூடுதல் பொறுப்பு வகித்த காரணத்தால் மகாசபையைக் கூட்டக் கூடிய அதிகாரம் அவருக்கு இல்லை. அதனால் தான் இதுவரை கூட்டப்படவில்லை. பிறகு நமது அரசு வந்தவுடன் கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தேர்தல் நடத்த முன்வந்தபோது பச்சைமுத்து என்பவரால் உயர்நீதிமன்றத்திலே ஒரு தடையாணை பெறப்பட்டிருக்கிறது. தடையாணை பெறப்பட்டு மீண்டும் நீதி மன்றத்தின் சார்பாக தேர்தல் நடத்த உத்தரவு இடப்பட்டிருக்கிறது. மேற்படி தடையாணைக்குப் பிறகு சென்னை உயர்நீதி மன்றம் கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல் தொடர்பான வழக்குகளில் ஒட்டுமொத்தத் தீர்ப்பு ஒன்று வழங்கியுள்ளது. இத்தீர்ப்பின்படி 18-5-1997-க்குள். இச்சங்கத்திற்கு தேர்தல் நடத்தி முடிக்கத் திட்டமிட்டப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுவருகிறது. தேர்தல் நடைபெற்று தலைவர் வந்தவுடன் நிச்சயமாக இந்தக் குறைகள் களையப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



1997 மார்ச் 24]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 312, திரு. அ.வ. அப்துல் நாசர், மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர்.

**312—**

**பால் கூட்டுறவுச் சங்கம் அமைத்தல்.**

***1982—திரு. அ.வ. அப்துல் நாசர்:** மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புவனகிரி தொகுதி, பரங்கிப்பேட்டை ஒன்றியம், பெரிய குமட்டியில் பால் கூட்டுறவுச் சங்கம் புதியதாக அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. க. சுந்தரம், பால் வளத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

புவனகிரி தொகுதி, பரங்கிப்பேட்டை ஒன்றியம், பெரிய குமட்டியில் புதிய மகளிர் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம் ஒன்று கடந்த 11-12-1996 அன்று பதிவு செய்யப்பட்டு 20-12-1996 முதல் செயல்பட்டு வருகிறது.

**திரு. அ. வ. அப்துல் நாசர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த கூட்டுறவு பால் உற்பத்தியாளர் சங்கம் அமைக்கப்பட்டதற்கு நன்றி, அதேபோல சேத்தியாத்தோப்பு பால் குளிரூட்டும் நிலையத்திலிருந்து குளிரூட்டும் சாதனங்கள் எல்லாம் விழுப்புரம் மாவட்டத்திற்கு மாற்றப்படுவதாக அந்தப் பகுதி மக்கள் ஐயப்படுகிறார்கள். ஒன்றாக இருந்த அந்த மாவட்டம் இரண்டாகப் பிரிக்கப்பட்ட பிறகு தென்னாற்காடு வள்ளலார் மாவட்டத்திற்கென உற்பத்தியாளர் கூட்டுறவு மையம் அமைக்கப்படவில்லை. அது விரைந்து அமைக்கப்படுமா? அதன்மூலம் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்களை அதிகமாக அமைத்து பால் உற்பத்தியைப் பெருக்கி அந்தக் குளிரூட்டும் நிலையம் சேத்தியாத்தோப்பிலேயே இயங்க இந்த அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 10,000 லிட்டர் கொள்திறன் கொண்ட சேர்த்தியாத்தோப்பில் 3,500 லிட்டர் பால்தான் குளிரூட்டப்படுகிறது. இருப்பினும் விழுப்புரம் பால் குளிரூட்டு நிலையத்துடன் சேர்த்தியாத்தோப்பு குளிரூட்டு நிலையம் கண்டிப்பாகச் செயல்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[1997 மார்ச் 24

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 313, திரு. டி. மணி, மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

313—

### குறைந்தபட்சக் கூலி அமுல்படுத்துதல்

*** 1961—திரு. டி. மணி:**

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கன்னியாகுமரி மாவட்டத்தில் படந்தாலுமூடு, கன்யா தொழில் கூட்டுறவு அச்சகம் ஐ.என்.டி.என். 1308-ல் பணிபுரியும் பணியாளர்களுக்கு குறைந்தபட்சக் கூலி அமுல்படுத்தப்பட நடவடிக்கை எடுக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கன்யா தொழில் கூட்டுறவு அச்சகத்திலே, அந்தத் தொழிலாளர்களுக்கு குறைந்தபட்சம் சம்பளம் என்ன கொடுக்கப்படுகிறது? சம வேலைக்கு சம ஊதியம் கொடுக்கப்படுகின்றதா? இல்லையென்றால் அதைக் கொடுப்பதற்கான நடவடிக்க மேற்கொள்ளப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடுகின்ற இடத்தில் உள்ள கன்யா தொழில் கூட்டுறவு அச்சகத்தை பொறுத்தமட்டில் பல முறை ஆய்வு செய்த நேரத்தில் சில நேரங்களில் முகவரி மாற்றப்பட்டு இருக்கிறது. பேக்டரி ஆக்டின் கீழே பதிவு செய்ய முடியாத அளவுக்கு தொழிலாளர்களுடைய எண்ணிக்கை குறைக்கப்பட்டிருந்தது. கடைசியாக 20-3-1997-லே ஆய்வு செய்த நேரத்தில் 27 தொழிலாளர்கள் இருக்கிறார்கள். அதிலே 2 பேருக்கு குறைந்தபட்ச ஊதிய சட்டத்தின் கீழே சம்பளம் கொடுக்கப்பட்டுவிட்டது. 25 பேருக்குக் கொடுக்கப்படவில்லை. துறையின் சார்பாக அதற்குரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.



1997 மார்ச் 24]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 314, திரு. டி. இராஜேந்தர், மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

314—

### வேலைவாய்ப்பு ஏற்படுத்துதல்.

***2557—திரு. டி. இராஜேந்தர்:**

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பல ஆண்டுகளாகியும் வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்தவர்களுக்கு நேர்முகத் தேர்வுக்கு அனுமதிக்காததை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அவர்களுக்கு வேலைவாய்ப்பு ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்: தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) அரசுத் துறைகளிலும், அரசு நிறுவனங்களிலும் நிரந்தர வேலைகள் பெற வேண்டுமென்றால் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், வங்கிப் பணிகள் தேர்வாணையம் போன்ற அமைப்புகளின் மூலமாகப் பணியிடங்கள் நிரப்பப்படுகின்றன. எனவே, வேலைவாய்ப்பகங்கள் மூலம் நேர்முகத் தேர்வுக்கு அனுப்பப்படும் தேவை குறைந்து கொண்டு வருவதால் அதிகமான எண்ணிக்கையில் நபர்களை நேர்முகத் தேர்வுக்கு அனுப்ப இயலவில்லை என்பதை அரசு அறியும்.

(ஆ) அரசு இதனைப் பரிசிலித்து 11,446 இடைநிலை ஆசிரியர் பணியிடங்களை வேலைவாய்ப்பு அலுவலகங்கள் வாயிலாக நிரப்ப ஆணை வெளியிட்டுள்ளது. மேலும் அரசுத் துறைகளில் தட்டச்சர் சுருக்கெழுத்து தட்டச்சர், இளநிலை உதவியாளர் பணியிடங்களில் 3 மாதங்களுக்குக் குறைவான காலத்தில் ஏற்படும் காலியிடங்களை வேலை வாய்ப்பு அலுவலகங்கள் வாயிலாக நிரப்ப அரசு பரிசிலித்து வருகிறது.

முற்பகல் 10-30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன்அனுமதியோடு வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்பெறுகிறது.

**திரு. டி. இராஜேந்தர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்து பல ஆண்டுகள் கழிந்த பின்னர் தங்களுக்கு வயது வரம்பு கடந்து விட்டது என்று சிலருக்கு அறிவிப்பு ஓலை வருகின்ற அந்தத் தருணத்தில், அவர்களுடைய வேதனையும், ஏமாற்றமும் எப்படி இருக்கும் என்பதை எண்ணிப் பார்க்கும் போது ஒரு பெண் கருவுற்று இருக்கிற நிலையில் தனக்கு எப்படியும் குழந்தைப் பிறக்கப் போகிறது என்று கனவில் மிதந்து கொண்டிருக்கும் போது அவளுக்கு கருச்சிதைவு ஏற்பட்டால் அந்த ஏமாற்றம் கூட அவளுக்குச் சில மாதங்களில் தெளிந்து விடுகிறது. ஆனால் வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்து இத்தனை ஆண்டுகள் காத்து இருந்ததற்குப் பின்னால் தங்களுடைய கனவு பலிக்காத நிலையில் அந்த ஏமாற்றம் பல ஆண்டுகளுக்குப் பின்னால் முற்றுப்புள்ளிப் பெற வருகிறது. அந்தத் தருணத்தில் அவர்களுடைய வேதனையைப் போக்குகின்ற வகையில் அவர்கள் ஏதாவது ஒரு தொழில் தொடங்குவதற்கு முன் உதவியாக அரசு, கருணையோடு நம்முடைய கழக அரசு, ஒரு ஊக்கத் தொகையை, பொன்னை வைக்கும் இடத்திலே பூவை வைப்பது போல் என்று சொல்வார்களே அந்த அளவுக்கு ஒரு ஊக்கத் தொகையை நம்முடைய கலைஞர் அரசு அளிக்க முன்வருமா? பரிசீலனை செய்யுமா என தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டுள்ள ஊக்கத் தொகை குறித்து அரசு கவனத்தில் கொள்ளும்.

அடுத்து, நீண்ட காலமாக வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்தும் வேலை வாய்ப்பு இல்லாமல் இருக்கின்ற கொடுமையை உவமையோடு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே எடுத்துச் சொன்னார்கள். வேலைவாய்ப்பு அலுவலகங்களிலே பலபேர் பதிவு செய்கிறார்கள். வேலைவாய்ப்பு அலுவலகம் புதிதாக வேலை கொடுக்கின்ற ஒரு அமைப்பு அல்ல. எங்கெல்லாம் காலியிடம் இருக்கிறதோ அது பற்றிய அறிக்கை வேலைவாய்ப்பு அலுவலகங்களுக்கு வருகிறது. அந்தக் காலியிடங்களுக்குத் தகுந்தபடிதான் வேலை வாய்ப்பு அலுவலகம் இண்டர்வியு என்று சொல்லக் கூடிய அழைப்பை அனுப்பி வைக்கிறது. ஆகவே, முன்பு எல்லாம் நிறைய வாய்ப்புகள், எண்ணிக்கைகள் இருந்தன. இப்போது அந்த எண்ணிக்கை குறைந்து வருகிறது. தனியார் நிறுவனங்கள் அவசியமாக வேலைவாய்ப்புத் துறையின் மூலமாகத்தான் காலியிடங்கள் நிரப்பப்பட வேண்டும் என்று சட்டத்தின் மூலமாக, கட்டாயப்படுத்த



முடியாது தனியார் நிறுவனங்கள் தாங்களாகவே வேலை வாய்ப்பு அலுவலகங்களுக்கு தகவல் தெரிவிக்காமலேயே காலியிடங்களை நிரப்பிக் கொள்கிறார்கள். துரதிருஷ்டவசமாக பொது நிறுவனங்களில் நிச்சயமாக வேலைவாய்ப்பு அலுவலகத்தின் மூலமாகத்தான் காலியிடங்கள், பணியிடங்கள் நிரப்ப வேண்டும் என்று இருந்தது. ஆனால்-சுப்ரீம் கோர்ட் அண்மையில் ஒரு தீர்ப்பு வழங்கி விளம்பரம் செய்து விட்டு அவர்களாகவே நிரப்பிக் கொள்ளலாம் என்று சொல்லி விட்டார்கள். கருணை அடிப்படையில் வேலை கொடுக்கிறோம், அதுவும் வேலைவாய்ப்புத் துறை சம்பந்தப்பட்டது அல்ல. அதுபோலவே ஸ்போர்ட்ஸ் கோட்டா, இதுவும் வேலைவாய்ப்புத் துறை சம்பந்தப்பட்டது அல்ல. அதுபோலவே தமிழ்நாடு பப்ளிக் சர்வீஸ் கமிஷன் இதுவும் வேலைவாய்ப்புத் துறையின் மூலம் அல்ல. அதுபோலவே உங்களுக்கு எல்லாம் தெரியும் மற்ற அமைப்புகள், மாநில மத்திய. செலக்ஷன் கமிஷன்கள், ஸ்டாப் செலக்ஷன் கமிஷன் இவை எல்லாம் அவர்களாகவே வேலையை நிரப்பிக் கொள்கிற காரணத்தால் வேலை இல்லாதவர்களுடைய பட்டியல் குறைவாக இருக்கிறது. உதாரணமாக ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன், 1996-ஆம் ஆண்டு ரிஜிஸ்டர் செய்தவர்கள், லைவ் ரிஜிஸ்டரில் இருப்பவர்கள் 35 லட்சத்து 79 ஆயிரத்து 650 பேர். ஆனால் வேலைவாய்ப்பு அலுவலகத்திற்கு வந்த அந்தப் பட்டியல் எவ்வளவு என்று சொன்னால் 25,520 பேருக்குத்தான் வேலை கொடுக்கப்பட்டிருக்கிறது. 'காலியிடங்கள் அவ்வளவுதான் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. டி. இராஜேந்தர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்தவர்களுக்கு எல்லாம் வேலை கிடைக்குமா என்று நான் கேள்வி கேட்கவில்லை. பதிவு செய்து வேலை கிடைக்காத தருணத்தில் அவர்களுக்கு ஊக்கத் தொகையாக அதாவது அந்தக் கடைசி நேரத்தில் வயது வரம்பு கடந்து விட்டது என்ற நிலையில் அவர்களுக்கு ஒரு புதிய தொழில் தொடங்குவதற்கு அரசு மூலமாக ஏதாவது கடன் உதவி பெறுவதற்கான வழிவகை செய்யப்படுமா என்பதைத்தான் நான் கேட்டேன். காதலிப்பவர்கள் அத்தனை பேருமே கல்யாணம் செய்து கொள்ள முடியுமா? அதைப் போலவே வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்தவர்கள் அத்தனை பேருக்கும் வேலை கிடைத்துவிடுமா என்று நான் கேள்வியை எழுப்பவில்லை என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். அவர்களுக்கு ஊக்கத்தொகை அளிக்கப்படுமா? இல்லை அவர்கள் தொழில் தொடங்குவதற்கு கடன் வசதி பெறுவதற்கு கலைஞர் அரசு

[1997 மார்ச் 24

கருணையோடு ஏற்பாடு செய்யுமா என்பதைத்தான் நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடமிருந்து தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்தவர்களுக்கு ஊக்கத் தொகை கொடுக்கின்ற அளவுக்கு வேலை வாய்ப்பு கிடைக்காமல் எப்படி எல்லாம் வேதனைப்படுகிறார்கள் என்ற சூழ்நிலையைத்தான் இங்கே விளக்கிச் சொன்னேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை கருணையே உருவான நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களோடு கலந்து உரிய நேரத்தில் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் விவரமான விளக்கம் கொடுத்துவிட்டார். ஆகவே, வேறு துணை வினாக்கள் கிடையாது.

வினா எண் 315, திரு. எல். சந்தானம், மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர்.

**315—**

### குடிதண்ணீர், விவசாயம் பாதிக்கப்படுவதைத் தடுத்தல்

***2071—திரு. எல். சந்தானம்:**

மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திண்டுக்கல்-அண்ணா மாவட்டம், நிலக்கோட்டை வட்டத்தில் வேகவதி கெமிக்கல்ஸ் நிறுவனத்தின் மூலம், மேல்நாச்சிகுளம் கிராம குடிதண்ணீர் மற்றும் விவசாயம் பாதிக்கப்படுவதைத் தடுக்க அரசு ஆவன செய்யுமா?

முற்பகல் 10-35

**மாண்புமிகு திரு. என். கே. கே. பெரியசாமி, கைத்தறித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திண்டுக்கல்-அண்ணா மாவட்டம் நிலக்கோட்டை தாலுக்கா மட்டப்பாறை கிராமத்தில் அமைந்துள்ள திருவாளர்கள் வேகவதி கெமிக்கல்ஸ் (பிரைவேட்) லிமிடெட் தொழிற்சாலை நிறுவனத்தின்



1997 மார்ச் 24]

மூலம் மேல்நாச்சிக்குளம் கிராமக் குடிதண்ணீர் மற்றும் விவசாயம் பாதிக்கப்படுவதைத் தடுக்க அரசு, தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்தின் மூலம் தக்க நடவடிக்கை எடுத்து வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. எல். சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வேகவதி கெமிகல்ஸ் தொழிற்சாலை தண்ணீர் பாய்கின்ற விவசாய நிலங்களுக்கு மிக அருகாமையில் இருக்கிறது. அங்கே தென்னை போன்ற நல்ல பலன் தருகின்ற மரங்கள் இருக்கின்றன. அதனுடைய அந்த நச்சுப் புகையின் காரணமாகத் தென்னை மரங்களெல்லாம் பட்டு விட்டது என்பதனை விவசாயிகள் படமாகக் கூட எடுத்துக் காட்டியிருக்கிறார்கள். நான் சென்று பார்க்கின்ற நேரத்தில்கூட, அந்த மரங்களெல்லாம் பட்டு இருக்கின்ற நிலையைப் பார்க்க முடிகிறது. அதற்கு இன்னும் சரியான நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை என்றுதான் விவசாயிகள் கூறிக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, அதை மீண்டும் அமைச்சரவர்கள் நேரடியாகப் பரிசீலனை செய்து உரிய நடவடிக்கை மேற்கொள்ளுவார்களா என்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என். கே. கே. பெரியசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் நேரடியாகச் சென்று பார்த்து, அங்கே தென்னை மரங்கள் அந்த நச்சுக் காற்றால் வறண்டு இருக்கிறது என்று தெரிவித்திருக்கிறார்கள். நானும் இரண்டு தினங்களுக்கு முன்பு—பார்வையிட்டபோது முதலிலே இதிலே எவ்வளவு கழிவுநீர் வெளியேறுகிறது என்பதிலே எனக்கு ஒரு சந்தேகம் வந்து விட்டது. ஏனென்றால், மொத்தக் கழிவுநீரே 15 லிட்டர் என்று கொடுத்திருந்தார்கள். ஆக, அது உண்மையா என்பதை அறிய நான் சிரமப்பட்டு, மீண்டும் கேட்டபோது உண்மையாக 15 லிட்டர் கழிவுநீர்தான் வருகிறது; மாதம் ஒன்றுக்கு 60 டன் பொட்டாசியம் குளோரைட் என்ற தீப்பெட்டி மருந்து தான் அதிலே தயார் செய்யப்படுகிறது; ஆனால் 13.2 மீட்டர் உயரமுள்ள புகை போக்கி வழியாகத்தான் அந்தக் கழிவு-காற்று வெளியேறுகிறது என்பதையும் சொல்லியிருக்கிறார்கள். அதோடு, 1993-ஆம் ஆண்டிலேயே ஒரு வழக்கு உயர்நீதிமன்றத்திலே போடப்பட்டு 'National Environmental Engineering Research Institute' நேரடியாக வந்து பார்வையிட்டு, இப்படிப்பட்ட தவறுகள் நடைபெறுவதற்கு வாய்ப்பு இருக்கிறதா, ஏதாவது கெடுதல் இருக்கிறதா என்பதை அறிந்து கூற 'Graphic Environment Impact Assessment' என்ற ஒரு ரிப்போர்ட்டை வைத்துதான், கெடுதல் எதுவும் ஏற்படவில்லை என்ற அடிப்படையிலேதான் 1996, மூன்றாவது மாதம் முடிய அதற்கு

அனுமதி அளிக்கப்பட்டு இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொன்ன பின்பு, நிச்சயம் நேரடியாகச் சென்று உடனடியாகப் பார்வையிடுகின்ற பணியைச் செய்து, நல்லமுறையிலே நடவடிக்கை எடுக்கிறேன் என்ற உறுதியை அளிக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 316, டாக்டர் காஞ்சனா கமலநாதன் மற்றும் திரு. ஜே.எம். ஆரூண் ரஷீத், மாண்புமிகு வனம் மற்றும் கால்நடைத் துறை அமைச்சர்.

**316—**

**நடமாடும் கால்நடை மருந்தகங்கள் அமைத்தல்**

***4490—டாக்டர் காஞ்சனா கமலநாதன் :**
**திரு. ஜே. எம். ஆரூண் ரஷீத் :**

மாண்புமிகு வனம் மற்றும் கால்நடைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நடமாடும் கால்நடை மருந்தகங்களை ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிச்சாமி, வனம் மற்றும் கால்நடைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தமிழ்நாட்டில் 383 நடமாடும் கால்நடை மருந்தகங்கள் 383 ஊராட்சி ஒன்றியங்களில் தற்பொழுது செயல்பட்டு வருகின்றன.

முற்பகல் 10-40

**டாக்டர் காஞ்சனா கமலநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியத் துணைக் கண்டத்தில் வேறு எங்கும் இல்லாத வகையில் கால்நடை மருத்துவ பல்கலைக் கழகம் அமைக்கப்பட்டது டாக்டர் கலைஞர் ஆட்சியில்தான். I am not complaining. ஆனால், அமைச்சரவர்கள் முன்னூற்றுச் சொச்சம் நடமாடும் கால்நடை மருத்துவ மனைகள் இயங்கி வருவதாகக் குறிப்பிட்டார்கள். சாலை வசதிகள் சரியாக இல்லாத மிகச் சிறிய கிராமங்களில், நோய்வாய்ப்பட்டு, மருத்துவ உதவி வேண்டி இருக்கின்ற இந்தக் கால்நடைகளுக்கு, இந்த நடமாடும் மருந்தகங்கள், அட்லீஸ்ட் தர்மபுரி மாவட்ட அளவில் கூட அதிகமாகப் பயன்பெறுவது இல்லை என்பதை வருத்தத்தோடு இங்கே தெரிவித்துக் கொள்ள நான் கடமைப்பட்டிருக்கிறேன். நடமாடும் கால்நடை



மருந்தகங்கள் மேற்கொண்டு செய்கின்ற பணி என்னென்ன? மிகச் சிறிய கிராமங்களில் கால்நடைகளுக்கு மருத்துவ உதவி செய்வதற்கு இந்த மருந்தகங்கள் பயன்படுத்தப் படுகின்றனவா? செயற்கைக் கருவூட்டல் பணியை இந்த நடமாடும் கால்நடை மருந்தகங்கள் செய்கின்றனவா என்பதையெல்லாம் தெரிந்து கொள்ள நான் விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிச்சாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நடமாடும் கால்நடை மருந்தகங்கள் கிராமப்புற மக்களுக்குச் சிறந்த முறையில் பணிபுரிய செயல்பாட்டு முறைகள் வகுக்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தின்படி தோற்றுவிககப்படும் நடமாடும் கால்நடை மருந்தகங்கள் தற்போது ஊராட்சி ஒன்றியங்களில் பணிபுரியும் கால்நடை விரிவாக்க மருத்துவர்களால், அவர்களுடைய ஒன்றியப் பணிகளோடு சேர்த்து செயலாற்றப்படுகிறது. கால்நடை மருத்துவர்கள் வார நாட்களில், குறிப்பிட்ட வழித்தடங்களில் அமைந்துள்ள கிராமங்களில், நிர்ணயிக்கப்பட்ட நேரங்களில் சென்று கால்நடை மற்றும் கோழிகளுக்கு வேண்டிய கால்நடை நலப் பணிகளை மேற்கொள்வார்கள். இத்திட்டத்திற்கு ஊரக வளர்ச்சித் துறை, ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின்கீழ் ஒரு கால்நடை மருந்தகப் பிரிவிற்கு ரூபாய் 21,500 வீதம் 383 நடமாடும் கால்நடை மருந்தகங்களுக்காக ரூ.82.99 இலட்சம் வழங்கியுள்ளது. இந்த நிதி ஒதுக்கீட்டின் கீழ் நடமாடும் கால்நடை மருந்தகங்களுக்கு வேண்டிய ரெப்ரிஜெரேட்டர், நுண்ணுயிர் நோக்கி, மாட்டுக் கிட்டி, கொதிகலன் மற்றும் உபகரணங்கள் வாங்கி வழங்கப்படுகின்றன. இது தவிர, உலக வங்கித் திட்டத்தின் கீழ் ரூ.82.35 இலட்சம் செலவில் 36 தொழில் நுட்பக் கருவிகள் வாங்கி வழங்க நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும் ஒரு நடமாடும் கால்நடை மருந்தகத்திற்கு மருந்து மற்றும் தளவாடங்கள் வாங்க ரூ.10 ஆயிரம் வீதம் வழங்க அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜே.எம். ஆரூண் ரஷீத்.

**திரு. ஜே.எம். ஆரூண் ரஷீத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய வில்லிவாக்கம் தொகுதியில் அம்பத்தூர் பகுதியில் கால்நடை மருந்தகம் இருக்கிறது. அந்த மருந்தகத்திலே எப்போது மருத்துவர் வருகிறார், எப்போது போகிறார் என்பது யாருக்கும் தெரியாத நிலையில் பல நாட்களாக மூடிக் கிடக்கிறது. என்னுடைய தொகுதி பெரிய தொகுதி என்பதால், ஏறத்தாழ 5 பேரூராட்சிகளும், ஒரு உயர்நிலை நகராட்சியும், ஒரு டவுன் பஞ்சாயத்தும் இருக்கின்றன. ஏறத்தாழ 108 குக்கிராமங்கள் இருக்கின்றன. அங்கே கால்நடைகள் நிறைய இருக்கின்றன.

சுற்றி மேய்ச்சல் நிலங்கள் நிறைய இருக்கின்றன. அங்கே அந்தக் கால்நடை மருந்தகம் சரியாக இயங்கவில்லை. என்னுடைய வில்லிவாக்கம் தொகுதியில் அந்த மருந்தகம் எங்கேயிருக்கிறது, அது இயங்குகிறதா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிச்சாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆட்சியில் 900 கால்நடை மருந்தகங்களில் பணியிடங்கள் நிரப்பப்படாமல் மூடப்பட்டுவிட்டன. மாண்புமிகு கலைஞர் அவர்கள் இப்போது புதியதாக 400 பேருக்கு வேலைவாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறார்கள். ஒவ்வொரு கால்நடை மருந்தகமாகத் திறக்கப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 317, திரு. ஆர். மகேந்திரன், வனம் மற்றும் கால்நடைத் துறை அமைச்சர்.

**317—**

## கால்நடை மருத்துவமனைகள் அமைத்தல்

*** 4561—திரு. ஆர். மகேந்திரன்:**

மாண்புமிகு வனம் மற்றும் கால்நடைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாட்ராம்பள்ளி தொகுதியில் தும்பேரி, சோலையார்பேட்டை ஒன்றியம், லட்சுமிபுரம் ஆகிய கிராமங்களில் கால்நடை மருத்துவமனைகள் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிச்சாமி, வனம் மற்றும் கால்நடைத் துறை அமைச்சர் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : தற்போது செயற்குறிப்பு ஏதும் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. ஆர். மகேந்திரன் இருக்கையில் இல்லை. அடுத்து, வினா எண் 318, திரு. வி. திருஞானசம்பந்தம், மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்.



**318—**

## ஆதிதிராவிடர் மாணவர் விடுதி அமைத்தல்

***2775—திரு. வி. திருஞானசம்பந்தம்:**

மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, நடுவிக்கோட்டை ஊராட்சியில் அரசினர் ஆதிதிராவிடர் மாணவர் விடுதி அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராச, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

பேராவூரணி தொகுதி, நடுவிக்கோட்டையில், ஆதிதிராவிடர் நல மாணவர் விடுதி ஒன்று 1996-97-ஆம் ஆண்டு பகுதி இரண்டு திட்டத்தின் கீழ் துவங்க அரசு ஆணையிடப்பட்டு, விடுதியும் துவங்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வி. திருஞானசம்பந்தம் இருக்கையில் இல்லை. அடுத்து, வினா எண் 319, திரு. இரா. மூக்கப்பன், மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர்.

**319—**

## கோமுகி அணையை சுற்றுலா மையமாக்குதல்

***3043—திரு. இரா. மூக்கப்பன்:**

மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விழுப்புரம்-இராமசாமி படையாச்சியார் மாவட்டம், கோமுகி அணையில் பூங்கா அமைத்து சுற்றுலா மையமாக ஆக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[1997 மார்ச் 24

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலாத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) விழுப்புரம் இராமசாமி படையாச்சியார் மாவட்டம், கோமுகி அணையில் பூங்கா அமைத்து சுற்றுலா மையமாக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இக்கேள்வி எழ வாய்ப்பில்லை.

**திரு. இரா. மூக்கப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விழுப்புரம்-இராமசாமி படையாச்சியார் மாவட்டத்தைச் சார்ந்த சின்னசேலம் தொகுதியிலே அமைந்துள்ள கோமுகி நதி அணை இரண்டு மலைப் பகுதிகளையும் இணைத்து கட்டப்பட்டுள்ள ஒரு அணை. மலையையொட்டியுள்ள பகுதியில் கள்ளக்குறிச்சியிலிருந்து கல்வராயன்மலை, வெள்ளைமலை, சேலம் எல்லாம் செல்ல, பேருந்து வசதிகள், சாலை வசதிகள், இயற்கை எழில் கொண்ட அழகுப் பகுதிகள் எல்லாம் அங்கேயிருந்தும்கூட, புதியதாக இந்த விழுப்புரம்—இராமசாமி படையாச்சியார் மாவட்டம் தொடங்கியிருப்பதால் அதற்குப் பெருமை சேர்க்கும் வகையிலே அந்தப் பகுதியை சுற்றுலா மையமாக அமைத்துத் தர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். அரசு அதற்கு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை கருத்திலே கொண்டு, சுற்றுலா அலுவலர்களை அனுப்பி சுற்றுலா மையமாக ஆக்க முடியுமா என்பதை அரசு ஆராயும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 320, திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன், மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர்.

**320—**

**மீன்வள கூட்டுறவுச் சங்கங்களுக்குக் கட்டிடம் கட்டுதல்**

***5380—திரு. எஸ். என். பாலசுப்பிரமணியன்:**

மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

*மீன்வளக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு இடம் கொடுத்து கட்டிடமும் கட்டித் தர அரசு முன்வருமா ?*



1997 மார்ச் 24]

**மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன், மீன்வளத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

*மீன்வளக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு இடம் கொடுத்து கட்டிடம் கட்டித் தருவதற்கான திட்டம் எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.*

**திரு. எஸ். என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே எத்தனை இடங்களிலே கூட்டுறவுச் சங்கங்கள் சொந்தமான கட்டிடத்திலே இயங்கி வருகின்றன? தமிழகத்திலே எத்தனைக் கூட்டுறவுச் சங்கங்கள் வாடகை கட்டிடத்திலே இயங்கி வருகின்றன. சொந்தக் கட்டிடங்கள் இல்லாத கூட்டுறவுச் சங்கங்கள் எத்தனை ? புதிதாக கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கக்கூடிய வாய்ப்பு குறித்து அரசிடத்தில் குறிப்பு இருக்கிறதா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-45

**மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கேட்ட பட்டியல் தற்போது என் வசம் இல்லை. இருந்தாலும், சில கூட்டுறவுச் சங்கங்கள் சொந்தக் கட்டிடத்தில் இயங்கி வருகின்றன. அரசு கட்டிக் கொடுக்கும் அளவிற்கு பொருளாதார வசதி இல்லை. இருந்தாலும், கூட்டுறவுச் சங்கங்களுக்கு நிலங்கள் இருக்குமானால், அந்தக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு அவர்கள் கட்டிடம் கட்ட முன்வருவார்களானால், பகுதியை கூட்டுறவுச் சங்கமும் மீதிப் பகுதியை அரசு, வேறு கடனுதவி மூலமாக வழங்க முன் வரும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள் நேரம் முடிவுற்றது.

[*குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.*]

[1997 மார்ச் 24

## 2. சிறப்புக் கவன ஈர்ப்பு

### (அ) நாகை-காயிதே மில்லத் மாவட்டம், திருமுல்லைவாசல் கிராம நடுநிலைப் பள்ளி மாணவிகள் சிலர் கற்பழிக்கப்பட்டமை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சீர்காழி அருகில், திருமுல்லைவாசல் நடுநிலைப் பள்ளியில் மாணவிகள் கற்பழிக்கப்பட்டது குறித்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. மு. பன்னீர்செல்வம், திரு. கோ. மோகனதாசன், திரு. பி.ஆர். சுந்தரம், திரு. வை. சிவபுண்ணியம், திரு. நா. பெரியசாமி, திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன், திரு. சி. ஞானசேகரன் மற்றும் திரு. ப. ரங்கநாதன் ஆகியோர் அறிவிப்பு கொடுத்திருக்கிறார்கள். முதலில், அந்தத் தொகுதியின் சட்டமன்ற உறுப்பினரான திரு. மு. பன்னீர்செல்வத்தைப் பேசுமாறு அழைக்கின்றேன்.

**திரு. மு. பன்னீர்செல்வம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சீர்காழி தொகுதி, திருமுல்லைவாசல் கிராமத்திலே அமைந்திருக்கின்ற அரசு உயர்நிலைப் பள்ளி வளாகத்திலே இயங்கிக் கொண்டிருக்கின்ற ஆரம்பப் பள்ளியில் 4-ஆம் வகுப்பு படித்துக்கொண்டிருந்த, திருமுல்லைவாசல் கிராமத்தைச் சேர்ந்த ஐந்து மாணவிகளில் இரண்டு மாணவிகள் அதே 4-ஆம் வகுப்பு ஆசிரியர் ஆறுமுகம் என்பவராலும், அதே பள்ளியில் சத்துணவு அமைப்பாளராக இருக்கின்ற வெங்கட்ராமன் என்பவராலும், கற்பழிக்கப்பட்டதாகவும், மூன்று மாணவிகள் பலாத்காரம் செய்யப்பட்டதாகவும், எனக்குத் தகவல்கள் வந்திருக்கின்றன. நானும் தொலைபேசி மூலமாக தொடர்புகொண்டு விவரங்களைக் கேட்டறிந்தேன். அப்படி பலாத்காரம் செய்தவர்களான, அந்த ஆசிரியர் மீதும், சத்துணவு அமைப்பாளர் மீதும் நடவடிக்கை எடுத்து அவர்கள் கைது செய்யப்பட வேண்டும் என்றும், அவர்கள் பணியிலிருந்து நீக்கம் செய்யப்பட வேண்டும் என்றும் தங்கள் மூலம் நடவடிக்கையைக் கோருகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'வேலியே பயிரை மேய்ந்தது போல்', நம்முடைய பச்சிளம் குழந்தைகளைப் பள்ளிக்கு அனுப்பினால், அவர்களை எல்லாம் பாதுகாக்கின்ற பணியிலும், கல்விக் கண்ணைத் தரக்கூடிய பணியிலும் இருக்கக்கூடிய ஆசிரியப் பெருமக்கள், அதிலும் குறிப்பாக ஆறுமுகம் போன்ற சில பேர் மிருகங்களாக மாறி, சிறுமலர்களைக் கசக்கிப் பிழிகின்ற நிலைமை





முழுமையாக நம்முடைய நாட்டிலிருந்து விரட்டப்பட வேண்டும். அங்கு இருக்கக்கூடிய ஆசிரியர் மற்றும் சத்துணவு அமைப்பாளர் ஆகியோர் இப்படிப்பட்ட ஒரு முறைகேடான செயலைச் செய்து, 11 வயதே நிரம்பிய அந்த மாணவிகளை அவர்கள் கசக்கிப் பிழிகின்ற நிலைமையைப் பார்க்கிறபோது, உண்மையிலேயே நமக்கெல்லாம் அதிர்ச்சியைத் தரக்கூடிய ஒரு செய்தியாக அது இருக்கிறது. இப்படிப்பட்ட ஆசிரியர்கள் மீது - நாம் எல்லாம், இந்தியத் தண்டனைச் சட்டப்படி இதுபோன்ற வழக்குகளை எல்லாம் தொடுத்து, அவர்கள் ஜாமீனிலே வெளியே வந்து, இரண்டு, மூன்று ஆண்டுகள் வழக்கு நடந்து, பிறகு அவர்களுக்குத் தண்டனை கிடைப்பதற்கு நெடு நாட்கள் ஆகும் - கல்வித் துறை மூலமாகவே, நீங்கள் உடனடியாக டிபார்ட்மெண்டல் என்குயரி-யை வைத்து, அந்த டிபார்ட்மெண்டல் என்குயரியிலேயேகூட நீங்கள் ஒரு முடிவிற்கு வந்து, அவர்களை உடனடியாக வேலையிலிருந்து தூக்கியெறிவதற்கு அரசு முன் வர வேண்டும். அதே போல் ஐந்து மாணவிகள் இப்போது கற்பழிக்கப்பட்டதாகச் செய்திகள் வந்திருக்கிற காரணத்தினாலே, இந்த வழக்கு பதிவு செய்யப்பட்டிருக்கிறதா ? ஏற்கெனவே நடத்திய மெடிக்கல் எக்ஸாமினேஷனில் என்னென்ன இப்போது புலனாகியிருக்கிறது என்பதை எல்லாம் அவைக்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் தெரிவித்து, அந்த இரண்டு மிருகங்கள் மீது உடனடியாகக் கடுமையான நடவடிக்கையை அரசு எடுக்க முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-50

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சீர்காழி தாலுகா, திருமுல்லைவாசல் நடுநிலைப்பள்ளியில் நடைபெற்ற இந்தக் கொடுமையான சம்பவம் அந்தப் பகுதியிலே இருக்கின்ற அனைத்து பொதுமக்களாலும் கண்டிக்கத்தக்க வகையிலே நடைபெற்றிருக்கிற சம்பவமாகும். குறிப்பாக, 10, 11 வயது மாணவிகள் இப்படிப்பட்ட பாலியல் பலாத்காரக் கொடுமைக்கு உள்ளாக்கப்பட்டிருக்கிறார்கள் என்பது உண்மையிலேயே மனவேதனையை அளிக்கிறது. அதிலும் குறிப்பாக, ஆசிரியர் ஆறுமுகம் மற்றும் சத்துணவு அமைப்பாளர் வெங்கட்ராமன் ஆகிய இருவருமே இப்படிப்பட்ட செயல்களை பல மாதங்களாகச் செய்திருப்பதோடு, நேற்றையதினம்கூட, அந்தப் பகுதியிலிருந்து வருகின்ற தினத்தாள்களில் இந்தச் செய்திகள் வந்திருக்கின்றன. ஆகவே, இப்படிப்பட்ட கொடுமையான காரியத்திலே ஈடுபட்ட அந்த இருவர் மீதும் உரிய நடவடிக்கைகள் எடுக்கவேண்டும்.

அத்துடன் பாலியல் உணர்வைத் தூண்டுகின்ற திரைப்படங்கள், சில பத்திரிகைகள் இதுபோன்ற வன்முறைக் காரியங்களில் ஈடுபடுவதற்கான ஊக்கச் சக்தியாக இருக்கின்றன. அவற்றைத் தடை செய்ய முயற்சிகள் மேற்கொள்ளப்படவேண்டும். ஏற்கெனவே கேலி வதை செய்ததால் நாவரசு கொலை செய்யப்பட்ட நிகழ்ச்சிக்காக, இப்பொழுது நாம் சட்டம் இயற்றி, அதன் மூலமாக நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறோம். அதைப்போல, பாலியல் பலாத்கார முயற்சிகளில் ஈடுபடுவோர் மீது உரிய நடவடிக்கைகளை எடுப்பதற்கான முயற்சிகளை நம்முடைய அரசு மேற்கொள்வதோடு, பள்ளி, கல்லூரிகளில் இப்படிப்பட்ட நிகழ்ச்சிகளில் ஈடுபடுவோர் பற்றிக் கண்டறிந்து, களைவதற்கான முயற்சிகளை எடுப்பதற்கு ஒரு நிபுணர் குழுவை அமைத்து அதன் மூலமாக நிரந்தர நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான முயற்சிகளை நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் மேற்கொள்வார்களா என்று கேட்டு அமைகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி.ஆர். சுந்தரம்.

**திரு. பி. ஆர். சுந்தரம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாகை-காயிதே மில்லத் மாவட்டம், சீர்காழி தாலுகா, திருமுல்லைவாசல் நடுநிலைப் பள்ளியில் படித்துக் கொண்டிருந்த ஐந்து மாணவிகள் அங்கிருந்த ஆசிரியர் ஆறுமுகம் என்பவராலும், சத்துணவு அமைப்பாளர் வெங்கட்ராமன் என்பவராலும் கற்பழிக்கப்பட்டதாகச் செய்திகள் வந்திருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எடுத்துக் கூறிய கருத்தையே நானும் எடுத்துக் கூறி, இதுபோன்ற நிகழ்ச்சிகள் இனிமேல் நடக்கக் கூடாது என்று கேட்டுக் கொள்கிறேன். இதிலே கொடுமை என்னவென்றால், அந்த ஐந்து குழந்தைகளுடைய வயதைப் பற்றி எண்ணிப் பார்க்கும்பொழுது, சுந்தரியின் வயது 10, முருகேசியின் வயது 11, சரளாவின் வயது 10, மற்றொரு முருகேசியின் வயது 9 என்றெல்லாம் குறிப்பிடுகிறபோது, உண்மையிலேயே என்னுடைய நெஞ்சம் மட்டுமல்ல, இந்த அவையிலே உள்ள அனைவருடைய நெஞ்சமும் பதைபதைக்கிறது. இந்தக் காட்டுமிராண்டிகளை உடனடியாகத் தண்டிக்கவேண்டும். மேலும், அந்த மாணவிகளுடைய புகைப்படங்கள் பத்திரிகையிலே வந்திருப்பதால், அவர்களுடைய எதிர்காலம் கேள்விக்குறியாக இருக்கின்றது. ஆகவே, சம்பந்தப்பட்டவர்களைக் கண்டுபிடித்து தண்டிப்பதோடு, அந்த மாணவிகளுக்கு எதிர்காலத்தில் நல்ல வாழ்வு அமைவதற்கும் அரசு முன்வரவேண்டுமென்று கேட்டு அமைகிறேன்.





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சீர்காழி வட்டம், திருமுல்லைவாசல் நடுநிலைப் பள்ளியில் பயிலும் மாணவிகள் மீது நடைபெற்ற அந்தக் கொடுமையான பாலியல் வன்முறைச் சம்பவத்தை நாங்களும் மிக வன்மையாகக் கண்டிக்கின்றோம். அதே நேரத்தில் இதுகுறித்து பலமுறை அந்த பள்ளித் தலைமையாசிரியரிடம் புகார் செய்யப்பட்டிருக்கின்றது. ஆனாலும்கூட, அதைப்பற்றி அந்தப் பள்ளியினுடைய தலைமையாசிரியர் சரியாகக் கண்டுகொள்ளவில்லை என்ற ஒரு வருத்தமும் அந்தப் பகுதியில் இருந்து கொண்டிருக்கிறது. இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் பேசும்போது ``Departmental Action" வேண்டுமென்று சொன்னார்கள். இதற்கெல்லாம் துறை ரீதியான நடவடிக்கைகள் எடுப்பதைவிட, ஆர்.டி.ஓ. அளவில் நீதி விசாரணைக்கு ஏற்பாடு செய்யவேண்டும். அப்போதுதான் உண்மைகள் உறுதியாக வெளிவரும். அதன் பிறகு வேண்டுமானால், துறையின் மூலமாக நடவடிக்கையை மேற்கொள்ளலாம். எனவே புனிதமான தொழிலைச் செய்யக்கூடிய ஆசிரியர்கள் இப்படி போக்கிரித்தனமாக நடந்து கொண்டிருப்பது உண்மையிலேயே ஆசிரியர் சமுதாயத்துக்கே ஒரு மாபெரும் வெட்கக்கேட்டையும் இழிவையும் ஏற்படுத்தியிருக்கிறது. மேலும் தவறு செய்த அந்த ஆசிரியர் மட்டுமல்லாமல், இன்னும் பல ஆசிரியர்களுக்கும் இதிலே சம்பந்தம் இருப்பதாக இன்னொரு செய்தியும் வந்துகொண்டிருக்கிறது. ஆகவே, முறையாக ஆர்.டி.ஓ. விசாரணையின் மூலமாக உண்மையை வெளிக் கொணர்ந்து, தவறு செய்தவர்கள் கடுமையாக, பாரபட்சமின்றி, ஈவு இரக்கமில்லாமல் தண்டிக்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொண்டு அமைகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மிக முக்கியமான சிறப்புக் கவன ஈர்ப்பை இங்கே முன்வைத்து, தி.மு.க. உறுப்பினர் திரு. பன்னீர்செல்வம், தமிழ் மாநில காங்கிரஸ் கட்சி உறுப்பினர் திரு. ஞானசேகரன், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர் திரு. சிவபுண்ணியம், அ.தி.மு.க. உறுப்பினர் திரு. சுந்தரம், பா.ம.க. உறுப்பினர் பேராசிரியர் தீரன் ஆகியோர் ஆழ்ந்த வேதனையைத் தெரிவித்ததோடு, இத்தகைய அநீதிகள் தொடராவண்ணம் உரிய நடவடிக்கைகள் எடுக்கவேண்டும் என்பதையும் வலியுறுத்தியிருக்கிறார்கள். அவர்களுடைய கருத்துக்களை நானும் வழி மொழிகின்ற

நிலையில்தான் இந்த மாமன்றத்தில் சில செய்திகளைக் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

முற்பகல் 10-55

நாகை-காயிதே மில்லத் மாவட்டத்தில் சீர்காழி காவல் எல்லைக்குட்பட்ட திருமுல்லைவாசல் என்ற கடற்கரை கிராமத்திலுள்ள அரசு உயர்நிலைப் பள்ளியில் படிக்கின்ற குழந்தைகள், 10 வயது, 11 வயது என்கின்ற அளவிலே சிறுமிகள் இத்தகைய கொடுமைக்கு ஆளாக்கப்பட்டிருக்கிறார்கள். இதிலே குறிப்பாக 4-ஆம் வகுப்பு படிக்கின்ற 10 வயதுள்ள சுந்தரி என்ற மாணவி, தனது வகுப்பு ஆசிரியர் ஆறுமுகம், பள்ளிக்கூட நேரத்திலே தன்னைப் பலாத்காரம் செய்து கற்பழித்துவிட்டதாகவும், அதைப்போலவே சத்துணவு அமைப்பாளர் வெங்கட்ராமன் என்பவர் தன்னை ஏமாற்றிக் கெடுக்க முயன்றதாகவும், தன்னுடைய தாயாரிடம் 18-3-1997 அன்று தெரிவித்திருக்கிறாள். இந்தச் சம்பவம் குறித்து சுந்தரியினுடைய பெற்றோர் கிராமத்தில் தகவல் தந்தார்கள். மேலும், அதே வகுப்பிலே படிக்கும் மாணவிகள், சரளா-10 வயது, கோமதி-9 வயது, முருகேஸ்வரி-11 வயது மற்றும் இன்னொரு முருகேசுவரி என்ற பெண்-11 வயது ஆகியோரும் தங்களையும் மேற்படி ஆசிரியர் ஆறுமுகமும், சத்துணவு அமைப்பாளர் வெங்கட்ராமனும் கற்பழிக்க முயன்றதாக தங்கள் பெற்றோர்களிடமும், ஊராரிடமும் கூறியிருக்கிறார்கள். திரு. ஞானசேகரன் அவர்கள் சொன்னார்கள், வேலியே பயிரை மேய்வதா என்று. பயிரை மேய்வதே பாதகச் செயல்தான் என்றாலும்கூட நாற்றுக்களையே மேய்கிற நாசகார காரியம் அங்கே நடைபெற்றிருக்கிறது. இந்தச் செய்தி கிடைத்தவுடன் கிராமத்தைச் சேர்ந்த 50 மீனவர்கள் 18-3-1997 அன்று மதியம் சீர்காழி காவல் நிலையத்தில் இந்தச் சம்பவம் குறித்து உடனடியாகப் புகார் செய்தார்கள். குழந்தைகளிடமிருந்து பெறப்பட்ட வாக்குமூலங்களின் அடிப்படையில் மேற்படி ஆசிரியர் ஆறுமுகம், 50 வயது உடையவர், மற்றும் வெங்கட்ராமன் ஆகியோர் மீது சீர்காழி காவல் நிலையக் குற்ற எண்கள் 174, 175, 176, 177 மற்றும் 178/97-ல் இந்திய தண்டனைச் சட்டம் 354, 396, 511 மற்றும் 506 பிரிவுகளின்கீழ் வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. வழக்கில் எதிரிகளான ஆறுமுகம் என்பவரும், சத்துணவு அமைப்பாளர் வெங்கட்ராமன் என்பவரும் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் கைது செய்யப்பட வேண்டுமென்ற கருத்தை மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே தெரிவித்தார்கள். அவர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் கைது செய்யப்பட்டது மாத்திரம் அல்ல. இடைக்காலப் பணி



நீக்கமும் செய்யப்பட்டிருக்கிறார்கள். அந்த பச்சிளம் குழந்தைகள் 5 பேரும் மருத்துவப் பரிசோதனைக்கு அனுப்பப்பட்டுள்ளார்கள். வழக்கில் புலன் விசாரணை தீவிரப்படுத்தப்பட்டிருக்கிறது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். நம்முடைய திரு. தீரன் அவர்கள் இதில் ஒரு ஆர்.டி.ஓ. அளவிலே விசாரணை நடைபெற்றால்தான் இன்னும் பல உண்மைகள் வெளிவரும் என்று கூறினார்கள். உரிய விசாரணை மேற்கொள்ளப்படும் என்பதையும் தெரிவித்து, இந்தக் கொடுமையைக் குறித்து விரிவாகப் பேசுவதே கொடுமையானது என்ற காரணத்தால் இந்த அளவோடு அமர்கின்றேன்.

## (ஆ) சென்னை அமைந்தகரையில் 23-3-1997 அன்று காவல் துறையினருக்கும் வேறு சிலருக்கும் மோதல் ஏற்பட்டமை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்த சிறப்புக் கவன ஈர்ப்பு. சென்னை அமைந்தகரையில் 23-3-1997 அன்று தமிழ் மாநிலக் காங்கிரஸ் நிர்வாகிகளைக் காவல் துறையினர் தாக்கிய சம்பவம் குறித்து உறுப்பினர் திரு. ரங்கநாதன் அவர்கள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருவார். திரு. ரங்கநாதன், சுருக்கமாகப் பேசுங்கள்.

***திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்று 23-3-1997 இரவு கோடம்பாக்கம் காவல் நிலையத்தைச் சேர்ந்த ஆய்வாளரும், உதவி ஆய்வாளரும் அமைந்தகரைப் பகுதிக்கு ஒரு குற்றவாளியைப் பிடிப்பதற்காக வந்தார்கள். குற்றவாளி அமைந்தகரை நெடுஞ்சாலையில் அமைந்துள்ள லட்சுமி டாக்கீஸ் இருக்குமிடத்திற்கு அருகிலுள்ள டீக்கடையில் அமர்ந்திருக்கிறான். காவலர்கள் அந்தக் குற்றவாளியைப் பிடித்து வேனிலே ஏற்றியிருக்கிறார்கள். அப்பொழுது, அந்த வழியாக வந்து கொண்டிருந்த தமிழ் மாநிலக் காங்கிரஸ் கட்சியின் இளைஞர் பிரிவைச் சேர்ந்த செல்வின், இராஜன், முரளி, எஸ்.பி. சேகர், சந்திரன் ஆகிய ஐந்து பேர்களையும் காவலர்கள் அடித்து, உதைத்து, மண்டையைப் பிளந்து, வேனிலே ஏற்றி, அமைந்தகரை காவல் நிலையத்திற்கு அழைத்துச் சென்றிருக்கிறார்கள். காவலர்கள், காவல் நிலையத்தில் வைத்தும், தமிழ் மாநிலக் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த இந்த ஐவரையும் சரமாரியாக அடித்து, உதைத்து, லாக்-அப்பிலே அடைத்திருக்கிறார்கள். இந்தச் சூழ்நிலையால், தமிழ் மாநிலக் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த நண்பர்களிடம் ஒரு பதட்டமான சூழ்நிலை உருவாகியிருக்கின்றது. பொதுப்படையாக, காவலர்கள் இந்த அரசுக்கு ஒரு சங்கடத்தை உண்டு பண்ணுவதற்காகவே இப்படிப்பட்ட செயல்களில்

[திரு. ப. ரங்கநாதன்] [1997 மார்ச் 24

ஈடுபடுகின்றார்கள் என்ற ஒரு நிலை ஏற்பட்டுள்ள காரணத்தினால், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் காவலர்களைக் கடுமையாக எச்சரிக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொண்டு, அமைகின்றேன்.

முற்பகல் 11-00

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி** : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் ப. ரங்கநாதன் அவர்கள் கொண்டு வந்துள்ள இந்த சிறப்புக் கவன ஈர்ப்பு தொடர்பாக அதிகாரிகள் மூலமாக எனக்குக் கிடைத்தத் தகவல் குறிப்பை இங்கே முதலில் தர விரும்புகிறேன்.

23-3-1997 அன்று இரவு 7 மணி அளவில், கோடம்பாக்கம் உதவி ஆய்வாளர் செந்தில் மற்றும் காவலர்கள், 3253 எண்ணுள்ள திரு. வீரமணி, 6129 எண்ணுள்ள திரு. இராமமூர்த்தி, 7172 எண்ணுள்ள திரு. பன்னீர்செல்வம், 1564 எண்ணுள்ள திரு. கே. சுப்புராம் ஆகியோர், கோடம்பாக்கம் குற்ற எண் 515/97 பிரிவு 303, 307, இந்திய தண்டனைச் சட்டத்தில் சம்பந்தப்பட்ட தலைமறைவு எதிரி மோகன்தாஸ் என்பவரைத் தேடி, அமைந்தகரை, அய்யாவு நாயுடு காலனியிலுள்ள பார்த்தசாரதி தெரு மற்றும் கோவிந்தன் சந்திப்பில், பழைய குற்றவாளி கண்ணன் என்பவரை விசாரித்துக் கொண்டிருக்கும்போது, சந்திரன், முரளி, இராஜன், செல்வின், சேகர், தன்சுராஜ் மற்றும் பலர், அவர்களை அலுவல் செய்யவிடாமல் தடுத்து, கைகளாலும், கற்களாலும் தாக்கி காயம் ஏற்படுத்தினார்கள் என்றும், இத்தாக்குதலில், கோடம்பாக்கம் சட்டம் ஒழுங்கு உதவி ஆய்வாளர் செந்தில் மற்றும் நான்கு காவலர்களுக்குக் காயம் ஏற்பட்டது என்றும், அறிக்கையிலே தரப்பட்டுள்ளது . இருப்பினும், திவாகர், செல்வின், சேகர், இராஜன், சந்திரன், முரளி ஆகிய ஐவரை மேற்படி உதவியாளர் குறைந்த அளவு பலத்தைப் பயன்படுத்திக் கைது செய்து, கோடம்பாக்கம் காவல் நிலையம் கொண்டு வந்து, விசாரணை செய்து, பின்னர் அமைந்தகரை காவல் நிலையம் கொண்டுவந்து, ஆஜர் செய்ய, உதவி ஆய்வாளர் செந்தில் கொடுத்த புகாரின் பேரில் அமைந்தகரை காவல் நிலையக் குற்ற எண் 402/97, பிரிவு 147, 341, 323, 353, 332, 307 இந்திய தண்டனைச் சட்டத்தின்படி வழக்கு ஒன்றும் பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்படி குற்ற எண் 402/97-இல் சம்பந்தப்பட்ட குற்றவாளிகள் ஐவரையும் மற்றும் காயமுற்ற காவல் துறையினரையும் சிகிச்சைக்காகக் கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பியுள்ளனர். அங்கே, செல்வின், அமைந்தகரை உதவி ஆய்வாளரிடம் கொடுத்த புகாரில், கோடம்பாக்கம் காவல்



1997 மார்ச் 24] [கலைஞர் மு. கருணாநிதி]

நிலையத்தைச் சேர்ந்த உதவி ஆய்வாளர் மற்றும் 5 காவலர்கள், தங்களைக் கோடம்பாக்கம் காவல் நிலையம் கொண்டுபோய், அங்கே மேலும் சில காவலர்கள் சேர்ந்து தங்களைத் தாக்கியதாகப் புகார் கொடுத்ததன்பேரில், அமைந்தகரை காவல் நிலையத்தின் குற்ற எண் 403/97, பிரிவு 147, 341, 323 மற்றும் 307, இந்திய தண்டனைச் சட்டத்தின்படி காவலர்கள் மீதும் வழக்கு ஒன்று பதிவு செய்யப்பட்டிருக்கிறது. உதவி ஆய்வாளர் செந்தில் மற்றும் நான்கு காவலர்களும் அரசு பொது மருத்துவமனையிலே உள்நோயாளிகளாக அனுமதிக்கப்பட்டு, சிகிச்சை பெறுகின்றார்கள்.

இச்சம்பவம் காரணமாக, 23-3-1997 அன்று இரவு 7.30 மணி முதல் 7.40 மணி வரையில் அமைந்தகரை, அய்யாவு நாயுடு காலனியைச் சேர்ந்த அய்யாத்துரை நாடார், ரவி மற்றும் பட்டாபி ஆகியோர் தலைமையில் பெரியார் சாலை மற்றும் கோவிந்தன் தெரு சந்திப்பில் அய்யாவு காலனியைச் சேர்ந்தவர்கள் சாலை மறியலில் ஈடுபட்டுள்ளனர். காவல் துறையினர் சம்பவ இடத்திற்குச் சென்று அவர்களோடு பேசிய பிறகு, அவர்கள் கலைந்து சென்றிருக்கிறார்கள். சம்பவ இடமான அய்யாவு காலனிக்கு, தியாகராயநகர் சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் அ. செல்லக்குமார் வந்து, காவல் துறையினர் குடிபோதையில்தான் இத்தாக்குதலில் ஈடுபட்டிருக்கிறார்கள் என்று புகார் சொல்லியதன் பேரில், இச்சம்பவத்தில் ஈடுபட்ட காவல் துறையினர் மது அருந்தியிருந்தார்களா என்று அறிய மருத்துவப் பரிசோதனை செய்யப்பட்டது. அச்சோதனையில், சம்பந்தப்பட்ட காவல் துறையினர் யாரும் மது அருந்தவில்லை என்று மருத்துவ அதிகாரி சான்று பகர்ந்துள்ளார்.

காவல் துறையினர் அடித்ததாகப் புகார் கூறப்பட்டதால், இந்த வழக்கின் ஆவணங்கள் மற்றும் தனி அறிக்கையுடன், பி.எஸ்.ஓ. 145 பிரிவின்படி, உரிய விசாரணைக்காக அனுப்பப்பட்டுள்ளது. அவர்கள் எந்தக் கட்சியைச் சார்ந்தவர்கள் என்பது பற்றி எனக்குத் தெரியாது. அவர்களை, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. ரங்கநாதன் அவர்கள், தமிழ் மாநிலக் காங்கிரஸைச் சேர்ந்தவர்கள் என்று கூறுகிறார்கள். இதனைக் கட்சி சார்பற்ற முறையிலேதான் நாம் எண்ணிப் பார்க்க வேண்டும்.

முற்பகல் 11.05

காவல் துறையினர், ஒரு குற்றவாளியைத் தேடிச் சென்றபோது, ஏற்பட்ட வாக்குவாதம், உரையாடல் இவற்றின் காரணமாக, காவல்

துறையினர் 3 பேர் அல்லது 4 பேர் அங்கே தாக்கப்பட்டிருக்கிறார்கள். அதைத் தொடர்ந்துதான் அடித்தவர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள் என்று தகவல் வந்திருக்கிறது. உரிய விசாரணையின் போதுதான் உண்மை தெரியும். இருந்தாலும், அவர்கள் காங்கிரஸைச் சேர்ந்தவர்களா, அல்லவா, தமிழ் மாநிலக் காங்கிரஸா, அல்லவா என்பதைப் பற்றியெல்லாம், அந்த விசாரணையிலே முடிவாகும் என்ற நிலையில், நிச்சயமாக உரிய விசாரணை நடத்தப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## 3. அறிவிப்பு

### (அ) உறுப்பினர் கொடுத்துள்ள அறிக்கைக் குறித்து

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞானசேகரன் அவர்கள், வடாற்காடு அம்பேத்கர் மாவட்டத்தில், நேற்றும், இன்றும் நடந்த அரசு விழாவிற்கான அழைப்பிதழில் தன் பெயர் இல்லை என்று ஓர் உரிமைப் பிரச்சினைக்கான அறிவிப்பு கொடுத்திருக்கிறார். நான் மாவட்ட ஆட்சித் தலைவரிடம் விளக்கம் கேட்டுவிட்டு, அதிலே ஏதாவது உண்மை இருக்குமானால், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய பார்வைக்கு வைப்பேன்.

## 4. கவன ஈர்ப்பு

### ஏ.டி. பன்னீர்செல்வம் மாவட்டம், திருத்துறைப்பூண்டி தொகுதி, திருத்தங்கூர் ஆரம்ப சுகாதார நிலையத்தில் போதிய மருத்துவர்கள் இன்மை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை விதி 55-இன் கீழ் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு பற்றிய கவன ஈர்ப்பு.

திரு. ஜி. பழனிசாமி அவர்கள் ஒரு அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருவார். திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஏ.டி. பன்னீர்செல்வம் மாவட்டம், திருத்துறைப்பூண்டி தொகுதியில் உள்ள திருத்தங்கூர் ஆரம்ப சுகாதார நிலையத்தில், போதிய அளவு மருத்துவர்கள் இல்லாததால் ஆரம்ப சுகாதார நிலையம் சரிவர



இயங்காததன் நிலை குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டிருக்கிறது.

### அறிக்கை

திருத்துறைப்பூண்டி ஊராட்சி ஒன்றியத்தில் திருத்தங்கூரில் ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது. இந்த ஆரம்ப சுகாதார நிலையம் முன்னாளில் ஊராட்சி ஒன்றிய மருந்தகமாக இருந்து 1-4-1991 முதல் ஆரம்ப சுகாதார நிலையமாக மாற்றப்பட்டு செயல்பட்டு வருகிறது. அரசால் அனுமதிக்கப்பட்ட மருத்துவ அலுவலர் பணியிடம் ஒன்று மட்டுமே. திருத்தங்கூர் ஆரம்ப சுகாதார நிலையத்தில் பணிபுரிந்த டாக்டர் செல்வகுமாரி, மருத்துவ அலுவலர், மருத்துவ கல்வித் துறைக்கு 1996 மே மாதம் பணி மாற்றம் செய்யப்பட்டார். டாக்டர் ஆர். புஷ்பா, மருத்துவ அலுவலர், தலைஞாயிறு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு மாற்றுப்பணி மூலம் திருத்தங்கூரில் பணிபுரிந்து வருகிறார். ஆரம்ப சுகாதார நிலையங்களில் மருத்துவ அலுவலர் பணியிடங்கள் சுமார் 456 காலியாக உள்ளன. தமிழ்நாடு தேர்வாணைக்குழு மூலம் மருத்துவ அலுவலர்கள் பணி நியமனம் விரைவில் செய்யப்படவுள்ளது. தற்பொழுது டாக்டர் சம்பத்குமார், சென்னை கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரியில் பட்ட மேற்படிப்பு முடித்து திருத்தங்கூர் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு பணி நியமனம் செய்யப்பட்டுள்ளார். அவர் 13-3-1997 ஆம் நாளில் பணியில் சேர்ந்துள்ளார்.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் விவர அறிக்கையைப் படித்துப் பார்த்தேன். 1996 மே மாதம், அங்கு ஏற்கெனவே இருந்த டாக்டர், பணிமாற்றம் செய்யப்பட்டு காலியாக இருந்த அந்த இடத்தில், டாக்டர் புஷ்பா என்கிற டாக்டர் பணியமர்த்தப்பட்டிருப்பதாக அந்த அறிக்கையிலே கூறப்பட்டிருக்கிறது. திருத்தங்கூருக்கும், தலைஞாயிறுக்கும் இடையே இருக்கக்கூடிய தூரம் 35 கிலோ மீட்டர். இன்னொரு ஆரம்ப சுகாதார நிலையம், நாகை காயிதே மில்லத் மாவட்டத்தைச் சார்ந்த [illegible] ஒன்றியத்திலே, மிக முக்கியமான நகரத்திலே அமை[illegible] வழியில் அந்த [illegible] பணிபுரிந்து கொண்டிருக்கிறார் [illegible] அந்த இடத்திலிருந்து

திருத்தங்கூருக்கு 35 கிலோ மீட்டருக்கு அப்பால் இருக்கக்கூடிய இடத்திலிருந்து வந்து கொண்டிருக்கிறார். திருத்தங்கூர் என்பது, திருவாரூருக்கும், மன்னார்குடிக்கும் மையமாக இருக்கக்கூடிய ஒரு உள் கிராமம். அந்தக் கிராமத்திலே இருக்கக்கூடிய மக்கள், மருத்துவம் பெற இயலாமல், 6 மாதத்திற்கு மேலாக அங்கு டாக்டர்களே இல்லாத ஒரு அவலமான நிலை இருக்கிறது. போக்குவரத்து வசதியே இல்லாத அந்த இடத்திற்கு நிரந்தரமாக ஒரு டாக்டர் நியமிக்கப்பட வேண்டும். தற்போது அந்த மருத்துவமனைக்கு, மருத்துவக் கல்லூரியில் படித்துக் கொண்டிருக்கக்கூடிய ஒரு மாணவர் நியமிக்கப்பட்டிருப்பதாக, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், இந்த அறிக்கையிலே குறிப்பிட்டிருக்கிறார். டாக்டர் சம்பத்குமார் என்கிற அந்த டாக்டர், சென்னை கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரியில் பட்ட மேற்படிப்பு முடித்து விட்டு அங்கு பணியில் சேர்ந்துள்ளதாக அறிக்கையில் சொல்லப்பட்டிருந்தாலும்கூட, ஏதாவது ஒரு மருத்துவமனையிலிருந்து நிரந்தரமாக ஒரு மருத்துவரை நியமிக்க வேண்டும். மேலும், இதுபோல உள் கிராமங்களிலே இருக்கக்கூடிய ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு வாகன வசதி இல்லாத காரணத்தினால், அங்கு போய் பணிபுரிய மருத்துவர்கள் தயங்குகிறார்கள். எப்போதாவது ஒரு நேரத்தை எடுத்துக் கொண்டு, காலை நேரமோ அல்லது மாலை நேரமோ எடுத்துக் கொண்டு, குறிப்பிட்ட ஒரு மணி நேரம் அல்லது 2 மணி நேரம்தான் அந்தப் பணியில் ஈடுபடுகிறார்கள். 24 மணி நேரமும் ஆரம்ப சுகாதார நிலையங்களும், மருத்துவர்களும் இயங்க வேண்டுமென்று சொல்லப்பட்டிருந்தபோதிலும்கூட, ஆரம்ப சுகாதார நிலையங்களில், மருத்துவ அலுவலர் பதவிகள் 456 பணியிடங்கள் காலியாக உள்ளதாக, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த அறிக்கையிலே குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆகவே, புதிதாக ஆரம்ப சுகாதார நிலையங்கள் துவக்கப்படுகிற நேரத்தில், ஆரம்ப சுகாதார நிலையம் இருக்கக்கூடிய இடத்திலேயே கண்டிப்பாக மருத்துவர்களை நியமிப்பதற்கு அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டு, அமர்கிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் எடுத்துச் சொன்னதைப்போல, அங்கே ஒரு மருத்துவர் தேவை என்பதை உணர்ந்துதான், கீழ்ப்பாக்கம் மருத்துவமனையிலே, பி.ஜி. செய்து கொண்டிருக்கிற டாக்டர் சம்பத்குமார் அவர்கள், அங்கே புதிதாக நியமிக்கப்பட்டிருக்கிறார். இருந்தாலும்கூட, தமிழ்நாட்டிலே மொத்தமாக சுமார் ஐநூறுக்கும் மேற்பட்ட இடங்களிலே, டாக்டர்களை நியமிக்க வேண்டிய நிலையிலே அரசாங்கம் இருக்கிறது. இதற்காக,



கடந்த ஆண்டு, நம்முடைய தேர்வாணையத்திற்குக் கடிதம் எழுதி, உடனடியாக 500-க்கும் மேற்பட்ட டாக்டர்களை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அரசு கேட்டுக் கொண்டது. தேர்வாணையமும் அதற்கான விளம்பரங்களை எல்லாம் செய்து நடவடிக்கை எடுக்கப்பட்டு, அடுத்த மாதத்திற்குள்ளாக டாக்டர்களைத் தேர்ந்தெடுத்து அரசுக்கு அனுப்புவதாகச் சொல்லி இருக்கிறார்கள். அந்தப் பட்டியல் வந்தவுடன் மாண்புமிகு உறுப்பினர்களுடைய குறை அடுத்த நாளே போக்கப்படும் என்பதையும், தமிழ்நாட்டிலே எல்லா மருத்துவமனைகளிலும் டாக்டர்களே இல்லையென்று சொல்லமுடியாத நிலை உருவாக்கப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 11-10

## 3. அறிவிப்பு—(தொடர்ச்சி)

### ஆ. தமிழ்நாடு நில மேம்பாட்டு வாரிய நிர்வாகக் குழு உறுப்பினர்கள் நியமனம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு நில மேம்பாட்டு வாரியத்தின் நிர்வாகக் குழுவிற்கு கீழ்க்காணும் 3 உறுப்பினர்களிடமிருந்து முறையாக நியமனத் தாள்கள் வரப்பெற்றன. திரு. பா. அருண்குமார், திரு. அன்பில் பொய்யாமொழி, திருச்சி. திரு. பா. அருண்குமார், ஞானசேகரன். தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய உறுப்பினர்களின் எண்ணிக்கையும், முறையாக வரப்பெற்ற நியமனத்தாள்களின் எண்ணிக்கையும் சமமாக இருப்பதால் மேற்காணும் மூன்று மாண்புமிகு உறுப்பினர்களும் தமிழ்நாடு நில மேம்பாட்டு வாரியத்தின் நிர்வாகக் குழு உறுப்பினர்களாக முறையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கிறேன்.

## 5. மானியக் கோரிக்கைகள், 1997-98, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

### (அ) கோரிக்கை எண் 35—பாசனம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 1997-98 ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கைகள் மீது விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி. கோரிக்கை எண் 35—பாசனம், மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர்.

[1997 மார்ச் 24

***மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"பாசனம் பற்றிய 35-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ. 261,76,30,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 1178, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

'வட ஆற்காடு-அம்பேத்கர் மாவட்டம், வாணியம்பாடி தாலுக்காவில் வெள்ளக்குட்டை கிராமத்தின் அருகே 'ஆலமரத்து மடுவு' என்ற இடத்தில் அணை கட்டவேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

"பாசனம் பற்றிய 35-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 261,76,30,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 531, திரு. ஜி. பழனிசாமி

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

'கொள்கை பற்றி' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பாசனம் பற்றிய 35-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 261,76,30,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 203, திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

'பவானி ஆற்றில் வெள்ளப் பெருக்கின்போது, வடிகிற நீரை வாய்க்கால் வெட்டி வடித்து குளம், குட்டைகளில் தேக்குவதற்கான 134 கோடியில் வடிவமைக்கப்பட்டுள்ள அவினாசித் திட்டத்தை அமுலாக்குவது குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:





"பாசனம் பற்றிய 35-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 261,76,30,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 210, திரு. நா. பெரியசாமி.

***திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

பெருந்துறை-ஊத்துளி ஒன்றியங்கள் உள்ளிட்ட வறட்சிப் பகுதிகளில் உள்ள குளம், குட்டைகளுக்கு கீழ்பவானி உபரிநீர் கிடைப்பதை வழங்கிட நிரப்பிடும் பணியை துவக்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பாசனம் பற்றிய 35-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 261,76,30,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 952, திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

'ஏ.டி. பன்னீர்செல்வம் மாவட்டம், மன்னார்குடி தொகுதி அஷோசம், இடையர் நத்தம், மரவாக்காடு சாந்தா மாணிக்கம், கண்ணாரப்பேட்டை பகுதி விவசாயிகளுக்கு நீரேற்று பாசனத் திட்டம் தீட்டி நிறைவேற்றாமல் உள்ளதை உடன் செயல்படுத்திட வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பாசனம் பற்றிய 35-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 261,76,30,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 968, திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

'ஆண்டிமடம் தொகுதி, ஆண்டிமடத்தில் ஆயிரம் ஏக்கர் பாசனம் செய்யும் குழுமூர், சிற்றுடையார் சேந்தமங்கலம், நத்தம்பாடி ஏரிகள் மராமத்து செய்யப்பட்டு கால்வாய்கள் அமைப்பதைப் பற்றி' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

[திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்] [1997 மார்ச் 24

"பாசனம் பற்றிய 35-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 261,76,30,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 535, திரு. இ. கணேசன்.

**திரு. இ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

'சேலம் மாவட்டம், எடப்பாடி நகரில் உள்ள பெரிய ஏரிக்கு 3 கி.மீ. தொலைவிலுள்ள மேட்டூர் கிழக்கு வாய்க்காலில் உபரி நீர்வரத்து உள்ள காலத்தில் ஏரிக்கு நீர் கொண்டுவரும் திட்டம் நிறைவேற்றப்பட வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பாசனம் பற்றிய 35-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 261,76,30,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1615 திரு. ஜி. கே. மணி.

**திரு. ஜி. கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

'தருமபுரி மாவட்டம், பென்னாகரம் தொகுதிக்குட்பட்ட அனைத்துப் பாசன ஏரிகளையும் தூர் எடுப்பதன் அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பாசனம் பற்றிய 35-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 261,76,30,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 197, திரு ஜி. நிஜாமுதீன்.

**திரு. ஜி. நிஜாமுதீன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

'கிழையூர் ஒன்றியம் கிரனேரியை சீர்செய்து தூர் வாரி பாசனத்திற்கு பயன்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க நான கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பாசனம் பற்றிய 35-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 261,76,30,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."



1997 மார்ச் 24]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 527, திரு. அல. அப்துல் நாசர்.

**திரு. அல. அப்துல் நாசர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

'புவனகிரி தொகுதி விவசாய மக்களின் தேவையைக் கவனத்தில் கொண்டு பரவனாற்றிலிருந்து புதுவயலாமூர் கடைமடை வரையிலான ஒரு கிலோ மீட்டர் நீளத்திற்கு இயந்திரத்தின் துணை கொண்டு புதிய வாய்க்கால் வெட்டப்பட வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பாசனம் பற்றிய 35-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 261,76,30,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1256, திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

'கன்னியாகுமரி மாவட்டம் மாம்பழத்தாறு அணையை கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பாசனம் பற்றிய 35-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 261,76,30,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 967, திரு. பா. வேல்துரை.

**திரு. பா. வேல்துரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

'கொள்கை பற்றி' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பாசனம் பற்றிய 35-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 261,76,30,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

## (ஆ) கோரிக்கை எண் 36—பொதுப் பணிகள் கட்டிடங்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 36, பொதுப் பணிகள்-கட்டிடங்கள், மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"பொதுப் பணிகள்—கட்டிடங்கள் பற்றிய 36-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ. 49,41,31,000-க்கு மேற்பட்ட தொகை அரசுக்கு வழங்கப்பெறவேண்டும்."
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 1180, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

'வேலூரின் சத்துவாச்சாரியில் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம் உள்ள இடத்தில் சுற்றுலா மாளிகை கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொதுப் பணிகள்—கட்டிடங்கள் பற்றிய 36-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 49,41,31,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 553, திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

'கொள்கை பற்றி' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொதுப் பணிகள்—கட்டிடங்கள் பற்றிய 36-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 49,41,31,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 214, திரு. கே. சுப்பராயன்.

***திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

'கொள்கை பற்றி' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :



"பொதுப் பணிகள்—கட்டிடங்கள் பற்றிய 36-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 49,41,31,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 216, திரு. நா. பெரியசாமி.

**திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

'கீழ் பவானி பாசனத் திட்டத்தில் அமைக்கப்பட்டுள்ள பாசன சபைகளுக்குக் கட்டடம் மற்றும் தொடர்பு கருவிகள் வழங்கிட வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொதுப் பணிகள்—கட்டிடங்கள் பற்றிய 36-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 49,41,31,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 979, திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

'ஏ.டி. பன்னீர்செல்வம் மாவட்டம், மன்னார்குடி தாலுக்கா அலுவலகத்திற்கு புதிய கட்டிடம் கட்டுவது குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொதுப் பணிகள்- கட்டிடங்கள் பற்றிய 36-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 49,41,31,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1150, திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே,

'திருவள்ளூர் மாவட்டம், ஆண்டிமடம் தொகுதியில் செந்துரையில் பயணியர் விடுதி அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொதுப் பணிகள்—கட்டிடங்கள் பற்றிய 36-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 49,41,31,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 550, திரு. இ. கணேசன்:

**திரு. இ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே,

'சேலம் மாவட்டம் எடப்பாடியில் தாலுக்கா அலுவலகம் விரைவாக கட்டி முடிக்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொதுப் பணிகள்—கட்டிடங்கள் பற்றிய 36-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 49,41,31,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1605, திரு. ஜி. கே. மணி.

**திரு. ஜி. கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

'தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதிக்குட்பட்ட ஒகேனக்கல் சுற்றுலா மையத்தில் பொதுப்பணி சுற்றுலா மாளிகை பயணியர் விடுதி ஒன்று கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

"பொதுப் பணிகள்- கட்டிடங்கள் பற்றிய 36-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 49,41,31,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 213, திரு ஜி. நிஜாமுதீன் :

**திரு. ஜி. நிஜாமுதீன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

'நாகை, நாகூர் மருத்துவமனைகளின் கட்டிடங்கள் மற்றும் ஒயரிங்குகள் பழுதுபார்க்கப்பட வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொதுப் பணிகள்—கட்டிடங்கள் பற்றிய 36-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 49,41,31,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 556, திரு அ. வ. அப்துல் நாசர்.

**திரு. அ. வ. அப்துல் நாசர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

'சிதம்பரம் தாலுக்கா வெள்ளாற்றின் கரைகள் வெள்ளச் சீற்றத்தினால் உடைப்பெடுத்து சேதம் ஏற்படுத்துவதைத் தடுக்க தடுப்புச் சுவர் கட்டப்பட வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொதுப் பணிகள்—கட்டிடங்கள் பற்றிய 36-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 49,41,31,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1270, திரு. டி மணி.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

'கன்னியாகுமரி மாவட்டம், தூத்தூர் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு புதிய கட்டிடம் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொதுப் பணிகள்—கட்டிடங்கள் பற்றிய 36-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 49,41,31,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

## (இ) கோரிக்கை எண் 55—பாசனம் குறித்த மூலதனச் செலவு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கோரிக்கை எண் 55, பாசனம் குறித்த மூலதனச் செலவு, மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர்

முற்பகல் 11-15

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"பாசனம் குறித்த மூலதனச் செலவு பற்றிய 55-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ. 249,38,47,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள், வெட்டுத் தீர்மானம் எண் 1204, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

'வட ஆற்காடு-அம்பேத்கர் மாவட்டத்தில் உள்ள சதுப்பேரியைத் தூர் எடுத்து, மழை நீரைத் தேக்கி வைக்கும் வகையில் கரையினை பலப்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பாசனம் குறித்த மூலதனச் செலவு பற்றிய 55-ம் என்ண மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 249,38,47,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 696, திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

'கொள்கை பற்றி' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பாசனம் குறித்த மூலதனச் செலவு பற்றிய 55-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.249,38,47,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 295, திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

'கொள்கை பற்றி' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

"பாசனம் குறித்த மூலதனச் செலவு பற்றிய 55-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 249,38,47,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 296, திரு. நா. பெரியசாமி.



**திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

'கீழ்பவானி பாசனத் திட்டத்தில் பாசனக் கட்டமைப்பு வசதிகள் செய்து கொடுப்பதின் அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பாசனம் குறித்த மூலதனச் செலவு பற்றிய 55-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 249,38,47,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1522, திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

'விழுப்புரம்-இராமசாமி படையாட்சியார் மாவட்டம், செஞ்சி பகுதியில் பல ஆண்டுக்காலமாக கிடப்பில் போடப்பட்டுள்ள நந்தன் கால்வாய்த் திட்டம் நிறைவேற்ற வேண்டுவதன் இன்றியமையாமை குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பாசனம் குறித்த மூலதனச் செலவு பற்றிய 55-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 249,38,47,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண், 703, திரு. இ. கணேசன்.

**திரு. இ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

'கொள்கை பற்றி' விவாதிக்க நான் கீழ்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பாசனம் குறித்த மூலதனச் செலவு பற்றிய 55-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.249,38,47,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1600, திரு. ஜி. கே. மணி.

**திரு. ஜி. கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

'சேலம் மாவட்டம், மேட்டூர் வட்டம், ஆலமரத்துப்பட்டி ஊராட்சிக்குட்பட்ட சாம்பார் பள்ளத்தில் பாசன அணை கட்டும் பணிகள் உடனடியாக துவங்கி பாசன வசதி பெருக்குவதன் அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பாசனம் குறித்த மூலதனச் செலவு பற்றிய 55-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 249,38,47,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 294, திரு. ஜி. நிஜாமுதீன்.

**திரு. ஜி. நிஜாமுதீன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

'கடலில் விழுந்து வீணாகும் மழைநீரை தேக்கி விவசாயத்திற்கு பயன்படுத்தும் வகையில் ஆங்காங்கே சிறு அணைகள் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டு தீர்மானத்தை மொழிகிறேன்.

"பாசனம் குறித்த மூலதனச் செலவு பற்றிய 55-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.249,38,47,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 701, திரு. அ.வ. அப்துல் நாசர்.

**திரு. அ. வ. அப்துல்நாசர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

'நீர் வழி பாசன உதவியாளர்களை ஏற்கெனவே இருந்தவாறு, 'ஒரு மைலுக்கு ஒருவர்' என்ற விகிதத்தில் பணியமர்த்த வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பாசனம் குறித்த மூலதனச் செலவு பற்றிய 55-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 249,38,47,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்".



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1107, திரு. பா. வேல்துரை.

**திரு. பா. வேல்துரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

'நெல்லை கட்டபொம்மன் மாவட்டம் தாமிரபரணி பாசனத்திலுள்ள கன்னடியன் கால்வாயினை சிமெண்ட் லைனிங் செய்து பராமரிப்பு செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பாசனம் குறித்த மூலதனச் செலவு பற்றிய 55-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 249,38,47,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

## (ஈ) கோரிக்கை எண் 56-பொதுப் பணிகள்—கட்டடங்கள் குறித்த மூலதனச் செலவு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 56 - பொதுப் பணிகள்-கட்டிடங்கள் குறித்த மூலதனச் செலவு. மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"பொதுப் பணிகள்—கட்டிடங்கள் குறித்த மூலதனச் செலவு பற்றிய 56-ஆம் எண் கோரிக்கையின்கீழ் ரூ.105,08,79,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெறவேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 1205, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

'வட ஆற்காடு—அம்பேத்கர் மாவட்டத்தில் பொதுப் பணித் துறை காவலூர் ஏலகிரி, அமிர்தி மலைகளில் சுற்றுலா மாளிகை கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொதுப் பணிகள்—கட்டிடங்கள் குறித்த மூலதனச் செலவு பற்றிய 56-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 105,08,79,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்,"

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 705, திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

'கொள்கை பற்றி' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத்தீர்மானத்தை மொழிகிறேன் :

"பொதுப் பணிகள்—கட்டிடங்கள் குறித்த மூலதனச் செலவு பற்றிய 56-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 105,08,79,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 299, திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

'கொள்கை பற்றி' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொதுப் பணிகள்—கட்டிடங்கள் குறித்த மூலதனச் செலவு பற்றிய 56-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.105,08,79,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 300, திரு. நா. பெரியசாமி.

**திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

'கொள்கை பற்றி' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொதுப் பணிகள்—கட்டிடங்கள் குறித்த மூலதனச் செலவு பற்றிய 56-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 105,08,79,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 704, திரு. இ. கணேசன்.

**திரு. இ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

'கொள்கை பற்றி' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"பொதுப் பணிகள்—கட்டிடங்கள் குறித்த மூலதனச் செலவு பற்றிய 56-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.105,08,79,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1590, திரு. ஜி. கே. மணி.

**திரு. ஜி. கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

'தருமபுரி மாவட்டம், பென்னாகரம் நகரில் பொது மக்களுக்குப் பயன்படக்கூடிய கலை அரங்கம் ஒன்று கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொதுப் பணிகள்—கட்டிடங்கள் குறித்த மூலதனச் செலவு பற்றிய 56-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.105,08,79,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 298, திரு. ஜி. நிஜாமுதீன்.

**திரு. ஜி. நிஜாமுதீன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

'காயிதே மில்லத் மாவட்டத்திற்கான பொதுப்பணித் துறை கட்டிடப் பிரிவு காவிரி சீரமைப்பு வெண்ணாறு கோட்டம் போன்றவற்றை நாகையில் ஏற்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொதுப் பணிகள்—கட்டிடங்கள் குறித்த மூலதனச் செலவு பற்றிய 56-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 105,08,79,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 707, திரு. அ. வ. அப்துல் நாசர்.

**திரு. அ. வ. அப்துல் நாசர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

'புவனகிரி தொகுதியில் உள்ள அரசு மேல்நிலைப் பள்ளி, உயர்நிலைப்பள்ளிகள், அரசு மருத்துவமனை ஆகியவற்றைச் செப்பனிட வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொதுப் பணிகள்—கட்டிடங்கள் குறித்த மூலதனச் செலவு பற்றிய 56-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.105,08,79,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1112, திரு. பா. வேல்துரை.

**திரு. பா. வேல்துரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொதுப் பணிகள்—கட்டிடங்கள் குறித்த மூலதனச் செலவு பற்றிய 56-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.105,08,79,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கைகளும், வெட்டுத் தீர்மானங்களும் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாசனம் பொதுப்பணிகள்-கட்டிடங்கள், பாசனம் குறித்த மூலதனச் செலவு மற்றும் பொதுப்பணிகள்-கட்டிடங்கள் குறித்த மூலதனச் செலவு பற்றிய கொள்கை விளக்கக் குறிப்புகள் தமிழிலும் ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. அவற்றில் தமிழில் உள்ள கொள்கை விளக்கக் குறிப்புகளை@ நான் இந்தப் பேரவையில் படித்ததாகக் கருதி, சட்டமன்றப் பேரவை பதிவேட்டில் பதித்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் அரிய கருத்துக்களைத் தெரிவித்த பின்னர் என்னுடைய பதிலுரையை அளிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர்கள் 12 பேர் இந்த விவாதத்தில் பேசவேண்டுமென்று விருப்பம் தெரிவித்திருக்கிறார்கள். ஆகவே மாற்றுத் தலைவர்கள் எந்த ஒரு உறுப்பினருக்கும் 10 நிமிடங்களுக்குமேல் கொடுக்கக்கூடாது என்ற கருத்தைச் சொல்லி திரு. பா. வேல்துரை அவர்களை விவாதத்தைத் துவக்கி வைக்குமாறு அழைக்கிறேன்.

---

@ 613 முதல் 685 வரையிலுள்ள பக்கங்களில் இணைப்புகளாக அச்சிடப்பட்டுள்ளன.



***திரு. பா. வேல்துரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக முதல்வர் அவர்களால் தமிழகத்திற்கு தரப்பட்டிருக்கின்ற 1997-98-ஆம் ஆண்டுக்கான வரவு செலவு திட்டம் அனைத்து தரப்பு மக்களும் பாராட்டும் வகையில் அமைந்து இருப்பதை, மக்கள் தலைவர் ஐயா மூப்பனார் அவர்களின் ஆசியோடும், ஆதரவோடும் வரவேற்று பொதுப்பணித் துறை மானியக் கோரிக்கையில் எனது கருத்துக்களை எடுத்து வைக்க விரும்புகிறேன்.

பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களைப் பொறுத்த வரையில் 'தாய் 8 அடி பாய்ந்தால், குட்டி 16 அடி பாயும்' என்று கிராமங்களில் சொல்லுவார்களே, அதைப்போல இன்றைக்கு பொதுப்பணித் துறையை சிரமைக்கும் பணியில் நமது பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் மிகச் சிறப்பாகப் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். தமிழகத்திற்காக தரப்பட்ட 9 அணைகளில் நெல்லை மாவட்டத்திற்கு என்று 4 அணைகளைக் கொடுத்து எங்களைப் பெருமைபடச் செய்திருக்கிறார்கள். பொதுப்பணித் துறை அமைச்சர். எங்களுக்கு அவை விரைவில் பலன் அளிக்கும் வகையில் அந்த அணைத் திட்டங்களை விரைந்து நிறைவேற்றித்தர வேண்டுமென்று நான் மெத்த பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

**[மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. செ. இராமலிங்கம்) தலைமை.]**

அடுத்து, வடக்கு பச்சையாறு திட்டத்தை நிறைவேற்றுவதற்காக அடிக்கல் எல்லாம் நட்டுவிட்டார்கள். அந்தத் திட்டத்திற்கான சாலை அனுமதிகூட வழங்கப்பட்டதாக அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அந்தப் பகுதிகளிலே மரங்களை வெட்டி அப்புறப்படுத்துவதிலேயும், நிலத்திலேயும் சில பிரச்சினைகள் இருப்பதாக அந்தப் பகுதி மக்கள் என்னிடத்திலே சொன்னார்கள். அந்தப் பகுதி மக்களை கவனத்திலே கொண்டு, உடனடியாக அந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11-20

வடக்கு பச்சையாறு திட்டத்திலே, மணிமுத்தாறு பிரதான கால்வாய்க்குத் தென்பகுதியிலுள்ள எந்த பாசனத்தையும் பெறாத மானாவாரிக் குளங்களையும் அதாவது உலகன்குளம் பஞ்சாயத்து, கரிசல்பட்டி பஞ்சாயத்து, திருவிருத்தான்புள்ளி பஞ்சாயத்து ஆகிய பகுதிகளிலேயுள்ள குளங்களையும் நீங்கள் சேர்த்து எப்படியாவது பாசன

வசதி செய்து தர ஆவன செய்ய வேண்டுமென்று உங்களை நான் மெத்தப் பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

எனது சேரன்மாதேவி தொகுதியிலே, எலுமிச்சையாறு, வண்டாள ஓடை என்று இரண்டு பெரிய ஆறுகள் இணைந்த கோரையாறு. பாளையங்கோட்டை-அம்பாசமுத்திரம் சாலையிலே சேர்கின்றது. அந்தத் திட்டத்தினுடைய தண்ணீரெல்லாம் வீணாகக் கடலில் கலந்து கொண்டிருக்கின்றது. எனவே, அந்த எலுமிச்சையாறு திட்டத்தினையும் நமது பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கவனத்தில் கொண்டு அதை நிறைவேற்றித் தரவேண்டுமென்று நான் மெத்த பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோன்று கடந்த பல ஆண்டுகளாகக் கிடப்பில் போடப்பட்டுள்ள ஜம்புநதி அணைக்கட்டுத் திட்டத்தை மீண்டும் நீங்கள் எடுத்து நிறைவேற்றித் தரவேண்டுமென்று உங்களை அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

வாசுதேவநல்லூரில் உள்ளாறு திட்டம், கோம்பையாறு திட்டம் பிரச்சினையில் உள்ளதாகச் சொன்னார்கள். அந்தத் திட்டத்தையும் நீங்கள் நிறைவேற்றித் தர வேண்டுமென்று உங்களை மெத்த பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

கடானா நதி அணையைப் பற்றி அமைச்சர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். அந்த அணை, நிறைய நீர் வரத்து உள்ள அணை. இப்போது அந்த அணை 352 மில்லியன் கன அடி கொள்ளளவு கொண்டதாக இருக்கின்றது. மேலும், இப்போது, நீங்கள் அந்த அணையை விஸ்தரிக்கும் திட்டத்தை ஏற்படுத்தியிருக்கின்றீர்கள். அதன் மூலமாக கூடுதலாக 100 மில்லியன் கன அடி கொள்ளளவுக் கூடும். கடந்த 10 ஆண்டுகளாக அந்த அணையிலே மறுகால் போன தண்ணீரின் அளவை நாம் பார்க்கின்றபோது, ஒவ்வொரு ஆண்டும் அந்த அணையினுடைய கொள்ளளவைப்போல் 6 மடங்கு, 7 மடங்கு தண்ணீர் வெளியேறிக் கொண்டிருந்ததை நீங்கள் எல்லாம் நன்றாக அறிவீர்கள். எனவே, கண்டிப்பாக இந்த அணையினை உயர்த்திக் கட்டி, அதாவது 352 மில்லியன் கன அடி கொள்ளளவுக்கு இருக்கின்ற அந்த அணையினை நீங்கள் 1500 மில்லியன் கன அடி கொள்ளளவுக்கு எப்படியாவது உயர்த்த வேண்டும். அதை உங்களுடைய முயற்சியாலேதான் செய்ய முடியும் அதனை செய்து தர வேண்டுமென்று நான் உங்களை மெத்தப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.



கன்னடியன் கால்வாய், என்னுடைய தொகுதியிலே ஆரம்பித்து என்னுடைய தொகுதியிலேயே முடிகின்றது. அதிலே பிராஞ்சாரி என்ற குளத்திலிருந்து ஓமனநல்லூர் குளத்திற்கும் ஒரு பை-பாஸ் சேனல் இருக்கின்றது. அது கடந்த ஆட்சிக் காலத்திலே அரைகுறையாகக் கட்டப்பெற்று இடிபாடுற்ற நிலையில் இருக்கின்றது. இது குறித்து கடந்த சட்டமன்றக் கூட்டத் தொடரிலும் நான் தெரிவித்தேன். அதில் யார் தவறு செய்தார்கள் என்று கூடப் பார்க்காமல், உடனடியாக வாய்க்காலை உருவாக்கித் தந்து, கடைக்கோடி குளங்களுக்கும் தண்ணீர் செல்லுகின்ற ஒரு நல்ல நிலையை ஏற்படுத்தித் தர வேண்டுமென்று மெத்தப் பணிவுடன் நான் பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். அது போன்று அந்த கன்னடியன் கால்வாயில் எக்கச்சக்கமாக கொழைகள் எல்லாம் இருக்கின்றன. அதனால், தண்ணீரே போக முடிவதில்லை. கடைக்கோடிக் குளங்களுக்கு தண்ணீரே செல்வதில்லை. மூன்று, நான்கு கடைக்கோடிக் குளங்களுக்குத் தண்ணீரே செல்வதில்லை. கடந்த கால ஆட்சியில் இதனை விட்டுவிட்டார்கள். ஆனால், இப்போது நம்முடைய ஆட்சி வந்து, அமைச்சர் அவர்களின் பெரு முயற்சியின் காரணமாகவும், அதிகாரிகளுடைய ஒத்துழைப்பு காரணமாகவும் இந்த ஆண்டு காங்கேயன் கால்வாய் மற்றும் கன்னடியன் கால்வாய் கடைசி வரையிலும் உள்ள கடைக்கோடி குளங்களுக்குத் தண்ணீர் கிடைத்தாலும் விவசாயம் செய்ய முடியவில்லை. 40,50 நாட்கள் தண்ணீர் கொடுத்த பிறகுதான் அந்தக் குளங்களுக்குத் தண்ணீர் சென்றிருக்கின்றது. அதனால், விவசாயம் செய்ய முடியவில்லை. எனவே, அந்த வாய்க்கால்களில் உள்ள கொழைகளை அப்புறப்படுத்திட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இதனைக் கோடையில் செய்தால்தான். அடுத்த கார் காலத்திலே தண்ணீர் கொடுக்க முடியும் என்பதையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதுபோன்று அமைச்சர் அவர்கள், கன்னடியன் கால்வாய்க்கு மடைகள், மதகுகள் போன்றவையெல்லாம் கட்டுவதற்கு, பெரிய அளவிற்கு, ரூ.64 இலட்சம், ரூ.84 இலட்சம் என்று இரண்டு மதிப்பீடுகள் செய்து அனுமதித்து இருக்கின்றீர்கள். மேலும் அமைச்சர் அவர்கள் நேரடியாக வாய்க்காலைப் பார்வையிட்டபோது முழுமையாக லைனிங் செய்து தருகிறோம் என்று சொன்னீர்கள். எனவே, அதனையும் இந்த ஆண்டு நீங்கள் நிறைவேற்றித் தருகின்ற பணியினை செய்ய வேண்டுமென்று நான் மெத்தப் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

மணிமுத்தாறு கால்வாயைப் பொறுத்தவரையில் அது உறுதி செய்யப்படாத பாசனமுள்ள வாய்க்கால். எனவே, மணிமுத்தாறு

பாசனத்திற்குள் உள்ள குளங்களையெல்லாம் மராமத்து செய்துதர வேண்டும். குளங்கள் எல்லாம் மூடிக் கிடக்கின்றன. எனவே, உடனடியாக 'ஸ்டான்டர்டைசேஷன்' செய்ய வேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

காங்கேயங்கால், கடனா நதி பாசனத்திலே, பாப்பாக்குடியில் பாய்ந்து கொண்டிருக்கிறது. அங்கேயும் கூட கடைக்கோடி குளங்களுக்குத் தண்ணீர் செல்வதே கிடையாது பை-பாஸ் சேனல் திட்டங்கள் எல்லாம் அதிலே இருக்கின்றன. அங்கே புதுக்குளத்திற்குக் கீழே உள்ள குளங்களுக்கெல்லாம் பை-பாஸ் சேனல்கள் திட்டம் உண்டு. அதையெல்லாம் கடந்த கால ஆட்சியிலே விட்டுவிட்டார்கள். எனவே, அவைகளையெல்லாம் செய்து தரவேண்டுமென்று மெத்தப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், குடிமராமத்து என்பது நல்ல திட்டம்தான். விவசாயிகளுக்கு இப்போது குடிமராமத்து என்று சொன்னால், கூரையில்லாத வீடுகளில் குடியிருக்கச் சொல்வது போலாகிவிடும். ஏனென்றால் தற்போது குளங்கள் வாய்க்கால்கள் எல்லாம் மோசமாக இருப்பதால் முதலில் அரசால் குளங்களுக்கு, வாய்க்கால்களுக்கு முழுமையான மராமத்து செய்யப்பட்டு, அதற்குப் பின்னால் வருகின்ற மராமத்து வேலைகளை மக்களைப் பயன்படுத்திச் செய்தால் அந்த மக்கள் குடிமராமத்து வேலையை எளிதாகச் செய்யமுடியும் என்பதை இந்த மன்றத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

அமைச்சர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும், நேரிடையாக எங்கள் மாவட்டத்தைப் பார்த்தார்கள். பயங்கரமான வறட்சி, ரூ.42 கோடியை தென் மாவட்டத்திற்கு அனுமதித்து இருக்கிறார்கள். நெல்லை மாவட்ட ஆட்சித் தலைவர் மட்டுமே 26 கோடி ரூபாய் வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். தென் மாவட்டங்களுக்கு மொத்தமே ரூ. 42 கோடிதான் நீங்கள் அனுமதித்திருக்கிறீர்கள். ஆகவே, நீங்கள் உடனடியாக, மாவட்டங்களுக்கு எவ்வளவு தேவையோ, அதனை முழுமையாக அளிக்க அனுமதிக்க வேண்டும் என்று உங்களை மெத்தப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11-25

குடிதண்ணீரைப் பொறுத்தவரைக்கும் உங்களுக்கு நன்றாகத் தெரியும். ஆழ் குழாய் மூலமாக வழங்கிய கூட்டுக் குடிநீர்த் திட்டம் எல்லாமே பயனில்லாமல் போய்விட்டது. ஒரு ஆழ்குழாய் கிணற்றில் கூட தண்ணீர்



கிடையாது. எனவே, உடனடியாக கூட்டுக் குடிநீர் திட்டத்திற்கு ஆற்றுத் தண்ணீரைக் கொடுத்து, அந்தப் பகுதி மக்களுடைய குடிதண்ணீர்ப் பிரச்சினையைத் தீர்க்க வேண்டும். மேலும், அந்தப் பகுதி மக்கள் ஆடு, மாடுகளை எல்லாம் விற்று வெளியூர்களுக்குச் செல்லுகின்ற நிலைமை ஏற்பட்டுவிட்டது. எனவே, உடனடியாக வறட்சி நிவாரணப் பணிகளைத் துவக்கி, அந்தப் பகுதி மக்கள் அங்கேயே குடியிருக்கின்ற நிலைமையை நீங்கள் ஏற்படுத்தித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இப்போழுது கடலிலே நிறைய தண்ணீர் வீணாகக் கலந்து கொண்டிருக்கிறது. அப்படிக் கடலிலே கலக்கின்ற நீரை உடனடியாகத் தடுத்து நிறுத்துகின்ற திட்டத்தை இந்த அரசு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தாமிரபரணி ஆற்றைப் பொறுத்தவரையில் வல்லநாடு பகுதியிலே ஒரு பெரிய அணைக்கட்டை உருவாக்கியோ அல்லது வெள்ளக் கால்வாய் மூலமாக தனியாக தரிசு நிலங்களில் பெரிய ஏரிகளை உருவாக்கியோ — அந்த நீரைப் பயன்படுத்துகின்ற அளவிலே ஒரு புதிய திட்டத்தை உருவாக்கி — கடலிலே கலக்கின்ற அந்த நீரை அங்கே தேக்கி வைத்து, மீண்டும் அந்தத் தண்ணீரை எடுத்து பயன்படுத்துகின்ற வகையில் இந்த அரசு திட்டம் ஒன்றை உருவாக்க வேண்டுமென்று மெத்தப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

குறிப்பாக, ஸ்டெர்லைட் தொழிற்சாலை. ஒரு நாளைக்கு 40 இலட்சம் லிட்டரிலிருந்து 60 இலட்சம் லிட்டர் வரை அந்தத் தொழிற்சாலைக்கு தண்ணீர் வேண்டுமாம். இதற்குத் தண்ணீர் கொடுக்கின்றபோது தாமிரபரணி ஆற்றிலிருந்து நீரைக் கொடுப்பீர்களேயானால், விவசாயிகள் பெருமளவில் பாதிக்கப்படுவார்கள் என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். எனவே, நீங்கள் அவர்களுக்குக் கடல் தண்ணீரைச் சுத்தப்படுத்தி தொழிற்சாலைக்குப் பயன்படுத்துகின்ற நிலையை உருவாக்க வேண்டும். அல்லது, கடலில் கலக்கின்ற தண்ணீரைப் பெரிய ஏரிகளில் தேக்கி வைத்து, அதிலிருந்தாவது எடுத்துக் கொள்ளச் சொல்லவேண்டும்.

பெரிய விவசாயிகள் பலர் கடந்த ஆட்சிக் காலத்தில் கேரளாவிலிருந்து இங்கே வந்து, பினாமியாகச் சொத்துக்களை வாங்கிக்கொண்டு, பெரிய பண்ணைகள் எல்லாம் உருவாக்கி, 300 அடி, 400 அடி ஆழத்திற்கு போர்களைப் போட்டதன் விளைவாக கிணற்றின் மூலம் பாசனம் செய்யும் விவசாயிகள் எல்லாம் மிகவும் பாதிக்கப்பட்டு விட்டார்கள். கிணற்றிலே தண்ணீரே கிடையாது. அந்த அளவுக்கு ஆழ் குழாய் கிணறுகள் போட்டு விட்டார்கள். சிறு விவசாயிகள் மிகவும் பாதிக்கப்பட்டு

விட்டார்கள். எந்த அளவிற்கு அந்த விவசாயிகளுக்கு நம்முடைய அரசு நஷ்டஈடு வழங்கப் போகிறது, எந்த அளவுக்கு அவர்களுடைய விவசாயத்திற்கு உத்தரவாதம் அளிக்கப்போகிறது என்பதை நீங்கள் தெளிவுபடுத்திச் சொல்ல வேண்டுமென்று உங்களை மெத்தப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். கால்வாய்களைப் பராமரிக்க எஸ்கா. இரிகேஷன் சூப்பிரண்டென்டெட் இவர்கள் எல்லாம் இல்லை. உடனடியாக அந்தப் பணியிடங்களை எல்லாம் நிரப்ப வேண்டுமென்று உங்களைப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

மராமத்துப் பணிகளை நீங்கள் இனிமேல் ஆட்களை வைத்துச் செய்ய முடியாது. ஏனென்றால், இப்போது ஆட்கள் மண் வேலை செய்வதற்குத் தயாராக இல்லை. எனவே, பொதுப்பணித் துறையிலே நீங்கள் புல்டோசர்கள், எக்ஸ்கவேட்டர்கள் ஆகியவற்றைத் தயாராக வைத்துக் கொண்டு, ஓராண்டுக்கு இத்தனை குளங்கள், இத்தனை ஏக்கர் என்ற அளவுக்கு மராமத்துப் பணிகளைச் செய்ய வேண்டுமென்ற கட்டாயத்தை ஏற்படுத்துவதோடு விவசாயத் துறையிலே இருக்கிற புல்டோசர்களை எல்லாம் நம்முடைய பொதுப் பணித் துறையிலே நிர்வகிக்க வேண்டுமென்று உங்களை மெத்தப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். அணைகள் கட்டுகிறபோது, அதற்குப் பல இடங்களிலே வனத்துறை தடையாக இருக்கிறது என்று சொல்லுகிறார்கள். மனிதனுக்காகத்தான் பாரஸ்ட் டிபார்ட்மெண்ட இருக்கிறது. பொதுப்பணித் துறை என்ன முடிவு செய்கிறதோ, அதை வனத்துறை ஏற்றுக்கொள்ள வேண்டும். தனியாக, அதற்கு அனுமதி என்பதெல்லாம் வேண்டிய அவசியம் கிடையாது. (மணியடிக்கப்பெற்றது) பாரஸ்ட் டிபார்ட்மெண்ட் அனுமதி கிடைக்கவில்லை என்று சொல்லிக் கொண்டிருக்கின்ற நிலை ஏற்படாமல், அந்தச் சட்டத்தைத் திருத்துவதற்கு நீங்கள் முயற்சி எடுக்க வேண்டும். இங்கேயும் நம்முடைய ஆட்சிதான் இருக்கிறது. அங்கேயும் நம்முடைய ஆட்சிதான் இருக்கிறது..

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** நீங்கள் சொன்னீர்களே ஜம்பு நதித் திட்டம். அதுவே, இதனால்தான் நிற்கிறது.

**திரு. பா. வேல்துரை:** எனவே, அந்தச் சட்டத்தை நீங்கள் நினைத்தால் மாற்றி விடலாம். மத்திய அரசிலும் நீங்கள் சொல்லி, அதை உடனடியாக மாற்றி, இந்தக் காலகட்டத்திற்குள் செய்ய வேண்டிய கடமை நமக்கு இருக்கிறது. எனவே. அதைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மற்றவர்கள் எல்லாம் செய்யமாட்டார்கள். உங்களை மாதிரி இன்டரெஸ்ட



எடுத்துச் செய்யக்கூடிய அமைச்சர் எங்களுக்குக் கிடைத்திருக்கும்போது, நீங்கள்தான் செய்ய முடியும். அதைச் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, மேற்கு நோக்கிப் பாயும் ஆறுகளைத் திருப்பி விடும் திட்டம். அதையும் உங்களால்தான் செய்ய முடியும். இத்துறையில் மிகவும் ஆர்வத்துடன் பணியாற்றும் உங்களைத் தவிர வேறு யாரும் இதைச் செய்திட முடியாது. எனவே, இந்த வாய்ப்பைப் பயன்படுத்தி, மேற்கு நோக்கிப் பாயும் ஆறுகளை திருப்பி விடுவதற்கு 5 ஆண்டு காலத்திற்குள் முடிவு எடுத்து, தமிழக மக்களுக்கு நல்லதொரு விடிவு காலத்தை ஏற்படுத்தித் தரவேண்டுமென்று உங்களைப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

மிகவும் முக்கியமான விஷயம். சீக்கிரம் சொல்லி முடித்து விடுகிறேன். பாபநாசம் அணைக்கட்டிலிருக்கும்போது நேரிடையாக என்ஜினியர்கள் எல்லாம் உங்களிடம் சொன்னார்கள். அதாவது, மணிமுத்தாறு அணையையும், பாபநாசம் அணையையும் ஒரு டனல் சிஸ்டம் மூலம் இணைப்பதற்கு வாய்ப்பு இருப்பதாகச் சொன்னார்கள். அது உங்களுக்கும் தெரியும். அந்த டனலை ஏற்படுத்துவதற்கான ஆய்வுப் பணிகளை உடனடியாகச் செய்து அந்தத் திட்டத்தை நீங்கள் நிறைவேற்றினால் மணிமுத்தாறில் தண்ணீர் அதிகமாக இருக்கும்போது, அதை பாபநாசத்திற்கு எடுத்துக்கொள்ளலாம்; அதேபோல் பாபநாசத்தில் தண்ணீர் அதிகமாக இருக்கும்போது மணிமுத்தாறுக்கு எடுத்துக்கொள்ளலாம். இதனால் விவசாயப் பாதுகாப்பும் ஏற்படும். எனவே, அந்தத் திட்டத்தை நீங்கள் நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11-30

உலக வங்கி மூலமாகக் கடன் பெற்று பல திட்டங்களை நிறைவேற்றுகிறீர்கள். இந்தத் திட்டங்களை நிறைவேற்றுகிறபோது சில ஃபார்மாலிடீஸ் இருக்கின்றன. கன்னடியன் கால்வாய் திட்டத்திற்குக்கூட நிதி ஒதுக்கியிருக்கிறீர்கள். ஆனால் அந்தப் பணியை கோடையில் செய்ய முடியாத அளவுக்கு, எஸ்டிமேட் ஒப்புதல் பெற்று, உலக வங்கியிடமிருந்து பெற வேண்டியிருக்கிறது. காரணம் இதிலே ஃபார்மாலிடீஸ் அதிகமாக உள்ளன. உலக வங்கியிடம் கலந்து பேசி விரைவாக டெண்டர்கள் கோர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். டெண்டர்களை கோடிக்கணக்கில் பொதுப்பணித் துறையிடம் கொடுக்கும்போது, குறித்த காலத்தில்

பொதுப்பணித் துறையால் செய்ய முடியவில்லை. பெரிய கோடீஸ்வரர்கள் டெண்டர் எடுத்தாலும்கூட வேலைகள் முடிக்கப்படுவதில்லை. டெண்டர்கள் 1½ கோடி, 2 கோடி என்று இல்லாமல், 10 இலட்ச ரூபாய், 20 இலட்ச ரூபாய் அளவுக்கு அந்தப் பகுதி மக்களுக்கு கான்ட்ராக்ட் கொடுத்து வேலையை விரைவில் முடிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. செ. இராமலிங்கம்):** சீக்கிரம் பேசி முடியுங்கள்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, எனக்கு மாறுபட்ட கருத்து அல்ல, சொந்த கருத்தும் அதுதான். ஆனால் உலக வங்கியினுடையப் பணத்தை வாங்கி செலவு செய்கிறோம். அவர்கள் இப்படித்தான் என்று கன்டிஷன் போடுகிறார்கள். அடவிநயினார்கோவில் திட்டத்திற்கு - ஒரே ஒரு திட்டத்திற்கு ரூ.55 கோடி ஆகிறது. ஒரே டெண்டர்தான் வைத்திருக்கிறார்கள். நான் அவர்களிடம் வாதிட்டும் பார்த்து விட்டேன். திடீரென்று காண்ட்ராக்டர் போய்விட்டால் எல்லா வேலைகளும் பாதித்துவிடுமே என்றும் கேட்டேன். ஆனால் பழைய ஆட்சியில் கையெழுத்து போட்டவர்கள் இதைப் பற்றி எல்லாம் பேசாமல் - டெண்டர் விடுவது எங்கள் உரிமை என்று பேசாமல், கேட்ட இடத்தில் கையெழுத்து போட்டுவிட்டார்கள். ஆகையினால் உங்களுக்கு இருக்கிற பயம் எனக்கும் உண்டு. வேறு வழியில்லை; என்ன செய்வது, பேய்க்கு வாழ்க்கைப் பட்டால், ஆடித்தானே தீர வேண்டும்.

**திரு. பா. வேல்துரை:** மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒரு நல்ல விளக்கத்தைச் சொன்னார்கள். இருந்தாலும், மத்தியிலும் நமது ஆட்சி - இரண்டு இடங்களிலும் நமது ஆட்சி - இந்த நேரத்தில் சட்டங்களை வளைத்து, நிமிர்த்தி, மக்கள் சௌகர்யத்திற்கு ஏற்ற வகையில், நன்மை பயக்கின்ற வகையில் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, கோர்ட், ஹைக்கோர்ட் போன்ற இடங்களில் இருக்கின்ற கட்டிடங்களைப் பற்றி என்னிடத்திலே சொன்னார்கள். மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களிடம் இதுபற்றி எடுத்துப் பேசுமாறு கேட்டார்கள். அங்கே இருக்கிற பர்னிச்சரில் உட்கார்ந்தால் கீழே விழுந்துவிடக்கூடிய நிலையில் இருக்கிறது. ஆகவே கோர்ட் கட்டிடங்களைப் பழுது பார்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்



அடுத்து, சேரன்மாதேவியை தனித் தாலுக்காவாக மாற்றித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர்: (திரு. செ. இராமலிங்கம்):** சீக்கிரம் பேசி முடித்துக்கொள்ளுங்கள்.

**திரு. பா. வேல்துரை:** மாற்றுத் தலைவர் அவர்களே, குளங்களில் மண்ணை அள்ளிக் கொண்டுபோக தடை இருக்கிறது. மண் அள்ளுவதற்கு அனுமதி கொடுத்தால், இயற்கையாகவே குளங்கள் மராமத்து ஆகிவிடும். வயக்காடுகளுக்கு கரம்பல் அடிக்க முடியவில்லை. அப்படிச் செய்கின்ற லாரி, டிராக்டர்காரர்களை எல்லாம் பிடித்துவிடுகிறார்கள். மண் எடுப்பதற்கு அனுமதி கொடுத்தால்தான், செங்கல் தொழில், ஓடு செய்கின்ற தொழில் போன்றவை விருத்தியாகும். தொழில் வளம் பெருகும்; வேலைவாய்ப்பு கிடைக்கும். ஆகவே குளங்களில் மண்ணை எடுப்பதற்கு உடனடியாக அனுமதி கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாற்றுத் தலைவர் அவர்களே, பொதுப்பணித் துறைக்குச் சொந்தமான அணைகள், ஏரிகள், இவற்றிலிருந்து மண் எடுக்கக்கூடாது என்று மினரல்ஸ் டிபார்ட்மென்ட் தடை விதித்திருக்கிறது. இருந்தாலும், வறட்சிப் பகுதியைப் பார்வையிட நான் கன்னியாகுமரி வந்தபோது பேச்சிப்பாறை அணை, பெருஞ்சாணி அணை இவற்றில் தூர் எடுக்க வேண்டுமென்றால், ரூ.9 கோடி செலவாகும்; ஆனால் அங்குள்ள மண்ணை வாரிக்கொண்டு போவதற்கு மக்கள் ரெடியாக இருக்கிறார்கள்; மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடம் சொன்னேன். ஒரு லோடுக்கு இவ்வளவு ரூபாய் என்று சொல்லி ஒரு விளம்பரம் கொடுங்கள். மண்ணை வெட்டிக் கொண்டு போவார்கள் என்று சொன்னேன். நம்முடைய பிடபிள்யுடி ஆட்கள் வந்து ஒரு கோடு போட்டுக் காட்டவேண்டும்; அந்த இடத்தில்தான் மண்ணை வார வேண்டும் என்றும் சொல்லுங்கள் என்று சொன்னேன். எனவே முதன்முதலாக District Collector, Executive Engineer, P.W.D., Divisional Forest Officer, Joint Director of Agriculture, Executive Engineer, Agricultural Engineering, and Assistant Director of Geology and Mines அடங்கிய குழு ஒன்று போட்டு அறிவிப்பு எல்லா பத்திரிகைகளிலும் கொடுத்து, ஒரு லோடு மண் எடுப்பதற்கு ரூ.37 என்று நிர்ணயம் செய்து, யார் வேண்டுமானாலும் மண்ணை வாரிக் கொள்ளலாம் என்று கூறியிருக்கிறோம். அந்த நிலை எல்லா மாவட்டங்களிலும் தொடர வேண்டும். அதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஆர். சொக்கர்:** மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் சொன்னார்கள், அரசு செய்ய வேண்டியிருந்தால் ரூ.9 கோடி ஆகும் என்று; இதையே தனியார் அள்ளிக் கொண்டுபோனால் அரசுக்கு செலவு ஏதும் இல்லை. அப்படி இருக்கும்போது ஒரு லோடுக்கு ஏன் 37 ரூபாய் என்று நிர்ணயம் செய்ய வேண்டும். இலவசமாக அள்ளிக்கொண்டு செல்லட்டுமே.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாற்றுத் தலைவர் அவர்களே, சும்மா கொடுக்கக்கூடாது என்று மைன்ஸ் துறை சொல்கிறது.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. செ. இராமலிங்கம்):** திரு பா. வேல்துரை, இத்துடன் உங்கள் பேச்சை முடித்துக் கொள்ளுங்கள்

**திரு. பா. வேல்துரை:** மாற்றுத் தலைவர் அவர்களே, ஒரே ஒரு நிமிடத்தில் முடித்துவிடுகிறேன். ஒரே ஒரு கோரிக்கையை இந்த மன்றத்தில் வைக்க விரும்புகிறேன். இன்றைக்கு தமிழ் வளர்ச்சிக்கு என்று தனியாக ஒரு துறை ஏற்படுத்தி அதற்கு ஒரு அமைச்சரை நமது முதல்வர் அவர்கள் நியமித்து, தமிழ் வளர்ச்சிக்கு பெரும் உதவியாக இருக்கின்றார்கள். நெல்லையில் ஒரு சட்டக் கல்லூரி ஆரம்பித்திருக்கிறீர்கள். பத்திரிகைத் துறை மூலம் கிராமப்புரத்து மக்களும், தமிழைக் கற்கின்ற நல்லநிலையை ஏற்படுத்திக் கொடுத்த, இந்தச் சட்டமன்றத்தினுடைய பேரவைத் தலைவராக இருந்த, பார்-அட்-லா படிப்பு படித்த நமது சி.பா. ஆதித்தனார் அவர்கள் பெயரை அந்தச் சட்டக் கல்லூரிக்கு வைப்பதற்கான ஏற்பாடுகளை செய்துதர வேண்டுமென்று கேட்டு இந்த மன்றத்திலே பேசுவதற்கு வாய்ப்புக் கொடுத்த உங்களுக்கு நன்றி கூறி அமைகிறேன். நன்றி, வணக்கம்.

முற்பகல் 11-35

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. செ. இராமலிங்கம்):** திரு ப. மோகன் கந்தசாமி.

**திரு. ப. மோகன் கந்தசாமி:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, சென்ற வாரம் இந்த மாமன்றத்திலே என்னுடைய பகுதி மிகக் கடுமையாக வறட்சியால் பாதிக்கப்பட்டு இருக்கிறது; குடி தண்ணீர் கூட இல்லை என்று நான் கேட்டபோது நம்முடைய பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் அடுத்த நாளே அதற்கான உத்தரவிட்டார்கள்



**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. செ. இராமலிங்கம்):** உறுப்பினர், அமைச்சர் பேசியதில் இருந்து விளக்கம் கேட்பதாக சொன்னார்கள். இது சம்பந்தம் இல்லாத பிரச்சினை. நீங்கள் உரையாற்றும்போது இதையெல்லாம் கேட்கலாம். (குறுக்கீடுகள்) பேசுங்கள்.

**திரு. ப. மோகன் கந்தசாமி:** இதுவரையிலே இல்லாத அளவிற்கு என்னுடைய தொகுதி மக்கள் அத்தனை பேரும் வந்து தங்களுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்வதாக சொல்லச் சொன்னார்கள். ஆகவே, எங்களுடைய தொகுதி மக்கள் சார்பிலே அதற்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. செ. இராமலிங்கம்):** திரு. ஏ.ஜி. சம்பத்.

***திரு. ஏ. ஜி. சம்பத்:** மாண்புமிகு பேரவையினுடைய மாற்றுத் தலைவர் அவர்களே, பொதுப்பணித் துறை கோரிக்கை எண்கள் 35, 36, 55, 56 ஆகியவற்றின்மீது பேசுவதற்கு என்னை அனுமதித்ததற்காக முதலிலே தலைவர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்து என்னுடைய உரையை நான் துவங்குகின்றேன். பொதுப் பணித் துறையினுடைய கொள்கை விளக்க புத்தகத்தைப் படித்துப் பார்த்தால் நம்முடைய பொதுப் பணித் துறை அமைச்சர், நம்முடைய தமிழகத்தினுடைய முதல்வராக இருக்கின்ற தலைவர் கலைஞர் அவர்களுடைய தம்பி என்பதை நிரூபித்துக் காட்டி இருக்கின்றார் என்றுதான் சொல்ல வேண்டும். ஒட்டுமொத்தமாக புத்தகத்தைப் படித்துப் பார்க்கின்ற நேரத்தில் மிகுந்த கூரிய மதி நுட்பத்தோடு ஒவ்வொரு திட்டத்தையும் அணுகி இருப்பதைப் பார்க்கின்ற நேரத்தில், எனக்கு மட்டற்ற மகிழ்ச்சியாக இருக்கின்றது. சில அற்புதமான திட்டங்களை எல்லாம், எந்த மாவட்டமும் விட்டு போகாத அளவிற்கு, எந்த சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் மனக் குறை ஏற்படாத அளவிற்கு, தன்னிடத்திலே ஒப்படைத்த காரியத்தை செவ்வனே செய்து முடித்து இருக்கிறார் என்றுதான் சொல்லவேண்டும். இருந்தாலும் எங்களுடைய மாவட்டத்திற்கு மேலும் கொஞ்சம் அதிகமாக வழங்கி இருக்கலாம். கையிலே ஏதாவது இருப்பு இருக்குமேயானால் நிச்சயமாக துறையினுடைய அமைச்சர் அவர்கள் என்னுடைய பேச்சின் பிற்பகுதியிலே நான் வைக்கின்ற கோரிக்கைகளுக்கு செவிமடுப்பார் என்ற நம்பிக்கையிலே என்னுடைய பேச்சை நான் துவக்குகின்றேன்.

1996-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 7 முதல் 17 வரையிலே எங்கள் மாவட்டத்திலே ஏற்பட்ட வெள்ளப் பாதிப்பு சொல்லில் அடங்காது

என்றே சொல்லலாம்; வரலாறு காணாத அளவிற்கு ஒரு பெரிய பாதிப்பு ஏற்பட்டதை தமிழகத்திலே இருக்கின்ற அனைவரும் நன்றாக அறிவார்கள். எங்களுடைய மாவட்டத்திலே இருக்கின்ற நீர் ஆதாரங்கள் எல்லாம் வீணாகிவிடுமோ என்று நாங்கள் எல்லாம் பயந்து கொண்டு இருந்த நேரத்தில் அந்தத் துறையைச் சேர்ந்த அதிகாரிகளும் எங்களுடைய மாவட்ட ஆட்சித் தலைவரும், எங்கள் மாவட்டத்தின் அமைச்சர் பெருமக்களும், எங்கள் மாவட்டத்திலே தேர்ந்தெடுக்கப்பட்ட அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களும் — ஒவ்வொருவரும் தங்கள் தொகுதியிலே இருக்கின்ற நீர் ஆதாரங்களைக் காப்பாற்றுவதற்கு தங்களால் இயன்ற பணியினை செய்து கொண்டு இருந்த அதே நோத்திலே, சேய் பறவைகளுக்கு ஆபத்து வருகின்ற நேரத்திலே தாய்ப் பறவை பதறி அடித்துக்கொண்டு எப்படி ஓடோடி வருகிறதோ அதே உணர்வின் அடிப்படையிலே நம்முடைய முதல்வர் கலைஞர் அவர்கள் அடாது மழை பெய்தாலும், நான் உங்களைக் காப்பதற்கு நேரடியாக வருகிறேன் என்று, மழை பெய்து கொண்டு இருந்தபோதே வெள்ளம் வடிவதற்கு முன்பாகவே தமிழகத்தினுடைய முதல்வர் அவர்கள் நேரடியாக எங்களுடைய மாவட்டத்திற்கு வருகை தந்தார்கள்; வெள்ளப் பாதிப்புப் பகுதிகளை எல்லாம் பார்வையிட்டார்கள். நீர் ஆதாரங்கள் எந்த அளவுக்கு மோசமான சூழ்நிலையை எட்டியிருக்கின்றன என்பதை எல்லாம் பார்த்து, அந்தத் துறையின் சார்பிலே 140 லட்ச ரூபாய் தற்காலிகமாக ஒதுக்கீடு செய்து எங்களுடைய மாவட்டத்தின் பொதுப்பணித் துறையை முடுக்கி விட்டார்கள். எனவே எங்கள் மாவட்டத்தின் மக்கள் சார்பிலே நான் நம்முடைய முதல்வர் கலைஞர் அவர்களுக்கு மெத்தப் பணிவான நன்றியைத் தெரிவித்துக் கொள்வதோடு, 140 லட்சம் ரூபாயை ஒதுக்கிய அந்தத் துறையின் அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய நன்றியை நான் தெரிவித்துக் கொள்கிறேன். அதே நேரத்தில் அவர்கள் தொடங்கி இருக்கின்ற அந்தப் பணிகள் மேலும் செம்மையடையவேண்டும், அந்தப் பணிகள் அனைத்தும் நிரந்தரமாக்கப்பட வேண்டுமானால், பத்து கோடி ரூபாயை நிச்சயமாக அமைச்சர் அவர்கள் கருணையுள்ளத்தோடு, முதல்வர் கலைஞர் அவர்களிடத்திலே எடுத்துச் சொல்லி பெற்று எங்களுடைய மாவட்டத்தில் இருக்கின்ற நீர் ஆதாரங்களைத் தயவுசெய்து காப்பாற்றித்தரவேண்டும் என்று மெத்தப் பணிவோடு நான் கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11-40

அடுத்து, எங்கள் மாவட்டத்தில் இருக்கின்ற சிறிய சிறிய அணைக்கட்டுக்களைப் பற்றி நான் பேசியாக வேண்டும். எங்களுடைய



ஹெட்குவார்ட்டர்ஸ் என்று சொல்லக்கூடிய விழுப்புரம் சட்டப் பேரவைத் தொகுதிக்குட்பட்டு இருக்கின்ற எல்லிஸ் அணைக்கட்டு — எல்லிஸ் என்ற பெயர் இங்கே இருக்கின்ற பொறியாளர்களுக்கு எல்லாம் நன்றாகத் தெரிந்த பெயர் சென்னைக்கு கிருஷ்ணா நீர் வரவேண்டுமென்று திட்டமிட்ட நோத்திலே அந்தத் திட்டத்தை வடிவமைத்துக் கொடுத்த எல்லிஸ் என்ற என்ஜினியர் பெயராலே எங்கள் மாவட்டத்தில ஒரு அணைக்கட்டு உண்டு. அதற்குப் பெயர் எல்லிஸ் அணைக்கட்டு. அந்த அணைக்கட்டை வடிவமைத்தவர் அவர்தான். எனவே அவருடைய பெயராலே அந்த அணை கட்டப்பட்டிருக்கிறது. அந்த அணைக்கட்டு துவங்கப்பட்டு சற்றொப்ப 40 ஆண்டுகள் உருண்டோடிவிட்டன. ஆனால் அந்த அணைக்கட்டு இன்று வரையிலே அரசால் முறையாக அங்கீகாரம் பெறாத காரணத்தில் அது முறையாகப் பராமரிக்கப்படுவதில்லை. எனவே தயவுசெய்து மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் அவர்கள் அந்த எல்லிஸ் அணைக்கட்டு மூலமாக 14,452 ஏக்கர் நிலம் பாதிப்புக்குள்ளாகாத வகையிலே, விழுப்புரத்தை ஒட்டியிருக்கின்ற விவசாயிகள் எல்லாம் பாராட்டக்கூடிய அளவுக்கு, முறைப் பாசனத் திட்டத்தின் கீழ் அந்த எல்லிஸ் அணைக்கட்டுத் திட்டத்தைக் கொண்டு வர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, பெண்ணையாற்றங்கரையில் இருக்கின்ற பாசனம் மிகவும் தொன்மை வாய்ந்தது. அது அமைச்சர் அவர்களுக்கு நன்றாகத் தெரிந்த ஊர். திருக்கோயிலூரிலிருந்து வங்கக் கடல்வரைக்கும் ஆற்றுப் பாசனத்திற்குப் பெயர்போன வாய்க்கால்கள் எல்லாம் அந்தப் பகுதியில் நிறைய இருக்கின்றன. 67 வாய்க்கால்கள் அந்தப் பகுதியில் இருப்பதை அமைச்சர் அவர்கள் உணர்வார்கள். சற்றொப்ப 70 ஆயிரம் ஏக்கர் அந்தப் பாசனத்தால் பயன்பெறக் கூடிய அளவுக்கு இந்தக் கால கட்டத்திலே இருக்கிறது.

காவிரிப் படுகையில் எந்த அளவுக்கு ஆங்காங்கே நீர்த்தேக்கங்கள் எல்லாம் கட்டிவருகின்ற காரணத்தால் பாதிப்புக்கு ஆளாகியிருக்கிறதோ, குறைந்த நீர் வருகின்றபோது அதில் ஒரு சொட்டு நீர் கூட வீணாகாமல் காப்பாற்றக்கூடிய பொறுப்பு நமக்கெல்லாம் இருப்பதைப் போன்று, அந்தப் பெண்ணையாற்றிலே வரக்கூடிய குறைவான நீரைச் செம்மையாகப் பயன்படுத்தக்கூடிய அளவுக்கு இன்றைக்கு அமைச்சர் அவர்கள் சற்றொப்ப 4 கோடி ரூபாயை ஒதுக்கியிருக்கிறார்கள். எனவே மாவட்டத்தின் சார்பிலே நான் அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய மகிழ்ச்சியையும் நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால் அதிலே என்னுடைய

மனக்குறையை வெளிப்படுத்தியாக வேண்டும். திருக்கோயிலூரிலிருந்து எல்லீஸ் அணைக்கட்டு முடிய 11 வாய்க்கால்கள் இருக்கின்றன. மொத்தம் 67 வாய்க்கால்கள். அதிலே நான் குறிப்பிடுவது, முதல் கட்ட பணியாக அந்த 11 வாய்க்கால்களுக்கு மூடு பலகைகள் கொண்ட திருகு மதகு கட்டவும், வெள்ளத் தடுப்புக் கரை அமைக்கவும் 55 லட்சம் ரூபாய் ஒதுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதற்கான மதிப்பீடுகள் எல்லாம் தயாரிக்கப்பட்டு தலைமைக்கு வந்திருக்கின்றன. அமைச்சர் அவர்கள் ஷட்டர் போடுவதற்குரிய நடவடிக்கையை எடுத்து அந்த திருக்கோயிலூர் ஆற்றுப் பாசனத்தைச் செம்மைப்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று மிகத் தாழ்மையோடு நான் கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11-45

அடுத்து, அமைச்சர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும், எங்களுடைய நந்தன் கால்வாய்த் திட்டம். நான் இந்தத் துறையில் பேசப் போகிறேன் என்று அமைச்சர் அவர்களிடத்தில் சொன்னவுடன் அவர் சொன்னார், 'நீ, என்ன பேசப் போகிறாய் என்று எனக்கு தெரியும். நந்தன் கால்வாய பற்றிதானே பேசப் போகிறாய? அந்த நந்தன் கால்வாய்க்கு நான் ஒரு கோடி ரூபாய் ஒதுக்கி இருக்கிறேனே? வேண்டுமானால் பார்' என்று அவருக்கே உரிய முறையில் என்னிடத்தில் கேலியும் கிண்டலுமாகச் சொன்னார். அது அவர் என்னிடத்தில் எடுத்துக் கொள்கிற உரிமை.

அதேநேரத்தில் என்னுடைய கடமையாக நான் சொல்ல விரும்புவது இந்த நந்தன் கால்வாய்த் திட்டம் என்பது திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டம், அடுத்து எங்களுடைய மாவட்டத்தில் இருக்கிற 36 ஏரிகள் பயன்படக்கூடிய ஒரு நல்ல திட்டம். இந்தத் திட்டத்தினுடைய செயல்முறைக்கு இன்றைக்கு நாங்கள் எல்லாம் ஓரளவுக்கு மகிழ்ச்சி அடைகிற அளவுக்கு ஒரு கோடி ரூபாயை நீங்கள் ஒதுக்கி இருக்கிறீர்கள். எங்களுடைய நன்றியை நான் காணிக்கையாக்க விரும்புகிறேன்.

இதோ என் கையில் இருப்பது 1960 ஆம் ஆண்டு அந்தப் பகுதியில் வாழ்கிற பொது மக்கள் போட்ட விண்ணப்ப நோட்டீஸ், அறிக்கை. இதிலே இருக்கிற ஒருசில வாசகங்களை மட்டும் படித்துக் காட்ட நான் விரும்புகிறேன்.

"200 ஆண்டுகளுக்கு முன்பு அணை உடைந்து துரிஞ்சலாறு வழியாக தண்ணீர் பெண்ணையாற்றில் கலந்து விட்டது. அதன் பிறகு உடைந்த அணையையும் தூர்ந்த வாய்க்காலையும் அரசாங்கம் சீர் செய்து கொடுக்கவில்லை. "1960-ஆம் ஆண்டு நோட்டீஸ் போட்டிருக்கிறார்கள்,"



"200 ஆண்டுகளுக்கு முன்பாக அணை உடைந்து விட்டது" என்று. அதற்கு பிறகு சொல்கிறார்கள், "1886-ஆம் ஆண்டு பிரிட்டிஷ் சர்க்காரில் மனு கொடுத்தோம். பிரிட்டிஷ் சர்க்கார் அதை செவிமடுத்துக் கேட்கவில்லை. 3 வருடத்தில் செய்கிறோம் என்று சொன்னார்கள். ஆனால் செய்யவில்லை. அதற்கு பிறகு 1920 ஆம் ஆண்டு சொல்லி இருக்கிறார்கள், எங்களுக்குத் தண்ணீர் வரவில்லை, எங்களுக்குத் தீர்வை எல்லாம் அதிகரித்து விட்டார்கள் என்று. அதற்கு பிறகு 1939-ஆம் ஆண்டு இராஜாஜி மந்திரி சபையிலே இதற்குரிய விண்ணப்பம் கொடுத்தபோது, செய்கிறேன் என்று சொன்னார்கள். எல்லாவிதமான லெவலிங் படம் எல்லாம் எடுத்தார்கள். ஆனால் செய்யவில்லை. அதற்கு பிறகு 20 ஆண்டுகளில் 12 ஆண்டுகள் சாவி ஆகிவிட்டது. ஆகவே வஜா செய்திருக்கிறார்கள். எங்களுக்கு ரொம்ப கஷ்டமாக இருக்கிறது என்று சொல்லிவிட்டு, அதற்கு பிறகு சொல்கிறார்கள். 1-12-1958-ல் மராமத்து மந்திரியாக இருந்த கனம் - அப்போது கனம், இப்போது மாண்புமிகு - கனம் பி. கக்கன் அவர்களுக்கு விண்ணப்பம் கொடுத்தோம். பயன் இல்லையென்று சொல்லி இருக்கிறார்கள்.

அதற்கு பிறகு 3-9-1960-ல் நம்முடைய பெருந்தலைவராக இருந்த அப்போதைய முதல்வர் மாண்புமிகு காமராஜர் அவர்களைச் சந்தித்து மனு கொடுத்தோம், நடைபெறவில்லை" என்று சொல்லிக் கொண்டே வந்து எங்களுடைய கோரிக்கையை நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். அதற்கு பிறகு என்னுடைய தந்தையாராகிய திரு. ஏ. கோவிந்தசாமி அவர்கள் விவசாயத் துறை அமைச்சராக 1967-ஆம் ஆண்டு இதே மன்றத்தில் வீற்றிருந்தபோது, நம்முடைய ஒப்பற்ற தலைவர், தானைத் தலைவர், டாக்டர் கலைஞர் அவர்கள் பொதுப்பணித் துறை அமைச்சராக வந்தார்கள். அப்போதுதான் இந்தத் திட்டத்திற்கே ஒரு விடிவு காலம் வந்தது. 1969-ஆம் ஆண்டு அதற்கு எஸ்டிமேட் எல்லாம் போட்டார்கள். 1971-ல் அந்தத் திட்டம் தொடங்கப்பட்டது. 1976-ல் திட்டத்தை ஓரளவுக்கு முடித்தார்கள். அந்தப் பகுதியில் இருந்த மக்கள் எல்லாம் மெத்தவும் மகிழ்ந்தார்கள், பாராட்டினார்கள், ஆனந்த கூத்தாடினார்கள் என்றுதான் சொல்லவேண்டும். அந்த அளவுக்கு அவர்களுடைய மகிழ்ச்சியைத் தெரிவித்துக்கொண்டார்கள். ஆனால் அதற்கு பிறகு திராவிட முன்னேற்றக் கழக அரசு கலைந்துவிட்ட காரணத்தால் அந்தத் திட்டம் கிடப்பிலே போடப்பட்டது. ஒரே (மணியடிக்கப்பெற்றது) ஒரே நிமிடத்தில் முடித்துக் கொள்கிறேன். தயவு செய்து எனக்கு நேரம் கொடுக்க வேண்டும்.

1989-ஆம் ஆண்டில் மீண்டும் நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக வந்த பிறகு, இதே அமைச்சர், அன்றைக்கும் பொதுப்பணித் துறை அமைச்சராக இருந்த அமைச்சர் அவர்களை நேரடியாகச் சென்று பார்த்துவிட்டு வரச் சொன்னார்கள். என்னோடு அமைச்சர் அவர்கள் நேரடியாக வந்தார்கள். சுற்றிப் பார்த்தார்கள். அப்போது மாவட்ட ஆட்சித் தலைவராக இருந்த திரு. சாரங்கி அவர்கள் என்னோடு நடந்தே வந்தார்கள். 10 கி.மீ. தொலைவு நாங்கள் அந்த வாய்க்காலை நடந்தே பார்த்தோம். அதற்குப் பிறகு அமைச்சர் அவர்கள் கருணை உள்ளத்தோடு 50 லட்சம் ரூபாயை வழங்கினார்கள். மீண்டும் எங்களுடைய ஆட்சி கலைக்கப்பட்டுவிட்டது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 100 லட்சம் ரூபாய் ஒதுக்கி இருக்கிறார்கள். அதற்கு நான் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. செ. இராமலிங்கம்):** சீக்கிரம் உரையை முடியுங்கள், நேரமாகிறது.

**திரு. ஏ. ஜி. சம்பத்:** ஒரு நிமிடத்தில் முடித்து விடுகிறேன். இதிலே முக்கியமான கருத்து என்னவென்றால், இந்த அணையைப் பொறுத்த வரையில் நாங்கள் எல்லாம் எதிர்பார்க்கிறோம். நான் மட்டுமல்ல, தண்டராம்பட்டு சட்டமன்ற உறுப்பினர், திருவண்ணாமலையைச் சேர்ந்த மாண்புமிகு அமைச்சர் பிச்சாண்டி அவர்கள் இன்னும் மேற்கொண்டு 4,5 சட்டமன்ற உறுப்பினர்கள் இதை எதிர்பார்க்கிறோம். எங்கள் கோரிக்கை என்னவென்றால், இந்த அணைக்கட்டிலே பெர்மனென்டாக நீர் வர வேண்டுமென்றால் சாத்தனூர் அணையில் மேல் மட்டக் கால்வாய் - (High Level Canal) அமைத்து, சமுத்திரம் ஏரி நிரப்பி, ஓலையாறு வழியாக துரிஞ்சலாறுக்குத் தண்ணீர் திருப்பி, நந்தன் கால்வாய் நிரந்தரமாக நீர் பெறும் திட்டத்தை நிறைவேற்றிக் கொடுக்க வேண்டுமென்று தாழ்மையோடு கேட்டுக் கொள்கிறேன். தலைமட்டத்திலே, கீழ்மட்டத்திலே 11 ஏரிகளை விட்டுவிட்டீர்கள். அந்த 11 ஏரிகளையும் மீண்டும் வடிவமைத்துக் கொடுக்க வேண்டும். நந்தன் கால்வாய்த் திட்டம் உங்கள் காலத்திலே முழுமை அடைந்து, நம்முடைய ஒப்பற்ற தலைவர் கலைஞர் அவர்களுடைய காலத்திலே முழுமை அடைந்தது என்ற பெயரை நீங்கள் ஈட்டித்தர வேண்டுமென்று கேட்டு வாய்ப்புக்கு நன்றி கூறி அமர்கிறேன். வணக்கம்.



**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. செ. இராமலிங்கம்):** ஓர் அறிவிப்பு. பொதுப்பணித் துறை மானியக் கோரிக்கையை ஒட்டி உறுப்பினர்களுக்கு அறுசுவை சிற்றுண்டி ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அனைவரும் ஒட்டுமொத்தமாகச் சென்றுவிடாமல் நான்கைந்து உறுப்பினர்களாகச் சென்று சாப்பிட்டுவிட்டு வரலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அடுத்து, திரு. டி. மணி.

***திரு. டி. மணி:** மாண்புமிகு மாற்றுத் தலைவரவர்களே, பாசனம் மற்றும் பொதுப்பணித் துறை சம்பந்தமான மானியக் கோரிக்கையின் மீது சில கருத்துக்களை சொல்ல விழைகிறேன். ஏற்கெனவே மழைக் காலத்திலே நம்முடைய மாநிலத்திலே பெய்யக்கூடிய மழைத் தண்ணீரை நாம் இன்னமும் முழுமையாகப் பயன்படுத்த இயலாத நிலையிலுள்ளோம். அதுமட்டுமல்லாமல், மழையின் அளவு குறைந்து வருகிறது. அதற்கு பிரதானமான காரணம் நம்முடைய காடுகள் அழிக்கப்படுவதுதான். மழைத் தண்ணீரைத் தேக்கி பயன்படுத்தாததால் சுமார் மூன்று மில்லியன் ஹெக்டேர் நிலங்கள் தரிசாகவுள்ளன. நான்கு கட்டங்களாக மழை பெய்கின்றது - தென்மேற்கு பருவ மழை, வடகிழக்கு பருவ மழை, குளிர்கால பருவ மழை, கோடைக்கால பருவ மழை, இந்த மழையினால் வரக்கூடிய தண்ணீரை நாம் பயன்படுத்திக் கொள்ள முயலவேண்டும். தமிழ்நாட்டில் சுமார் 940 மில்லியன் லிட்டர் மழை பெய்திருக்கிறது. ஆனால் அதை எந்த அளவிற்கு நாம் பயன்படுத்துகிறோம் என்பதுதான் பிரச்சினை.

அடுத்து, நம்முடைய ஏரி, குளங்களையெல்லாம் சரிவர பராமரிக்கவேண்டும். அந்த ஏரி, குளங்களில் சில இடங்களிலே ஆக்கிரமிப்புகள் இருக்கின்றன. அந்த ஆக்கிரமிப்பாளர்களை அகற்றும் நேரத்தில், அங்கு குடியிருப்பவர்களுக்குப் போதுமான இடங்களைக் கொடுத்து அகற்றுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். சுமார் மூவாயிரம் ஏரிகளை மேம்படுத்தி, ஐரோப்பிய கூட்டமைப்பின் மூலம் சீரமைப்பது, அதேபோன்று 1995-ஆம் ஆண்டு உலக வங்கி 1,740 கோடி ரூபாய்க்குக் கடன் வழங்க அங்கீகரித்துள்ளது. அதிலே 207 கோடி ரூபாய்க்கு மாநில அரசும் தன்னுடைய ஒப்புதலை வழங்கியுள்ளது. அதேபோன்று, ஜப்பான் நாட்டின் உதவியுடன் நம்முடைய தமிழகத்தினுடைய முன்னேற்றத்திற்கான - ஏரிகளைப் புனரமைக்கும் திட்டம் 400 ஹெக்டேர் பரப்புள்ள, 2,500 ஏரிகள் 207 கோடி ரூபாயில் புனரமைக்கும் திட்டம் உள்ளது. இதையும் நாம் சிறப்பாகச் செய்வதற்கான நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும்.

அதேபோன்று, நம்முடைய பஞ்சாயத்து யூனியன்கள், ஏறத்தாழ 20,413 பணிகளைச் செய்வதற்கு நாம் நிதியை ஒதுக்கியிருப்பது போதுமானதாகத் தெரியவில்லை. போதுமான நிதி ஒதுக்கும்போதுதான் ஊராட்சி ஒன்றியங்கள் சிறப்பாக அந்தப் பணிகளை முழுமையாகச் செய்துவிட முடியும்.

அடுத்து, நம்முடைய கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்தவரையில், அங்கு பிரதானமாக ஓடுகின்ற ஆறு பழையாறு. அந்த ஆற்றிலே வரக்கூடிய தண்ணீரைச் சரிவர நம்முடைய பாசனத்திற்கு நாம் பயன்படுத்தினால் அந்த மாவட்டத்திலே தண்ணீர்ப் பஞ்சமோ, விவசாயத்திற்குத் தண்ணீர் பஞ்சமோ இருக்காது. எனவே, அந்தத் திட்டத்தை ஆரம்பிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இவை நீங்கலாக கடந்த நிதிநிலை அறிகையின்போது 10 திட்டங்கள் சம்பந்தமான விவரங்களை மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களுடைய மேலான கவனத்திற்கு நான் கொடுத்திருந்தேன். ஆனால் கடந்த நிதிநிலை அறிக்கையிலே எந்தத் திட்டமும் ஏற்றுக்கொள்ளப் படவில்லை. குறிப்பாக அந்த மாவட்டத்திலே, முன்னர் மாண்புமிகு பெருந்தலைவர் காமராஜர் ஆட்சிக்குப் பின்னர் எந்தவிதமான பாசனத் திட்டங்களும் ஏற்றுக்கொள்ளப்படவில்லை. குறிப்பாக மாம்பழத்துறை அணை. அன்றைக்கு அதனுடைய செலவு 7½ கோடி ரூபாய் என்று மதிப்பீடு தயார் செய்தார்கள். இப்போது அது 9 கோடி ரூபாய்க்கு மேலே போகும் என்று கருதுகிறேன். அதே போன்று, குழித்துறை ஆற்றிலே தாமிரபரணி ஆற்றிலே, புதுக்கடை-விளாத்துறை லிப்ட் இரிகேஷன், இன்னும் பல பகுதிகளிலே லிப்ட் இரிகேஷன்-ஐப் பயன்படுத்திக்கொள்ள முடியும். அந்த வகையிலே அதற்கு ஏற்பாடுகளைச் செய்யவேண்டும். இவையெல்லாம் இந்த நிதி ஆண்டிலேயே செய்வதற்கான ஒரு முயற்சி வேண்டுமென்பதுதான் நம்முடைய வேண்டுகோள். அதே போன்று, நெய்யாறு இடதுகரை கால்வாயில் அதைச் சீரமைப்பதற்குச் சில வருடங்களுக்கு முன்னால் உலக வங்கியிலிருந்து 1.75 கோடி ரூபாய் ஒதுக்கியிருப்பதாகச் சொன்னார்கள். ஆனால், அந்தத் திட்டம் ஏற்றுக் கொள்ளப்படவில்லை.

இன்னும் நான் ஒன்றை மாண்புமிகு அமைச்சருடைய மேலான கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். உலக வங்கிக் கடன் உதவியோடு இடதுகரைக் கால்வாய்த் திட்டத்தைச் செய்வதோடு, அதனுடைய கிளைக் கால்வாயான பட்டசல் கால்வாய் திட்டத்தை முன்னாலே எம்.எல்.ஏ.வாக இருந்த மாண்புமிகு பொன்னப்ப நாடார் அவர்களுடைய காலத்திலே



ஆரம்பித்தார்கள். ஆனால் ஆண்டுகள் எத்தனை ஓடியிருக்கின்றன? இந்தத் திட்டத்திற்கு 30 லட்சம் ரூபாய் அல்லது அதிகபட்சம் போனால் 40 லட்சம் ரூபாய் போதும். அதற்கு மேலே தேவையிருக்காது. அப்படி அந்த வேலை செய்தால் 10 குளங்களுக்குத் தண்ணீர் கொடுக்கமுடியும். ஆகவே, இந்தத் திட்டத்தை இந்த நிதி ஆண்டிலேயே ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று மாண்புமிகு அமைச்சருடைய மேலான கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

முற்பகல் 11-55

அதே போன்று, அங்கே இருக்கின்ற பெரிய குளங்கள், குட்டைகள் என்று சொன்னால், நாகர்கோவிலுக்கு அருகிலே கன்னியாகுமரியிலிருந்து நாகர்கோவில் போகிற பாதையில் பறக்கை குளம். ஒரு குளம் இருக்கிறது. அதனுடைய நீளம் கிட்டத்தட்ட 6,7 மைல் இருக்கும். அந்த அளவிற்குப் பெரிய குளம். அதை 25 வருடங்களாக யாரும் தொட்டது கிடையாது. தற்போது அந்தக் குளத்திலே மண் நிரம்பி, அதனுடைய கொள்ளளவு குறைந்து போய் உள்ளது. எனவே, அப்படிப்பட்ட பெரிய குளங்கள் அந்த மாவட்டத்திலே இருக்கக்கூடிய பெரிய குளங்களைச் சீர்செய்ய நம்முடைய பொதுப்பணித் துறை மூலமாகத்தான் தேவையான நிதி ஒதுக்கவேண்டும். அதற்கு 5 லட்சம், 10 லட்சம் செலவு செய்தால் மட்டும் போதுமானதாக இல்லை. தேவையான நிதி என்று சொல்கிறபோது, நாம் எல்லாக் குளங்களையும் எடுத்துக் கொள்ளவேண்டும் என்று சொல்லவில்லை. குறிப்பாக 4 தாலுக்காக்களிலே உள்ள 10 குளங்களை எடுத்துக் கொள்ளுங்கள். தேவையான நிதியை ஒதுக்குங்கள். பக்கச் சுவரைக் கட்டுங்கள்; ஆழப்படுத்துங்கள், எடுக்கின்ற மண்ணை அதனுடைய கரையோரமாகப் போடக்கூடாது. அப்படிப் போட்டால், என்ன ஆகும் என்று சொன்னால், மீண்டும் மழைகாலத்திலே அது உள்ளே இறங்கிப் போய்விடுகிறது. நம்முடைய மாவட்டத்தினுடைய எல்லையிலே செல்லுகின்றபோது பார்க்கலாம். கேரள மாநிலம், அவர்கள் பூராவும் பக்கச் சுவரைக் கட்டி, அதற்குமேலே மண்ணை நிரப்பி, புல்லை வைத்து வளர்க்கிறார்கள். மனிதன் கூட அதைமிதிக்க அவர்கள் அனுமதிப்பதில்லை. அந்தளவிற்கு நம்முடைய குளங்களைப் பராமரித்தால்தான், நம்முடைய விவசாயிகளுக்குத் தேவையான, போதுமான தண்ணீரைத் தரமுடியும். அந்த அடிப்படையிலே நாம் விஷயங்களைப் பார்க்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, 4 அணைகள் அங்கே இருக்கின்றன. அதுவும் பெருந்தலைவர் காமராஜர் அவர்களுடைய காலத்திலே கடைசியாகக் கட்டப்பட்ட

சிற்றாறு 1, 2. அதற்கு மேலே, பழைய காலத்திலே வெள்ளைக்காரன் ஆட்சிக் காலத்திலே கட்டிய பெருஞ்சாணி. அவர்கள் காலத்திலுடைய கடைக் காலத்திலே கட்டப்பட்ட பேச்சிப்பாறை. 1992 ஆம் ஆண்டு பெய்த பெருமழையின் காரணமாக, மலையினுடைய பல்வேறு பகுதிகளிலிருந்து மலை இடிந்து விழுந்து மண் நிரப்பி அணையினுடைய கொள்ளளவு குறைந்து போய் இருக்கிறது. சற்று முன்னால், நம்முடைய பாசனத் துறை அமைச்சர் அவர்கள் அங்கே மண்ணை எடுப்பதற்காக ஒரு திட்டத்தைச் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் அது போதுமானதாக இல்லை என்பதுதான் என்னுடைய கருத்தாகும். பேச்சிப்பாறையினுடைய கொள்ளளவு என்பது பல கிலோ மீட்டர்களைக் கொண்டது. எனவே. என்னுடைய வேண்டுகோள் எல்லாம், அந்தப் பேச்சிப்பாறையினுடைய மதகுக்குப் பக்கத்திலே வரக்கூடிய 1½ கிலோ மீட்டருக்கு அப்புறம் இருக்கின்ற மண்ணை அகற்றுவதற்கு இயந்திரங்களைப் பயன்படுத்தினால்தான் அதை பாதுகாத்துக் கொள்ள முடியும்; அதனுடைய கொள்ளளவைப் பெருக்கிக் கொள்ள முடியும்.

அதேபோன்று, பெருஞ்சாணி. அதனுடைய மண்ணை எடுக்கின்றபோது, வேறு ஒரு விவரத்தைக்கூட நான் நம்முடைய அமைச்சர் பெருமகனாருடைய மேலான கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். மண்ணை எடுக்கின்றபோது, சரியான கண்காணிப்பு வேண்டும். அந்த இரண்டு அணைகளிலும், பேச்சிப்பாறையிலும், பெருஞ்சாணியிலும் ஏகப்பட்ட மரங்கள் அதற்குள்ளே அமுங்கி இருக்கின்றன. அந்த மண்ணை எடுக்கின்றபோது, அதற்கு நாம் அனுமதிக்கின்றபோது, அங்கே இருக்கின்ற அந்த மரங்களையும்கூட எடுத்துக் கொண்டு போகக்கூடிய வாய்ப்பை நாம் உருவாக்கிக் கொள்ளக்கூடாது. எனவே, நம்முடைய பாசனத் துறையும், வனத்துறையும் சேர்ந்து, இதிலே சரியான கண்காணிப்பு செய்து,-இந்த இரண்டு துறைகளின் கண்காணிப்போடுதான் அந்த மண்ணை எடுப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, நம்முடைய முல்லையாற்றின் குறுக்கே அணை கட்டுவது. நீண்டகாலமாகக் கிடப்பிலே கிடக்கக்கூடிய ஒரு திட்டம். பல பகுதிகளிலே இருக்கக்கூடிய தண்ணீர். மழைக் காலத்திலே தண்ணீர் வந்து அதிலே இருக்கக்கூடிய ஆற்றினுடைய கரைகள் உடைகின்ற ஒரு நிலை உள்ளது. அதைப் பாதுகாப்பதும், தண்ணீர் இல்லாத இடத்திற்குத் தண்ணீரைத் தருவதும் போன்ற நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.



அதேபோன்று, லிப்ட் இரிகேஷன். புதுக்கடை, விளாத்துறை மற்றும் உள்ள பகுதிகளுக்கு தாமிரபரணி ஆற்றிலே வரக்கூடிய தண்ணீரைக்கொண்டு லிப்ட் இரிகேஷன்ஸ் முறையை அந்தப் பகுதிகளிலே எல்லாம்-நாம் அமைத்தால், சிறிய சிறிய பகுதிகளுக்கு எல்லாம் தண்ணீரைக் கொடுத்து நெல்லை சாகுபடி செய்கின்ற பகுதிகளானாலும் சரி, இதர காய்கறித் தோட்டங்களை வைத்துக் கொள்வதற்கான வாய்ப்பாக அமையக்கூடிய இடங்களாக இருந்தாலும் சரி, தண்ணீரைக் கொடுக்க முடியும். மேலும் தாமிரபரணி ஆற்றிலே மழைக்காலத்திலே வந்து போகின்ற தண்ணீரை, வீணாகப் போகின்ற தண்ணீரை நாம் பராமரிப்பதற்கு, பாதுகாத்துக் கொள்வதற்கு வசதியாக லிப்ட் இரிகேஷன் முறையைக் கொண்டுவரவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, தாமிரபரணி ஆற்றிலே ஒரு பெரிய பிரச்சினை உருவாகியுள்ளது. ஏற்கனவே குழித்துறை நகர்ப்பகுதிக்குள்ளே ஓடுகின்ற அந்த ஆற்றினுடைய குறுக்கே இருந்த மூழ்குப் பாலம் முழுமையாக உடைந்து போய்விட்டது. எனவே, பொதுப்பணித் துறையின் மூலமாகத்தான் அங்கே ஒரு தடுப்பு அணை மாதிரி செக்டாம் கட்டவேண்டிய ஒரு கட்டாயம் ஏற்பட்டு இருக்கிறது. அதனால், குடிநீருக்காகப் பயன்படுத்தி வருகிற அனைத்துக் கிணறுகளையும் பாதுகாத்துக்கொள்ள முடியும். இல்லை என்று சொன்னால், வரக்கூடிய மே மாதத்திலே மழை ஆரம்பித்தாலும், அடுத்த பெருமழை வருகின்றபோதும், அதிகப்படியான தண்ணீர் வருமேயானால் குடிநீர்க் கிணறுகள் பூராவும் பாதிக்கப்படக்கூடிய ஒரு சூழ்நிலை தாமிரபரணி ஆற்றிலே இருக்கிறது என்பதையும் நான் உங்கள் மேலான கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

அதேபோன்று நம்முடைய மகாநதிகள் என்று சொல்லக்கூடிய கோதாவரி, கிருஷ்ணா மற்றும் காவிரி இணைப்பு சம்பந்தமாக ஏற்கனவே திட்டங்கள் பரிசீலனையில் உள்ளன. இருந்தாலும்கூட அவைகளை இணைக்கின்ற ஒரு திட்டத்தை நாம் வகுக்கவேண்டும் என்பது என்னுடைய வேண்டுகோளாகும்.

நண்பகல் 12-00

அதுபோல, கட்டிடங்கள் சம்பந்தமாக சில விஷயங்கள். அதாவது நாகர்கோவிலில் இருக்கக்கூடிய அரசு மருத்துவமனை. அங்கு போதுமான கட்டிடங்கள் இல்லை. ஆகவே புதிய கட்டிடங்களைக் கட்டுவதில் மாடிக் கட்டிடங்களாகக் கட்டினால் மட்டும்தான் இப்போதைக்கு இருக்கக்

கூடிய இடப்பற்றாக்குறையை ஓரளவிற்குப் பாதுகாத்துக் கொள்ளமுடியும். அதுபோன்று குழித்துறை அரசு மருத்துவமனை. ஆங்காங்கே சிலர் சின்னச்சின்ன வீடுகள் மாதிரி கட்டியிருக்கிறார்கள். அந்த நிலையை மாற்றி, 25, 50 நோயாளிகளை வைக்கவேண்டுமென்று சொன்னால், இருக்கக்கூடிய ஒரு பகுதியை உடைத்து அதிலே ஒரு புதிய கட்டிடம் கட்டினால் மட்டும்தான் அது சாத்தியமாகும்.

அதேபோல, தூத்தூர் ஆரம்ப சுகாதார நிலையம் இருக்கக்கூடிய பகுதி ஒரு சின்ன கட்டிடம். 25 நோயாளிகளைப் படுக்க வைக்கின்ற வகையில் ஒரு கட்டிடத்தைத் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இதேநிலையில்தான் இடைக்கோடு ஆரம்ப சுகாதார நிலையம் இருக்கிறது. அது பழுதடைந்து போய் இருக்கின்றது. பழுதுபார்க்கப்பட வேண்டும். இருக்கின்ற பல கட்டிடங்களும் பழுதடைந்து போயிருக்கின்றன. இவற்றையெல்லாம் பழுதுபார்க்கவேண்டும். பழைய காலத்திலே அதாவது 80 வருடத்திற்கு முன்னாலே அரசு மேல்நிலைப் பள்ளி என்று நம்முடைய மார்த்தாண்டம் பகுதியில் ஒரு மேல்நிலைப் பள்ளி இருக்கிறது. 1,500, 2,000 மாணவர்கள் படிக்கின்ற பள்ளி. இப்போது அந்தக் கட்டிடங்கள் உடைய ஆரம்பித்துவிட்டன. அதில் எங்காவது ஒரு பகுதியை முதலில் உடைத்து, அதற்குப் பதிலாக இரண்டு மாடிக் கட்டிடங்களைக் கட்டுவதன் மூலமாகப் படிப்படியாக அங்கே அந்தப் பள்ளி மேல்நிலைப் பள்ளி கட்டிடங்களைச் சீராக்கமுடியும்.

அதேபோல, கடையால்முட்டிலும், ஏழுதேசப்பற்று மேல்நிலைப் பள்ளி ஓலைக் கூரையில்தான் இன்றைக்கும் இருக்கிறது. எனவே அந்தக் கடையால்மூடு, ஏழுதேசப்பற்று அரசுப் பள்ளி புதிய கட்டிடங்களைக் கட்டுவதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டு, முடித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு.செ. இராமலிங்கம்):** திரு. துரை. சந்திரசேகரன்.

***திரு. துரை. சந்திரசேகரன்:** மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, 1997-98-ஆம் ஆண்டின் பாசனம் மற்றும் பொதுப் பணிகள் கட்டிடங்கள் மானியக் கோரிக்கைகளை வரவேற்றுப் பேசுகின்ற வாய்ப்பினை வழங்கிய தங்களுக்கும், பேரவைக்கும் என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியை உரித்தாக்கிக் கொள்கின்றேன்.

பொதுப்பணித் துறையின் பொற்காலம் நமது தமிழக முதல்வர்



பொதுப்பணித் துறை அமைச்சராகப் பணியாற்றிய காலம் என்பார்கள். அவர் பொதுப்பணித் துறை அமைச்சராக இருந்த காலத்தில் தமிழகத்திலே ஓடிய ஆறுகளினுடைய நீளம், தொடங்குகின்ற இடம், முடிகின்ற ஊர், அதேபோன்று பாசன வாய்க்கால்கள் எந்த ஊரில் ஓடுகின்றது என்பதை மிகத் துல்லியமாகப் பேரவையிலும், பொதுக் கூட்டங்களிலும், அரசு விழாக்களிலும் பேசியிருக்கின்றார்கள். அதைப் போலவே நமது மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் அவர்களும் இன்றைக்கு அவர் வழியில் மற்றவர்களுடைய நடையுடை பாவனைகளை பின்பற்றி அப்படியே செய்து காட்டக்கூடிய ஆற்றல் பெற்றவர். சிறந்த 'மிம்மிக்கிரியாளர்'. அதனால்தானோ என்னவோ நமது தலைவர் கலைஞர் அவர்களைப் போலவே இந்த மாமன்றத்தில் எந்தக் கேள்விக்குப் பதில் அளித்தாலும், அவருடைய மானியக் கோரிக்கையில் எப்போது பேசினாலும் புள்ளிவிவரங்களை அள்ளி வீசுகின்ற ஆற்றல் படைத்தவராகத் திகழ்கிறார். அந்த நம்பிக்கையில்தான் சில கோரிக்கைகளை வைத்து இந்த மானியத்திலே நான் பேசுகின்றேன்.

என்னுடைய திருவையாறு தொகுதி கரிகால் சோழன் கட்டிய கல்லணை அணையின் காரணத்தால் வளம் கொழிக்கின்ற பகுதியாக இருக்கின்றது. இந்தியாவிலேயே நிலத்திற்கு விலை உயர்ந்த நிலம் என்று மதிக்கப்படுகின்ற அளவிற்கு காருகுடியில் நில மதிப்பு அதிகமாக இருக்கின்றது. அதேபோல தென் பகுதியான பூதலூர் ஒன்றியத்தில் ஏராளமான வானம் பார்த்த பூமியாக, மானாவாரிப் பகுதியாக அந்தத் தொகுதி விளங்கிக்கொண்டிருக்கிறது. தஞ்சையை இன்றையதினம் ஆண்ட சோழ மன்னர்கள், தங்களுடைய பிறந்த நாளிலும், அதேபோல் எதிரிகளை வெற்றி பெற்று வருகின்றபோதும் அதனுடைய நினைவாக பாசன வசதி இல்லாத பல்வேறு கிராமங்களில் தன்னுடைய நினைவாக, தன்னுடைய பிறந்தநாள் பரிசாக எதிரியை வெற்றி பெற்று, எதிரியை அழைத்து வந்து மிகச் சிறப்பான முறையில் திருவையாறு தொகுதியில் தஞ்சை மாவட்டத்தில் 150 ஏரிகளை அமைத்திருக்கின்றார்கள். ஒவ்வொரு ஏரிக்கும் ஒரு வரலாறு உண்டு. மாறன் என்ற சோழ மன்னன் தன்னுடைய பிறந்தநாள் பரிசாக ஒரு மிகப் பெரிய ஏரியை வெட்டி, அந்த ஊருக்கு மாறனேரி என்று பெயர் இட்டிருக்கிறார். இன்றைக்கும் அந்த ஏரி மிகச் சிறப்பாக பாசனத்தைப் பெற்று வருகின்றது. அந்த அடிப்படையில் அமைந்த இந்த ஏரிகள் எல்லாம் இன்றைக்குத் தூர்ந்து கரைகள் எல்லாம் பாழ்பட்டு, தொடர்ந்து குடிமராமத்துப் பணிகளைச் செய்யாத பராமரிக்காத காரணத்தால் அவை எல்லாம் இன்றையதினம் பாசனவசதி இல்லாத அளவிற்கு நிலைமை மாறியிருக்கிறது என்பது உண்மை.

எனவேதான், நம்முடைய மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள், இந்த ஆண்டு, இதை இந்தத் துறைக்கு ஒரு சவாலாக எடுத்துக்கொண்டு பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள்.

பிற்பகல் 12-05

ஆட்சிப் பொறுப்பு ஏற்ற குறுகிய காலத்தில், மிகப் பெரிய வெள்ளத்தைச் சந்தித்து இருக்கின்றோம். அதேபோல், தென் மாவட்டங்களில் மிகப் பெரிய வறட்சியைச் சந்தித்து இருக்கின்றோம். இந்தப் பணிகளையெல்லாம் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் மிக வேகமாக நிறைவேற்றிக் கொண்டிருக்கின்ற வேளையில், நமது மாண்புமிகு முதல்வர் அவர்கள் தமிழகத்திற்கு, தொலைநோக்கோடு, எல்லா மாவட்டங்களுக்கும் பயன் அளிக்கின்ற வகையில் அணைக்கட்டுகள் திட்டத்திற்குக் கோடிக்கணக்கான ரூபாய்களுக்கு அனுமதி தந்திருக்கிறார்கள். அந்த அடிப்படையில், தஞ்சை மாவட்டத்தில் ஓடுகின்ற காவிரி, வெண்ணாறு, வெட்டாறு போன்ற பல ஆறுகளுக்கு, அந்த ஆறுகளுடைய போக்கே மாறுகின்ற அளவுக்கு, பல பாசன வாய்க்கால்களை அமைத்துத் தந்திருக்கின்றார்கள். பல பாசன வாய்க்கால்கள் பாசன வசதி தராத அளவுக்குத் தூர்ந்து போய் இருப்பதை, நமது மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள், நமது மாண்புமிகு முதல்வர் அவர்களிடமும், அதேபோல் நமது மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களிடமும் தொடர்ந்து வலியுறுத்தி, இன்றையதினம் 10 கோடி ரூபாயைத் தஞ்சை மாவட்டத்தினுடைய குடிமராமத்துப் பணிகளுக்காக, வாய்க்கால்களை வெட்டுகின்ற பணிகளுக்காகப் பெற்றுத் தந்திருப்பதற்காகத் தஞ்சை மாவட்டத்தினுடைய விவசாயிகளின் சார்பில், என் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதிலே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு ஒன்றைக் கொண்டு வர விரும்புகின்றேன். வருகின்ற ஜூன் 12-ஆம் தேதி வரையிலே மேட்டூர் நீர் நிலை நீடித்தால், பருவகால சூழ்நிலை நன்கு அமைந்தால், நிச்சயமாகத் தஞ்சை மாவட்டத்தினுடைய பாசனத்திற்கு மேட்டூர் அணையைத் திறக்கின்ற ஒரு நல்ல வாய்ப்பை நாம் பெறவிருக்கின்றோம். அந்த அடிப்படையில், இதுவரையில் கல்லணையில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள்தான் தண்ணீர் திறந்துவிட்டிருக்கிறார்கள். கரிகால் பெருவளத்தான் கண்ட கல்லணையை, மாண்புமிகு முதல்வர் அவர்களே ஜூன் 12-ஆம் தேதி மேட்டூர் திறந்ததற்குப் பிறகு, தஞ்சை மாவட்டத்தினுடைய விவசாயிகளுக்காகக் கல்லணையில் தண்ணீர் திறந்துவிடுகின்ற நிகழ்ச்சியில் பங்கேற்க வேண்டும்.



அதில் மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களும் பங்கேற்க வேண்டும் என்று தஞ்சை மாவட்டத்தினுடைய விவசாயிகள் சார்பாக நான் கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைய தினம் புல்டோசர் மூலம், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களும், மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களும் குடிமராமத்துப் பணியைத் தொடங்கி வைத்திருக்கின்றார்கள். பல புல்டோசர்கள், வேளாண்மைப் பொறியியல் துறை மூலமாகவும், தனியார் துறை மூலமாகவும் வாடகைக்கு வாங்கப்பட்டிருக்கின்றன. பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் தொடர்ந்து எல்லா ஏரிகளும், வாய்க்கால்களும், தஞ்சை மாவட்டத்தைப்போல், தென் மாவட்டங்களிலும் பராமரிக்கப்பட வேண்டியிருப்பதால், எதிர்காலத்தில் மினி புல்டோசர்களும், பெரிய புல்டோசர்களும், நிச்சயமாக இந்தத் துறைக்கு என சொந்தமாக வாங்க வேண்டும் என்பதற்காகத் தலைவர் கலைஞர் அவர்களை வலியுறுத்தி நிதியைப் பெற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

காவிரிக் கோட்டம், வெண்ணாறு கோட்டத்தில், என்னுடைய தொகுதிக்குட்பட்ட பல ஊர்களில் வாய்க்கால்கள் கிராம நிர்வாக அலுவலருடைய பட்டா புத்தகத்தில்தான் இருக்கின்றனவேயொழிய, நிலத்தில் இல்லை. அவற்றையெல்லாம் ஆய்வு செய்து, நிச்சயமாக அந்த வடிகால் வாய்க்கால்களை அமைத்துத்தர வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

பூதலூர் ஒன்றியத்தில் சிறிய பாசன ஏரிகள் Minor Irrigation Tanks 32 இருக்கின்றன. அதேபோல், பொதுப் பணித் துறை, பட்டுக்கோட்டை கோட்டத்திற்குட்பட்ட 20 ஏரிகள் பூதலூர் பகுதியில் இருக்கின்றன. பொதுப் பணித் துறை, புதிய கட்டளை உயர்மட்டக் கால்வாய் 'என்.கே.எச்.எல்.சி.' திருச்சி ஆர்.சி. டிவிஷனுக்கு உட்பட்ட 50 ஏரிகள் பூதலூர் ஒன்றியத்தில் இருக்கின்றன. அதேபோல், பொதுப் பணித் துறை ஆற்று பாதுகாப்பு கோட்டம் உய்யக்கொண்டான் விஸ்தரிப்பு பாசன வாய்க்கால் மூலம் பாசனம் பெறும் 12 ஏரிகள் பூதலூர் பகுதியில் இருக்கின்றன. கல்லணைக் கால்வாய் மூலம் பாசனம் பெறுகின்ற 5 ஏரிகள் இருக்கின்றன. இவற்றையெல்லாம் தவிர பட்டியலில் இல்லாத ஏரிகள் 10 ஏரிகள் 'Non System Tanks' இருக்கின்றன. கிட்டத்தட்ட 130 ஏரிகள் சோழ மன்னர் காலத்தில் அமைந்த காரணத்தால் ஒரு ஏரியினுடைய வடிகால், இன்னொரு ஏரியினுடைய பாசனப் பகுதியாக

அமைந்து ஒரு சொட்டு நீர்கூட வீணாகாமல், அந்த காலத்தில் பெய்கின்ற அத்தனை மழை நீரையும் விவசாயத்திற்குப் பயன்படுத்துகின்ற அளவில் ஒரு நல்ல அமைப்பாக அமைந்து இருக்கின்றது. எனவேதான், அனைத்து ஏரிகளையும், புல்டோசர் மூலமாக ஆழப்படுத்தி, கரைகளை உயர்த்தித் தரவேண்டுமென்று பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன். ஆகவே, அந்த ஏரிகளுக்குத் தண்ணீர் வருகின்ற வகையில், காவிரி நீர் வருகின்ற வகையில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் 1990-ஆம் ஆண்டில் பாசனம், சிறப்பு உணவு உற்பத்தித் திட்டத்தின்கீழ், உய்யக்கொண்டான் மற்றும் புதிய கட்டளை மேட்டு நீட்சி வாய்க்கால்களில் 'Bye pass channel'— மாற்று வழி வாய்க்காலை அமைக்க பொதுப் பணித் துறை அரசாணை எண்.1016 மற்றும் 1017-ல் முறையே 11 லட்சம் ரூபாய் மற்றும் 9 லட்சம் ரூபாய் என அனுமதி தந்தார்கள். அனுமதி தந்து பணிகள் தொடங்குவதற்கு நமது உள்ளாட்சித்துறை அமைச்சரும், பொதுப் பணித் துறை அமைச்சரும் அடிக்கல் நாட்டினார்கள். அந்த நேரத்தில் ஆட்சி கவிழ்க்கப்பட்டது. அதற்குப் பிறகு வந்த அ.இ.அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில் அந்தத் திட்டம் கிடப்பில் போடப்பட்டதோடு மட்டும் அல்லாமல் வெட்டுகின்ற பணியை மேற்கொள்ள திருவெறும்பூர் சட்டமன்ற உறுப்பினரும், திருவையாறு சட்டமன்ற உறுப்பினரும் இரண்டு சட்டமன்ற உறுப்பினர்களும் தங்களுக்கு கமிஷன் கொடுக்க வேண்டுமென்று கேட்டார்கள். அன்றைக்கு அவர்களுக்குள்ளே ஏற்பட்ட போட்டியில் அன்றைக்கிருந்த பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் அந்தத் திட்டம் கமிஷன் கொடுத்தால் வெட்டலாம் என்று ஒப்பந்தக்காரர்களிடம் கூறிவிட்டார்கள். அதனால் அந்தத் திட்டம் கடந்த 5 ஆண்டுகளில் வெட்டப்படவில்லை. மிக முக்கியமான அந்தத் திட்டத்தை இன்று வரையில் நிறைவேற்றவில்லை. எனவேதான் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் 7-12-1996 அன்று நேரடியாக மாவட்ட ஆட்சித் தலைவருடன் அந்த இடத்தைப் பார்வையிட்டார்கள். இந்த ஆண்டில் நிச்சயமாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்த மாற்றுவழி வாய்க்காலை வெட்டித்தரும்படி கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-10

அதேபோல, ஆச்சாம்பட்டி, கூனம்பட்டி, செங்கிபட்டி மானாவாரி பகுதியிலே பாசன வசதி பெற காங்கிரஸ் ஆட்சிக்காலத்தில் ஒரு வாய்க்கால் வெட்டுகின்ற ஆய்வுப் பணி மேற்கொள்ளப்பட்டது. அன்றைக்குக் காங்கிரஸ் சட்டமன்ற உறுப்பினராக இருந்த சாமிநாதன் முயற்சி மேற்கொண்டு அந்தப் பணியைச் செய்தார். அந்தத் திட்டம்



கிடப்பில் போடப்பட்டு இருக்கிறது. அதை மறு ஆய்வு செய்து அந்தப் பகுதி பாசனம் பெறுகின்ற வகையில் அந்தப் பாசன வாய்க்காலை வெட்டித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தஞ்சை, புதுக்கோட்டை மாவட்டங்களினுடைய வானம் பார்த்த பூமிகளில் விளைகின்ற வகையில் மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சரிடம் நீண்ட ஆவலோடு எதிர்பார்த்துக்கொண்டிருக்கிற முதலமுத்துவாரி திட்டம் பற்றி இந்தக் கொள்கைக் குறிப்பிலே காணப்படவில்லை. தஞ்சை மாவட்டத்திற்கு வருகை தந்த உறுதிமொழிக் குழுவின் தலைவர் மாண்புமிகு உறுப்பினர் ஞானசேகரன் அவர்கள்கூட இந்தக் கேள்வியைக் கேட்டார்கள். சட்டமன்றத்தில் உறுதியளிக்கப்பட்ட அந்த வினாவிற்கு அதிகாரிகளிடம் கேட்டபோது இந்த ஆண்டு அந்தத் திட்டம் எடுத்துக் கொள்ளப்படும் என்று குறிப்பிட்டிருந்தார்கள். எனவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கருணையோடு இந்தக் கோரிக்கையை நிறைவேற்றித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. செ. இராமலிங்கம்):** ஒரு நிமிடத்தில் பேசி முடிக்கவேண்டும்.

**திரு. துரை. சந்திரசேகரன்:** மாற்றுத் தலைவர் அவர்களே, முடித்துவிடுகிறேன். ஆர்.சி. டிவிஷனுடைய பணிகள் தஞ்சை மாவட்டத்தில்தான் அதிகமாக இருக்கின்றன. எனவே தஞ்சை மாவட்டத்தினுடைய கண்காணிப்புப் பொறியாளர் கீழ் இயங்குகின்ற அளவுக்கு ஆர்.சி. டிவிஷனைத் தஞ்சாவூருக்கு மாற்றித் தரும்படி பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். நான்-சிஸ்டம் டாங்க்ஸ், பட்டியலில் இல்லாத ஏரிகளை வரைமுறை செய்து இலாக்கா பராமரிப்பின் கீழ் கொண்டுவர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். திருவையாறு தொகுதியில் உள்ள ஆச்சாம்பட்டியில் நீர்த்தேக்கத்தை அமைக்க வேண்டும். அதேபோல மிக முக்கியமாக நாகை காயிதே மில்லத் மாவட்டம், சர் ஏ.டி. பன்னீர்செல்வம் மாவட்டங்கள் ஒரு சிறிய மழை பெய்தால் கூட மிகப் பெரிய வெள்ளத்தைச் சந்திக்கின்ற அளவிற்கு விவசாயிகள், பொதுமக்கள் ஆளாகின்றனர். அதற்குக் காரணம் காவேரியிலும், வெண்ணாற்றிலும் திருச்சியில் பெய்கின்ற மழையும், அதேபோல மேலத்தஞ்சையில் பெய்கின்ற மழையும் உடனடியாகப் பெருக்கெடுத்து விவசாயிகளுக்கு நஷ்டத்தை ஏற்படுத்துகிறது. குறிப்பாக திருத்துறைப்பூண்டி, முத்துப்பேட்டை போன்ற பகுதிகள் மிகப்பெரிய வெள்ளத்திற்கு ஆளாகின்றன. அவற்றிற்கு கடந்த காலத்தில் இந்த மழை நீர் வேறு

எந்த ஆற்றிலும் கலக்காத அளவுக்கு கொள்ளிடத்தில் கொண்டு விடுகின்ற ஒரு ஆய்வுப் பணி மேற்கொள்ளப்பட்டது. நிச்சயமாக அந்தப் பணியை மீண்டும் ஆய்வு செய்து அதை நிறைவேற்றித் தந்தால் எதிர்காலத்தில் தஞ்சை மாவட்டத்தில் வெள்ளம் ஏற்படாத அளவுக்கு வாய்ப்பை உருவாக்க முடியும் என்று கூறிக்கொள்கிறேன். எல்லா ஏரிகளுக்கும் சமமான பாசன நீர் செல்ல பகிர்வு அணைகள் - டிவைடிங் டாங்க்ஸ் - கட்டி நீரை சமமாகச் செல்ல வகை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) என்.கே.எச்.எல்.சி. கட்டளை உயர்மட்ட கால்வாயில் 23, 24, 25, 26 ஆகிய வாய்க்காலில் புதிய வாய்க்கால்களை வெட்டித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். குறிப்பாக திருவையாறு தொகுதி பூதலூர் பகுதி மிகவும் பின்தங்கிய பகுதி. மக்கள் ஆவலோடு இந்த வாய்க்கால் வெட்டுகின்ற அறிவிப்பை எதிர்பார்க்கின்றார்கள். அதேபோல முதலமுத்துவாரி திட்டத்தைப் பற்றிய அறிவிப்பையும் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. செ. இராமலிங்கம்):** திரு. பி.என். வல்லரசு.

***திரு. பி. என். வல்லரசு:** மாண்புமிகு சட்டப்பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, இன்றையதினம் பொதுப் பணித் துறை மானியத்தின்மீது நான் சார்ந்துள்ள அகில இந்திய பார்வர்டு பிளாக் கட்சியின் சார்பில் சில கருத்துக்களை முன்வைப்பதில் மகிழ்ச்சியடைகிறேன். மதுரை மாவட்டம் என்னுடைய உசிலம்பட்டித் தொகுதியில் இன்றைய கலைஞர் அரசு 34 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து 58 கிராம கால்வாய்த் திட்டத்தை நிறைவேற்றியிருக்கிறது. இதுபோல், 58 கிராமக் கால்வாய்த் திட்டம் உள்ளிட்ட ஏராளமான நீர்ப்பாசனத் திட்டங்களை கலைஞர் அரசு தமிழகத்திற்கு, தமிழக மக்களுக்கு வழங்கியுள்ளதை நான் மனமார பாராட்டுகிறேன்.

பிற்பகல் 12-15

ஒரு லட்சம் ஏக்கர் அல்ல, 2 லட்சம் ஏக்கர்கள் அல்ல, ஏறக்குறைய கால்வாய்கள் மூலமும், ஏரிகள் மூலமும் 185 மில்லியன் எக்டேர் நிலத்திற்கு நீர்பாசன வசதி செய்யப்பட்டுள்ளது. கலைஞர் அரசில் ஒரு பந்தயக் குதிரையைப்போல் செயலாற்றிக் கொண்டிருக்கின்ற பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களால், 185 மில்லியன் எக்டேர் நீர்ப்பாசன வசதி செய்யப்பட்டிருக்கிறது என்றால், இது ஒரு வரலாற்றுச் சாதனை என்பதை நான் மனதாரப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.



திட்டம் என்ற அதேபோல், இன்று புதிய முறையாக குடிமராமத்துத் திட்டத்தை உருவாக்கி இருப்பதையும், நான் வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்தியா ஒரு மாபெரும் விவசாய நாடு. ஏனைய நாடுகளான ஜெர்மனி போலவோ, ஜப்பான் போலவோ, அமெரிக்கா போலவோ, பிரான்ஸ் போலவோ தொழில் ரீதியாக முன்னேற முடியாத நாடாக, இந்தியா இருக்கிறது. இந்தியா இன்று விவசாயத்தை நம்பியிருக்கின்ற ஒரு நாடாக இருக்கிறது. அதேபோல், தமிழ் மாநிலமும் விவசாயத்தை நம்பியிருக்கின்ற ஒரு மாநிலமாக இருக்கிறது. எனவே இந்தியாவும் சரி, தமிழகமும் சரி, விவசாயத் துறையில் தன்னிறைவு அடைந்து, உலக நாடுகளுக்கு உணவுப் பொருட்களை ஏற்றுமதி செய்கின்ற அளவுக்கு முன்னேற வேண்டும் என்றால், நிச்சயமாக கங்கா-காவிரித் திட்டம் நிறைவேற்றப்படவேண்டும்.

திட்டம் அதேபோல், தென்னக நதிகளை இணைக்கும் கேரளாவில் நிறைவேற்றப்படவேண்டும். இதேபோல், இன்றையதினம் மேற்கு நோக்கி ஓடுகின்ற நதிகளை கிழக்கு நோக்கித் திருப்பி விட்டால் மதுரை, இராமநாதபுரம், பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் மாவட்டம் உள்ளிட்ட தென் மாவட்டங்கள் வளம் பெற நேரிடும். எனவே தமிழக முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்களைக் கேட்டுக்கொள்வது எல்லாம், டெல்லியில் நடைபெறுகின்ற நேஷனல் டெவலப்மெண்டு கவுன்சில் என்று சொல்லப்படுகின்ற, தேசிய வளர்ச்சிக் கவுன்சில் கூட்டத்தில் நீங்கள் கங்கை-காவேரி திட்டத்தை முன் வைக்க வேண்டும். தென்னக நதிகளை இணைக்கின்ற திட்டத்தை முன் வைக்க வேண்டும். மேற்கு நோக்கி ஓடும் நதிகளை கிழக்கு நோக்கித் திருப்பி விடுகின்ற திட்டத்தை முன் வைத்து ஒரு வரலாற்றினை உருவாக்கித் தரவேண்டும் என்று மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

இன்று தமிழ்நாட்டில் எப்படி காவிரிப் பிரச்சினை பெரும் பிரச்சினையாக இருக்கிறதோ அதுபோல் தென் மாவட்டங்களில் இன்றையதினம் பெரியாறு அணையினுடைய நீர் மட்டத்தை 152 அடியாக உயர்த்தவேண்டும் என்ற பிரச்சினை, பெரும் பிரச்சினையாக உள்ளது என்பதை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். எனவே, மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களைக்

கேட்டுக்கொள்வது எல்லாம், இந்த 1997-ஆம் ஆண்டுக்குள், பெரியாறு அணை நீர் மட்டத்தை 152 அடியாக உயர்த்திட நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பெரியாறு அணை என்பது பென்னிகுக் என்னும் ஒரு ஆங்கிலேயரால் 1885-ஆம் ஆண்டு கட்டப்பட்டது. அவ்வாறு 1885-ஆம் ஆண்டு பெரியாறு அணை கட்டப்பட்டபோது, திருவாங்கூர் மகாராஜாவுக்கும், அன்றைய ஆங்கில அரசுக்கும் 999 ஆண்டு காலத்திற்கு ஒரு ஒப்பந்தம் ஏற்பட்டது. அந்த ஒப்பந்தம்தான் பெரியாறு அணை ஒப்பந்தம் ஆகும். எனவே, அந்த 999 ஆண்டு கால ஒப்பந்தத்தின்படி, 152 அடி உயரம் வரை, நாம் தண்ணீரைத் தேக்கிக்கொள்ள முடியும். ஆனால் 1979-ஆம் ஆண்டு தமிழ்நாட்டில் மாண்புமிகு முதலமைச்சர் எம்ஜி.ஆர். அவர்களின் ஆட்சி நடைபெற்றுக்கொண்டிருந்த நேரத்தில், கேரள சட்டசபையில் சில அரசியல் கட்சிகள், பெரியாறு அணை பலவீனமாகிவிட்டது என்று கூறி ஒரு புரளியைக் கிளப்பி விட்டார்கள். அதுமட்டுமல்ல, பிளிமேடு தொகுதியைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர் திரு. குரியன் என்பவர் உண்ணாவிரதம் மேற்கொண்டார் அதன் பிறகு சென்ட்ரல் வாட்டர் போர்டு சேர்மேன் அவர்கள் பெரியாறு அணைக்கு நேரிடையாக வந்து பார்வையிட்டு, மத்திய அரசு, கேரள அரசு, தமிழக அரசு ஆகிய 3 அரசுகளும் உட்கார்ந்து, அணையைப் பலப்படுத்திட 3 கட்டப் பணிகளை மேற்கொள்ள வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டது. பெரியாறு அணையைப் பலப்படுத்துவதில் 3 கட்டப் பணிகளை தமிழக அரசு மேற்கொள்ளவேண்டும் என்றும், முதல் 2 கட்டப் பணிகளை மேற்கொண்டாலே 145 அடியாக உயர்த்திக்கொள்ளலாம் என்றும் 3-வது கட்டப் பணி முடிந்தால், 152 அடியாக உயர்த்திக்கொள்ளலாம் என்றும் உடன்பாடு ஏற்பட்டது. அதுவரை, 136 அடியாக வைத்துக்கொள்ள வேண்டும் என்றும் முடிவு செய்யப்பட்டது. 3 கட்டப் பணிகள் முடிந்த உடன் 152 அடியாக உயர்த்திக் கொள்ளலாம் என்றும் ஒப்பந்தம் ஏற்பட்டது. அந்த ஒப்பந்தத்தின்படி இன்று மத்திய அரசுதான் தலையிட வேண்டும். மத்திய அரசுதான் அந்த உடன்பாட்டைச் செய்தது. தமிழக அரசும் கேரள அரசும் பேச்சு வார்த்தை நடத்துவதற்கு மத்திய அரசுதான், உடனே ஏற்பாடு செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இன்றையதினம் அங்கே 3 கட்டப் பணிகள் முடிந்து விட்ட காரணத்தால், 152 அடியாக உயர்த்துவதற்கு உடனே



நடவடிக்கை எடுக்கவேண்டும். இதற்கு தமிழ் மாநில அரசும் அவசர நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஏன் என்றால் இது காலதாமதம் ஆகுமானால், இது மற்றொரு காவிரிப் பிரச்சினையாக மாறிவிடுமோ என்ற ஐயம் தென் மாவட்ட விவசாயிகளிடம் ஏற்பட்டு இருக்கிற காரணத்தால் இதை விரைந்து செயற்படுத்தவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, காவிரி நீர்ப் பிரச்சினையில் இன்றையதினம் தமிழக முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்கள் எடுக்கின்ற அனைத்து முயற்சிகளையும், அனைத்து நடவடிக்கைகளையும் அகில இந்திய பார்வர்டு பிளாக் கட்சி மனமாற வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறது. காரணம், தமிழ்நாட்டு மக்களுடைய நலன்களைக் கருதி, தமிழ்நாட்டு மக்களுடைய முன்னேற்றத்தையே தன் எண்ணமாக, கொள்கையாக, இலட்சியமாகக் கொண்டிருக்கிற மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள், காவிரி நீர்ப் பிரச்சினையில் எடுக்கின்ற எந்த முடிவும் நல்ல முடிவாகத்தான் இருக்கும் என்ற நிலையில் அகில இந்திய பார்வர்டு பிளாக் அவற்றை வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறது. உச்சநீதிமன்றத்தினுடைய ஆலோசனையின் அடிப்படையில்தான் கர்நாடக அரசோடு பேச்சு வார்த்தை நடத்தப்பட்டது. அவ்வாறு ஏன் பேச்சு வார்த்தை நடத்தினீர்கள் என்று சிலர் வெளியிலிருந்து கூக்குரல் கொடுத்தார்கள்.

இன்றையதினம் காவிரி நீர் பிரச்சினையில் ஒரு புதிய சூழ்நிலை உருவாக்கப்பட்டிருக்கிறது. உச்சநீதிமன்றத்தினுடைய 5 நீதிபதிகள் அரசியல் சட்ட சாசனப் பிரிவின்கீழ், காவிரி நீர், குறித்து வழக்கை ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். இந்த நிலையில், தமிழக அரசை தமிழக விவசாயிகள் என்ன கேட்டுக்கொள்கிறார்கள் என்றால், உச்ச நீதிமன்றத்தினுடைய 5 நீதிபதிகள் வழக்கை விசாரிக்க இருக்கின்ற இந்தக் காலகட்டத்தை பயன்படுத்திக்கொண்டு, கர்நாடக அரசு காலதாமதம் ஏற்படுத்தலாம். எனவே, தமிழக அரசு கர்நாடக அரசு, உச்சநீதிமன்றத்தில் காலதாமதப்படுத்தலாம் என்ற நிலை இருக்கிற காரணத்தினால், காலதாமதப்படுத்தாமல் விரைவில் நடவடிக்கை எடுக்கின்ற அளவிற்கு, நமது மாநில அரசு துரித நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். வழக்கு நீடித்துக் கொண்டே செல்லுமேயானால், அதற்கு இடைப்பட்ட காலத்திலே, தமிழக மக்களுக்கு, விவசாயம் செய்யத் தேவையான தண்ணீர் உரிய அளவிற்குக் கிடைப்பதற்கு வரையறை செய்து நடவடிக்கை எடுக்க வேண்டு மென்பதையும் நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்றையதினம், தென் மாவட்டங்களைச் சேர்ந்த வழக்கறிஞர்கள் பலகட்டப் போராட்டங்களை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். மதுரையிலே உயர்நீதிமன்றத்தினுடைய கிளை அமைக்கப்பட வேண்டுமென்று கோரி, போராட்டம் நடத்திக் கொண்டிருக்கிறார்கள். தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் மதுரையில் உயர்நீதிமன்ற கிளை அமைக்க, நாலரை கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள். எனவே, நிலம் கையகப்படுத்த நாலரை கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிற இந்தச் சூழ்நிலையில், மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சரவர்கள்தான் துரிதமாக கட்டிடம் கட்டித் தரவேண்டும். முதலமைச்சரவர்கள் நிதிப் பற்றாக்குறையே இல்லை என்று சொல்லியிருக்கிறார்கள், அதைப் பயன்படுத்திக்கொண்டு ஒரு சிறந்த வழக்கறிஞரும், பொதுப் பணித் துறை அமைச்சருமாகவும், இருக்கின்ற, நமது பொதுப் பணித் துறை அமைச்சரவர்கள் மதுரையிலே உயர்நீதிமன்றக் கட்டிடத்தை விரைவில் கட்டி, அந்தப் பிரச்சினைக்கு முடிவு கட்ட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

எனது உசிலம்பட்டி தொகுதியில் 58 கிராம கால்வாய்த் திட்டம், நிறைவேற்றப்பட்டுள்ளது. எனவே, தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களும், பொதுப் பணித் துறை அமைச்சரவர்களும் 58 கிராம கால்வாய் திட்டத்திற்கு அடிக்கல் நாட்டு விழாவினை மிக விரைவிலே நடத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அந்த 58 கிராம கால்வாய்த் திட்டத்திற்கு சர்வே செய்யும்பொழுது 3 கண்மாய்கள் விடுபட்டு விட்டன. விடப்பட்ட அல்லிகுண்டம் கண்மாய், மானூத்து கண்மாய், ஜோதி நாயக்கனூர் கண்மாய் ஆகிய மூன்று கண்மாய்களை சேர்க்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

1989-90-ஆம் ஆண்டு திராவிட முன்னேற்றக் கழக அரசு நடைபெற்றுக் கொண்டிருந்தபொழுது கரிசல்பட்டி அணைத் திட்டத்திற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. ஆனால் இன்று அது பாதியிலேயே நிற்கிறது. எனவே கரிசல்பட்டி அணைத் திட்டத்தை இவ்வாண்டே நிறைவேற்றித் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

உசிலம்பட்டி தொகுதியில், 20 `கிராமங்களுக்குப் பயன்படுகின்ற அசுவமா நதி அணைத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டும். மாண்புமிகு



பொதுப் பணித் துறை அமைச்சரவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். பெரியாறு அணையிலிருந்தோ, வைகை அணையிலிருந்தோ ஒரு சொட்டுத் தண்ணீர்கூட அசுவமா நதித் திட்டத்திற்குத் தேவைப்படாது. இரண்டு மலைகளுக்கு இடையே இருக்கின்ற ஒரு பள்ளத்தாக்கில் மழை பெய்து அங்கே வீணாகிச் செல்கிறது. எனவே, அந்த மழைநீரைப் பயன்படுத்திட, விவசாயம் செய்திட, அசுவமா நதி அணைத் திட்டத்தை நீங்கள் நிறைவேற்றித் தருவீர்களேயானால், 20 கிராம மக்கள் பயன்பெறுகின்ற சூழ்நிலை உள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருமங்கலம் பிரதானக் கால்வாயைக் கட்டும்பொழுது பத்தாயிரம் ஏக்கர் பாசனத்திற்குத் தான் கட்டினார்கள். ஆனால், இன்று இருபதாயிரம் ஏக்கருக்குத் தண்ணீர் பாய்ந்து கொண்டிருக்கிற காரணத்தினால், திருமங்கலம் பிரதானக் கால்வாயை அகலப்படுத்தவும், உயர்த்திக் கட்டவும் வேண்டிய சூழ்நிலை இருக்கின்ற காரணத்தினால் உயர்த்திக் கட்ட வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன். அதனுடைய 4-வது பிரிவு, 5-வது பிரிவு கால்வாய்களைச் சீர்படுத்திக் கட்ட வேண்டுமாயும் கேட்டுக்கொள்கிறேன்.

திருமங்கலம் பிரதானக் கால்வாயில் விக்கிரமங்கலம், அய்யனார் குளம் என்ற கிராமங்களில் பாலம் கட்ட வேண்டுமாயும், பஸ் வசதி செய்ய வேண்டியிருக்கின்ற காரணத்தினால் அந்தப் பாலங்களைக் கட்டித் தர வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

திருமங்கலம் கால்வாய் திட்டத்தின் மூலம் கிண்ணிமங்கலம், கிழக்குயல்குடி, வடிவேல்கரை போன்ற பகுதிகளுக்கு நீர்ப்பாசன வசதி செய்து தர வேண்டுமாயும் கேட்டுக்கொள்கிறேன்.

உசிலம்பட்டி தொகுதியையும், நிலக்கோட்டை தொகுதியையும் இணைக்கின்ற இணைப்புப் பாலமாக அணைப்பட்டி பேரணை அமைந்துள்ளது. அணைப்பட்டியில் இருக்கிற பேரணைக்குப் பெரிய பாலத்தைக் கட்டிக் கொடுத்தால், இரு தொகுதிகளையும் இணைக்கின்ற சூழ்நிலை உள்ளது. திண்டுக்கல் மாவட்டத்தையும், மதுரை மாவட்டத்தையும் இணைக்கிற பாலமாகப் பேரணை பாலம் இருக்கின்ற காரணத்தால், அந்தப் பேரணை பாலத்தைக் கட்டிக் கொடுக்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

புவியியல் துறையைச் சார்ந்த நான்கு துணை இயக்குநர்கள், தொடர்ந்து வேலையில் அமர்த்தப்படாமல் கஷ்டப்படுகிறார்கள். ட்ரிப்யூனலின் இடைக்காலத் தீர்ப்பை ஏற்று, மாண்புமிகு பொதுப் பணித் துறை

அமைச்சரவர்கள், அவர்களைப் பணியில் நியமனம் செய்ய வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன். அந்த, புவியியல் துறையைச் சார்ந்த நான்கு துணை இயக்குநர்கள் சம்பளம் வாங்காமல் இரண்டு வருட காலம் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அவர்களைப் பணி நியமனம் செய்து, ட்ரிப்யூனல் தீர்ப்பை நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டு, விடை பெறுகிறேன், நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. செ. இராமலிங்கம்):** திரு. கொ. வி. நன்னன்.

***திரு. கொ. வி. நன்னன்:** இந்த மாமன்றத்தில் பேசுகின்ற வாய்ப்பினை எனக்கு அளித்த மாற்றுத் தலைவரவர்களே,

'கார்மேகம் வானத்தில் திரண்டு வந்து
கனத்தமழை பெய்துமண்ணை செழிக்க வைக்கும்
பார்போற்றும் முதல்வர் நமக்க ளித்தநிதி
நிலைஅறிக்கை தனைபுகழ்ந்து புவியு ரைக்கும்
சீர்மேவ செங்கம் தொகுதி மக்கள் வாழ
சிறப்பாக செய்யாற்றின் குறுக்கே நல்ல
நீர்த்தேக்கம் அமைப்பதற்கு நிதிய ளித்த
நேர்த்திமிகு முதல்வரென்றும் வாழ்க வாழ்க'

என்று அவரை வாழ்த்தி, அவருக்குக் கோடானுகோடி நன்றியைச் சொல்லிக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-25

பெரிய மனதோடு செங்கம் தொகுதி மக்கள் வாழவேண்டும், வளமாக இருக்கவேண்டும் என்ற நோக்கத்தோடு, அணையைக் கட்டுவதற்கு வேண்டிய முயற்சியைச் செய்து குப்பனத்தம் அணையைக் கட்ட நிதி அளித்த பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களுக்கும் கோடானுகோடி நன்றியைச் சொல்லி அதற்கு உறுதுணையாக இருந்து ஊக்கமும் அளித்த வீட்டு வசதித்துறை அமைச்சர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தானைத் தலைவரும் பேரவைத் தலைவரும்,
தமிழ்க்குடி போற்றும் தவத்திரு மக்களும்
சட்ட மன்ற உறுப்பினர் என்ற



சான்றோர் இருக்கும் காரணத் தினாலே
தப்பாய் தவறாய் தமிழ்ப் பேசினாலும்,
தமிழ்ப்பற் றால்எம் தலைவர் ரசிப்பார்
குழுமி யுள்ள உறுப்பினர் அனைவரும்
தமிழ்மொழிப்ப ற்றில் சளைத்த வரில்லை.
அதனால்,
மழலைத் தமிழில் மனதில் பட்டதை
சொல்ல நினைத்தேன் சுவையெனக் கொள்வீர்
முன்பு, விபத்தால் வந்த அபத்த அரசின்
இடரால் வந்த இருள்பறந் தோட
உதய ஆதவன் ஒளிக்கதிர் பரப்பி
வெளிச்சம் தந்தது வேதனை அகன்றது
தமிழகத் தேவைகள் தன்னிறை வடைய
தலைவர் கருணை நிதியின் தயவால்,
நிதிநிலை அறிக்கை நிறைவினைத் தந்தது
நெஞ்சம் பெருமித நினைவால் குளிர்ந்தது,
அஞ்சுகப் புதல்வரின் அறிவின் ஆற்றலால்
அரசின் திட்டமோ அற்புத மானது
கொஞ்சமும் மனதில் ஈரமில் லாதவர்
குறை சொல்வாரது குணத்தின் எதிரொலி
மேட்டுக் குடியோர் மகிழ்ச்சி கொள்ளவும்
நடுத்தர மக்கள் நன்றெனப் புகலவும்
அடித்தள மக்கள் அற்புதம் என்கவும்
ஆண்டு நிதிநிலை அறிக்கையை அளித்தார்.
நற்றமிழ் புதல்வரின் புகலிட மாக
நன்னன் ஆண்ட செங்கன் மாநகரை
காட்டா றொன்று கடந்து போயினும்
பாட்டா ளிக்கது பயன் தரவில்லை.
அந்தக் குறையை அறிந்த முதல்வர்
அணையைக் கட்ட அனுமதி அளித்ததால்
எங்கள் பகுதியின் உழவர் மனதில்
பொங்கிய மகிழ்ச்சி புதுப்புன லானது

ஊராட்சி பேரூராட்சி ஒன்றிய ஆட்சி
நகரின் ஆட்சி மாநக ராட்சி
அனைத்தும் இதுவரை பெற்ற நிதியினை
ஏறக் குறைய இரட்டிப் பாக்கி
அத்தனை ஊர்க்கும் சாலை அமைத்ததும்,
அண்ணா மறுமலர்ச்சி திட்ட மளித்ததும்
தமிழ்நாட் டிலுள்ள காட்டின் ஆற்றைத்
தடுத்து நிறுத்திப் பயன்பெறச் செய்ததும்
விவசா யத்திற்கு உதவும் போக்கில்
விதைபெ ருக்கவும் வேளாண்மைத் துறை
விரிவ டைந்திட விதிகள் செய்ததும்
உழவுத் தொழிலின் நுண்மை அறிந்திட
பள்ளிச் சிறார்க்குப் பாடமாக் கியதும்
கடலில் ஓடி காலம் கழித்த
மீனவ மக்கள் கலமும் வலையும்
பெற்றிடத் திட்டமும், கருணையும் செய்ததும்
நடுக்கடல் விபத்தை உடன றிந்திட
கருவியளித்ததும் நல்ல திட்டங்கள்
தெள்ளத் தெளிவாய் பாதவர்க் களித்ததும்
வேலையற் றோரின் வேதனை தீரவும்
வேலை கொடுத்து சாதனை செய்ததும்
தொழிலைப் பெருக்கத் தொடங்கிய வேகமும்
தொலைநோக்கில் முதல்வர் பார்த்த பார்வையும்
மாநில அரசின் செயல்கள் அனைத்தும்
மக்கள் அறிந்திட விவரம் புரிந்திட
தகவல் பெற்றிடும் உரிமையைத் தந்ததும்
கல்வி வளர்ச்சியும் மற்றும் இசையை
கற்க நினைப்பவர்க்கு உதவி செய்தலும்
நல்வழி காட்டி நம்மை வளர்க்கவும்
நாட்டைச் சீராய் நடத்திச் செல்லவும்
பிணிபிடித் தோர்க்கும் தொழுநோய் மாந்தர்க்கும்
மருத்துவத் துறையினர் விரைந்து செயல்பட



ஆக்கமும் பொருளும் அறிந்து உதவிய
அற்புதத் திட்டம் ஆக்கிய பெருமையும்
பாதிப்பு வாழ்க்கையில் பலநாள் உழன்ற
ஆதிதி ராவிடர் பழங்குடி மரபினர்
ஓதவும் வாழ்வில் உயர்ந்து செழிக்கவும்
நிம்மதி பெற்று நெடுநாள் வாழ
நிதியை ஒதுக்கியும்
கையால் தறியை நெய்பவர் தமக்கு
காப்பீட் டுத்தொகை கணிசமாய் வழங்கியும்
ஆதரவற்று வந்த அகதிக் கெல்லாம்
அரவணைத்துப் பலப்பல சலுகை அளித்ததும்
பெருமைப் பெண்ணினம் பெரும் பயனடையவும்
ஊனமுற் றோருக்கு உதவி புரிந்ததும்
வீடு கட்டும் வேலையை செய்வோரும்
விவசாயக் கூலி வேலை செய்வோரும்
ஊதியம் பெருக்க உதவ நினைத்ததும்
உழைப்பை மதிக்கத் தெரிந்த தலைவர்
உள்ளப் பாங்கை உலகம் அறியும்
பத்திரிகை தன்னில் பணிபுரி வோர்க்கு
பரிவுடன் சலுகை பலஅ ளித்ததும்
மற்றவர் நினைத்திட தலைவரின் தெளிந்த
மனதின் ஆழம் மாநிலம் அறியும்
இத்தனை நன்மை செய்த போதிலும்
எள்ளி நகைப்பவர் சிலபே ருள்ளார்
புத்தனைக் கூடபுறம் பேசு பவர்கள்
இத்தரை மீதில் இருப்பதைப் போல
உத்தமத் தலைவரின் நிதிநிலை அறிக்கையை
உள்ளம் ஏற்பினும் சூழ்நிலை இடரால்
மொத்தமும் நிறைவை அளிக்கவில் லைஃன
சத்தமாய் உரைப்பவர் சார்ந்த உறவினால்.

பிற்பகல் 12-30

தொழில்வளம் இல்லா துயரத்தினாலே துவண்டது என் தொகுதி அந்தத் துயரினைத் தீர்க்கவேண்டும். எனது தொகுதியில் எல்லா ஏரிகளும், ஏரியின் கால்வாய்களும் தூர்ந்து போயிருக்கின்றன. அந்தத் தூர்களை அகற்றினால், நீர் நிலைத்து நின்று, வயல் வெளிகள் வளர்ந்து, விவசாயம் வளம்பெற உதவும். எனவே, அந்த ஏரிகளையும், கால்வாய்களையும் தூர்வாரி கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இளைஞர் வளம் பெற தொழில் பல செய்ய தொழிற்பேட்டை அமைய வேண்டும். மேல் சங்கம் பண்ணையில் விவசாயக் கல்லூரி வேண்டும். பாய்ச்சல், இளங்குண்ணி கிராமங்களுக்குக் கால்நடை மருத்துவமனை வேண்டும். செய்யாறையும், பெண்ணையாறையும் இணைத்துப் பயன்தரச் செய்ய வேண்டும்.

இரும்புத் தாது ஏராளமாக எனது தொகுதியில் இருப்பதால், தொழிற்சாலை அமைக்க உதவி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

செங்கத்திலிருந்து நீப்பத் துறை செல்லும் வழியில் காட்டாறு ஒன்று ஓடுகிறது. அந்த ஆற்றைத் தடுத்து அங்கே பாலம் கட்டித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நீப்பத் துறையிலிருந்து பெண்ணையாற்றைக் கடந்துதான் அம்மாபேட்டை செல்ல வேண்டும். சேலம் வழியில், ஒரு பாலம் கட்டித் கொடுத்தால் சேலத்திலிருந்து திருவண்ணாமலை வரும் வழியில் 40 கிலோ மீட்டர் குறையும் என்பதைச் சொல்லி, இந்தப் பாலத்தைக் கட்டிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

கொட்டகுளம், எரையூர், தொரப்பாடி, உறவந்தவாடி, வாசுதேவன்பட்டு. இந்த ஊர்களின் ஆற்றின் குறுக்கே பாலம் கட்டிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. செ. இராமலிங்கம்):** சீக்கிரம் பேசி முடியுங்கள்.

**திரு. கொ. வி. நன்னன்:** ஜவ்வாது மலையிலே ஒரு பாதையிருக்கிறது. பரமனேந்தலிலிருந்து ஜமுனா மருதூர் போகும் வழி குறுக்கு வழி. அந்த வழியைத் தார்ச் சாலையாக மாற்றிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால் அங்கே பண்டங்களை எடுத்துச் செல்லக் கழுதைகள்தான் பயன்படுகின்றன. அந்தக் கழுதைகளின் பாரத்தைக் குறைத்துவிட்டு, அங்கே பேருந்துகளும், லாரிகளும், வேன்களும் போகக்கூடிய அளவுக்கு பாலத்தைக் கட்டிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு வாய்ப்புக்கு நன்றி கூறி முடிக்கிறேன். வணக்கம்.



**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. செ. இராமலிங்கம்):** திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு மாற்றுத்தலைவர் அவர்களே, பொதுப்பணி, பாசனம் குறித்த இந்த மானியக் கோரிக்கைகள் மீது பேசுவதற்கு வாய்ப்பு ஏற்படுத்தியமைக்காக நன்றி கூறி, தமிழ்நாட்டின் நீர்ப்பாசன முறைகளைச் சிறப்படைய செய்வதற்கான வகையிலே இந்த நிதியாண்டிலே பல்வேறு அணைக்கட்டுத் திட்டங்களை அறிவித்திருப்பதை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி சார்பிலே மனதார வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன். குறிப்பாக, பல்வேறு அணைக்கட்டுத் திட்டப் பணிகள் எல்லாம் நிறைவேற்றப்படுவதற்கு முன்முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. அப்படிப்பட்ட பணிகளிலே விரைந்த முறையிலே நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக் கொள்கிறேன். குறிப்பாக, விவசாயத்தையே நம்பியிருக்கக்கூடிய ஒன்றுபட்ட தஞ்சை மாவட்டம் இன்று மூன்று மாவட்டங்களாக பிரிந்து செயல்படுகிற மாவட்டம். இந்த மாவட்டத்தினுடைய விவசாயிகளுக்கு அடிப்படை ஆதாரமாக இருக்கின்ற காவிரி நதி நீர்ப் பிரச்சினைக்கு நிரந்தரமான தீர்வு காணப்பெற வேண்டுமென்று பல்வேறு சந்தர்ப்பங்களிலே வலியுறுத்திச் சொல்லப்பட்டிருக்கிறது. நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களும் சிறப்பான முன்முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறார்கள். அதிலே வெற்றி பெற வேண்டுமென்று என்னுடைய கட்சியின் சார்பிலே நான் வாழ்த்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தமிழ்நாட்டிலே இருக்கின்ற குளங்கள், ஏரிகள், இப்படிப்பட்ட நீர்நிலைகள் எல்லாம் தூர்ந்துவிட்டன. இவற்றையெல்லாம் குடிமராமத்து மூலமாக நிறைவேற்றித்தர முன்முயற்சிகள் மேற்கொள்ள வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக் கொள்கிறேன். ஏரிகள், குளங்கள், அடிக்கடி மராமத்து செய்யப்படாமல் இருக்கின்ற காரணத்தினால்,

நீர்நிலைகள் மிகவும் மோசமான நிலைக்கு ஆளாக்கப்பட்டிருக்கின்றன. பொதுப் பணித் துறையிலே ஒரு ஸ்டேண்டிங் ஆர்டர் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. மூன்று ஆண்டுகள் தொடர்ந்து நீர்நிலைகள் நிரம்பினால்தான், மராமத்து பணிகள் செய்யப்படும் என்று ஆர்டர் இருக்கிறது. அந்த ஸ்டேண்டிங் உத்தரவை மறுபரிசீலனை செய்ய வேண்டும். அதற்குக் காரணம், ஆண்டு தோறும் மழை பெய்வதில்லை. தண்ணீர் வரத்தும் அதிகமாக இல்லாத காரணத்தால் மூன்று ஆண்டுகள் நிரம்ப வேண்டுமென்ற அந்த நிலையை மாற்றி, தேவையான அளவிற்கு அதைச் சரி செய்வதற்கு முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்திலே நான் கேட்டுக் கொள்கிறேன். குறிப்பாக நீர்நிலைகளுக்கு ஆதாரமாக விளங்குகின்ற மதகுகள் பல்வேறு இடங்களிலே பழுதுபட்டிருக்கின்றன.

உடனடியாக அவற்றைச் செப்பனிட வேண்டும். இந்த மே மாதத்திற்குள்ளாகவே செப்பனிட்டால்தான் பாசனத்திற்குப் பயன்படுவதற்குரிய வாய்ப்புகள் ஏற்படும். அப்படிப்பட்ட பணிகளை ஒன்றுபட்ட தஞ்சை மாவட்டத்திலே சிறப்பாகச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

குறிப்பாக, கழிமுகப் பகுதிகளாக இருக்கின்ற திருத்துறைப்பூண்டி, முத்துப்பேட்டை, கோட்டூர், மன்னார்குடி போன்ற பகுதிகளில் மிகப் பெரிய அளவிலே வெள்ளச் சேதங்கள் ஏற்படுகின்றன. கழிமுகப் பகுதிகளை வெட்ட வேண்டுமென்று கோரிக்கை பல தடவை எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது. இதே போல, சிதம்பரனார் மாவட்டம், ஆறுமுகமங்கலம் பகுதியிலேகூட அப்படிப்பட்ட பிரச்சினையிருக்கிறது. இவற்றையெல்லாம் சொல்லி, அப்படிப்பட்ட பணிகள் மேற்கொள்ளப்படவில்லையென்ற கருத்து இருப்பதை மாற்றி நிறைவேற்றித்தர முயற்சிகள் விரைந்த முறையிலே எடுக்கப்பட வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-35

ஒரு வாரம் மழை பெய்தாலே பெரு வெள்ளமாக மாறிவிடுகிற அபாயச் சூழ்நிலை இருக்கிறது. இவற்றை நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களும் நேரிலே பார்த்திருக்கிறார்கள். பல்வேறு இடங்களுக்கு நானும்,



திருத்துறைப்பூண்டி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் அவர்களும்கூட மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களை அழைத்துச் சென்று காண்பித்திருக்கிறோம். ஆகவே, அவற்றையெல்லாம் மேம்படுத்துவதற்கான உரிய முயற்சிகைள எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

குறிப்பாக, பாசன வடிகால்களை மராமத்து செய்வதற்கு உரிய முயற்சிகள் விரைவான முறையிலே மேற்கொள்ளப்படவிருக்கின்றன. கடந்த பத்து தினங்களுக்கு முன்னாலே நம்முடைய இரண்டு அமைச்சர் பெருமக்களும் எங்களுடைய மாவட்டத்திற்கு வருகை தந்து, அந்தப் பணிகளைச் சிறப்பான முறையிலே தொடக்கி வைத்தார்கள். மேலும், விரைந்த முறையிலே நடவடிக்கையினை மேற்கொண்டு பல்வேறு பணிகளைச் சிறப்பாக நிறைவேற்ற வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

குறிப்பாக குளங்கள், கால்வாய்கள், ஏரிகள், பாசன வடிகால்கள் ஆகியவற்றை எல்லாம் ஆக்கிரமிப்பது நெய்வேலி காட்டாமணி. மனிதனின் உயிர்க்கொல்லி நோயாகச் சொல்லப்படுகிறது எய்ட்ஸ் நோய் என்றால், பொதுப்பணித் துறைக்குச் சவாலாக இருப்பது இந்த நெய்வேலி காட்டாமணி. பொதுப் பணித்துறைக்கு எய்ட்ஸாக விளங்குகின்றது. இந்த நெய்வேலி காட்டாமணி. அதேபோல, ஆகாயத்தாமாரை. இவற்றை அழிப்பதற்கான முன்முயற்சிகளைத் தனிக் கவனத்தோடு சிறப்பாக நிறைவேற்ற வேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்திலே பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். வேளாண்மைத் துறையின் மூலமாக கண்டுபிடிக்கப்பட்டிருக்கிற இரசாயன மருந்துகளைப் பயன்படுத்தி அறவே இவற்றை ஒழிப்பதற்கான முன் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்திலே நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன். இந்த ஆக்கிரமிப்புகள் அகற்றப்படவில்லை என்றால், வருடா வருடம் கரைகள் உடைப்பு ஏற்பட்டு, மிகப்பெரிய வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு, பல கோடிக்கணக்கான ரூபாய் நஷ்டம் ஏற்படுவதற்கான சூழ்நிலை இருக்கிறது. ஆகவே, இவற்றையெல்லாம் கவனத்தில் கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, அணைகள் கட்டுவதற்காக பல்வேறு திட்டங்கள் அறிவிக்கப்பட்டிருப்பது மகிழ்ச்சிக்குரிய ஒன்று. இந்த அணை கட்டும் திட்டங்களை நிறைவேற்றுகிறபோது, இந்த அணைக்கட்டுக்களின் கொள்ளளவுகள் குறைந்துவிடாமல் பாதுகாப்பதற்கான முயற்சிகளை

மேற்கொள்வதோடு-அணையினுடைய உயரம் பற்றி இப்போது பிரச்சினைகள் ஏற்பட்டிருக்கின்றன. அந்தப பிரச்சினைகளில் தீர்வு காண்பதற்காக நம்முடைய மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்கள் பேச்சுவார்த்தை மூலமாக உரிய முன்முயற்சிகளை எடுக்கிறார்கள். புதிதாக அணைகளைக் கட்டுகிறபோது, தேவையான நிலங்களை ஆர்ஜிதம் செய்கிறபோது தனியார் நில முதலாளிகள் அவற்றில் தலையிட்டு, அதில் தீர்வு காணவிடாமல் தடுப்பதற்குரிய முயற்சிகளை மேற்கொள்வார்கள். அதிலே எச்சரிக்கைத் தன்மையோடு இருந்து புதிய அணைகளை உருவாக்குவதற்கு உரிய முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

நிலத்தடி நீர் கணிசமான அளவிற்குக் குறைந்துவிட்டது என்று சொல்லப்படுகிறது. அதற்குரிய தனியான ஒரு திட்டத்தைத் தயாரித்து நிலத்தடி நீரை மேம்பாடு செய்வதற்கு உரிய முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக்கொள்வதோடு கங்கை-காவிரி-தாமிரபரணி இணைப்பு மற்றும் மகாநதி-காவிரி இணைப்பு இப்படிப்பட்ட தேசிய திட்டங்களை நிறைவேற்றுவதற்கான முன்முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்று மத்திய அரசாங்கத்திடம் நம்முடைய மாநில அரசாங்கம் வலியுறுத்திச் சொல்ல வேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

நடுவர் மன்றத்தில் ஐந்து ஆண்டுகளுக்குள்ளாகத் தீர்ப்பு வழங்கப்பட வேண்டும், ஐந்து ஆண்டுகளுக்குள்ளாக வழங்கப்பட்டிருக்கிற தீர்ப்புகள் நிறைவேற்றப்பெற வேண்டும் என்று சர்க்காரியா கமிஷன் கூறுகிறது ஆனால், தீர்ப்புகள் நிறைவேற்றப்படவில்லை, அதை நிறைவேற்றுவதற்குரிய முயற்சிகளை எடுக்க வேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்திலே நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு, நம்முடைய திருப்பூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு. கே. சுப்பராயன் அவர்களும், பெருந்துறை திரு. பெரியசாமி அவர்களும் ஒரு கோரிக்கை மனுவினை நம்முடைய மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சரிடத்திலே அளித்திருக்கிறார்கள். கோவை பெரியார் மாவட்டங்கள், ஆறு சட்டமன்றத் தொகுதிக்குட்பட்டு ஒன்பது ஊராட்சி ஒன்றியங்கள் பயன்படுகின்ற வகையிலே அவ்வட்டாரத்திலேயுள்ள நீர் மட்டத்தை உயர்த்திப் பராமரிப்பதற்குரிய வகையிலே ஆய்வுகள் செய்யப்பட்டு, ஒரு திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளதாகத் தகவல்களை நம்முடைய அமைச்சர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். ஆகவே அந்த அவிநாசித் திட்டத்தை உடனடியாக



நிறைவேற்றுவதற்குரிய முயற்சிகளை ஏற்படுத்தினால், 50 குளங்கள், மற்றும் 200 குட்டைகளுக்கு, நீர் நிரப்புவதற்கான வாய்ப்புகள் ஏற்படும். இதிலே குறிப்பாக 134 கோடி ரூபாய்க்குத் திட்ட மதிப்பீடு தயார் செய்யப்பட்டு நிறைவேற்றுவதற்குரிய முயற்சிகள் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. இந்த நிதியாண்டிலேயே அவற்றை நிறைவேற்றுவதற்கு உரிய முயற்சிகளை எடுக்க வேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்திலே பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

ஒன்றேயொன்று, குறிப்பாக என்னுடைய மன்னார்குடி சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட சுந்தரக்கோட்டை, அபேசம் கட்டேரி வாய்க்காலிலே பாசன மேலேற்று இறவைப் பாசனத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டும் என்ற கோரிக்கை நம்முடைய அமைச்சர் பெருமக்களிடத்திலே வைக்கப்பட்டிருக்கிறது. அதனை நிறைவேற்றுவதற்கான முயற்சிகளை மேற்கொண்டு, அந்தப் பகுதியிலே ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்கள் பாசனம் பெற்று, விவசாயத்தைச் செழுமையடையச் செய்வதற்கு வாய்ப்பு இருக்கிறது. அவற்றை நிறைவேற்றித் தர வேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி முடிக்கிறேன். வணக்கம்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. செ. இராமலிங்கம்):** அடுத்து, திரு. கே. வேணு.

பிற்பகல் 12-40

**திரு. கே. வேணு:** மாண்புமிகு சட்டப்பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, கோரிக்கை எண் 35, 36, 55 மற்றும் 56 ஆகிய மானியக் கோரிக்கைகளின் மீது என்னுடைய எண்ணங்கள் சிலவற்றை இம்மாமன்றத்தில் வைப்பதற்கு வாய்ப்பளித்த மாற்றுத் தலைவர் அவர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். 'தமிழகத்திலேயே கும்மிடிப்பூண்டியில் மட்டும்தான் கூட்டுறவு சர்க்கரை ஆலை நிறுவப்படும்' என அறிவித்த மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கு கும்மிடிப்பூண்டி தொகுதி மக்கள் சார்பிலே என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பொதுப்பணித் துறை சம்பந்தமான கொள்கை விளக்கக் குறிப்பில், பல அணைக்கட்டுகளுக்குத் தேவையான நீர்ப்பாசன வசதிகள் பற்றியெல்லாம் நம்முடைய மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள் மிகத் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். அவர்களை எனது நெஞ்சார, உளமாரப் பாராட்டுகின்ற அதே நேரத்தில்,

கடந்த 29-9-1996 அன்று, எனது தொகுதியிலிருந்து ஆரம்பமாகி சென்னைக்கு வரக்கூடிய கிருஷ்ணா நதிநீரை ஆந்திர முதலமைச்சர் அவர்கள் வழங்க, நமது முதலமைச்சர் அவர்கள் பெறுகின்ற நிகழ்ச்சி எனது தொகுதியில் நடைபெற்றது. அதனையடுத்து, சென்னையில் நடைபெற்ற விழாவில், இந்த அரசு வந்தபிறகு, கிருஷ்ணா நதிநீர் சென்னைக்கு வரவேண்டுமென்பதற்காக அல்லும் பகலும் அயராது பாடுபட்டு, ஆந்திர முதலமைச்சரோடும், நமது முதலமைச்சரோடும் கலந்து பேசிய மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களை வைத்துக் கொண்டு நமது மாண்புமிகு முதல்வர் அவர்கள் அந்த விழாவில் ஒரு கருத்தைச் சொன்னார்கள் "இந்த விழாவிற்குக் காரணமாக இருந்து மறைந்த முன்னாள் பிரதமர் இந்திரா காந்தி, மறைந்த ஆந்திர முன்னாள் முதல்வர் என்.டி. ராமாராவ், மறைந்த தமிழக முன்னாள் முதல்வர் எம்.ஜி.ஆர். மறைந்த முன்னாள் கவர்னர் சென்னாரெட்டி மற்றும் தற்போதைய ஆந்திர முதல்வர் சந்திரபாபு நாயுடு ஆகியோருடைய பெயர்கள் எல்லாம் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்படவேண்டும். அதற்காகக் கண் துஞ்சாது சுற்றிப் பணியாற்றுகின்ற எனது தம்பி துரைமுருகன் பெயரும் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்படவேண்டும்" என்று சொன்னார்கள். அப்படி அவர்கள் பாராட்டிச் சொன்ன பிறகு, வேறெதுவும் சொல்லவேண்டியதில்லை என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நமது மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் பொறுப்பு ஏற்றுக்கொண்ட பிறகு, அனைத்து அணைக்கட்டுகள், ஏரிகள் ஆகியவற்றை நேரில் சென்று பார்த்து அவைகளுக்கு வேண்டிய வசதிகளைச் செய்து கொடுத்ததற்காக, அவருடைய அறிவாற்றலைப் பற்றி இம்மாமன்றம் நன்றாக அறியும். அவர்கள், இளநிலைப் பொறியாளர் முதல் தலைமைப் பொறியாளர் வரை அவர்களின் பெயர்களைச் சொல்லி அழைத்து பணி செய்ய வைத்ததையும் நாம் நன்கு அறிவோம். குறிப்பாகச் சொல்லவேண்டுமானால், பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் ஒரு சூப்பர் கம்ப்யூட்டர் ஆவார்கள்.

முன்னாள் முதல்வருக்குத்தான் தண்ணீர் ராசி உண்டு என்று சொன்னார்கள். ஆனால் அவருக்கு என்ன ராசி இருக்கின்றதோ அது எனக்குத் தெரியாது. நமது தமிழக முதல்வர் அவர்களுக்கும், பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களுக்கும் அந்த ராசி உண்டு என்கிற காரணத்தால் தான், இந்தக் கோடைக் காலத்திலும் 6½ டி.எம்.சி. தண்ணீர் சோழவரம், பூண்டி, புழல் ஏரிகளில் உள்ளது என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.



பாண்டியாறு-புன்னம்புழா 1965-ஆம் ஆண்டு உடன்பாட்டின்படி, அறிவுரைக்கேற்ப, திட்டம் பற்றி மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய அறிவுரைக்கேற்ப, நம்முடைய பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கேரள பொதுப் பணித் துறை அமைச்சர் பேபி ஜான் அவர்களோடு கலந்து பேசி, செத்துப்போன திட்டமாக இருந்ததை மாற்றி அதற்காக உரிய நடவடிக்கைகளை எடுத்து வருவது மகிழ்ச்சிக்குரியது என்பதை நான் இம்மாமன்றத்திற்குத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதுபோன்று எம்.ஜி.ஆர். மாவட்டம் செங்குன்றம் மேல்நிலைப் பள்ளிக்கும், பொதுப் பணித் துறைக்கும் இடையே கடந்த ஐந்தாண்டுகளாக இருந்த பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி வைத்ததற்காக மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களுக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மணியடிக்கப்பெற்றது) ஒரு நிமிடத்தில் பேசி முடித்துவிடுகிறேன்.

எனது தொகுதியில் ஊத்துக்கோட்டை, கும்மிடிப்பூண்டி ஆகிய இடங்களில் பல ஏரிகள் கடந்த மழையினால் சேதமடைந்தன. உடனடியாக நம்முடைய மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களும், பொதுப் பணித் துறை அதிகாரிகளும் உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு சிறப்பாகச் செய்திருக்கிறார்கள். இனி அதுபோன்ற சேதம் ஏற்படாமலிருக்க நிரந்தரத் தீர்வு காண வேண்டுமென்று இந்த நேரத்தில் வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன். மேலும், என்னுடைய தொகுதியில் அங்கப்ப நாயக்கன் அணைக்கட்டும் பெருமழையினால் சேதமடைந்தது. நம்முடைய அமைச்சர் அவர்களும், அதிகாரிகளும் உடனே தலையிட்டு, 6 கோடி ரூபாய் செலவில் அந்தச் சேதத்திலிருந்து அணையைக் காப்பாற்றியிருக்கிறார்கள். ஆனாலும் அது போதாது. நிரந்தரமாக அந்த அணையைப் புதுப்பித்துத் தரவேண்டுமென்றும், அந்த அணையிலிருந்து செல்லக்கூடிய வாய்க்காலை சீராக வெட்டிவிட வேண்டுமென்றும் இந்த நேரத்தில் வேண்டி விரும்பி கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதுபோன்று, கிருஷ்ணா நதிநீரைத் தேக்கி வைக்கவேண்டும் என்பதற்காக திருத்தண்டலம், இராமாஞ்சேரி போன்ற பகுதிகளில் உள்ள மக்களை அணுகியபோது, அவர்கள் எதிர்ப்புத் தெரிவித்தார்கள். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதில் தலையிட்டு நேரில் சென்று பார்த்து உரிய நடவடிக்கைகளை எடுக்கவேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-45.

பூண்டி நீர்த்தேக்கத்திலுள்ள நீரியல் நிலநீர் இயக்க ஆய்வுக் கழகம் 1945-ஆம் ஆண்டு டி.பி. குட்டியம்பு என்பவரால் ஆரம்பிக்கப்பட்டு சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது. கழகம் ஆரம்பிக்கப்பட்டு 25 ஆண்டுகள் முடிந்த பிறகு வெள்ளி விழா கொண்டாடப்பட்டது. 50 ஆண்டுகள் முடிந்த பிறகும் கடந்த ஆட்சியாளர்களால் பொன் விழா கொண்டாடப்படவில்லை. தற்போது 51 ஆண்டுகள் ஆகிவிட்டன. தற்போது இத்திட்டத்தின்கீழ் ரூ.52.2 இலட்சத்தை ஒதுக்கியுள்ளீர்கள். அந்தத் தொகை போதாது. ஆகவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த ஆண்டு பொன் விழாவைக் கொண்டாட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. செ. இராமலிங்கம்):** பேச்சை முடித்துக்கொள்ளுங்கள்.

**திரு. கே. வேணு:** ஒரு நிமிடத்தில் பேசி முடித்து விடுகிறேன். வீணாகச் செல்கின்ற பாலாற்றுத் தண்ணீரைத் தேக்கிவைக்க அங்கே ஒரு அணையைக் கட்ட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கடல் அரிப்பு உள்ள எனது பகுதியான திருவொற்றியூர் பகுதியிலே நிரந்தரமான தடுப்புகளைச் செய்து தரவேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். என்னுடைய தொகுதியிலே உள்ள ஏரிகளில் தூர் வாரி, கால்வாய்களைச் சுத்தம் செய்து புதிதாக தேர்வாய் அருகிலே ஒரு அணையைக் கட்டித்தர வேண்டுமென்று கேட்டுக்கொண்டு வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். வணக்கம்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. செ. இராமலிங்கம்):** திரு. ஜி. நிஜாமுதீன்.

**திரு. ஜி. நிஜாமுதீன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, பாசனம், பொதுப் பணிகள்—கட்டிடங்கள், பாசனம் குறித்த மூலதனச் செலவு மற்றும் பொதுப் பணிகள்—கட்டிடங்கள் குறித்த மூலதனச் செலவு ஆகிய மானியக் கோரிக்கைகளை வரவேற்று எனது கருத்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன். நாகையிலே காவிரி சீரமைப்பு உட்கோட்டம் எண் 3 கடந்த 15 ஆண்டுகளாக இயங்கி வருகிறது. அதை தற்போது வேறு ஊருக்கு மாற்றம் செய்வதாக வதந்திகள் வந்தவண்ணம் இருக்கின்றன. அப்படிப்பட்ட ஒரு முடிவை அமைச்சர் அவர்கள் எடுக்க மாட்டார்கள் என்று நாகைத் தொகுதி மக்கள் நம்புகின்றனர். அதை உறுதியாக்கும் வண்ணம் அந்தக் காவிரி சீரமைப்பு உட்கோட்டத்தை



பெயா மாற்றம் செய்து தர நிரந்தரமாக வடிகால் உட்கோட்டமாக, வேண்டுமென அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

பிடபிள்யூடி நாகை மாவட்டம் பிரிந்து 6 ஆண்டுகள் ஆகியும், பொதுப் பணித் காவிரி சீரமைப்பு வெண்ணாறு டிவிஷனும் மற்றும் தஞ்சாவூரிலேயே துறை கட்டிடப் பிரிவு மாவட்ட அலுவலகங்களும் மாவட்டத்தில் இயங்கி வருகின்றன. அதையும் நாகை காயிதே மில்லத் அவர்களை அமைத்துத் தர வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் உங்கள் மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன்.

உப்பங்காற்றினால் நாகை, கடற்கரை மாவட்டமாக இருப்பதால் மிகவும் பள்ளிக் கட்டிடங்களும், மருத்துவமனைக் கட்டிடங்களும் பள்ளி பாதிக்கப்பட்டு, மழைக் காலங்களில் நோயாளிகளும், இந்த நிலையிலே மாணவர்களும் தங்க முடியாத சூழ்நிலை இருக்கிறது. சேதம் கடந்த வெள்ளத்தால் அந்தக் கட்டிடங்கள் மிகவும் அவர்கள் அடைந்திருக்கின்றன. இதை மாண்புமிகு அமைச்சர் ஒதுக்கிட கவனத்தில் கொண்டு அவற்றைச் சீரமைக்கக் கூடுதல் நிதி வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

சட்டமன்ற உறுப்பினர் விடுதி மிகவும் மோசமான நிலையில் இருக்கிறது. அங்கே குளியலறைக்குச் சென்றால் மேலிருந்து தண்ணீர் சொட்டிக் கொண்டிருக்கிறது. சட்டமன்ற உறுப்பினர்கள் தங்க முடியாத நிலையில் விடுதி உள்ளதை அமைச்சர் அறிவார்கள் என்று நான் நம்புகிறேன். அவற்றை சீரமைத்துத் தர அமைச்சர் அவர்கள் ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நாகப்பட்டினம் தாலுகா, கீழையூர் ஒன்றியம், கிரனேரியைச் சீர்செய்து தூர்வாரி அந்தப் பகுதி மக்களுக்கு பாசன வசதியைச் செய்து தர வேண்டுமாய் அன்போடு கேட்டுக்கொள்கிறேன். வாய்க்கால்களிலும், ஆறுகளிலும் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றி ஆறு மற்றும் வாய்க்கால் கரைகளில் சிமெண்ட் சருக்குகள் ஏற்படுத்தினால் தண்ணீர் சேதத்தினைத் தடுத்து, அதன் மூலம் தண்ணீரை மிச்சப்படுத்தி, வெள்ளக்காலங்களில் தண்ணீரால் ஏற்படும் சேதத்தினைத் தடுத்து நிறுத்தும் நடவடிக்கையாக அது அமையும். ஆகவே ஆற்றின் கரைகளில் மற்றும் வாய்க்கால் கரைகளில் சிமெண்ட் சருக்குகளை ஏற்படுத்தித் தர வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன்.

நாகை, நாகூர் மருத்துவமனைகளில் மின் இணைப்பு மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ளதால், மின்சார வசதி இல்லாமல் நோயாளிகள் மிகவும் அவதிப்படுகிறார்கள். ஆகவே, புதிய மின் இணைப்புகளை அங்கே ஏற்படுத்தித்தர வேண்டுமென்று தங்களைக் கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) இப்போதுதான் பேச ஆரம்பித்தேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. செ. இராமலிங்கம்):** ஒவ்வொரு உறுப்பினருக்கும் பேசுவதற்கு 5 நிமிடத்திற்கு மேல் கிடையாது.

**திரு. ஜி. நிஜாமுதீன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் ஒவ்வொரு உறுப்பினருக்கும் 10 நிமிடம் என்று கூறியுள்ளார்கள்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. செ. இராமலிங்கம்):** மாண்புமிகு அமைச்சர் தன்னுடைய பதிலை 1.00 மணிக்காவது துவங்க வேண்டும்.

**திரு. ஜி. நிஜாமுதீன்:** நாகை ஆய்வு மாளிகை விரிவுபடுத்தப்பட வேண்டும். நாகை ஆய்வு மாளிகையில் இரண்டு அறைகள்தான் இருக்கின்றன. நாகை ஒரு சுற்றுலாத் தலமாக இருப்பதால், அரசு அலுவலர்களும் மற்றும் ஏனைய முக்கியஸ்தர்களும் அடிக்கடி வந்து செல்கின்ற ஊராக இருப்பதால், அந்த ஆய்வு இல்லத்தை விரிவுபடுத்தி, பல அறைகள் கொண்ட ஆய்வு இல்லமாக மாற்றித் தர வேண்டுமென்று உங்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன். கடற்கரையில், ஆற்று முகத்துவாரத்தில், உப்பு நீர் உள்ளே புகுந்து அந்தப் பகுதி உப்பங்கழியாக மாறிவிடுகின்றது. ஆகவே, ஆற்று முகத்துவாரத்தில், கடலுக்குச் சற்று முன்பாக, தடுப்புச் சுவர்களை ஏற்படுத்தி, கடல் நீர் உள்ளே புகாதவண்ணம் ஏற்படுத்தித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-50

கடலில் சென்று விழும் மழைத் தண்ணீரைச் சேமிக்க வேண்டியதன் அவசியத்தை நாம் உணர்ந்தவர்களாக இருக்கின்றோம். ஏனென்றால், காவிரி ஆற்றில் வரும் தண்ணீர் மிகவும் குறைந்த வண்ணம் இருக்கிறது. ஆகவே, வீணாகும் மழை நீரைத் தேக்குவதற்கு இந்த அரசு நல்லதொரு திட்டத்தைத் தீட்ட வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) வேதாரண்யம் கால்வாய் மிகவும் தூர்ந்த நிலையில் உள்ளது. அது முக்கியமான கால்வாய் ஆகும். அக்கால்வாயில் தூர் வாருவதற்கு இந்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



நாகையில் சுற்றுலா மாளிகை கட்டுவதற்கு ரூ. 46 இலட்சம் அளவிற்கு மதிப்பீடு செய்து, அதற்கு இந்த ஆண்டு ரூ. 15 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. அதற்கும் நான் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலக வளாகம் கட்டுவதற்கு சுமார் 2½ கோடி ரூபாய்க்கு இந்த நிதிநிலை அறிக்கையில் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதற்கும் என் தொகுதி மக்கள் சார்பாக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. செ. இராமலிங்கம்):** அடுத்து, திரு. என். பெரியசாமி.

**திரு. ஜி. நிஜாமுதீன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, ஒரேயொரு நிமிடத்தில் பேசி முடித்து விடுகிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. செ. இராமலிங்கம்):** ஒரு நிமிடத்தில் பேசி முடித்து விடுங்கள்.

**திரு. ஜி. நிஜாமுதீன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, நாகை காயிதே மில்லத் மாவட்டம் கடைமடைப் பகுதியாக இருப்பதால், குறுவைப் பயிருக்கு மேட்டூர் அணையிலிருந்து தண்ணீர் திறந்துவிட்டால், தண்ணீர் கடைமடைப் பகுதிக்கு வந்து சேர்வதற்கு 10 நாட்கள் ஆகிவிடுகின்றது. அப்படி தண்ணீர் திறந்து விடுகின்ற நேரங்களில் மற்றப் பகுதிகளுக்குத் தண்ணீர் திறந்துவிடக் கூடாது என்று அரசு ஆணை உள்ளதாகவும் அறிகிறேன் அந்த ஆணையைச் செயல்படுத்தி, கடைமடைப் பகுதிக்குத் தண்ணீர் வந்து சேரும் வரை மற்ற பகுதிகளுக்குத் தண்ணீர் திறந்துவிடாத அளவிற்கு ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோல, மேட்டூர் அணையைத் திறப்பதும், மூடுவதும்....

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. செ. இராமலிங்கம்):** அடுத்து, திரு. என். பெரியசாமி.

***திரு. என். பெரியசாமி:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, நான் இந்த மாமன்றத்திலே பேசுவதற்கான வாய்ப்பினை உருவாக்கிக் கொடுத்த தமிழக முதல்வர், தலைவர் கலைஞர் அவர்களுக்கு முதற்கண் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். சிதம்பரனார் மாவட்டத்தில், கடையநல்லூர் கால்வாய்த் திட்டத்திற்கு ரூ. 15 கோடிக்கு மேல் ஒதுக்கியுள்ள மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

எனது தொகுதியான தூத்துக்குடியில் கப்பல் பயிற்சி நிலையம் அமைத்துக் கொடுத்த போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களுக்கும், தலைவர் கலைஞர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் எங்கள் மாவட்டத்திற்கு இரண்டு, மூன்று முறை வந்து சுற்றிப் பார்த்துவிட்டுச் சென்றிருக்கிறார்கள். நான் அவர்களுக்கு ஒருசில கருத்துக்களைச் சொல்லக் கடமைபபட்டிருக்கிறேன். அவர்களுக்குத் தெரியாத கருத்துக்கள் ஏதுமில்லை. இருந்தாலும், ஆலோசனையாகச் செல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஸ்ரீவைகுண்டம் பாலத்திற்குக் கிழக்கில், கடலில் போய்ச் சேரக்கூடிய தண்ணீரைச் சேமிப்பதற்கு, ஸ்ரீவைகுண்டம் பாலத்திற்கும், ஆத்தூர் பாலத்திற்கும், இடையில் ஒரு அணை கட்டினால், கடம்பாகுளம் பகுதியில் இருக்கின்ற பாசனப் பகுதிகளுக்கும், திருச்செந்தூர் பகுதியில் இருக்கின்ற பாசனப் பகுதிகளுக்கும் தண்ணீர் கிடைப்பதுடன், அங்குள்ள மக்களுடைய குடிநீர்ப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கும் உதவியாக இருக்கும். தூத்துக்குடி பகுதியில் தொழிற்சாலைகள் பெருகிக் கொண்டே செல்கின்றன. எனவே, இங்குள்ள சிப்காட் போன்ற தொழிற்சாலைகளுக்குத் தேவையான தண்ணீர் வழங்குவதற்கும், அங்குள்ள மக்களுக்குத் தேவையான குடிநீர் வழங்குவதற்கும் எளிதாக இருக்கும். அதேபோல, தூத்துக்குடி தொகுதிக்குட்பட்ட விவசாயப் பெருமக்களுக்குத் தேவையான தண்ணீரை வழங்குவதற்கு எளிதாக இருக்கும். எனவே, இந்த இடத்தில் ஒரு அணை கட்டி, வீணாகின்ற தண்ணீரைத் தேக்கி வைப்பதற்கு அரசு ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அவ்வாறு அணை கட்டுவதன் மூலம், எல்லா வகைகளிலும் வசதியாக இருப்பதோடு, ஏறத்தாழ 4 தொகுதிகளிலுள்ள மக்களுக்கு வாய்ப்பாக இருக்கும். அதேபோன்று, புதிதாகக் கட்டவிருக்கின்ற கடையநல்லூர் கால்வாய்க்கும் இங்கிருந்து தண்ணீர் கொண்டு போவதற்கு வசதியாக இருக்கும். இங்குள்ள நான்கு தொகுதிகளான சாத்தான்குளம், திருச்செந்தூர், ஸ்ரீவைகுண்டம், தூத்துக்குடி ஆகிய பகுதிகளிலுள்ள மக்களுக்கு தண்ணீர் பஞ்சம் இல்லை என்று சொல்லக்கூடிய அளவிற்கு, இந்த அணையினால் பயனடையக்கூடிய விதத்தில் வாய்ப்பாக இருக்கும். ஆகவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்திலும், பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களிடத்திலும் இந்த இடத்தில் அணை கட்டித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, தூத்துக்குடியின் மத்தியில் ஓடிக்கொண்டிருக்கின்ற பக்கிள் ஓடையைச் சீரமைத்திட வேண்டுமென்று 1989-ஆம் ஆண்டே நான்



கேட்டிருக்கிறேன் இதனைச் சீரமைத்திட மதிப்பீடுகளெல்லாம் தயார் செய்யப்பட்டு, கோப்பு மதுரையிலே இருப்பதாகத் தெரிகிறது. எனவே, தூத்துக்குடியின் மத்தியிலே அவல நிலையில் ஓடிக்கொண்டிருக்கின்ற பக்கிள் ஓடையை தயவு செய்து எப்படியாவது சீரமைத்துத் தரவேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களை நான் பணிவன்போடு கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தூத்துக்குடி நகர மக்கள் குடிப்பதற்கு நல்ல தண்ணீர் கிடைப்பதில்லை. அவர்களுடைய கிணறுகளில் உப்புத் தண்ணீர்தான் கிடைக்கின்றது. இங்கே உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் இருக்கிறார்கள். அவர்கள் 1989-ஆம் ஆண்டு அமைச்சராக இருந்தபோதே நாங்கள் மனு கொடுத்திருக்கிறோம். இப்போதும் கொடுத்திருக்கின்றோம். வல்லநாட்டிலேயிருந்து மூன்றாவது பைப் லைன், தனி லைன் போட்டு தண்ணீர் கொண்டுவருவதற்கு நாங்கள் மனு கொடுத்திருந்தோம். அதன்படி, அதற்கான மதிப்பீடுகளெல்லாம் தயார் செய்யப்பட்டு கோப்பு தற்சமயம் மதுரையிலே இருக்கின்றது. ஆகவே, அதற்கு மூன்றாம் லைன் போட்டு, தண்ணீர் கொண்டு வருவதற்குள்ள வாய்ப்பைத் தேட வேண்டுமென்றும், அதற்கும் பணம் ஒதுக்க வேண்டுமென்றும் நான் பணிவன்போடு கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 12-55

கடம்பாகுளம் கால்வாய்ப் பணிகள் இடையிலே நின்றுவிட்டன. அந்தப் பணிகளையும், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் துரிதமாகத் தொடங்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும், அதேபோல், பேரூருக்கும் அந்தப் பணியை உடனடியாகச் செய்து தரவேண்டுமென்றும் நான் பணிவன்போடு கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)**

இங்கே மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் அமர்ந்திருக்கிறார். அவர்களுக்கு நான் பணிவான, அன்பான ஒரு கோரிக்கையை வைக்க கடமைப்பட்டிருக்கிறேன். எங்கள் தூத்துக்குடி நகரத்தில், மிகப்பெரிய எல்லா வசதிகளையும் கொண்ட, தலைமையிட மருத்துவமனை இருக்கிறது. 554 படுக்கைகள் அதிலே இருக்கின்றன. அவற்றிற்கு முறையாக 54 டாக்டர்கள் இருக்க வேண்டும். ஆனால். இப்போது டாக்டர்கள் 30 பேர்தான் டியூட்டியிலே இருந்து கொண்டிருக்கிறார்கள். அங்கே ஏழையெளிய மக்கள் அடிக்கடி வந்து

தங்கள் உடல்நலத்தைப் பார்க்க வேண்டியிருக்கிறது. ஆகவே தயவுசெய்து உடனடியாக தூத்துக்குடி தலைமையிட மருத்துவமனையில், கூடுதலாக டாக்டர்கள் நியமனம் செய்யப்பட வேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக் கொண்டு, இந்த வாய்ப்பைக் கொடுத்தமைக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி. கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று இந்தப் பொதுப் பணித் துறை மானியக் கோரிக்கையிலே, பேச வாய்ப்பளித்த தங்களுக்கு என் மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொண்டு, பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலும், எங்களை வழிநடத்திச் செல்லக்கூடிய மக்கள் காவலர், டாக்டர் இராமதாஸ் ஐயா அவர்களின் சார்பிலேயும், என்னுடைய தொகுதி மக்கள் சார்பிலேயும், இந்தப் பொதுப் பணித் துறை மானியக் கோரிக்கையை வரவேற்று, ஒரு சில கோரிக்கைகளை மட்டும் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

இங்கே பொதுப் பணித் துறையைப் பற்றி, அதிலும் குறிப்பாக பாசனத்தைப் பற்றிப் பேசுகின்ற நேரத்திலே, வள்ளுவர் அழகாகச் சொல்லுகிறார்: "நீரின்றி அமையாது உலகு" என்று சொல்கிறார்: இப்படிப்பட்ட உலகப் பொதுமறையான திருக்குறளிலே இரண்டாவது அதிகாரத்தைப் பெறக்கூடியது, மழை நீர் மற்றும் பாசனம் என்று சொல்கிற அதே நேரத்திலே, சிலப்பதிகாரத்திலேகூட, "திங்களைப் போற்றுதும், ஞாயிறு போற்றுதும், மாமழை போற்றுதும்" என்று அழகாகச் சொல்லப்படுகிறது. ஆகவே, ஒரு நாடு எவ்வளவுதான், எந்தத் துறையிலே உயர்ந்தாலும்கூட, அந்த நாடு உன்னத நிலையை அடைய வேண்டும்; உயர்வடைய வேண்டும் என்று சொன்னால், அது பாசன வசதி உடையதாக இருக்க வேண்டும். அந்தப் பாசனத்தை ஒட்டியிருக்கக்கூடியது வேளாண்மை. பாசனமும், வேளாண்மையும் சிறந்து ஓங்குகிற நாடு சிறந்த நாடு. இது சங்க காலம் தொட்டு இன்றுவரையிலேயும் சொல்லப்பட்டு வருகிற கருத்து என்பதை நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், நம்மைப் போன்றவர்களை விட மிக நன்றாக அறிவார்கள்.

"வரப்புயர நீர் உயரும்; நீர் உயர நெல் உயரும்; நெல் உயரக் குடி உயரும்; குடி உயரக் கோல் உயரும்; கோல் உயரக் கோன் உயர்வான்" என்றும் அழகாகச் சொல்லப்படுகிறது. மாண்புமிகு நம்முடைய தமிழக முதலமைச்சர் அவர்களுடைய ஆட்சி, நிச்சயமாக ஒரு நல்ல ஆட்சி



என்று மக்கள் மத்தியிலே போற்றக்கூடிய நிலை இந்த நாட்டிலே உருவாக்கப்பட வேண்டுமென்று சொன்னால், இந்த நாட்டிலே நீர் ஆதாரங்களை மேம்படுத்த வேண்டும். அந்த அளவிலே, நம்முடைய பொதுப் பணித் துறைக்குப் பொறுப்பேற்றிருக்கிற மாண்புமிகு அமைச்சர் பெருமான் அவர்கள், இந்தத் துறையைப் பற்றி மிக நன்றாக அறிந்தவர். எந்த நேரத்திலே, மாண்புமிகு உறுப்பினர்கள் கேள்வி கேட்டாலும், எந்தப் பகுதியிலே, எந்த நீர் ஆதாரத்தைப் பற்றிக் கேட்டாலும், உடனே சிறந்த முறையில் சொல்லக்கூடிய அளவிலே, தன்னுடைய துறையை நிர்வகித்து வருகிறார்கள் என்று அவரை நான் பாராட்டிச் சொல்வது மிகையாகாது. மேலும், அவரைப் பற்றிச் சொல்கிற நேரத்திலே, "இந்தப் பொதுப் பணித் துறை நமக்கு என்ன செய்கிறது என்று சொல்வதைவிட, இந்தத் துறைக்கும், இந்தத் துறையைச் சார்ந்த தமிழ்நாட்டு மக்களுக்கும் நான் என்ன செய்து கொண்டிருக்கிறேன்; என்ன செய்யப் போகிறேன்" என்பதை உணர்ந்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் செயலாற்றிக் கொண்டிருக்கிறார்கள் என்பதை நான் இந்த நேரத்திலே பெருமையாகச் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்றையதினம், பாசனமும், வேளாண்மையும், ஈருடல் ஓருயிராக இருந்து கொண்டிருக்கிறது. அந்த வகையிலே, இந்தத் துறையை வழி நடத்திச் செல்லக்கூடிய, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அன்பான தலைமையின் கீழ் இருக்கக்கூடிய மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களை நான் கேட்டுக் கொள்வதெல்லாம், இந்த நாட்டிலே நீர்வள ஆதாரங்களை மையமாக வைத்து, நான்கு மண்டலங்களாக பிரிக்கப்பட்டிருக்கிறது. அந்த நான்கு மண்டலங்கள் என்று சொல்லப்படுபவை, பொள்ளாச்சி, மதுரை, திருச்சி மற்றும் சென்னை. இங்கே, தமிழ்நாட்டின் தலைநகரமான சென்னையிலே ஒரு மண்டலமும், மற்ற 3 மண்டலங்களும் தென் மாவட்டங்களில் இருக்கின்றன. ஆனால், இதைப் பார்க்கிறபோது, பெரியார், சேலம், தர்மபுரி மேலும் அம்பேத்கர், சம்புவராயர் போன்ற மாவட்டங்கள் எல்லாம் புறக்கணிக்கப்படுகிறதா; ஏன் அங்கு நீர்வள மண்டலங்கள் அமைக்கப்படவில்லை என்பது ஒரு கேள்விக்குறியாக இருக்கிறது என்பதை இந்த நேரத்திலே நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 1-00

அங்கே மேட்டூர் அணை, சாத்தனூர் அணை, கிருஷ்ணகிரி அணை, பாலாறு போன்ற வரலாற்று சிறப்பு வாய்ந்த ஆறுகளும், அணைகளும்,

வட மாவட்டங்களில் இருக்கின்றன. இதைப்போன்ற அணைக்கட்டுகளை உருவாக்க வேண்டிய அளவுக்கு நீர்வள ஆதாரங்கள் ஏராளமாக இருக்கின்றன. ஆகவே, நீராதாரத்தை மேம்பாடு செய்வதற்காக மாண்புமிகு முதல்வர் அவர்கள் தலைமையில் இருக்கக்கூடிய இந்த ஆட்சிக் காலத்திலே வட மாவட்டங்களில் ஒரு மண்டலத்தை அதாவது 5-வது மண்டலத்தை உருவாக்கித் தரவேண்டுமென்று இந்த நேரத்தில் நான் பணிவோடு கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : சிக்கிரம் பேசி முடியுங்கள்.

**திரு. ஜி. கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கங்கை-காவிரி திட்டத்தை நிச்சயமாக நிறைவேற்றியாக வேண்டும். இந்த நாடு மக்கள் தொகை அடிப்படையிலே பெருகிக் கொண்டிருக்கிற இந்தக் கால கட்டத்திலே உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்காக கங்கை-காவிரியை இணைப்பதும், அதேபோன்று கேரளாவில் இருக்கக்கூடிய மேற்கு நோக்கி சென்று கடலிலே உவர்நீராக கலக்கக்கூடிய அந்த ஆறுகளை தமிழ்நாட்டுக்குப் பயன்படக்கூடிய வகையிலே திருப்பி விடுவதும் நமது தலையாய கடமை. ஆகவே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எப்பாடுபட்டாவது அந்தத் திட்டத்தை நிறைவேற்றித் தரவேண்டும் என்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

எனது தொகுதியைப் பொறுத்தவரையில் காமராஜர் காலம் தொட்டு இன்று வரையிலே இருக்கக்கூடிய மத்தளப்பள்ளம் அணைக்கட்டு திட்டத்தை நிச்சயமாக நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பஞ்சப்பள்ளி அணையினுடைய வாய்க்கால் தருமபுரி மாவட்டத்தினுடைய பாப்பாரப்பட்டி அருகிலே வருகிறது. அந்த வாய்க்காலை 3 கி.மீ., 4 கி.மீ. நீட்டித்தால் ஏறக்குறைய 16 ஏரிகளை இணைப்பதற்கு அது வாய்ப்பாக இருக்கும். அனைத்து நீரூற்றுகளையும் இணைப்பதற்கு வாய்ப்பாக இருக்கக்கூடிய வகையிலே அந்தப் பணியை நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஒகேனக்கல் பகுதியில் பொதுப் பணித் துறையின் சார்பில் அழகுவாய்ந்த ஒரு பூங்காவும், இதுவரையிலே இல்லாத அளவுக்கு சுற்றுலாப் பயணியர் விடுதி ஒன்றும் இருக்கின்றன. அங்கே ஏறக்குறைய 100 கடைகளை கொண்ட ஒரு வணிக வளாகம் பொதுப் பணித் துறையின் சார்பிலே அமைத்துக் கொடுக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் வேண்டி விரும்பி கேட்டுக்கொள்கிறேன்.



மேட்டூர் அணை என்பது சிறப்புவாய்ந்த ஒரு அணை அந்த அணையிலே இருக்கக்கூடிய பூங்காவானது நாளடையில் பாழ்பட்டுப் போய்க் கொண்டிருக்கிறது. ஆகவே, அந்த மேட்டூர் அணைப் பூங்காவை பராமரிக்க வேண்டுமென்றும், மேட்டூர் அணையினுடைய மேற்குக் கரையையும், கிழக்குக் கரையையும் வாய்க்காலைத் தூர் எடுத்து செப்பனிட வேண்டும் என்றும் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, தருமபுரி மாவட்டத்திலே ஓசூர் பகுதியைத் தவிர மற்ற பகுதிகள் எல்லாம் தொழிற்சாலைகள், தொழில் வளம் இல்லாத பகுதியாக இருக்கிற காரணத்தினால் அந்த மக்கள் விவசாயத்தையே நம்பி வாழக்கூடிய ஒரு நிலை. ஆகவே எங்கெங்கெல்லாம் ஆறுகளும், காட்டாறுகளும் ஓடுகின்றதோ அந்தப் பகுதிகளில் எல்லாம் அதிக அளவில் ஏரிகள், குளங்கள் வெட்டுவதற்கு முன்வரவேண்டும் என்றும், ஏற்கெனவே இருக்கும் ஏரிகளிலும் தூர் எடுக்க வேண்டுமன்றும் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கின்றேன்.

மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டம் என்ற திட்டத்தில் பல்வேறு மாவட்டங்கள் இணைக்கப்பட்டிருக்கின்றன. பெரியார், கோவை, இராமநாதபுரம், கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்கள் எல்லாம் அதில் இணைக்கப்பட்டிருக்கின்றன. அந்த மேற்குத் தொடர்ச்சி மலையை ஒட்டித்தான் சேலம், தருமபுரி மாவட்டங்கள் எல்லாம் இருக்கின்றன. அங்கே காட்டாறுகள் எல்லாம் அந்த மலைப் பகுதியிலிருந்து வருகின்றன. எனவே, சேலம், தருமபுரி மாவட்டங்களையும் அந்த மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டத்தில் இணைக்க வேண்டும் என்று நான் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பட்டது)

அதேபோல, பாசனத்தைப் பொறுத்தவரையிலே, கால்வாய்கள் பாசனம் என்ற வகையிலே ஏறக்குறைய 0.95 மில்லியன் ஹெக்டேரும் ஏரிகள் பாசனம் என்ற வகையிலே 0.90 மில்லியன் ஹெக்டேரும் பாசன வசதி பெறுகின்றன. அதைவிட அங்கே கிணறுகள், ஆழ்துளைக் குழாய்கள் வாயிலாக பாசன வசதி பெறக்கூடிய பாசன நிலங்கள் 1.15 மில்லியன் ஹெக்டேர் என்று சொல்லப்படுகிறது. ஆகவே அந்த வகையிலே இப்போது பாசனக் கால்வாய்கள் அல்லது ஏரிகளைவிட அதிக பாசனம் பெறக்கூடிய பகுதியாக அது இருக்கிறது. அங்கே நிலத்தடி நீரைக் கொண்டுதான் பாசன வசதி பெறப்படுகிறது. ஆகவே நிலத்தடி நீரை மேம்பாடு அடையச் செய்வது நம்முடைய அரசின் கடமையாக இருக்கிற காரணத்தாலே. அதிக அளவு பரப்பளவுள்ள் நிலங்கள் பாசனத்திலே பயன்பட வாய்ப்பு இருக்கிற காரணத்தினாலே... (மணியடிக்கப்பட்டது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி, உட்காருங்கள்...

**திரு. ஜி. கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்னும் ஒன்றே ஒன்று. (மணியடிக்கப்பட்டது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒன்று எல்லாம் கிடையாது. உட்காருங்கள். (குறுக்கீடு) நான் சொன்னபிறகு அனுமதி கிடையாது, உட்காருங்கள். நான் மூன்று தரம் மணியடித்த பிறகும் பேசுவது முறையல்ல, உட்காருங்கள். திரு. ஜி.கே. மணி பேசுவது அவைக் குறிப்பில் ஏறாது.

அடுத்து, அ.இ.அ.தி.மு.க.வின் தலைவர் திரு. திருநாவுக்கரசு அவர்கள் கேட்டுக் கொண்டதன் பேரில் உறுப்பினர் திரு. சொ. கருப்பசாமி அவர்களுக்கு 3 நிமிடங்கள் அளிக்கிறேன். விரைவாகப் பேசி முடிக்க வேண்டும்.

**திரு. சொ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுப் பணித் துறை மானியக் கோரிக்கையில் நான் கேட்கின்ற சில கோரிக்கைகளை நிறைவேற்றித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கருப்பா நதி தண்ணீர் எனது தொகுதியிலுள்ள சேந்தமரம், வீரசிகாமணி, வெள்ளாளகுளம், ஈச்சந்தா போன்ற பகுதிகளுக்கு வருகிற வகையில் கிட்டத்தட்ட பாப்பாங்கால்வாய் வழியாக 15 மடைகள் இருக்கின்றன. அதில் குறிப்பாக 7 மடைகள் சரியான முறையில் இயங்கவில்லை. அங்கே உள்ள 15 மடைகள் முழுவதும் ஆக்கிரமிப்புகளால் அடைப்பட்டு இருக்கிறது. எனவே மேற்படி ஆக்கிரமிப்புகளை அகற்றி மேற்படி கிராமங்கள் அனைத்துக்கும் கருப்பாநதி தண்ணீர் வருவதற்கு நீங்கள் ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 1-05

அடுத்து, என்னுடைய தொகுதியில் திருவேங்கடம் சாலையில் ஆளடிப்பட்டி என்ற கிராமத்திற்கு ஆற்றின் குறுக்கே செல்ல வேண்டிய ஒரு அவல நிலை இருக்கிறது. குறிப்பாக, மருத்துவமனைக்கோ, பள்ளி மாணவர்கள் பள்ளிகளுக்கோ செல்வதற்கு முடியாத நிலை உள்ளது மழைக் காலங்களில் அந்தக் கிராமத்திலிருந்து சாலைக்கு வரமுடியாத சூழ்நிலை இருக்கிறது. அங்கே ஆற்றின் குறுக்கே பாலம் கட்டவேண்டுமென்று இதற்கு முன்பாக கொடுக்கப்பட்ட மனுவின் பயனாக கிட்டத்தட்ட ரூ. 15 இலட்சம் செலவில் அங்கே பாலம் கட்டவேண்டுமென்று ஊராட்சி ஒன்றிய பொறியாளர் தெரிவித்துள்ளார்.



ஆகவே, சிறப்பு நிதியாக மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் நிதி ஒதுக்கி இந்த ஆளடிப்பட்டி கிராமத்திற்கு தாம்போகி பாலம் ஒன்றை கட்டித்தர வேண்டுமென்று அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, என்னுடைய சங்கரன்கோயில் தொகுதி மிகவும் வறட்சியான பகுதியாக இருந்து வருகிறது. கிரியாற்றுத் தண்ணீர் குறித்து கேரள அமைச்சரோடு கலந்துபேசி விரைவாக கிரியாற்றுத் தண்ணீர் வருவதற்கு ஏற்பாடு செய்யவேண்டும். கிரியாற்றுத் தண்ணீரை தமிழகத்திற்குக் கொண்டுவந்தால், குடிப்பதற்கான குடிநீர் கிடைப்பதற்கும், நிலத்தடி நீர் கிடைப்பதற்கும் அது ஏற்பாடாக அமையும் என்பதை தெரிவித்து அதை நீங்கள் செய்து முடிக்க வேண்டுமென்றும், விரைவுபடுத்தவேண்டுமென்றும் இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொண்டு அமைகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இறுதியாக, திரு. டி. அமரமூர்த்தி.

**திரு. டி. அமரமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பொதுப் பணித் துறை மானியக் கோரிக்கையின்மீது பேச வாய்ப்பளித்த தங்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

காவிரிப் பிரச்சினை தமிழ்நாட்டில் உயிர்நாடிப் பிரச்சினை ஆகும். கடந்த 25 ஆண்டுகளாக தீர்க்கமுடியாமல், பேச்சுவார்த்தை மூலமாகவும், கோர்ட்டின் மூலமாகவும், பல்வேறு நிலைகளிலும் தொடர்ந்து கொண்டே இருக்கிறது. இதுவரை அதற்கு ஒரு முடிவே ஏற்படாமல் இருக்கிறது. தமிழக மக்கள் மாண்புமிகு முதல்வர் அவர்களை தைரியசாலி, சாமர்த்தியசாலி, பெரிய அரசியல் சாணக்கியர் என்று நம்பிக்கொண்டிருக்கிறார்கள். இவர்கள் காலத்தில் இந்தப் பிரச்சினை முடிக்கப்படவில்லை என்றால் எந்தக் காலத்திலும் இந்த காவிரிப் பிரச்சினை முடியாது என்ற தமிழக மக்கள் முடிவினை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இப்படிப்பட்ட தமிழக முதல்வர் அவர்கள் இந்தப் பிரச்சினையை முடித்து வைத்தால் தமிழக முதல்வர் அவர்களுக்கு கோயில் கட்டக்கூட தமிழக மக்கள் தயாராக இருக்கிறார்கள். ஆகவே தமிழக முதல்வர் அவர்கள் இந்தப் பிரச்சினையில் அதிக கவனம் எடுத்துக்கொண்டு உடனடியாக காவிரிப் பிரச்சினையைத் தீர்த்து வைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முதல்வர் கோயில் கட்டுவதை விரும்புகிறாரா என்று தெரிந்துதானே நீங்கள் சொல்ல வேண்டும்.

**திரு. ப. மோகன் கந்தசாமி:** இந்தக் கோயில் கட்டும் கோரிக்கையை நிறைவேற்றுவதற்கு அமைச்சர் முன்வருவாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

**திரு. ஆர். சொக்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதல்வருக்காகக் கோயில் கட்டலாம், ஆனால் அது கொள்ளையரின் கூடாரமாக மாறிவிடக் கூடாது.

**திரு. டி. அமரமூர்த்தி:** ஐரோப்பிய பொருளாதார குழுவின் உதவியுடன் ஏரிகளை நவீனப்படுத்தும் திட்டத்தின்கீழ் சுக்கிரன் ஏரியையும், தன்ராயத்தன் ஏரியையும் சேர்த்துக் கொள்ள வேண்டுமென்று மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் புள்ளி விவரங்களை விரல் நுனியில் வைத்து இருப்பவராவார். கம்ப்யூட்டர்கூட அவருக்கு ஈடாக முடியாது. அந்த அளவுக்கு புள்ளி விவரங்களை வைத்து இருப்பவர். எங்கள் மாவட்டத்தில் குறிப்பிடத்தக்க எந்த ஒரு திட்டத்தையும் அறிவிக்கவில்லை என்பது எங்களுக்கு மிகுந்த வருத்தத்தை அளிக்கிறது. ஆகவே மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் நான் சொல்லக்கூடிய 2, 3 திட்டங்களை அவசியம் இந்த நிதியாண்டிலே சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 1-10

அதேபோல, புள்ளம்பாடி வாய்க்காலின் கொள்ளளவு, 1090 க.அ. இன்றைக்கு அந்தக் கால்வாயானது, மிகவும் மோசமாக மேடு ஏறி போய் இருக்கின்றது. 400 கன அடித் தண்ணீர் வந்தால்கூட அணை நிரம்பி வழிந்துவிடும். அந்த அளவிற்கு அந்தப் புள்ளம்பாடி வாய்க்காலின் கரைகள் தூர்ந்து இருக்கின்றன. எனவே, உடனடியாக அமைச்சர் அவர்கள் அந்தப் புள்ளம்பாடி வாய்க்காலினை ஆழப்படுத்திடவும், அதனுடைய கரைகளைச் செப்பனிட்டுத் தந்திடவும் ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

வாரணவாசியில் அரியலூர் வட்டம் அருகே, மருதையாறு ஓடுகின்றது. அந்த மருதையாற்றின் குறுக்கே அணையைக் கட்டி அங்குள்ள கிராமங்களுக்கு பாசனவசதி செய்து கொடுக்க வேண்டுமாய்க் கேட்டுக் கொள்கிறேன்.



அதேபோல, தேளூரில் ஒரு ஓடை செல்கின்றது. அந்த ஓடையின் குறுக்கே அணை கட்டினால், அந்தப் பகுதியில் விவசாயம் செய்வதற்கு மிகவும் ஏதுவாக இருக்கும். எனவே, மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் இந்தத் திட்டத்தையும் சேர்த்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள், 10000 சாலைப் முதலமைச்சர் அவர்களிடம் சொல்லி சுமார் பணியாளர்களை நியமனம் செய்திருக்கிறார்கள். 'லஸ்கர்' என்று சொல்லக்கூடிய அத்தனைப் பதவிகளும் இன்று காலியாக இருக்கின்றன. எனவே, பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் முதலமைச்சர் அவர்களுடன் பேசி நீர்ப்பாசன உதவியாளர்கள் என்கிற 'லஸ்கர்களை' உடனடியாக நியமிக்க ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கின்றேன். பொதுவாக, உயர் அதிகாரிகளை நியமிக்கின்றோம், ஆனால், கடைநிலை ஊழியர்களைச் சரியாக நியமிக்காததால், ஆங்காங்கே கரையை உடைத்து விடுகிறார்கள். மரங்களை வெட்டிச் சென்று விடுகிறார்கள். எனவே, நீர்ப்பாசன உதவியாளர்களை உடனடியாக நியமித்திட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். எங்களது பகுதியில் 31 நீர்ப்பாசன உதவியாளர்கள் இருந்தார்கள். ஆனால், இன்றைக்கு வெறும் 5 பேர்கள் தான் இருக்கிறார்கள். இந்த 5 பேர்களால், எந்தப் பணியையும் சரிவரச் செய்ய முடியவில்லை. கடந்த ஆட்சிக் காலத்தில் நீர்ப்பாசன உதவியாளர்கள் இல்லாததால்தான், அந்த செயற் பொறியாளர்கள் ஒரு கிராம நாட்டாமையைக் கூப்பிட்டு வேண்டியபடி நீரைத் தேக்கி வைத்துக்கொண்டு இவ்வளவு பணம் கொடுத்தால்தான் தண்ணீர் திறந்து விடுவேன் என்று சொல்லி தண்ணீருக்கே பணம் வாங்கினார்கள். எனவே, அந்த மாதிரி நிலையினைப் போக்குவதற்கு உடனடியாக 'லஸ்கர்களை' நியமிக்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, கிருதுமால் திட்டம் அறிவிக்கப்பட்டிருக்கின்றது. இது மிகவும் வரவேற்கத்தக்க திட்டம். அந்த கிருதுமால் நதித் திட்டத்தில் வைகையிலிருந்து வருகின்ற நீரானாலும் சரி, வெள்ள நீரானாலும் சரி வந்து போவதற்கு வழியின்றி மூடியிருக்கும். கொந்தகை மேலவள்ளூர் பகுதியிலிருந்து கருவருடி வரை மராமத்து வேலை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, எங்கள் பகுதியில் இந்த என்.ஓ.சி. பிரச்சினை பெரிய பிரச்சினையாக இருக்கின்றது. கடந்த சட்டமன்ற கூட்டத் தொடரிலே

கூட இதுகுறித்துச் சொன்னேன். தஞ்சாவூர் டெல்டாவாக இருக்கின்ற தஞ்சாவூர் மாவட்டத்திற்கெல்லாம் அந்த என்.ஓ.சி. கேட்கப்படுவதில்லை. எங்களது கொள்ளிடம் பகுதியில் இருக்கின்ற பகுதிகளுக்கு மட்டும்தான் என்.ஓ.சி. கேட்கிறார்கள். அதன் காரணமாக, அங்கு பணியாற்றுகின்ற உதவிப் பொறியாளர்களும், செயற்பொறியாளர்களும் கொள்ளையடிக்கின்றார்கள். ஒரு என்.ஓ.சி. கொடுக்க வேண்டுமென்றால், குறைந்தது ரூ. 5,000 வரை கேட்கின்றார்கள். எனவே, உடனடியாக பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் எங்களது பகுதிக்கும் என்.ஓ.சி. தேவையில்லையென்கிற உத்தரவைப் பிறப்பிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கின்றேன்.

அதற்கடுத்தாற் போல, திருமானூரில் ஒரு இன்ஸ்பெக்ஷன் பங்களா இருக்கின்றது. ** அவர்கள் எல்லாம் அங்குத் தங்குவதற்கு எந்தவித இடவசதியும் இல்லை. ஆகவே, திருமானூரில் இருக்கின்ற இன்ஸ்பெக்ஷன் பங்களாவை உடனடியாக 'டிராவலர்ஸ் பங்களா'வாக மாற்றி நல்ல கட்டிடங்கள் கட்டித் தருவதற்கு மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் ஆவன செய்ய வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, எங்கள் மேட்டுக்குடி ஏரி, ஆண்டி ஓடை.....

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, **பெயரை அவர் பயன்படுத்துவதை தயவு செய்து நம்முடைய அவைக் குறிப்பிலேயிருந்து எடுத்துவிடுமாறு நான் கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் என்னைக் கேட்டுக் கொள்வதைக் காட்டிலும், உங்களது உறுப்பினரைப் பார்த்து அதைத் திரும்பப் பெறுங்கள் என்று அவருக்கு அறிவுரை வழங்கலாம்.

**திரு. டி. அமரமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவைக் குறிப்பிலுள்ள அந்த வார்த்தைகளை நான் திரும்பப் பெறுகிறேன்.

பிற்பகல் 1.15

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உறுப்பினர் கேட்டுக் கொண்டதற்கிணங்க அது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.



**திரு. டி. அமரமூர்த்தி:** அடுத்தபடியாக, சாத்தனூர் அணைக் கட்டிற்கு ஆயிரக்கணக்கான சுற்றுலாப் பயணிகள் வந்து செல்லுகிறார்கள். அந்த சாத்தனூர் அணையில் இருக்கின்ற பூங்காக்களைச் சீர்செய்து, செம்மைப்படுத்தி, அழகுபடுத்துமாறு கேட்டுக் கொள்கிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ரங்கநாதன், அவர் பேசட்டும், நீங்கள் குறுக்கே வந்து அவருக்கு ஒன்றும் அறிவுரை சொல்ல வேண்டாம்.

**திரு. டி. அமரமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிருஷ்ணா நதி நீர் சென்னைக்கு வருவதற்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் மிகவும் சிரமம் எடுத்துக் கொண்டார்கள். அந்த கிருஷ்ணா நதி நீர் பணி அலுவலகத்தில் 1985-லிருந்து வேலை செய்கின்ற என்.எம்.ஆர். ஊழியர்களுக்குச் சம்பளம் கொடுக்கும்போது அவர்கள் பெயரில் சம்பளம் போடாமல் மற்றவர்கள் பெயரிலே போடுவதாகவும், அங்கே ஒருசில தவறுகள் நடப்பதாகவும் காலையில் என்னிடம் வந்து பல நண்பர்கள் சொன்னார்கள். டிவிஷன்-3-இல் ஒரு வருடமாக வேறு பெயர்களில் சம்பளம் போடுகிறார்கள் என்றும், 32 பேர்களுக்குக் கொடுத்த சம்பளத்தை 80 பேர்களுக்குக் கொடுத்ததாகவும், டிவிஷன்-1-இல் 51 பேர்களுக்குக் கொடுத்ததை 111 பேர்களுக்குக் கொடுத்ததாகவும் நண்பர்கள் வந்து சொல்லியிருக்கிறார்கள். எனவே, மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் இந்த மாதிரி குறைகளை நீக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, இந்த நல் வாய்ப்பினை நல்கிய மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி, விடைபெறுகிறேன், நன்றி வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1997-98 ஆம் ஆண்டிற்கான பொதுப் பணித் துறை மானியக் கோரிக்கையின் மீது நான்காவது முறையாகப் பதிலளித்துப் பேசுகிற வாய்ப்பினை எனக்கு அளித்திருக்கிற மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு என்னுடைய நன்றியையும், வணக்கத்தையும் நான் முதற்கண் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர்கள் 13 பேர்கள் இங்கே உரையாற்றி இருக்கிறார்கள். உரையாற்றினார்கள் என்பதைவிட, அரிய

ஆலோசனைகளைத் தெரிவித்திருக்கிறார்கள் என்றுதான் சொல்ல வேண்டும். துறையின் வளர்ச்சிக்குப் பல்வேறு திட்டங்களைத் தந்திருக்கிறார்கள். தங்களுடைய தொகுதிக்காக சில கோரிக்கைகளையும் வைத்திருக்கிறார்கள். இடையிடையே நாங்கள் ஆற்றுகின்ற பணி கண்டு மேலும் எங்களை உற்சாகப்படுத்துகின்ற விதத்தில் எங்களைப் பாராட்டியும், என்னைக் குறிப்பாகப் பாராட்டியும், வாழ்த்தியும் இருக்கிறார்கள். ஆனால், இங்கே பாராட்டிய பாராட்டுக்கள் எல்லாம் எனக்கல்ல, என்னை இயக்குகின்ற, என்னை வளர்த்திருக்கின்ற, இப்படிப் பணியாற்ற வேண்டுமென்று நித்தம் நித்தம் எனக்குச் சொல்லிக் கொடுத்துக் கொண்டிருக்கின்ற, என்னுடைய குருநாதர், என்னுடைய தலைவர், கலைஞர் அவர்களுக்குத்தான் இந்தப் பாராட்டுச் சேரும். (மேசையைத் தட்டும் ஒலி) இதையே நான் வேறு முறையில் சொல்ல வேண்டுமானால், ஒருமுறை சர். பன்னீர்செல்வம் அவர்கள் தனக்கு மாலை அணிவித்தபோது அழகாகச் சொல்லிய கருத்தைச் சொல்கிறேன். 'என் தோளுக்கு அணிவித்த மாலைகளை எல்லாம் என் தலைவர் பெரியார் அவர்களுடைய தாளுக்கு அணிவிக்கிறேன்' என்று அழகாகச் சொன்னார்கள். அப்படி, இன்றைக்கு எனக்கு அளிக்கப்பட்ட இந்தப் பாராட்டை எல்லாம் என்னுடைய தலைவர் அவர்களுடைய தாளுக்கு அணிவித்து, என்னுடைய உரையைத் துவங்குகின்றேன்.

பொதுப் பணித் துறையில், எங்களுடைய ஆட்சி கடந்த 10 மாத காலமாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. சென்ற ஆண்டு பொதுப் பணித் துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்திற்கு நான் பதிலளித்துப் பேசுகிறபோது, என்னுடைய பேச்சை நான் இப்படி ஆரம்பித்தேன்.

'பொதுப் பணித் துறை பழமையும், பெருமையும் வாய்ந்த துறையாகும். நீர் ஆதாரங்களைத் தேடுவதிலும், தேடிய நீரை வாடிய பயிர்களுக்கு அனுப்புவதிலும், நுரை கண்டு, கரை புரண்டு வரும் வெள்ளத்தை அணை கட்டி அதில் தடுப்பதிலும், இருக்கிற நீரைக் கொண்டு விளைச்சல் பெருக்க வழி காண்பதிலும் ஈடு இணையற்று விளங்குவது தமிழகப் பொதுப் பணித் துறை. கட்டிடங்கள் கட்டுவதிலும், மட்டில்லா புகழ் கொண்டதுதான் தமிழகப் பொதுப் பணித் துறை. ஆனால், இவையெல்லாம் கடந்த ஐந்தாண்டுக் காலத்தில் பொய்யாய், பழங்கதையாய்ப் போய்விட்டது. சிங்கிள் டெண்டர் 5%, ஹை பெர்சென்டேஜ், 15% கமிஷன், ஃபால்ஸ் மெஷர்மெண்ட், ஃபேவரிட்டிஸம், நெபோடிசம், ஆகியவற்றின் உறைவிடமாகப் பொதுப்பணித் துறை



ஆக்கப்பட்டுவிட்டது. சுருக்கமாகச் சொன்னால், ஊழல்களின் ஊற்றுக் கண்களாகப் பொதுப் பணித் துறை இருக்கிறது என்று நாடு ஒட்டுமொத்தமாகச் சொல்கின்ற நிலை ஏற்பட்டுவிட்டது. அந்தத் துறையைப் பிடித்து, அதன் கறையைத் துடைத்து, மீண்டும் ஓர் உயர்வை அடைய கலைஞர் அரசு முயற்சியை மேற்கொள்ளும் என்று நான் அன்றைக்குத் தெரிவித்தேன்'.

பிற்பகல் 1-20

பத்து மாத காலம் எங்களை ஆட்சியில் அமர வைத்திருக்கிறீர்கள். இந்த பத்து மாத காலத்தில், அந்தத் துறையில் இருக்கிற கறையை நாங்கள் துடைத்திருக்கிறோமா என்றால், துடைத்திருக்கிறோம் என்பது மட்டுமல்ல, மேலும் கறைபடாமல் பார்த்துக் கொண்டிருக்கிறோம். ஒளிவு மறைவு இல்லாத டெண்டர் முறை — டிரான்ஸ்பரன்ட் — இந்த பத்து மாத காலத்தில் நாங்கள் கறையைத் துடைத்து எப்படி இலாக்காவை நடத்துகிறோம் என்பதற்காக — ஒளிவு மறைவு இல்லாத டெண்டர்முறை, ஒருவருக்குமேல், பலர் ஷெடியூல் வாங்கும் விநோதம்; கமிஷன் வாங்காத ஒப்பந்தங்கள்; 5%-ஐத் தாண்டாத above பர்சன்டேஜ்கள்; அளவு எடுப்பதில் சரியான முறை; ஆளைப் பார்த்து பில் போடாத அதிசயம்; கலைஞர் ஆட்சியில் இத்தனையும் அல்லவா இந்த ஈரைந்து மாதத்தில் நடந்து இருக்கின்றன. 'மன்னர் எவ்வழி, குடிமக்கள் அவ்வழி'. இங்கே முதல்வர் எவ்வழியோ, அவ்வழியில் இலாக்காக்கள் மாறியிருக்கின்றன. இந்த 10 மாதங்களில் இந்த இலாக்காவிலே முற்றும் மாற்றிவிட்டோம் என்று சொல்ல மாட்டோம். கெட்டுப் போகாமல் பார்த்துக் கொண்டிருக்கிறோம். குறுகிய காலத்தில், பெரிய சாதனைகளை கலைஞர் அரசு சாதித்திருக்கிறது என்பதற்காக ஆயிரம் எடுத்துக்காட்டுகளை என்னால் இங்கே எடுத்துக்காட்ட முடியும் என்றாலும், நேரம் கருதி ஒரு சிலவற்றை மட்டும் நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

ஒப்பந்தப் புள்ளிகளைப் பற்றி, நம்முடைய போக்குவரத்துத் துறை அமைச்சர் டாக்டர் பொன்முடி அவர்கள் மானியக் கோரிக்கையின் மீது உரையாற்றியபோது தெரிவித்தார்கள். பர்சன்டேஜ் போடுவது முன்பெல்லாம் 40%, 50%, 60% கூடுதலாகப் போடுவார்கள். போட்டுவிட்டு, ஷெடியூல் ஃபாரம் கூட வாங்க மாட்டார்கள். வீட்டிலேதான் உட்கார்ந்திருப்பார்கள். சூப்பரின்டெண்டிங் என்ஜினியர் லெவலிலே இருப்பவர் அந்த ஷெடியூல் ஃபாரத்தை எடுத்துக்கொண்டு போய்

கான்ட்ராக்டர் வீட்டிலே, கான்ட்ராக்டரைப் பார்த்து. இந்தாருங்கள் டெண்டர் ஃபாரம்; இன்னும் இரண்டு நாட்கள்தான் இருக்கின்றன; நீங்கள் டெண்டர் போடுங்கள் என்று கெஞ்ச வேண்டும். காரணம் மேல் இடத்திலே கப்பம் கட்டிவிட்ட கர்வம் அந்தக் கான்டிராக்டருக்கு அப்படிப்பட்ட நிலைமைகள் இருந்தன. ஆனால் இந்த பத்து மாதத்தில் 9 கோடி ரூபாய் மதிப்புள்ள ஒப்பந்தப் புள்ளிக்கு மட்டும் நான் சொல்கிறேன் - போர்ட் ஆஃப் டைரக்டர்கள் பார்த்தார்கள்; அரசு ஒப்புதல் அளித்திருக்கிறது - அந்த 9 கோடி ரூபாய் ஒப்பந்தத்தில், கூடுதலான தொகை எவ்வளவு தெரியுமா எட்டே எட்டு இலட்சம் ரூபாய்தான், அதாவது வெறும் 1% தான் அதிகமாகப் போட்டிருக்கிறார்கள்.

அதைப்போல, கட்டிடப் பிரிவில், கடந்த கால எஸ்டிமேட்டானால், 20, 30, 40 சதவிகிதம் அதிகமாக இருக்கும். ஆனால் இங்கு அப்படி அல்ல. 8.36 கோடி ரூபாய் மதிப்புள்ள ஒரு கட்டிடப் பணிக்கு, 41 ஒப்பந்தப் புள்ளிகள்—இந்த 41 ஒப்பந்தப் புள்ளிகளில் குறைந்த விழுக்காடு —27% தான். அதாவது 100 கோடி ரூபாய் ஒப்பந்தம் செய்தால் 15 கோடி ரூபாய் இன்றைக்கு அரசுக்கு இலாபம். இன்றைக்கு அந்த நிலைமை இருக்கிறது.

வீராணம் ஒரு சின்ன டெண்டர் — அப்போதெல்லாம் இரண்டே இரண்டு பேர்தான் டெண்டர் போடுவார்கள். அதிகம் பேர் டெண்டர் போடமாட்டார்கள். திருச்சி கன்ஸ்ட்ரக்ஷன், மற்றும் ராவ் கன்ஸ்ட்ரக்ஷன் இரண்டு மட்டும்தான். ஒருவர் 38%; இன்னொருவர் 28% அதேபோன்று ஒவ்வொரு டெண்டரிலும் இரண்டே இரண்டு பேர்தான் டெண்டர் போடுவார்கள். பெயர்களை எல்லாம் சொல்ல விரும்பவில்லை.— தேவராஜ் கன்ஸ்ட்ரக்ஷன், இன்னொன்று திருச்சி கன்ஸ்ட்ரக்ஷன்— அவர்களுடைய லோயஸ்ட் பார்சன்டேஜ் 46% தான், அதுவும் அபோவிலே, அடுத்து ராவ் கன்ஸ்ட்ரக்ஷன், சுப்பிரமணி கன்ஸ்ட்ரக்ஷன் — எல்லாம் லோயஸ்டே 51% தான். இந்த டெண்டர்கள் எல்லாம் என்ன ஆயிற்று. நாங்கள் ஆட்சிக்கு வந்தவுடனேயே, அந்த டெண்டர்களெல்லாம் கையெழுத்துக்கு எனக்கு வந்தன. நான் முதலமைச்சர் அவர்களிடம் போய் சொன்னேன். என்ன செய்வது என்று கேட்டேன். உடனே மறு ஒப்பந்தப் புள்ளிகள் கோரலாம் என்று எழுதினார்கள். எல்லாவற்றுக்கும் மறு ஒப்பந்தப் புள்ளிகள் கோரியதினுடைய விளைவு, அதே டெண்டருக்கு இரண்டே இரண்டு பேர் போட்ட இடத்தில், 9 பேர் 10 பேர் போட்டிருக்கிறார்கள்.



அப்போது லோயஸ்ட் டெண்டரே 51%. ஆனால் அதே வேலைக்கு நாங்கள் டெண்டர் வைத்தோம். மைனஸ் 10 பர்சன்டேஜ்தான். 9, 10 பேர் டெண்டர் போட்டிருக்கிறார்கள். அதனால்தான் சொன்னேன் இது டிரான்ஸ்பரன்ட் டெண்டர்—மக்கள் யார் வேண்டுமானாலும் போடலாம்.

நேற்று ஒரு உதாரணம். அதாவது அண்ணா சமாதியை அழகுபடுத்தும் சின்ன டெண்டர்தான் அது. நேற்று டெண்டர் வாங்கியவர்கள் மட்டும் கிட்டத்தட்ட 15 பேர். அப்போதிருந்த நிலையை மாற்றி அமைத்திருக்கிறோமே அதுதான் இந்த 10 மாத கால ஆட்சியில் நாங்கள் செய்திருக்கிற சாதனையாகும். இதுவே இன்னும் தொடரும் என்பதை மட்டும் நான் இங்கே தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ஏதோ டெண்டர் முறையிலே மட்டும் இந்தச் சாதனையை சாதித்திருக்கிறோம் என்பதல்ல. குற்றங்களைக் களைவது மட்டுமல்ல, ஆனால், ஆக்கப்பூர்வமான பணிகளிலும் எங்களை நாங்கள் ஈடுபடுத்திக் கொண்டிருக்கிறோம்.

பிற்பகல் 1-25

இந்த அரசு மிக சுறுசுறுப்பாக வேலை செய்கிறது. அதற்கு முதலமைச்சர் தான் காரணம். ஒரு கவிஞன் பாடினான், சூரியன்கூட சுறுசுறுப்பை கலைஞரிடத்திலேதான் பெறவேண்டும் என்று. அந்த அளவுக்கு சுறுசுறுப்பாக பணியாற்றக்கூடியவர் கலைஞர் அவர்கள். கடந்த 5 ஆண்டுக்காலம் இந்த நாட்டிலே ஒரு ஆட்சி நடந்தது. ஒரே ஒரு உதாரணம், எல்லாவற்றிலும் ஒன்றை மட்டும் சொல்லப் போகிறேன். அந்த 5 ஆண்டுக் காலத்தில் இந்த பொதுப் பணித் துறையிலே எத்தனை திட்டங்களை அறிவித்தார்கள் என்றால், மொத்தம் ஐந்தே ஐந்து திட்டங்கள்தான். அத்திக்குளம் அருகிலே கிருதமால் பக்கத்திலே ஒரு அணை கட்டும் திட்டம். அந்த ஐந்து வருடத்திலே இன்னொன்று சாத்தூர் அருகே இருக்கன்குடி திட்டம், மூன்றாவது சுழுதிக்கு பக்கத்தில், நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் ஊரிலே மலட்டாறு திட்டம், நான்காவது, நாங்குனேரி வட்டத்திலே வடக்கு பச்சையாறு திட்டம். ஐந்தாவது, சிதம்பரம் வட்டத்திலே கான்சாகிப் கால்வாய்த் திட்டம். இந்த ஐந்தே திட்டத்தைத் தான் 5 வருடத்திலே அவர்கள் அறிவித்தார்கள். இந்த ஐந்து திட்டத்திற்கும் அவர்கள் ஒதுக்கிய பணம், ஒதுக்குவதாக சொன்ன பணம், — ரூ. 74.15 கோடி, ஆனால், ஒதுக்கினார்களா என்றால், இல்லை. ஒதுக்கவில்லை, சுழுதிக்கு பக்கத்திலே மலட்டாறுக்கு அவர்கள் பணம் ஒதுக்கவில்லை. சென்றமுறை கலைஞர் அவர்கள்,

கடந்த பட்ஜெட்டிலேதான் ஒரு கோடி ரூபாய் ஒதுக்கினார்கள். வடக்கு பச்சையாறு திட்டத்துக்கு பணம் ஒதுக்கவில்லை. போன தடவை ஒதுக்கித்தான் இப்போது அந்த திட்டத்தை ஆரம்பித்துவிட்டு வந்து இருக்கிறோம். சாத்தூர் அருகே இருக்கன்குடி திட்டத்திற்கு 6 கோடி ரூபாய் ஒதுக்கினார்கள்; எங்கே அணை கட்டுவது என்று தெரியாமல், கால்வாயை மட்டும் வெட்டி எடுத்துவிட்டு போய்விட்டார்கள். ஆனால் அந்த 5 வருடத்திலே நீர்ப்பாசனத்தை, நீராதாரத்தை பெருக்குவதற்கு அந்த ஆட்சியிலே ஒரு 5 திட்டங்களை மட்டும்தான் அறிவித்தார்கள்.

ஆனால், இந்த 10 மாத கால ஆட்சியில் கலைஞர் அவர்கள் ஆண்டியப்பனூர் ஓடைத் திட்டம், செண்பகத் தோப்புத் திட்டம், குப்பத்து ஓடைத் திட்டம், 58 கிராமங்களுக்கு தண்ணீர் கொடுக்கிற திட்டம்; இந்த பட்ஜெட்டிலே பத்தலப்பள்ளி திட்டம், குப்பநத்தம் திட்டம், வள்ளி மதுரை அணைக்கட்டு திட்டம், புத்தன்தருவை திட்டம் — 8 திட்டங்களை அறிவித்து இருக்கிறார்கள், இந்த 8 திட்டங்களுக்கு மட்டும் 172 கோடி 68 லட்ச ரூபாய் ஒதுக்கி இருக்கிறார்கள் (மேசையைத் தட்டும் ஒலி) 172.68 லட்சம் ஒதுக்கி இருக்கிறார்கள். இந்த 8 திட்டங்கள் மட்டுமல்ல. சாமான் வாங்கினால் ஒரு கொசுரு போடுகிறீர்களா என்று கேட்பான். அதுமாதிரி 8 திட்டங்களை அறிவித்த உடனே, 2 திட்டங்களை அதிலே போடுகிறார்; சிறுமலை அருவித் திட்டத்தையும், நாய் ஓடை திட்டத்தையும் ஆய்ந்து பார்த்து நடவடிக்கை எடுக்கவும்; அதையும் சேர்த்தால் 10 திட்டங்கள். அப்படியானால், 10 மாதங்களிலே மாதத்திற்கு ஒரு நீர்ப்பாசனத் திட்டத்தை அறிவித்த முதலமைச்சர் (மேசையைத் தட்டும் ஒலி) நாங்கள் இப்படி சொல்லிக் கொள்வதிலே பெருமைப்பட வேண்டாமா? இதிலே புத்தன்தருவைக்கு தண்ணீர் கொடுத்து இருக்கிறார். அந்த ஊருக்குப் பக்கத்தில் நான் போய்ப் பார்த்தேன்; மாடே கிடையாது; மனிதர்களுக்குத் தண்ணீர் லாரிகளிலேதான் வரவேண்டும். காரணம் உப்புத் தண்ணீர் வந்து நுழைந்துவிட்டது. தண்ணீருக்கு இப்போது மருதூர் மேலக்காலில் தண்ணீர் எடுத்து, கால்வாய் ஏரிக்கு கொண்டு போய், கால்வாய் ஏரியிலிருந்து சடையநேரிக்கு கொண்டுபோய், சடையநேரியிலிருந்து கருமேனி ஆற்றில் விட்டு, கருமேனி ஆற்றிலிருந்து நேராகக் கொண்டுபோய் புத்தன் தருவைக்கு தண்ணீர் கொடுப்பதற்காக 12½ கோடி ரூபாய் ஒதுக்கி இருக்கிறார்கள். அந்த மக்கள் எவ்வளவு பாராட்டுவார்கள் என்பது எனக்குத் தெரியும். ஒரு பத்து திட்டங்களை மாதத்திற்கு ஒரு திட்டத்தை வகுத்தவர் நம்முடைய முதல்வர்.



அதுமட்டுமல்ல, உங்களுக்குத் தெரியும், உலக வங்கியினுடைய உதவியோடு தமிழ்நாடு நீர்வள ஆதாரத் தொகுப்புக்கு நம்முடைய மாநிலத்திற்கு 1,140 கோடி உலக வங்கி கொடுத்தது. இந்த 1,140 கோடி ரூபாயில் அப்போது எங்கே அது அமுலுக்கு வந்தது என்றால், 1995 ஆம் ஆண்டு ஜூன் மாதம், நாங்கள் ஆட்சிக்கு வருவதற்கு முன்னால், 1995 ஜூனிலிருந்து நாங்கள் ஆட்சிக்கு வந்த 1996 மே வரையில், அவர்கள் செலவு செய்வதற்காக அனுமதித்த தொகை 63 கோடி ரூபாய் தான். ஆனால், இந்த 10 மாதத்தில் இதற்கு செலவுக்காக அனுமதித்து இருக்கிற தொகை 137.9 கோடி ரூபாய். ஆக இந்த 10 மாதத்தில், அதுவும் செய்யாறு அணைக்கட்டு திட்டம் ரூ. 95.47 லட்சம்; சித்தாறு அணைக்கட்டு திட்டம் 2 கோடியே 87 லட்சம்; மஞ்சளாறு பாசனத் திட்டம் 39 லட்சத்து 20 ஆயிரம்; பாலாறு அணைக்கட்டுத் திட்டம் 2 கோடியே 36 லட்சம்; பரம்பிக்குளம்–ஆளியாறு பாசனத் திட்டம் 37 கோடியே 95 லட்சத்து 52 ஆயிரம்;. தாமிரபரணி பாசன அமைப்பைப் பற்றி நம்முடைய வேல்துரை எல்லாம் பேசினார் அல்லவா? கன்னடியன் கால்வாய் எல்லாம் சேர்ந்து விடுகிறது; 7 கோடியே 39 லட்சத்து 90 ஆயிரம்.

பிற்பகல் 1-30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன்அனுமதியோடு, அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** பெரியாறு—வைகைத் திட்டத்திற்காக 5 கோடியே 35 லட்சத்து 40 ஆயிரம் ரூபாய். இவ்வளவு மட்டுமல்லாமல், நம்முடைய கலைஞர் கூட சொன்னார்கள், குடி மராமத்து, பாசன அமைப்பு ஆகியவற்றில் மக்களுக்காக நாம் செய்கிற பணியில் ஒரு ஈடுபாடு—இன்வால்வ்மென்ட்—இருக்க வேண்டும். அவர்களையெல்லாம் அதிலே கொண்டு வந்து சேர்க்கவேண்டும் என்பதற்காக 86 லட்சம் ரூபாய். பாசன மேம்பாட்டிற்காக ஒரு கோடியே 12 லட்சம் ரூபாய். பொதுப்பணித் துறையை நவீனப்படுத்துவதற்காக 5 கோடியே 35 லட்சம் ரூபாய். நீர் திட்டமிடுவதற்காக, பூண்டியில் ஆய்வுகள் போன்றவை செய்வதற்காக 5 கோடியே 22 லட்சம் ரூபாய். கரைகளைப் பலப்படுத்துவதற்கு 8 கோடி ரூபாய். ஆக, கிட்டத்தட்ட 137.9 கோடியை இந்த பத்து மாதத்தில் நாங்கள் இந்தத் துறைக்குச் செலவிட்டிருக்கிறோம்.

அதுமட்டுமல்ல, இப்படிப் புதிய திட்டங்களை நாங்கள் அமல்படுத்துவது மட்டுமல்ல, இந்தத் திட்டங்கள் கடந்த கால ஆட்சியில்

கேட்பாரற்றுப் போய்விட்டன, தூங்கிப் போய்விட்டன. அந்தத் திட்டங்களையெல்லாம் துயில் எழுப்பிக் கொண்டுவந்து அந்தத் திட்டங்களுக்குப் புத்துயிர் அளிக்கச் செய்திருக்கிறார் நம்முடைய முதல்வர் அவர்கள். உங்களுக்கெல்லாம் தெரியும், கலைஞர் ஆட்சியில் 1989-ல் பல திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டன என்று. எம்.ஜி.ஆர். ஆட்சியிலே சில திட்டங்கள் அறிவிக்கப்பட்டன. ஆனால் அந்தத் திட்டங்களை ஏறெடுத்துப் பார்க்கவில்லை கடந்த ஆட்சியில். ஊழல்தான் அதிகமாக மிஞ்சியிருந்தது.

பொய்கையாறு என்ற ஒரு திட்டத்தை 1989 ஆம் ஆண்டு நம்முடைய கலைஞர் அவர்கள் முதல்வராக இருந்தபோது ஆரம்பித்தார்கள். 10 கோடி ரூபாயில் ஆரம்பித்த திட்டம். ஆனால் இப்போது அதன் மண் அணையே 10 கோடிக்குப் போய்விட்டது. அந்த அணையைக் கட்டிவிட்டார்கள். ஆனால் கால்வாயை வெட்டாமல் விட்டுவிட்டார்கள். யாரும் திரும்பிப் பார்க்கவேயில்லை. இப்போது நான் போய்ப் பார்த்த பிறகுதான், என்ன காரணம் என்று விசாரித்து, இருக்கிற குறைகளைக் களைந்து, - அதில் ஆயிரம் ஊழல் உண்டு, அதை விஜிலென்ஸ் விசாரிக்கிறது, இருந்தாலும் - பணி நடக்கவேண்டும் என்று ஒரு கோடி ரூபாயை முதல்வர் அவர்கள் அனுமதித்திருக்கிறார்கள்.

அதேபோல், நம்பியாறு திட்டம். அந்தத் திட்டத்தில் ஒரு கால்வாயை வெட்டி, ஒரு கால்வாயை வெட்டாமல் விட்டுவிட்டார்கள். அதனால் அதன் மண் அணையும் போய்விட்டது. அந்தத் திட்டம் வருமா வராதா என்றார்கள். அப்பாவு, எம்.எல்.ஏ. அவர்கள், ஐயா, வருமா வராதா என்று என்னைப் பார்க்கிற போதெல்லாம் கேட்டார்கள். நான் சொன்னேன், மக்களுக்காகத்தான் திட்டமே தவிர, தனி மனிதர்களுக்காக அல்ல என்றேன். எங்கள் தலைவர் அவர்கள் ஒத்துக் கொண்டிருக்கிறார்கள். அதற்காக 7 கோடி ரூபாய் அனுமதிக்கப்பட்டு, இன்றைக்கு டெண்டர் வைக்கப்பட்டிருக்கிறது. அதேபோன்று அடவிநயினார் கோயில் என்ற திட்டம். மறைந்துவிட்ட நண்பர் கதிரவன் அவர்கள், அவரது தொகுதி என்பதால் அதைக் கலைஞரிடத்திலே வாதாடி அன்றைக்குப் பெற்றார்கள். அன்றைக்கு 1989-லேயே அந்தத் திட்டத்திற்கு 30 கோடி ரூபாய்க்கு மேல் ஆனது. அந்தத் திட்டத்தில் 20 கோடி ரூபாய் செலவாகிவிட்டது. நீங்கள் நினைத்துப் பார்க்க வேண்டும். இன்றைக்கு அந்தத் திட்டத்தின் மதிப்பு 70-லிருந்து 75 கோடி ரூபாயைத் தாண்டிப் போயிருக்கிறது. இந்த நேரம் அதை முடித்திருக்கலாம். ஏன் முடிக்கவில்லை? அதிலென்ன அப்பேர்ப்பட்ட சிக்கல்? சிக்கல் என்ன என்று கேட்டால், ஒரு 13 எக்டேர் நிலம் வனத்துறைக்குச் சொந்தமானது அங்கே இருக்கிறது. 63 எக்டேர் நிலம் திருவாவடுதுறை ஆதீனத்திற்குச் சொந்தம். அதுவும் தேவை. மூன்றாவது சிக்கல் என்னவென்றால், அணை கட்டுவதற்காக அங்கே இருக்கிற காண்ட்ராக்டர் பாறையை - குவாரியை உடைக்கிறார். உடனே அங்கே இருக்கிற தாசில்தார், இது மைன்ஸ் துறையைச் சேர்ந்தது, இதை உடைக்காதே என்று நிறுத்திவிட்டார். இதற்காக நிறுத்திவிட்டார்களே என்று கடந்த ஐந்தாண்டுக் காலத்தில் யாராவது ஒரு அமைச்சர் அங்கே போய்ப் பார்த்தது உண்டா? இல்லை அதிகாரிகள்தான் முயற்சி எடுத்தது உண்டா? இங்கே இருக்கிற எஸ்டிமேட் கமிட்டி போன்ற கமிட்டிகள்தான் அங்கே போய்ப் பார்த்தது உண்டா? யாரும் பார்க்கவில்லை. கலைஞர் அவர்களின் அறிவுரையின்பேரில் போனமாதம் நான் போனேன். என்ன சமாச்சாரம், ஏன் நிற்கிறது என்று கேட்டேன். இதுதான் காரணம் என்றார்கள். தலைவரிடத்திலே வந்து சொன்னேன். சாதாரணமான காரணங்கள், இதற்காக ஒரு பெரிய திட்டம் பாழாக்கப்பட்டு நிற்கிறது என்று சொன்னவுடன் என்ன செய்ய வேண்டுமென்று கேட்டார்.



பிற்பகல் 1.35

மத்திய அரசிடத்திலே இந்த 13 எக்டேர் நிலத்திற்கு பர்மிஷன் வாங்க வேண்டுமென்றேன். அதற்காக டெல்லிக்குப் போக வேண்டுமென்றேன். போய்விட்டு வா என்றார். நேராகப் போய் மத்திய அமைச்சரைப் பார்த்தேன். 13 எக்டேர் நிலம், இப்போது அந்த நிலத்தினால் ஒரு அணையே மாட்டிக்கொண்டு நிற்கிறது என்று சொன்னேன். சிரிக்கிறார். இதற்கெல்லாமா ஒரு அணையை நிறுத்தி வைத்திருக்கிறார்கள் என்று கேட்டார். நிறுத்திட்டாங்களேன்னு சொன்னேன். நான் அங்கேயிருந்து சென்னை திரும்பி வருவதற்குள் பர்மிஷன் கொடுத்துவிட்டார்கள். பிறகு 63 எக்டேர் நிலம், திருவாவடுதுறை ஆதீனத்திற்குச் சொந்தமானது இருந்தது. நேராக அறநிலையத்துறை கமிஷனரைக் கூப்பிட்டு, திருவாவடுதுறை ஆதீனத்தோடு பேசுங்கள் என்றோம். நாங்கள் மண்ணாசை, பொன்னாசை எல்லாம் விட்டவர்கள், இது என்ன ஆசை? எடுத்துக் கொள்ளுங்கள் 63 எக்டேரை என்றார்கள். பணம் கொடுத்தால் போதும் என்றார்கள். அடுத்தது, கல்குவாரி. கலெக்டர் வந்தார். கல் குவாரியை உடைத்து கல்லை அங்கேயேதானே போடுகிறார்கள் என்றேன். நீங்கள் உடைத்துக் கொள்ளுங்கள் என்றார். ஆக, ஒரு நொடியில் செய்யவேண்டிய வேலைகள், ஐந்தாண்டுக்காலம் பொறுத்த காரணத்தால்,

30 கோடி ரூபாயில் முடியவேண்டிய ஒரு அணை இப்போது 75 கோடி ரூபாய்க்கு வந்திருக்கிறது.

இன்றைக்கு அதனுடைய விளைவு என்னவென்று கேட்டால், இவ்வளவும் முடித்துவிட்டு இன்றைக்கு ஒரு டெண்டர் வைக்கப்பட்டிருக்கிறது. நான் முன்பே சொன்னேன், 55 கோடி ரூபாய்க்கு வோர்ல்டு பேங்க் ஒரே டெண்டர் ஆக அடவிநயினார் கோயில் திட்டத்திற்கு வைத்திருக்கிறார்கள். செத்துப்போன அந்த அடவிநயினார் கோயில் திட்டம் மீண்டும் உயிர்ப்பெற்று நிற்கிறது என்று சொன்னால் நம்முடைய முதல்வர் கலைஞர் (மேசையைத் தட்டும் ஒலி) அவர்கள்தான் முழுக்க முழுக்க காரணம் என்பதை நான் இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோல, இன்னொரு திட்டம், சோத்துப்பாறைத் திட்டம். சோத்துப்பாறைத் திட்டம் மறந்தேபோய்விட்டது பலபேருக்கு. 1982 ஆம் ஆண்டிலே ஆரம்பிக்கப்பட்டது இத்திட்டம். இதிலே என்ன பிரச்சினை என்றால், அணையைக் கட்டிக்கொண்டு வருகிறார்கள். கட்டிக்கொண்டு வந்த அணை பக்கத்திலே இருக்கிற ஒரு பாரஸ்ட் லேண்டிலே முட்டுகிறது. அவர்கள் சொன்னார்கள் முட்டக்கூடாது என்று. இதற்கு அணைகட்டுகிறவர்கள் என்ன பண்ணினார்கள் என்றால் அது முட்டாமல் ஒரு அரை அடி கேப் விட்டுக் கட்டிவிட்டார்கள். இதுமாதிரியான நிலைமைகளையெல்லாம் நினைத்துப் பார்த்திருக்கிறீர்களா? இந்தத் திட்டத்திற்கு மறுபடியும் எல்லாப் பிரச்சினைகளையும் தீர்த்து வைத்து இன்றைக்கு 26 கோடி ரூபாய்க்கு ஒரு டெண்டர் விட்டு வேலையைத் துரிதப்படுத்தியிருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி).

அதேபோல், கொடுமுடியாறு திட்டம். இந்த கொடுமுடியாறுத் திட்டம் பற்றி யாரும் பேசவே இல்லை. நான்தான் நம்முடைய உறுப்பினர் மோசஸ் அவர்களுடன் பேசினேன், நிலம் எல்லாம் நீங்கள் தான் வைத்திருக்கிறீர்களே, நீங்கள் கொடுக்கக் கூடாதா என்று. எங்களை யாரும் கேட்டதே இல்லை. கேட்ட முதல் மந்திரி நீங்கள்தான் என்று சொன்னார். சரி, நாங்கள் உடனே பேச்சுவார்த்தைக்கு ஏற்பாடு செய்திருக்கிறோம். ஆனால் கால்வாயை மட்டும் வெட்டி முடித்துவிட்டோம் என்றார்கள். கால்வாயை இன்னும் வெட்டி முடிக்கவில்லை. வெட்டிவிட்டதாகச் சொல்லப்பட்டது. அதிலே பல பேர் கொள்ளையடித்துக் கோடிக்கணக்கில் வாங்கிக்கொண்டு போனார்கள். விஜிலன்ஸ் என்கொயரி நடக்கிறது.



அதேபோல, சண்முகா நதித்திட்டம். அந்தத் திட்டமும் அப்படித்தான் எம்.ஜி.ஆர். காலத்திலே ஆரம்பிக்கப்பட்டது. ஆனால் திரும்பிப்பார்க்க ஆளில்லை. கலைஞர் அவர்கள்தான் ஒரு கோடி ரூபாய் கொடுத்து மறுபடியும் அந்தத் திட்டத்தை ஆரம்பித்திருக்கிறார்கள்.

அதேபோல, இருக்கன்குடி வைப்பாற்றில் அர்ச்சனா நதி இரண்டையும் சேர்த்துக் கட்டுகிற திட்டம். எந்த இடத்தில் அணை கட்டுகிறது என்றே யாரும் நினைத்துக்கூட பார்க்கவில்லை. ஆனால், கால்வாயை வெட்டிவிட்டார்கள். நான் போய் கலெக்டரைக் கூப்பிட்டுப் பார்த்தேன். கால்வாயை எப்படி வெட்டினீர்கள் என்று கேட்டேன். இந்தப்பக்கம் தான் அணை வரும் என்று ஒரு குத்துமதிப்பு வைத்து வெட்டிவிட்டார்கள். இந்தக் கொடுமையைப் பார்த்தீர்களா? ஒரு குத்துமதிப்பு, 16 கோடி ரூபாய் அவுட், இட்டத்தட்ட போய்விட்டது. உடனே, இப்போது கலெக்டரைக் கூப்பிட்டு எங்கு கட்டலாம் என்று கேட்டு, லேண்ட் அக்யூசிஷன் வரும், அதுவும் இன்று அறநிலையைத் துறைக்குச் சொந்தமான இடம். உடனே கலெக்டரைக் கூப்பிட்டுப் பேசினேன். இப்போது லேண்ட் அக்யூசிஷன் எல்லாம் வேகமாக நடந்து அணை கட்டுவதற்கு வேண்டிய நடவடிக்கை எடுக்கப்படுகிறது. நான் எதற்கு இதைச் சொல்கிறேன் என்றால், நாங்கள் வேகமாகப் பணியாற்றி, புதுப்புதுத் திட்டங்களை நிறைவேற்றுவது மட்டுமல்ல, புதைப்பொருளுக்குப் போய்விட்ட திட்டங்களை மீண்டும் கொண்டுவந்து நிறைவேற்றுகிற காரியத்தைச் செய்கிறோம்.

அதேபோன்று நம்முடைய சாதனைகளிலே மகத்தான ஒன்று, இன்றைக்கு கடைசியாகப் பேசிய உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டார்கள், கிருஷ்ணா நதிநீர்த் திட்டம். அந்தத் திட்டத்தை 1983 ஆம் ஆண்டிலேயிருந்து வரும், வரும் என்று சொல்லிக் கொண்டிருந்த திட்டத்தை ஒரு நிலையிலே கொண்டுவந்து நாங்கள் சென்னை மாநகரத்திற்குக் கொடுத்திருக்கிறோம். ஆனால் அதிலே சிலபேர் சொல்லலாம், வேண்டாதவர்கள் சொல்லலாம், அது வரவில்லையே, நின்றுவிட்டதே என்று. எந்தவொரு நீர்ப்பாசனத் திட்டத்திலும் புதிய கால்வாயிலே தண்ணீர் விடுகிறபோது சில டிஃபெக்ட்கள் வரும். இந்த கான்ட்டூர் கனால் என்பதைப்போல மலையை உடைத்து தண்ணீர் எடுத்து வருகிறபோது, மேலே இருக்கிற பாறையை வெடிவைத்து எடுத்துவிட்டார்கள். கீழே இருக்கிற பாறைகளின் மூலமாக தண்ணீர் கசிந்துபோய்விடுகிறது. இது எல்லா இடத்திலும் ஏற்படும். பேச்சிப்பாறை, பெருஞ்சாணியிலே இன்றைக்கும் கசிவு ஏற்பட்டுக் கொண்டுதான்

இருக்கிறது. கான்ட்டூர் கனால், கோயம்புத்தூரிலே பிஏ.பி.-யிலே இருக்கிறது. 5 டிஎம்.சி. தண்ணீர் வீணாகப் போய்க் கொண்டிருக்கிறது. 40 கோடி ரூபாய்க்கு நாங்கள் அதைப் புதுப்பித்துக்கொள்ள இப்போது திட்டம் தீட்டியிருக்கிறோம். பக்ராநங்கலிலே கட்டப்பட்டதிலேகூட அன்றைக்கு வெடிப்பு ஏற்பட்டுப் போய்விட்டது. இது மணல் கால்வாய். லைனிங் அல்ல. எனவே, நாம் அதிலே வெடிப்பு ஏற்பட்ட உடனே, நனைந்த ஆட்டுக்கு நரி ஒத்துக்கொண்டதைப் போல, அதே நேரத்திலே மழை பொழிந்துவிட்டது. இருந்தாலும் அந்த மாநிலத்தினுடைய முதல்வர் மாண்புமிகு சந்திரபாபு நாயுடு அவர்கள், இன்றைக்கு காண்டிராக்ட் விட்டு அவருடைய நேரடி மேற்பார்வையிலேயே கால்வாய்களை வெட்டுகிற பணி வேகமாக நடந்து கொண்டிருக்கிறது. ஜூலைத் திங்களுக்குள் சென்னை மாநகரத்திற்கு கிருஷ்ணா நதிநீர் வந்துசேரும். யார் எங்களைப் பற்றி எது சொன்னாலும் செய்கிற பணியைத் திருந்தச் செய்திருக்கிறோம் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். சென்னை மாநகரத்தைப் பொறுத்தவரையில் இப்போது ஒரு நாளைக்குத் தருகின்ற தண்ணீர் 44 கோடி லிட்டர் தண்ணீர் என்று கலைஞர் அவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள். எனவே இப்போதிருக்கிற நிலையிலே எந்த பங்கமும் இல்லை. இனிமேல் சென்னைக்குக் குடிநீர்ப் பிரச்சினை எந்தக் காலத்திலும் வராது. (மேசையைத் தட்டும் ஒலி) அதற்கு அடிக்கல் நாட்டியவர் கலைஞர் அவர்கள் என்பதை நான் இங்கே தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டவனாக இருக்கிறேன்.

அடுத்து, இங்கே நண்பர்கள் எல்லாம் பல குறைகளைச் சொன்னார்கள். இங்கே பேசியவர்கள் சிலதைச் சொன்னார்கள் என்றால், உட்கார்ந்து கொண்டிருக்கிறவர்கள்தான் பல கோரிக்கைகளைச் சொன்னார்கள். நம்முடைய திரு. சுப்பராயன் அவர்கள் உட்கார்ந்துகொண்டு அவிநாசித் திட்டத்தை விட்டுவிடாதீர்கள், விட்டுவிடாதீர்கள் என்றார். அவிநாசித் திட்டம் என்பது பவானி ஆற்றிலே அதிகமான நீர் வருகிறபோது அங்கேயிருந்து கொண்டுவந்து சுற்றியிருக்கிற, காரமடை, திருப்பூர் மற்றுமிருக்கிற அவினாசி, புஞ்சைப் புளியம்பட்டி, பெருந்துறை இவைகளுக்கெல்லாம் தண்ணீர் கொடுக்கிற திட்டம். ஒரு 134 முதல் 137 கோடித்தான் அதற்கு தேவைப்படும். அந்தத் திட்டம் அரசினுடைய பரிசீலனைக்கு வந்திருக்கிறது. முதலமைச்சர் அவர்களோடு கலந்து பேசி அதற்கு வேண்டிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை நான் உங்களுக்குத் தெரிவிக்கக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன்.



பிற்பகல் 1-40

இங்கே எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் உட்கார்ந்து இருக்கிறார்கள். அவருடைய தொகுதியில் ஒரு திட்டத்தை 1991-ல் அறிவித்தார்கள். அந்தத் திட்டத்திற்கு தலையும் கிடையாது வாலும் கிடையாது. அணையா, ரெகுலேட்டரா, சும்மா விடுவதா, ஒன்றும் கிடையாது. ஒரு நாள் என் ரூமிற்கு திடீரென்று அவர் வந்தார். 12 மணி இருக்கும், என்ன சார் என்று கேட்டேன். எங்களுடைய திட்டத்தை நீங்கள் மறுபடியும் சேர்த்துப் பண்ண வேண்டுமென்று கேட்டார். என்ன செய்ய வேண்டுமென்று கேட்டேன். எதையும் நேரடியாகப் பார்த்தால்தான் எனக்கு ஒரு தெளிவு வரும். உங்களை அங்கே கூப்பிடுவதற்காகத்தான் வந்தேன் என்றார். நாளைக்கு இதே 12 மணியளவில் நான் கமுதியில் இருப்பேன் என்று சொன்னேன். அவருக்கு ஒன்றும் புரியவில்லை. என்ன நாளைக்கேவா என்று கேட்டுவிட்டு, நான் வேகமாகப் போகிறேன் என்று அவர் போனார். உடனே அங்கே போய்ப் பார்த்தேன். அந்தத் திட்டம் எப்படி என்று கேட்டால், மேலே ஒரு நதி வரும். அது கௌண்டா நதி. கௌண்டா நதிக்குக் கீழே வந்தால் சென்னம்பட்டி அணைக்கட்டு. சென்னம்பட்டி அணைக்குக் கீழே வந்தால் மண்டலமாணிக்கம் அணைக்கட்டு. உடனே குண்டாறு என்று பெயர் வந்து விடும். ஒரே ஆற்றுக்கு மூன்று பெயர் வரும். கௌண்டா நதி என்று வருகிறது சென்னம்பட்டி அணைக்கட்டு வரையில், சென்னம்பட்டி அணைக்கட்டிலிருந்து மண்டலமாணிக்கம் வரும்போது குண்டாறு என்று பெயர் வந்துவிடும். குண்டாறுக்குக் கீழே வந்தால் கமுதி ரெகுலேட்டர். மண்டலமாணிக்கம் அணைக்கட்டிலே நாராயண காவேரி பிரியும். அன்றைக்கே சொல்லிவிட்டேன். கமுதி ரெகுலேட்டரிலிருந்து ரெகுநாத காவேரி பிரியும். கீழே வந்தது என்றால் செங்கமடை என்று ஒரு ஊர். அந்த ஊரிலேதான் அணை கட்டுவது. அங்கே நேராக வீரகனூருக்கு மேலே இருதுமால் நதி, பார்த்திபனூருக்கு மேலே ஒரு நதி வந்து, மூன்று நதிகள் ஒன்றாகச் சேர்கின்றன. அங்கே என்ன பிரச்சினையென்றால், ஒரு சின்ன அணைக்கட்டு கட்டி இரண்டு பக்கமும் தண்ணீர் பிரிந்து போக வேண்டும். நான் இது சரியாக வரவில்லையே, 3 அணை வருகிறதே என்று சொன்னேன். அதைத்தான் நானும் சொல்கிறேன் என்று சொன்னார். இது மூன்று விதம். அதை அப்படியே கட்டினால் 23 கோடி ரூபாய். மலட்டாறு வரை கட்டினால் 25 அல்லது 26 கோடி ரூபாய். இதையும் சேர்த்து அணையாகக் கட்டினால் 40 கோடி ரூபாய். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களைக் கேட்கிறேன். மாண்புமிகு முதல்வர் அவர்கள் உங்கள்பால் கனிவுகொண்டு பணம் தரலாம்.

ஆனால் நான் கேட்பது, ஆயிரம் ஏக்கருக்கு மேலே அங்கே அக்குவயர் பண்ணவேண்டும். அதற்கு நீங்கள் பொறுப்பேற்றுக் கொண்டு எங்களுக்கு வாங்கித் தருவீர்களானால் நாங்கள் அந்த அணையை கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்க முடியும். அதற்கு மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும், அந்தப் பக்கத்திலிருந்து நித்தம் நித்தம் வந்து என்னைக் கேட்டுக்கொண்டு இருக்கிறீர்களே பல உறுப்பினர்கள் - அங்கேயிருந்து வேல்சாமி கையைத் தூக்குகிறார், இந்தப் பக்கம் சுப. தங்கவேலன் கேட்கிறார், திரு. தங்கபாண்டியன் அவர்களும் கேட்கிறார்கள், எல்லோரும் கேட்டுக் கொண்டிருக்கிறீர்கள். அதை அக்குவயர் பண்ணும்போது லேட் ஆகிவிடுகிறது. மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லோரும் சேர்ந்து ஒத்துழைத்தால்தான் முடியும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கையிலே இருக்கிறது அதற்கு உத்தரவு அளிப்பது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர்.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எல்லாம் புஞ்சைக் காடுதான் என்பதால் ஜனங்களே கொடுக்கத் தயாராக இருப்பார்கள். நாங்கள் அந்தப் பகுதி சட்டமன்ற உறுப்பினர்கள் சேர்ந்து வெகுவிரைவில் அதை அரசாங்கம் எடுத்துக் கொள்வதற்கு உறுதுணையாக இருப்போம் என்று கூறி, தயவுசெய்து அந்த மலட்டாறு திட்டத்தை இந்த ஆண்டே நிறைவேற்றிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** தலைவர் அவர்களே, வாக்குறுதி தந்தவர் எதிர்க்கட்சித் தலைவர், வழங்க வேண்டியவர் முதல்வர், அடியேன் கடமை வேலை செய்வதுதான். (சிரிப்பு)

அதைப்போல மாண்புமிகு அமைச்சர் தமிழ்க்குடிமகன் அவர்கள் இங்கே உட்கார்ந்து கொண்டு ஆர்.எஸ். மங்கலம் என்னவாயிற்று என்று கேட்கிறார். ஆர்.எஸ். மங்கலத்தில் மேலக்கால், கீழக்கால் என்று இரண்டு உண்டு. இரண்டும் தூர்ந்து போயிருக்கின்றன. எனவே, இரண்டு கால்களையும் எடுத்துக் கொள்வதற்கு இந்த அரசு நடவடிக்கையெடுக்கும் என்ற உறுதியை நான் அவருக்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன்.

நான் அன்றைக்கே குறிப்பிட்டேன். நாராயணகாவேரிக்கு 435 லட்சம் ரூபாய்க்கு ஒரு மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருக்கிறது என்று தெரிவித்தேன். ரெகுநாத காவேரிக்கும் வாய்க்காலைப் புதுப்பிக்க வேண்டும் என்று



திரு. தங்கவேலன் அவர்களும் மற்றவர்களும் கேட்டுக் கொண்டார்கள். 105 லட்சத்திற்கு ஒரு மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருக்கிறது. சங்கரத்தேவன் அணைக்கட்டுக்கு இன்றைக்கு 45 லட்சம் ரூபாய்க்கு ஒரு திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கிறது என்பதை மகிழ்ச்சியோடு அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அடுத்து, நந்தன் கால்வாய்த் திட்டம் பற்றி நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் சம்பத் அவர்கள் சொன்னார்கள். அந்த நந்தன் கால்வாய்த் திட்டம் அவருடைய தந்தையார் காலத்தில் கேட்டது. கலைஞர் அவர்கள் பொதுப்பணித் துறை அமைச்சராக இருந்தார். இப்போதுகூட கலைஞர் கேட்பார் நந்தன் கால்வாய்த் திட்டம் என்னவாயிற்று என்று. எனவே அவர் மகிழத்தக்க வகையில் ஒரு கோடி ரூபாய் தந்திருக்கிறார், முதல்வர் அவர்கள். மேற்கொண்டு அவர் கேட்பது பனைமரத்து ஏரியிலிருந்து கீழே போக வேண்டுமென்று கேட்கிறார். அதற்கும் ஆய்வு நடத்தி எடுத்துக் கொள்ளப்படும் என்ற மகிழ்ச்சிகரமான செய்தியை திரு. சம்பத் அவர்களுக்கு நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 1-45

நம்முடைய மணி அவர்கள் மாம்பழத்துறையாறு திட்டத்தையும் முல்லையாற்று திட்டத்தையும் பற்றித் தெரிவித்தார்கள். மாம்பழத்துறை ஆறு திட்டத்தை கலைஞர் அவர்கள் 1991-ல் இருக்கிறபோதே பட்ஜெட்டில் படிப்பதற்காக அன்றைக்கு இணைத்தார்கள். அப்போது திரு. நூர் முகம்மது என்பவர் இருந்தார். அவர் பேசுகிறபோது எல்லாம் மாம்பழத்துறை ஆறு தவிர வேறு எதையும் பேசமாட்டார். அவருடைய தொல்லை பொறுக்காமல் கலைஞர் அவர்கள் அதைச் சேர்த்து முடித்து விடுங்கள் என்று சொன்னார். நான் அந்தத் திட்டத்திற்காக கடுமையான வெயிலில் மூன்று மைல் தூரம் நடந்து போய் பார்த்தேன். திரு. மணி அவர்கள் பார்த்துவிட்டு நான் திருவனந்தபுரம் போகிறேன் என்று சொல்லி ஒரு சீட்டு கொடுத்து விட்டுச் சென்றார். அந்தத் திட்டம் தற்போது அரசினுடைய பரிசீலனையில் இருக்கிறதென்பதை மட்டும் நான் அவருக்குத் தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டவனாக இருக்கிறேன்.

அடுத்து இங்கு கொடுத்திருக்கிற திட்டங்களில் ஒன்று நம்முடைய திரு. திருநாவுக்கரசு அவர்கள் கொடுத்தது. உட்கார்ந்த இடத்தில் இருந்து இப்போதுதான் வந்தேன், எனக்காக வேறு ஆள் பேசுவார், நான் ஒரு

திட்டம் கொடுத்து இருக்கிறேன், அதாவது மருதமுடி அணைக்கட்டு திட்டத்தை அரசு பரிசீலனை செய்ய வேண்டுமென்று திரு. திருநாவுக்கரசு கேட்டுக் கொண்டிருக்கிறார். நிச்சயம் பரிசீலனை செய்வோம், அதிலே எந்த ஆட்சேபணையும் இல்லை.

நம்முடைய தூத்துக்குடி திரு. பெரியசாமி அவர்கள் பக்கிள் கால்வாயை சீர் செய்து தரவேண்டுமென்று கேட்டார். இது அர்பன் டெவலப்மென்ட் ஸ்கீமில் வருகிறது. ஏனென்றால் பொதுப் பணித் துறை என்ன செய்யும் என்றால்-ஒரு ஏக்கருக்கு தண்ணீர் அதிலே பாய்ந்தால் தான் அது பொதுப்பணித் துறையென்று கருதுவார்கள். இது ஊருக்குள்ளே சுற்றுகிறது. இது அர்பன் டெவலப்மென்ட்-இல் தான் வரும். அதுவும் கொஞ்சமான பணம் இல்லை. அது கிட்டத்தட்ட 5-6 கோடி ரூபாய்க்கு மேலே வரும்போல இருக்கிறது. ஆகையினால் மாண்புமிகு அமைச்சர் அண்ணன் கோ.சி.மணி மற்றும் முதலமைச்சர் அவர்கள்தான் இதுகுறித்து முடிவு எடுக்க வேண்டும் என்பதை நான் அவருக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, இந்த இடத்தில் பத்து அறிவிப்புகளை அறிவித்து விட வேண்டுமென்று நான் கருதுகிறேன். அந்த அறிவிப்புகளுக்கு முன்னர் ஒன்று. நீங்கள் எல்லோரும் என்னைப் பற்றிச் சொன்னீர்கள். துரைமுருகன் பெயர்களை விரலில் வைத்திருக்கிறார், ஞாபகம் வைத்திருக்கிறார் என்று. என்னுடைய தலைவரோடு ஒப்பிட்டால் இது நத்திங். அவருக்கு இருக்கிறது சூப்பர் கம்ப்யூட்டர். அவரிடம் ஒன்றும் பண்ணவே முடியாது. நீங்கள் பாராட்டியதை பெரிய பாஸ் மார்க் என்று நான் நினைக்கலாம். அங்கே எனக்கு பாஸ் மார்க் வராது. என்ட்ரன்சுக்கே நான் போகமாட்டேன். நானாவது இதே வேலையாக இருக்கிறேன், வேறு வேலையில்லை. இந்த ஒரு துறையைப் ப்ார்த்துவிட்டு போவது, வருவது என்றிருக்கிறேன், எனக்கு ஞாபகம் இருக்கலாம். ஆனால் அவர் ஒரு அரசியல் கட்சியை நடத்துகிறார், அதற்குப் பிறகு பல இலாக்காக்களைப் பார்க்கிறார். என்னை விட இந்தப் பொதுப்பணித் துறையின்-ஆறுகளும் ஏரிகளும் அவருக்கு மனதிலே அதிகமாக குடிகொண்டு இருக்கிறது. அந்தப் பெயர்களும், அந்த இடங்களும் எந்த அளவுக்கு ஞாபகத்திலே இருந்தால், நின்று அவை நிலைப் பெற்று, நிலைப் பெற்ற அவையெல்லாம் அவருக்கு ஒரு கற்பனையை உருவாக்கி, கற்பனை வந்து கவிதையாக மலரும் என்பதை நீங்கள் நினைத்துப் பார்க்க வேண்டும். நம்முடைய மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இருக்கிறார். கலைஞருக்கு இந்தப் பொதுப்பணித் துறையிலே எவ்வளவு இன்வால்வ்மெண்ட் இருந்தால், அந்த ஆறுகளையெல்லாம்



சேர்த்து ஒரு கதையைக் கவிதை வடிவிலே வடித்து இருப்பார். அதற்கு எவ்வளவு பெரிய ஆற்றல் வேண்டும் என்று பாருங்கள். சாதாரணமாக, எல்லா ஊரிலே இருக்கிற ஆறுகளையும் கொண்டு வந்து சேர்க்க வேண்டும். மண்ணிற்கு அடியிலே பிறந்த பொன், மலையிலே பிறந்த முத்து இதெல்லாம் மட்கலம் ஆகுங்கால் ஒன்றாகச் சேரும் என்று சங்கப்பாடல் ஒன்றிருக்கிறது. அதே போல் அந்த ஆறுகளையெல்லாம் இணைத்து ஒரு காதல் கதையை பண்ணுகிறார்கள் பாருங்கள். வேறு கதையை பண்ணினால்கூட இனிக்காது. இது ஒன்றுதான் ஜாலியாக இருக்கும். இந்த நேரத்தில் இதைச் சொன்னால்தான் உங்களுக்கும் இனிக்கும். புறநானூறு என்று சொன்னால் பசிக்கிறது என்று சொல்வீர்கள். அதனால் சொல்கிறேன். அவர் சொல்கிறார் "குடமுருட்டி காவிரிப் பெண் ஆடுகின்ற காட்சி கண்டு" -குடமுருட்டி என்பது ஆறு. இது திருக்காட்டுப்பள்ளிக்கு பக்கத்திலே அங்கிருந்து காவிரியிலே பிரியும். அந்தக் குடமுருட்டி, அப்படியே ஆடுகிறாள், முதலில் எடுத்த உடனேயே சீன், கிளைமாக்சிற்கு வருகிறார், பாருங்கள். ஒரு பெண் குடத்தை வைத்துக்கொண்டு இப்படி, இப்படி ஆட்டுகின்றாள் என்று சொன்னால் அவள் உள்ளத்திலே ரொம்ப ஜில் ஜில் என்று இருக்கிறாள் என்று அர்த்தம். (சிரிப்பு) குடமுருட்டி-உருட்டினாள். போனால் தண்ணீர் எடுத்துக் கொண்டு வர வேண்டியதுதானே. இல்லை, இவளுக்கு குஷி. "தனன, தனன, தனன" வென்று குடமுருட்டி (சிரிப்பு) குடத்தை உருட்டி, காவிரிப்பெண் ஆடுகின்ற காட்சி கண்டு-இதைப் பார்த்து விட்டான், பார்த்த உடனே "காதல் கொள்ளிடம்" இதுதான் என்று-நல்ல பீக் டைமிலே நிற்கிறான். காவிரிப்பெண் குடத்தை உருட்டிக் கொண்டு இருக்கிறாள். இவள் ரொம்ப மகிழ்ச்சியாக இருக்கிறாள். இப்போது தான் லவ் செய்வதற்கு சரியான நேரமென்று, காதல் கொள்ளிடம், கொள்ளிடம்- காதல் கொள்-இடம் இதுதான் என்று வீர சோழன் வருகிறான் ஓடம் போக்கி.

பிற்பகல் 1-50.

வீரசோழன் என்பது ஒரு ஆறு. அதை ஹீரோவாக்கிவிட்டார். கும்பகோணத்திற்குப் பக்கத்திலே இருக்கிறது வீரசோழன் என்கிற ஆறு. எதிரே வருகிறான், ஓடம் போக்கியிலே. அது அவர் ஊரிலே இருக்கிறது; திருவாரூரிலே இருக்கிறது. வீரசோழன் வருகிறான் ஓடம் போக்கியிலே. எதற்கு? காதல் கொள்ளிடம், காதல் பண்ணுவதற்கு, வந்தவுடனே சொல்கிறான் பாருங்கள். எப்பவுமே காதலிலே இவன்தான் பெண்ட் ஆவான். பெண்கள் முதலிலே பெண்டாகாது.(குறுக்கீடு) எனக்குத்

தெரியாது. (சிரிப்பு) காதலைப் பற்றிப் படித்திருக்கிறேன் நான். வந்தவுடன் சொல்கிறான், பாருங்கள். "என் மேல் வை கை என வளைகிறான்". "என் மேல் வை கை என வளைகிறான்", வைகைக்குக் கொண்டு வந்து விட்டார், பாருங்கள். இங்கு இருந்தார். திருக்காட்டுப்பள்ளியில் எடுத்தார் காவிரியை எடுத்தார், வீரசோழனுக்குப் போனார், திருவாரூருக்கு வந்தார், நேராக வைகைக்குக் கொண்டு வந்தார். 'வை கை என வளைகிறான்'.

அடுத்த சென்டன்சுக்குப் போகிறார். 'உன் பல் மணிமுத்தா' என நெளிகிறான். இங்கே சவுத் ஆற்காட்டிற்கு வந்து விட்டார். மணிமுக்தா நதிக்கு வந்து விட்டார்; கள்ளக்குறிச்சி பகுதிக்கு வந்துவிட்டார். 'உன் பல் மணிமுத்தா' என நெளிகிறான். அவள் ஒன்றும் நெளியவில்லை. இவனே சொல்லிக்கொள்கிறான், 'வை கை' என்று இவனே சொல்கிறான். 'மணி முக்தா' என நெளிகிறான். இப்போது இவன், பிடிபடாது போய்விட்டான். அந்தக் கதையை எப்படிக் கொண்டு வருகிறார், பாருங்கள். அவ பாருங்க, ரொம்ப கெட்டிக்காரி. இவ்வளவையும் மனதிலே அடக்கிக் கொண்டு, காவிரியோ, கண் சிமிட்டி (சிரிப்பு), 'என் மண்ணியார் வருகிறாள் மறைந்திடுக அத்தான்' என்றாள். இரண்டு அடித்துவிட்டார். அத்தான் என்று சொன்னவுடன் 'ஆபர் அக்சப்டட்', (சிரிப்பு) 'ஆபர் அக்சப்டட்'. அடுத்து 'மண்ணியார் வருகிறாள், மறைந்திடுக அத்தான்' என்றாள். எப்போதுமே யாராவது வருகிறார்கள் என்றால் இவன் விட்டுவிட்டு ஓடிடுவான். ஆனால், இவன் துணிந்த கட்டை போல இருக்கு. இந்த மண்ணியார் என்பது கபிஸ்தலம் பக்கத்திலே ஒரு இடத்தில் இருக்கிறது. கூட்டணியை அப்பவே ஆரம்பித்து வைத்திருக்கிறார். கபிஸ்தலம் பக்கத்திலே மண்ணியார் போகிறது. திருவாரூர் ஓடம் போக்கியிலே வந்து இறங்கி, கபிஸ்தலம் போய்விட்டார். 'மறைந்திடுக அத்தான்' என்றாள். அவனோ, 'வரட்டுமே மண்ணியார், நம் காதலுக்கு அவள் என்ன கல்லணையா?' கல்லணைக்கு வந்து விட்டார், நேராக. 'அவள் என்ன கல்லணையா'. 'காமினி, பாமினி, நாமினி, காதலர்கள்'. இது தஞ்சாவூர்க்காரர்களுக்குத் தெரியும். பாமினி என்பது ஒரு ஆறு. அது நீடாமங்கலத்திற்குப் பக்கத்திலே கோரையாறு-மரங்கையார்-கோரையாறிலிருந்து ஆரம்பித்து, நேராகப் போய், பரவாக்கோட்டைக்குப் போய் நேராக இப்படிப் போகும் அந்த ஆறு. இல்லையா சிவபுண்ணியம். ரைட், தெரிந்து கொள்வதற்காகக் கேட்டேன். அது பாமினி. இந்த காமினி என்று ஒன்று போட்டார் பாருங்கள். இந்த காமினி என்பது ஒரு ஆறு இல்லை. சில பெண்களுக்கு வீட்டிலே ஒரு பேர் இருக்கும். பத்மினி என்று சொல்வார்கள். ஆனால் சினிமாவிலே பப்பி என்று சொல்வார்கள். அது செல்லப் பேர். அந்த மாதிரி 'பாமினி, காமினி,



நாமினி காதலர்கள்'. மண்ணியார் வரட்டும் அவளிடம் சொல்லிவிடு, 'ஆ' இனி திருமணம் என்று பிறருக்குச் சொல்லிவிடு'. இவன் 'டிக்ளேர்' பண்ணிவிட்டான். இந்த ஆறுகளை எல்லாம் எப்படிக் கொண்டு வருகிறார், பாருங்கள். திருமணம் என்று சொன்னவுடனே, அடுத்த ஸ்டெப்பிற்குப் போகிறான் பாருங்கள். 'திருமணம் என்று பிறருக்குச் சொல்லி விடு, காதல் அக்கினி ஆறாமோ கண்ணே, அருகில் வந்துவிடு'. இதை இன்னும் கொஞ்சம் நல்லா பிரித்துப் பார்க்கணும் 'காதல் அக்கினி ஆறாமோ.' அக்கினி ஆறு. அது எங்கே இருக்கிறது. புதுக்கோட்டையிலே பரமக்குடி பக்கத்திலே அக்கினி ஆறு, அணைக்கட்டு என்று ஒன்று உண்டு. தஞ்சாவூரிலேயிருந்து சென்று கடலிலே போய் கலக்கிறது. இந்த 'அக்கினி ஆறாமோ, காதல் அக்கினி ஆறுமோ. பிரித்து இருக்கிறார் பாருங்கள், அடுத்தது சொல்கிறார், வீரனுக்கு பாருங்கள். 'காதல் அக்கினி ஆறுமோ கண்ணே, அருகில் வா'; காதல் அக்கினி ஆறாது. எப்போது ஆறும். அருகில் வந்தால்தான் ஆறும். அதனால் தான் 'காதல் அக்கினி ஆறுமோ. அருகில் வந்துவிடு. (சிரிப்பு) அப்போதும் அவள் 'தம்' கட்டுகிறாள், பாருங்கள். அவளோ (சிரிப்பு) 'யாரும் நம் மீது தப்பெண்ணார்'. 'அத்தான் யாரும் நம் மீது தப்பெண்ணார்'. பெண்ணாறு. 'நம் காதல் பிரிக்க வெண்ணார்'. வெண்ணாறு. 'பிறர் வெட்டார்'. வெட்டாறு. 'வெட்டார்' நம் உறவை என்றும் எனினும் அத்தான், வெட்கமென்னைத் தடுக்கிறது என்றாள். இவ்வளவு நேரம் பேசியதற்குப் பின் இப்போதுதான் வெட்கம் வந்திருக்கிறது, பாருங்கள். சரி வரட்டும். 'வீரசோழன் விரைந்து அணைத்துக் கொண்டவாறு, 'பாலாறு முன்னே பருகிடுவோம் வா' என்றான். நம்ம ஊருக்கு வந்துவிட்டார், ஞானசேகரன். பாலாறு முன்னே. இதிலே இரண்டு அர்த்தம். 'பால் ஆறு முன்னே பருகிடுவோம் வா!. அடுத்தது பாலாறு முன்னே: பாலாறு இருக்கிறது அல்லவா, அதற்கு முன்னே போய் விடலாம்,' ஏன்னா, அங்கேதான் எவனும் வர மாட்டான். (சிரிப்பு) தண்ணீர் எதுவும் இருக்காது பாருங்கள். (சிரிப்பு)

பிற்பகல் 1-55

காதலர்கள் ஆள் இல்லாத இடத்தைத்தான் தேடுவார்கள். நீங்கள் பாருங்கள். பீச்சிற்கு மத்தியானம்தான் போவான். ராத்திரி போகமாட்டான். (சிரிப்பு) பாலாறு முன்னே வா என்றான். இன்னொன்றையும் பாருங்கள். நேராகப் போகிறான், பாருங்கள். எங்கே? கொடைக்கானல் மலைக்கு அடியில் மஞ்சளாறு. மஞ்சளாறு முகவரியும், மஞ்சள். மஞ்சளாறை அவவாக்கி, அதற்கு ஒரு அருவி செய்து போட்டார்கள். மஞ்சளாறு முகவரியும், அவர் மடி மீது சாய்ந்தபடி, இப்போதுதான் கேட்கிறாள்.

மணம் எப்போது அத்தான் என்றாள். திருமணம் என்று சொல்லிவிட்டான் இல்லையா? கப்பென்று பிடித்துக் கொண்டு விட்டாள். எப்போது என்று அவன் சொன்னான், பெரியார் தலைமையிலே பெரிதாக நடக்கும் என்றான்.(சிரிப்பு) இந்த ஆறுகளை இப்படிப் பின்னி எடுக்கிறவா கிட்டே போய் துரைமுருகன் மினி கம்ப்யூட்டர், விரலில் வைத்துக் கொண்டிருக்கிறான் என்று சொன்னால், நான் எங்கே போய் நிற்பது! எனவே அவரிடத்திலே பணியாற்றுவதில் எனக்கு மகிழ்ச்சி.

கடைசியாக 10 அனௌன்ஸ்மெண்டுகள். என்னவென்றால்- கலைஞர் அவர்கள் பாசனத்திலே உரையாற்றுகின்றபோது சொன்னார்கள், பட்ஜெட்டிலே. "பாசன மராமத்துப் பணிகளை விவசாயிகளே மேற்கொள்ளும் குடிமராமத்து முறை செயலற்றுப் போய், நீர்ப் பாசனப் பராமரிப்புப் பணிகளுக்கு அரசையே சார்ந்திருக்கின்ற நிலை ஏற்பட்டுள்ளது. எனவே விவசாயிகள் மராமத்துப் பணிகளில் படிப்படியாக பங்கேற்கக் கூடிய வகையில் தமிழ்நாடு நீர்வளத் தொகுப்புத் திட்டத்தின் கீழ் விவசாயிகள் அமைப்புகள் உருவாக்கப்படும். இவ்வமைப்புகளுக்கு பொதுப் பணித் துறை அலுவலர்கள் தக்க தொழில் நுட்ப உதவிகளை வழங்குவார்கள்" என்று தெரிவித்தார். இதற்காக பொதுப்பணித் துறை (பாசனம்) திருச்சியிலே பாசன மேலாண்மை பயிற்சி நிலையமும், துவாக்குடியில், திருவாரூரிலே இருக்கிற நிலையமும் இந்த மகத்தான நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டு வருகிறது.

இன்னொன்றையும் கலைஞர் அவர்கள் பட்ஜெட்டில் தெரிவித்தார்கள். "புரட்சிகரமான மாற்றங்கள் காரணமாக இந்த பூமிப் பந்தே குக்கிராமம் போல குறுகிக் கொண்டு வருகிறது. அந்தத் துறையில் ஒவ்வொரு ஆண்டும், ஒவ்வொரு மாதமும், ஒவ்வொரு வாரமும் குறிப்பிடும் மாற்றங்கள் தோன்றி, நேற்றைய தொழில் நுட்பத்தைப் பத்தாம் பசலியாக மாற்றிவிடுகின்றன" என்று முதல்வர் அவர்கள் நிதிநிலை அறிக்கையிலே குறிப்பிட்டது பொதுப் பணித் துறைக்கும் பொருந்தும் என்று நான் உணர்ந்த காரணத்தினால் பொதுப் பணித் துறையில் உள்ள பொறியாளர்கள் உலகின் பல்வேறு பகுதிகளிலும் உள்ள நாடுகளிலும் வளர்ந்து வரும் தொழில்நுட்பத்தை அறிவதற்காக தேர்ந்தெடுக்கப்பட்டு, சிலரை வெளிநாட்டிற்கு அனுப்புவது என்று முடிவு எடுத்திருக்கிறது. இதற்காக உலக வங்கி நீர் வள ஆதாரத் திட்டத்தின்கீழ் ரூ. 13.50 கோடி தந்திருக்கிறது. இதன் மூலம் நம்முடைய பொதுப்பணித் துறை பொறியாளர்கள் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் பல்வேறு இடங்களிலும்



பெறுகிற அனுபவத்தையும் நவீன உத்திகளையும் இந்தத் துறையின் வளர்ச்சிக்காக பயன்படுத்துவார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் நான் தெரிவித்துக் கொள்கிறேன்

பொதுப்பணித் துறையை நவீனப்படுத்துதல். பொதுப்பணித் துறையை நவீனப்படுத்தவும் விரைவாக செய்திகளை பறிமாறிக் கொள்ளவும், தொலை தொடர்புச் சாதனங்கள், வாகனங்கள், கணிப்பொறிகள் வாங்குவது என்று முடிவு செய்யப்பட்டு, அதற்காக நீர் வள ஆதாரத் திட்டத்தின் கீழ் ரூ. 25 கோடி ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதன் அடிப்படையில் இந்த ஆண்டு 700 சைக்கிள்கள், 560 மோட்டார் சைக்கிள்கள், 300 கணிப் பொறிகள், 256 ஜீப்புகள், 138 வேன்கள், 16 கார்கள், 3 பிக்-அப் வேன்கள், ஒரு பஸ் வாங்கப்படுகிறது என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

பொதுப்பணித் துறையை நவீனப்படுத்தும்போது கணிப்பொறிகளும், தொலை தொடர்புக் கருவிகளும், புத்தம் புதிய சாதனங்களையும் வைப்பதற்கும், பாதுகாப்பதற்கும் சொந்தக் கட்டிடங்கள் தேவைப்படுகிறது. பெரும்பாலான பொதுப் பணித் துறை அலுவலகங்கள் வாடகை கட்டிடங்களிலேயும், பழைய பாழடைந்த சொந்தக் கட்டிடங்களிலேயும் இருந்து வருகிறது. இந்த நிலையை மாற்றி புதிய பாதுகாப்பான கட்டிடங்களைக் கட்டுவதற்கு நீர் வள ஆதாரத் துறையின் மூலம் உலக வங்கி ரூ. 52.50 கோடி நிதியுதவி செய்திருக்கிறது. இதைக் கொண்டு புதிய கட்டிடங்கள் கட்டப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

நிலத்தடி நீர். தமிழகத்தின் நீர் ஆதாரத்தில், நிலத்தடி நீர் மிக முக்கியமான ஒன்றாகும். நிலத்தடியிலே இருக்கின்ற நீரைக் கண்டறிந்து அந்த வளத்தைத் தெரிவிப்பதால் விவசாயிகளுக்கும் தொழில் முனைவோருக்கும் பேருதவியாக இருக்கும். இத்துறையும் நவீனப்படுத்தப்பட்டு, புத்தம் புதிய கருவிகள் புழக்கத்தில் வந்துவிட்டன. நம்முடைய நிலத்தடி நீர்ப் பிரிவை நவீனப்படுத்தவும், நிலத்தடி நீரை நிலத்தின் மேற்பரப்பு நீரையும் அளக்க புத்தம் புதிய கருவிகள் வாங்கவும் உலக வங்கி ரூ. 38.64 கோடி நிதியுதவி தந்திருக்கிறது.

பாசனக் கண்காணிப்பு. விவசாயிகளுக்கும், நீர்ப்பாசன அதிகாரிகளுக்குமிடையே ஒரு நல்ல ஒத்துழைப்பு, ஒரு நெருக்கம் இருந்தால் தான் பாசன முறை செம்மையாக இருக்கும். இதற்காக இந்த அரசு பாசன கண்காணிப்பு மற்றும் செயல் திட்டம் என்கிற திட்டத்தை

உருவாக்கியிருக்கிறது. இந்தத் திட்டத்தின்படி பொதுப்பணித் துறையைச் சார்ந்த நீர்ப்பாசனப் பிரிவின் உதவிப் பொறியாளர், இளநிலை பொறியாளர் பதவிக்குக் குறையாத ஒருவர், ஒரு வாரத்தில் ஒரு நாள் மாலை 3 மணிக்கு மேல் விவசாயிகளைச் சந்திப்பார்கள். அதன் மூலம் விவசாயிகள் தங்கள் குறைகளை அதிகாரிகளிடத்திலே முறையிடுவார்கள். பிறகு அதன் அடிப்படையில் ஒரு பரிகாரம் காண்பதற்கும் இந்தத் திட்டம் வழி செய்யும். மக்கள் கூறும் குறைகளையும், கருத்துக்களையும் அதிகாரிகள் பதிவேட்டில் பதிவு செய்ய வேண்டும். இந்தப் பதிவேடுகளை உயர் மட்ட அலுவலர்கள் ஆய்வு செய்வார்கள். ஒவ்வொரு வாரமும் திங்கட்கிழமை 3 மணிக்கு மேல் இந்த நிகழ்வு நடைபெறுவதால், இது 'நீர் வாரச் சந்தை' என்று அழைக்கப்படும்.

பிற்பகல் 2-00

ஏரிகள் சீரமைப்பு. தமிழ்நாட்டில் ஏரிகள் மிகப் பழமையானது. காலப்போக்கில் அவையெல்லாம் தூர்ந்து போனதோடு, வரத்துக் கால்வாய்களும் மறைந்து போய்விட்டன. இதனால், மழைக் காலங்களில் ஏரிக்கு நீர் வரத்து தடைப்படுவதோடு மட்டும் அல்லாமல், அப்பகுதியிலுள்ள விளை நிலங்களுக்கு நீர் வராமல் பாதிப்பு ஏற்படுகின்றது. ஏரிகளில் தண்ணீர் தங்கினால்தான் பாசனத்திற்கு அவற்றை எடுத்து முறையாகப் பயன்படுத்த முடியும். இந்தக் கருத்தினை மனதிற்கொண்டு, இந்த மன்ற உறுப்பினர்கள் மற்றும் விவசாயப் பெருங்குடி மக்கள், ஏரிகளுக்குத் தூர் எடுத்து சீர் செய்ய வேண்டும் என்ற கோரிக்கைகளைத் தெரிவித்து இருக்கிறார்கள். இதன் நியாயத்தை உணர்ந்த இவ்வரசு இந்த ஆண்டு முதல் 200 ஏரிகளை எடுத்துக் கொள்ளவிருக்கிறது. எடுத்துக் கொண்ட ஏரிகளுக்கு முழுமையாக தூர் வாரி, கரைகளை பலப்படுத்தி, வரத்துக் கால்வாய்களை ஆழப்படுத்தி, பாசனக் கால்வாய்களைப் பழுதுபார்க்க ஒரு திட்டம் வகுத்திருக்கிறது. இன்றைக்கு 20 கோடி ரூபாயை முதல்வர் அவர்கள் இதற்காக வழங்கியிருக்கிறார்கள் என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி). இந்தப் பணியை மேற்கொள்ள தற்போது பொதுப் பணித் துறையிலுள்ள 24 மண் வாரும் இயந்திரங்களும் பயன்படுத்தப்படும். இப்பணிகள் மேலும் துரிதமாக நடைபெறுவதற்கு 15 கோடி ரூபாய்க்கு 37 மண் வாரும் இயந்திரங்களும் புதியதாக வாங்க திட்டமிடப்பட்டிருக்கிறது.

அடுத்து, காலி பணியிடங்களை நிரப்புவது. பொதுப்பணித் துறையில் நீண்ட நெடுங்காலமாக சுமார் 300 உதவிப் பொறியாளர் பணியிடங்கள்



காலியாக இருககின்றன. அதனால் இவ்விலாக்காவில் பணி குந்தகப்படுகிறது. 'Draftsmen Association' மற்றும் 'Diploma Holders' முறையாக பொறியாளர்களாகப் பணியாற்றுவதில் ஏற்பட்ட ஒரு கருத்து வேறுபாடுதான். அத்துணை இடங்களும் இந்நாள் வரையில் நிரப்பப்படாமல் இருப்பதற்குக் காரணம். இப்பிரச்சினை தீர்ப்பாயம் வரை சென்றதால், இது குறித்து முடிவாகாமல் கிடப்பிலே போடப்பட்டிருந்தது. எனவே, இப்பிரச்சினைக்கு பேச்சுவார்த்தை மூலம் முடிவு கண்டு, முத்தரப்பில் ஒத்துக்கொண்ட பிறகு இந்த 300 பொறியாளர் பதவிகள் நிரப்பப்படும் என்ற மகிழ்ச்சிகரமான செய்தியை நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

பொதுப் பணித் துறையில் குறிப்பாக பாசனத்திற்கு உதவியாக இருப்பவர்கள், பாசன உதவியாளர்கள். இவர்களை 'லஸ்கர்' என்றால் தான் யாருக்கும் தெரியும். மிகப் பெரிய தேருக்கு சிறிய அச்சாணி எவ்வளவு முக்கியமோ, அது போன்று மிகப் பெரிய இந்த இலாகாவிற்கு, இந்த லஸ்கர் அச்சாணியாக இருந்து வருபவர்கள். பொதுப்பணித் துறையில் இந்த லஸ்கர்களின் எண்ணிக்கை 2,502. இதில் 1,424 இடங்கள் பல ஆண்டு காலமாக நிரப்பப்படாமல் காலியாக இருக்கின்றன. இதனால், பாசனப் பகுதிகளில் பல கஷ்டங்கள் உருவாகியிருக்கின்றன. எனவே, இக்குறைகளைப் போக்குவதற்கு பொதுப் பணித் துறையில் 3,031 மஸ்தூர்கள் இருக்கின்றார்கள். மஸ்தூர்களிலிருந்து 1,424 பேருக்கு பதவி உயர்வு கொடுத்து பாசன உதவியாளர்களாக, லஸ்கர்களாக அமர்த்த முதல்வர் கலைஞர் அவர்கள் அனுமதித்திருக்கிறார்கள் என்ற மகிழ்ச்சிகரமான செய்தியையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன். பொதுப் பணித் துறையில் பலபேர் பல ஆண்டுகாலமாக வேலை செய்து வருகிறார்கள். அவர்களை நிரந்தரமாக ஆக்க வேண்டுமென்ற கோரிக்கை நீண்ட நெடுங்காலமாக இருந்து வந்தது. கலைஞர் அவர்கள் முன்பு ஆட்சியில் இருந்த போதுதான் 10 ஆண்டுகாலமாக தொடர்ந்து தினக்கூலியாக இருந்து வந்தவர்களையெல்லாம் நிரந்தரப் பணியாளர்களாக ஆக்க உத்தரவிட்டார்கள். அது மட்டுமல்லாமல் இனிமேல் தினக்கூலி அடிப்படையில் 10 ஆண்டுகாலமாகப் பணி செய்தால், அவர்களை நிரந்தரமாக ஆக்க வேண்டும் என்ற ஒரு ஆணையையும் பிறப்பித்தார்கள். இருந்தாலும், கடந்த ஆட்சியில் இந்த தினக்கூலிப் பணியாளர்கள், 10 ஆண்டுகாலம் கடந்த பின்னும் நிரந்தரப் பணியாளர்களாக அமர்த்தப்படவில்லை. இவ்வாறு, இன்று, இப்படி 10 ஆண்டுகாலத்திற்கு மேல் தினக்கூலிப் பணியாளர்களாக இருப்பவர்கள்

எண்ணிக்கை 405. அதுபோல் டிப்ளமோ படித்துவிட்டு 10 ஆண்டுக்கு தினக்கூலிப் பணியாளர்களாக இந்நாள் வரை பணியாற்றுகிறவர்களின் எண்ணிக்கை 310. ஆக, மொத்தம் 715 பேர். இந்த 715 பேர்களையும் நிரந்தரப் பணியாளர்களாக அறிவிக்க வேண்டுமென்று கலைஞர் அவர்கள் ஆணையிட்டதற்கு ஏற்ப, இந்த 715 பேர்களையும் நிரந்தரப் பணியாளர்களாக ஆக்குகிறோம் என்ற மகிழ்ச்சிகரமான செய்தியையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி). எனவே, இந்த மானியக் கோரிக்கையின் மீது (குறுக்கீடு) நம்முடைய மத்தளப்பள்ளம் திட்டத்திற்கு 220 கோடி ரூபாய்க்காக அரசாங்கத்திற்கு வந்திருக்கிறது. அப்போதே சொல்லிவிட்டேன், அடுத்த முறை எடுத்துக் கொள்ளலாம் என்று சொன்னேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மு. அப்பாவு.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சடையனேரி கால்வாய் மூலம் மத்தளப்பள்ளத்திற்கு 12 கோடி ரூபாய்த் திட்டத்தில் தண்ணீர் கொண்டு வந்ததற்கும், நம்பியாறு திட்டத்திற்காக 7½ கோடி ரூபாய்க்குத் தண்ணீர் டெண்டர் விட்டதற்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். ராதாபுரம் கால்வாயில் அணைக்கட்டிலிருந்து 54 குளங்களுக்கு நிரந்தரமாகத் தண்ணீர் வரவில்லை. பழைய ஆற்றிலிருந்து பம்ப்பின் மூலம் தண்ணீர் கொண்டு வருகின்ற திட்டத்தை இந்த ஆண்டு ஏற்படுத்துவதாகச் சொன்னீர்கள். அந்தத் திட்டமும், நம்பியாற்றினுடைய உபரி நீரை புத்தன்தருவைக்கு ஆணைகுடிப் படுகை வழியாகக் கொண்டு செல்கின்ற திட்டத்தையும் இந்த ஆண்டு சேர்த்துக் கொள்ள வேண்டுமென்று பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 2-05

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 5 ஆண்டுக்காலம் நிச்சயமாக இருப்போம். ஒரே வருஷத்தில் எல்லாவற்றையும் சேர்த்துவிட முடியாது. நீங்கள் சொல்வதை நாங்கள் எடுத்திருக்கிறோம். இன்னும் சொல்லப்போனால் தாராபுரத்திற்கு தண்ணீர் கொடுக்க முடியாத நிலை இருந்தும் இந்த ஆண்டு எவ்வளவு கஷ்டத்திலே கொடுத்தோம் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அறிவார்கள். ஆகையினால் உங்கள் கோரிக்கையை அரசு மெல்ல மெல்லப் பரிசீலிக்கும். நானே சொல்லி விடுகிறேன். மாண்புமிகு உறுப்பினர், மூக்குராமலிங்கம், மாண்புமிகு உறுப்பினர் தளபதி, மாண்புமிகு திருப்பரங்குன்றத்தினுடைய உறுப்பினர் ராமச்சந்திரன், மாண்புமிகு அமைச்சர் தங்கபாண்டியன் இவர்கள் எல்லோருடைய ஒட்டுமொத்தக் கோரிக்கை நிலையூர் சேனலுக்குச் செய்ய வேண்டும் என்பது. நிலையூர் சேனலிலே இரண்டு வகை உண்டு. அதாவது பேரணைக்குக் கீழே நிலையூர் சேனல் வருகிறது. அதிலிருந்து தண்ணீர் போக வேண்டும். நான் இப்போதும் சொல்கிறேன். நிலையூர் கண்மாய் வரையிலே தண்ணீர் எடுத்துக் கொண்டு போக வைகை ஆற்றிலே ஒரு கொரம்பு கட்டி தண்ணீரைக் கொண்டு வந்து நிலையூர் கண்மாய் வரையிலே லைன் பண்ணி கொடுத்து விடுகிறோம். ஆனால் கம்பிக்கு கண்மாய் வரையிலே நீங்கள் வரவேண்டும் என்கிறீர்கள். கம்பிக்கு கண்மாய்க்கு தண்ணீர் கொண்டு வந்தால் 53 ஏரிகளுக்கு நாங்கள் இப்போது கொடுக்க வேண்டி வரும். எனவே முதல் கட்டமாக நிலையூர் கண்மாய் வரையில் இந்தச் சீரமைப்புப் பணி செய்யப்படும். அதையடுத்து நம்பியூர் கண்மாய் வரையிலே அடுத்த திட்டத்தில் செய்யப்படும் என்ற உறுதியை நான் உங்களுக்குத் தெரிவிக்க கடமைப்பட்டவனாக இருக்கிறேன்.



நம்முடைய கிட்டு அவர்கள் எழுந்து நிற்கிறார்கள். அது ரொட்டீன் பைலிலே இருக்கிறது. ஜாபர்கான்பேட்டையிலிருந்து அடையாறு வரை பாலம் கட்டும் சுவர் சம்பந்தமான பைல் சர்குலேஷனில் இருக்கிறது. ஆகையால் அது ஒன்றும் பெரிய பிரச்சினை அல்ல. திரு. டேவிட் செல்வினுக்குச் சொல்கிறேன். பேருருக்கு 30 இலட்சம் ரூபாய்தான் செலவாகும், பைபாஸிலே. நிச்சயமாக அதை எடுத்துக் கொள்வோம். வேலை தொடர்ந்து நடக்கும். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேசியவர்கள் 12 பேர்; கோரிக்கை வைக்கிறவர்கள் 30 பேர். யாராக இருந்தாலும் அனுமதிக்க முடியாது. நீங்கள் உங்கள் பேச்சை முடியுங்கள்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** தலைவர் அவர்களே, பாண்டியாறு—புன்னம்புழா பற்றி கேட்கப் போகிறார் என்று நினைக்கிறேன். ரிப்போர்ட் அனுப்பியிருக்கிறோம். முண்டந்துறை திட்டம் ஆய்வில் இருக்கிறது. அதையும் நான் சொல்லி விடுகிறேன். முதலைமுத்துவாரி திட்டம் அடுத்தமுறை எடுத்துக் கொள்ளப்படும். தலைவருக்கே தெரியும். எனவே மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய வெட்டுப் பிரேரணைகளைத் திரும்பப் பெற்றுக் கொண்டு மானியக் கோரிக்கைகளை நிறைவேற்றித் தரும்படி கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.

[1997 மார்ச் 24

**(ஆ) கோரிக்கை எண் 36- பொதுப் பணிகள்—கட்டிடங்கள்**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 36- பொதுப் பணிகள்—கட்டிடங்கள். வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. சுப்பராயன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. நா. பெரியசாமி.

**திரு. நா. பெரியசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. நா. பெரியசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. இ. கணேசன்.



1997 மார்ச் 24]

**திரு. இ. கணேசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இ. கணேசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி. கே. மணி.

**திரு. ஜி. கே. மணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. கே. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி. நிஜாமுதீன்

**திரு. ஜி. நிஜாமுதீன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. நிஜாமுதீன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. அ.வ. அப்துல் நாசர், இருக்கையில் இல்லை. திரு. அ.வ. அப்துல் நாசர் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பட்டதாகக் கருதப்படுகிறது. திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. மணி. அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

"பொதுப் பணிகள்—கட்டிடங்கள் பற்றிய 36-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ. 49,41,31,000-க்கு மேற்படாதத் தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

**(இ) கோரிக்கை எண் 55—பாசனம் குறித்த மூலதனச் செலவு.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கோரிக்கை எண் 55- பாசனம் குறித்த மூலதனச் செலவு. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறியவிரும்புகிறேன். திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. சுப்பராயன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. நா. பெரியசாமி.

**திரு. நா. பெரியசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. நா. பெரியசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. இ. கணேசன்.

**திரு. இ. கணேசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இ. கணேசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்ப பெறப்படுகிறது. திரு. ஜி. கே. மணி.



**திரு. ஜி. கே. மணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. கே. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி. நிஜாமுதீன்.

**திரு. ஜி. நிஜாமுதீன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. நிஜாமுதீன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. அ. வ. அப்துல் நாசர் இருக்கையில் இல்லை. திரு. அ. வ. அப்துல் நாசர் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. பா. வேல்துரை, இருக்கையில் இல்லை. திரு. பா. வேல்துரை அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பட்டதாகக் கருதப்படுகிறது.

"பாசனம் குறித்த மூலதனச் செலவு பற்றிய 55-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ரூ. 249,38,47,000-க்கு மேற்படாதத் தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்படுகிறது.

பிற்பகல் 2-10

**(ஈ) கோரிக்கை எண் 56- பொதுப் பணிகள்-கட்டிடங்கள் குறித்த மூலதனச் செலவு.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 56- பொதுப் பணிகள்—கட்டிடங்கள் குறித்த மூலதனச் செலவு, வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. சுப்பராயன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. நா. பெரியசாமி.

**திரு. நா. பெரியசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. நா. பெரியசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. இ. கணேசன்.

**திரு. இ. கணேசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இ. கணேசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி. கே. மணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. கே. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி. நிஜாமுதீன்.

**திரு. ஜி. நிஜாமுதீன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. நிஜாமுதீன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. அ.வ. அப்துல் நாசர், இருக்கையில் இல்லை. திரு. அ.வ. அப்துல் நாசர் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பட்டதாகக் கருதப்படுகிறது.



திரு. பா. வேல்துரை, இருக்கையில் இல்லை. திரு. பா. வேல்துரை அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பட்டதாகக் கருதப்படுகிறது.

"பொதுப் பணிகள்-கட்டிடங்கள் குறித்த மூலதனச் செலவு பற்றிய 56-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ரூ. 105,08,79,000-க்கு மேற்படாதத் தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (25-3-1997) காலை 9.30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 2.11 மணிக்கு ஒத்தி வைக்கப் பெற்றது.

## 6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### அ. சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

ஏதுமில்லை

### ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

ஏதுமில்லை

# இணைப்பு I

[518-ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க]

## பாசனம் மற்றும் கட்டடங்கள் மீதான கொள்கை விளக்கக் குறிப்பு

## 1997-98

*துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத்*
*துப்பாய தூஉம் மழை*

குறள்

*நீர் இன்று அமையாது உலெகனினும் அதனை வகைப்படுத்த*
*ஆறின்றி இயலாது என உணர்ந்தார்*
*ஆறு கண்டார் அதனாலே சோறு கண்டார்*
*எத்தனை ஆறு*
*இத்தரை மீது*
*பத்தரை மாற்று*
*முத்திரைப் பொன்னாம்*
*சித்திர நெல்லைச்*
*சிரிக்கச் செய்தது ; பச்சைப்பட்டு*
*விரிக்கச் செய்தது ; வறுமைப் பேயை*
*எரிக்கச் செய்தது.*

முதல்வர் கலைஞர்

பழமையும் பெருமையும் வாய்ந்த பொதுப் பணித்துறை கொள்கை விளக்கக் குறிப்பினை இம்மாமன்றத்தின் முன் வைப்பதில் மகிழ்ச்சியடைகிறேன்.

பொதுப்பணித்துறையானது, பெரியதும், நடுத்தரமானதும், சிறிய அளவிலானதுமான பாசனத் திட்டங்களை வகுத்து செயல்படுத்துவதற்கும் அதனைப் பராமரிப்பதற்கும் மாநில அரசுத் துறைகளுக்கும் அரசின் இதர முகமைகளுக்கான கட்டடங்களைக் கட்டிக் கொடுப்பதற்கும் பராமரிப்பதற்குமான பொறுப்பை வகிக்கின்றது. நீர்த் தேவையைக் கோரும் எல்லா பகுதியினரும் பயன்பெறும் வகையில் நில மேற்பரப்பு நீரையும், நிலத்தடி நீரையும் நன்கு நிர்வகித்து அறிவார்ந்த அறிவியல் ரீதியில் பங்கிடு செய்து அதன் மூலம் வேளாண்மை உற்பத்தியையும், உற்பத்தித்

[1997 மார்ச் 24

திறனையும் பெருக்குவதே பொதுப் பணித்துறையின் நீர் வள ஆதார அமைப்பின் நோக்கமாகும். நல்ல தரமான கட்டடங்களைச் சிறந்த தொழில்நுட்ப உதவியின் துணையோடு குறைந்த செலவில் கட்டுவதும், கட்டிய கட்டடங்களை நிறைவு தரும் வகையில் பராமரிப்பதும் கட்டட அமைப்பின் நோக்கமாகும்.

## 2. பாசனம் - நிறுவன அமைப்பு

தமிழ்நாடு நீர்வளத் தொகுப்புத் திட்டம் அனைத்து மக்களின் நீர்த் தேவைகளை நிறைவு செய்யும் திட்டமாக உலக வங்கி நிதி உதவியுடன் இம்மாநிலத்தில் செயல்படுத்தப்படுகிறது. இதனை, தனித்தன்மையுடன் செயல்புரிந்து திறம்பட செயலாக்குவதற்காக பொதுப்பணித்துறையை நீர்வள ஆதார அமைப்பு எனவும், கட்டடங்கள் அமைப்பு எனவும் இரண்டாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

இம்மாநிலத்தின் நீர் பங்கீட்டு நிர்வாகம் நீர்வள ஆதார அமைப்பின் கீழ் வடிநிலவாரியாகப் பிரித்து பரவலாக்கப்பட்டு முறையே சென்னை, திருச்சி, பொள்ளாச்சி, மதுரை என நான்கு மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு மண்டலமும் ஒரு வடிநில மேலாளர் என்பவரைத் தலைவராகக் கொண்டுள்ளது. இவர் தலைமைப் பொறியாளர் பதவி நிலையில் பணியாற்றுகிறார். இவ்வகையில் பிரிக்கப்பெற்ற ஒவ்வொரு மண்டல வாரியான கிளையாறுகளும் இந்தக் கிளையாற்றின் கிளைகளின் விவரங்களும் இத்துடனான இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளன.

மாண்புமிகு தமிழ்நாடு முதல்வர் அவர்களைத் தலைவராக கொண்டுள்ள, நீர்வள ஆதாரக்கட்டுப்பாடு மற்றும் ஆய்வு அவையின் தலைமைச் செயலகமாக சென்னை தரமணியில் அமைந்துள்ள நீர் ஆய்வுநிறுவனம் தலைமைப் பொறியாளர் ஒருவரின் கீழ் செயல்படுகிறது. தள அதிகாரிகள் மற்றும் வேளாண்மை பெருமக்களுக்கு நீர் மேலாண்மை சம்பந்தமான பயிற்சிகள் அளிப்பது, திருச்சியிலுள்ள பாசன மேலாண்மை பயிற்சி நிலையத்தின் இயக்குனரின் பொறுப்பாகும். இவர் தலைமைப் பொறியாளர் நிலையை வகிக்கிறார்.

இவ்வாறு நீர்வள ஆதார அமைப்பானது கீழே குறிப்பிட்டுள்ள தலைமைப் பொறியாளர்களுடன் செயல்படுகிறது.

1. முதன்மைத் தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதார அமைப்பு, சென்னை.
2. தலைமைப் பொறியாளர், திட்ட உருவாக்கம், சென்னை.



1997 மார்ச் 24]

3. தலைமைப் பொறியாளர், வடிவமைப்பு ஆய்வு மற்றும் கட்டுமான ஆதாரம், சென்னை.
4. தலைமைப் பொறியாளர், இயக்கம் மற்றும் பராமரிப்பு, சென்னை.
5. தலைமைப் பொறியாளர், நிலத்தடி மற்றும் நிலமேற்பரப்பு நீர் ஆதார விவர மையம், சென்னை.
6. தலைமைப் பொறியாளர், சென்னை மண்டலம், சென்னை.
7. தலைமைப் பொறியாளர், திருச்சி மண்டலம், திருச்சி.
8. தலைமைப் பொறியாளர், பொள்ளாச்சி மண்டலம், பொள்ளாச்சி.
9. தலைமைப் பொறியாளர், மதுரை மண்டலம், மதுரை.
10. தலைமைப் பொறியாளர், நீர் ஆய்வு நிறுவனம், சென்னை.
11. தலைமைப் பொறியாளர், பாசன வேளாண்மை பயிற்சி நிலையம், திருச்சி.

## 3. பாசன நிலை

புவியியல் அடிப்படையில் 13 மில்லியன் எக்டேர் நிலப்பரப்பளவு கொண்டுள்ள தமிழ்நாடானது இந்திய மாநிலங்களில் 11-ம் இடத்தை வகிக்கிறது. தமிழ்நாட்டில் பயிரிடப்படும் நிலத்தின் பரப்பு சுமார் 6 மில்லியன் எக்டேர் ஆகும். இதில் சுமார் 3 மில்லியன் எக்டேர் பரப்பானது அதாவது 50 விழுக்காடு கீழே குறிப்பிட்டுள்ள நீர் ஆதாரங்களிலிருந்து பாசன வசதியைப் பெறுகிறது.

1. கால்வாய்கள் 0.95 மில்லியன் எக்டேர்.
2. ஏரிகள் 0.90 மில்லியன் எக்டேர்.
3. நிலத்தடி நீராக கிணறுகள் குழாய் கிணறுகள் வழியாக 1.15 மில்லியன் எக்டேர்.

## 4. தமிழ்நாட்டில் பாசன மேம்பாடு

4.1. தமிழ்நாட்டில் பெரியதும் மற்றும் நடுத்தரமான நீர் ஆதாரங்களிலிருந்து பாசன வசதி பெறக்கூடிய பாசனப் பரப்பானது 1.50 மில்லியன் எக்டேர் என 1976 ஆம் ஆண்டில் தேசிய வேளாண்மைக் குழு மதிப்பிட்டுள்ளது. முதல் ஐந்தாண்டுத் திட்ட துவக்கத்தில் 23

பெரியதும் மற்றும் நடுத்தர திட்டங்களின் மூலம் 1.10 மில்லியன் எக்டேர் பகுதிகளுக்கு பாசன வசதி அளிக்கப்பட்டது. எட்டாவது திட்ட காலத்தில் 1996-97 வரை 1.474 மில்லியன் எக்டேர் நிலங்களுக்கு பாசனவசதி அளிக்கப்பட்டுள்ளது.

1997-98 ஆம் ஆண்டில் 2183 எக்டேர் கூடுதல் நிலங்களுக்கு பாசன வசதி கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## 4.2. அண்டை மாநில வடி நிலப்பகுதியிலிருந்து தமிழ்நாட்டிற்கு நீர் திருப்பி விடுதல்

4.2.1. தமிழ்நாடு, அனேகமாக தனது மேற்பரப்பு நீர்வளம் முழுவதையும் பயன்படுத்தி வருகிறது. ஆனால் தமிழ்நாட்டின் அண்டை மாநிலங்களான கேரளம், கர்நாடகம், ஆந்திரப் பிரதேசம் ஆகியவற்றை தமிழ்நாட்டுடன் ஒப்பிடுகையில் நீர் ஆதாரங்கள் அங்கு இயற்கையில் அதிகமாக அமைந்துள்ளன. தமிழ்நாட்டின் நீர்வளத்தை மேலும் பெருக்குவதற்கு அண்டை மாநில வடிநிலப் பகுதிகளில் உள்ள மிகை நீரையே நம்பியிருக்க வேண்டியுள்ளது. இதனைக் கருத்தில் கொண்டு அண்டை மாநிலங்களின் வடிநில மிகை நீரை தமிழ்நாட்டுக்கு திருப்பிவிட வேண்டிய இன்றியமையாத் தன்மையை வலியுறுத்தி / கருத்துரு ஒன்றை மத்திய அரசு உருவாக்கிய தேசிய நீர்வள அமைப்பிற்கு அனுப்பப்பட்டுள்ளது.

4.2.2. தேசிய நீர்வள அமைப்பானது, இந்திய தீபகற்பத்திலுள்ள ஆற்று நீர்வள மேம்பாட்டுத் திட்டங்களை ஆய்வு செய்கிறது. கேரளத்தில் மேற்கு நோக்கி பாயும் ஆறுகளான பம்பா - அச்சன்கோயில் ஆறுகளின் மிகை நீரை மதுரை, இராமநாதபுரம், காமராசர், திருநெல்வேலி-கட்டபொம்மன் ஆகிய மாவட்டங்களின் வறண்ட பகுதிகள் பயனடையும் வகையில் கிழக்கே திருப்பிவிடுவதும் இதில் அடங்கும். இவ்வரசு இதுபற்றி கேரள அரசுடனும் மத்திய அரசுடனும் தொடர்பு கொண்டு மேல் நடவடிக்கை எடுத்துவருகிறது. இதனையன்றி பாண்டியாறு-புன்னம்புழா ஆறுகளில் பாசனத் தேவைகளுடன் நீர் மின் உற்பத்தி தேவைக்குமான திட்டத்தை நிறைவேற்ற கேரள அரசுடன் முழு மூச்சாக தொடர்பு கொள்ளப்பட்டு வருகிறது.

## 4.3. பாசன நீர் பயன்பாட்டில் சிக்கனம்

4.3.1. மாநிலத்தின் மேற்பரப்பு நீர் அனேகமாக பயன்படுத்தப்பட்டுவிட்ட நிலையில் பெரியதும் நடுத்தரப் பாசன



திட்டங்களுக்கான வாய்ப்புகள் இப்போது மிகவும் குறைவாகவே உள்ளது. இந்தச் சூழலில் தற்போதைய கால்வாய் பாசன முறையையும், ஏரிப்பாசன முறையையும் நவீனப்படுத்துவதன் மூலம் நீர் வீணாகாமல் தடுப்பதுடன் நீரை சீரான வகையில் உரிய அளவிற்கு மட்டுமே பயன்படுத்துவதிலும் தற்போது அதிக கவனம் செலுத்தப்படுகிறது. இம் முயற்சியால் சேமிக்கப்படும் நீரைக் கொண்டு தான் புதிய பகுதிகளில் பயிர் சாகுபடி செய்யவும் ஏற்கனவே சாகுபடி செய்யப்படும் பகுதிகளில் கூடுதலாக சாகுபடி செய்யவும் இயலும்.

4.3.2. இந்நோக்கத்துடனே உலக வங்கி நிதி உதவியுடன் பெரியாறு-வைகை பாசன ஏற்பாட்டை நவீனப்படுத்தும் பணி மேற்கொள்ளப்பட்டது இதேபோல் தேசிய நீர் வேளாண்மைத். திட்டத்தின் கீழ் உலக வங்கி உதவியுடன் சாத்தனூர், கோதையார், தாமிரபரணி, கம்பம் பள்ளத்தாக்கு, அமராவதி, சேத்தியாத்தோப்பு, மருதாநதி போன்றவற்றுடன் இதர பாசனப் பரப்பு அமைப்புகளின் செயல்திறனை மேம்படுத்த பாசன கட்டுமானங்களைப் புனரமைத்து நவீனப்படுத்தியும் நீர் வினியோக அளவை முன்கூட்டியே அறிந்து கொள்ளும் வகையிலும் ஆயக்கட்டு முழுமைக்கும் சரிசமமாக பாசன நீர் வழங்கும் முறையைப் பின்பற்றியும் உற்பத்தியளவையும் பண்ணை வருவாயையும் பெருக்கும் நோக்கத்தோடு செயல்படுத்தப்பட்டது. தற்போது தேசிய நீர் மேலாண்மை திட்டத்தை போலவே பொறியியல் சிறப்பியல்புகளும் வேறுபல சிறப்பியல்புகளும் கூடுதலாக உள்ள தமிழ்நாடு நீர்வளத் தொகுப்பு திட்டமானது செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது.

## 5. நடைபெற்றுவரும் பாசனத் திட்டங்கள்

பெரியதும் நடுத்தரமானதும் ஆகிய பாசன திட்டங்களுக்கு 1996-97 ஆம் ஆண்டில் ரூ.198.11 கோடி ஒதுக்கப்பட்டது. இதில் ரூ.159.06 கோடி தமிழ்நாடு நீர்வளத் தொகுப்பு திட்டத்திற்கு ஒதுக்கப்பட்டது. 1997-98 ஆம் ஆண்டிற்கு தமிழ்நாடு நீர்வளத் தொகுப்புத் திட்டத்திற்கான ரூ.173 கோடி உட்பட ஒதுக்கப்பட்ட நிதியளவு ரூ.233.70 கோடி ஆகும்.

## 6. பெரிய நீர்பாசனத் திட்டங்கள்

தமிழ்நாட்டின் மேற்பரப்பு நீர் அனேகமாக முற்றிலும் பயன்படுத்திவிட்ட நிலையில் பெரிய நீர்பாசனத் திட்டங்கள் எதுவும் தற்போது செயலாக்கத்தில் இல்லை.

## 7. நடுத்தரப் பாசனத் திட்டங்கள்

1996-97 ஆம் ஆண்டு தொடக்கத்தில் பின்வரும் நடுத்தரப் பாசனத் திட்டங்கள் பல்வேறு நிலைகளில் நடைபெற்று வந்தன.

1. பெரியாறு அணையை வலுப்படுத்துதல் (பீர்மேடு, கேரள மாநிலம்)
2. பொய்கையாறு நீர்த்தேக்கம் (கன்னியாகுமரி மாவட்டம்)
3. நம்பியாறு திட்டம் (திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டம்)
4. நங்கஞ்சியாறு நீர்த்தேக்கம் (திண்டுக்கல்-மன்னர் திருமலை மாவட்டம்)
5. இருக்கன்குடி நீர்த்தேக்கம் (காமராசர் மாவட்டம்)
6. இராஜாத்தோப்பு கானார் நீர்த்தேக்கம் (வட ஆற்காடு அம்பேத்கார் மாவட்டம்)
7. கௌண்டின்யாநதி (மோர்தானா) நீர்த்தேக்கம் (வடஆற்காடு அம்பேத்கார் மாவட்டம்)
8. அடவிநயினார் கோவில் நீர்த்தேக்கம் (திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டம்)
9. அம்பலத்தாடி கிராமத்தில் கிருதமால் நதியின் குறுக்கே அணை கட்டுதல் (பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் மாவட்டம்)
10. அத்திக்குளம் கிராமத்தில் கிருதமால் நதியின் குறுக்கே அணைக் கட்டுதல் (காமராசர் மாவட்டம்)
11. வடக்குப் பச்சையாறு நீர்த்தேக்கம் (திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டம்)
12. மலட்டாற்றின் குறுக்கே அணைக் கட்டுதல் (இராமநாதபுரம் மாவட்டம்)
13. கொள்ளிடம் ஊற்று நீரை கான்சாகிப் வாய்க்காலில் திருப்பி விடுதல் (தென்னாற்காடு-வள்ளலார் மாவட்டம்)

## 8. நடைபெற்று வரும் நடுத்தரப் பாசனத் திட்டப் பணிகளின் முன்னேற்றம்

### 8.1. பெரியாறு அணையை வலுப்படுத்துதல்

தேக்கடிக்கு அருகில் உள்ள பெரியாறு அணை வைகை வீரன் அழகு முத்து திண்டுக்கல்-மன்னர் திருமலை, மதுரை, பசும்பொன்





முத்துராமலிங்கத் தேவர், இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களிலுள்ள 57870 எக்டேர் பெரியாறு பாசனப் பகுதிகளுக்குப் பாசன நீர் அளிக்கும் முக்கியமான பாசன ஆதாரமாகும். கூடுதலாக மூன்று நீர் போக்கிகள் அமைக்கும் பணி, அணையின் பின்புறத்தில் கற்காரை அமைக்கும் பணி உள்ளிட்ட பல்வேறு மேம்பாட்டுப் பணிகள் ஏற்கனவே முடிக்கப்பட்டுள்ளன. அணையின் கொள்ளளவு மட்டத்தினை மீண்டும் 152 அடிகளாக உயர்த்திட கேரள அரசுடன் பேச்சு வார்த்தை துவங்கவும் அதனைத் தொடர்ந்து கேரள அரசின் இசைவினைப் பெற்றிடவும் தனது செல்வாக்கைப் பயன்படுத்துமாறு 19-12-96 ஆம் நாள் புதுதில்லியில் மாண்புமிகு தமிழக பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்கள் இந்திய அரசின் மாண்புமிகு நீர்வளத்துறை அமைச்சரிடம் கேட்டுக் கொண்டுள்ளார்.

### 8.2. பொய்கையாறு நீர்த்தேக்கம் (கன்னியாகுமரி மாவட்டம்)

இத்திட்டம் கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள தோவாளை வட்டத்தில் ஆரல்வாய்மொழி கிராமத்தினருகே பொய்கையாற்றின் குறுக்கே அமைக்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தினால் தோவாளை வட்டத்தில் பிசாணம் பருவத்தில் 202 எக்டேர் புதிய புன்செய் நிலம் பாசன வசதியும், 185 எக்டேர் நிலம் பாசன உறுதியும், 57 எக்டேர் விடுபட்ட நிலம் பாசன வசதியும் பெறும்.

இத்திட்டத்தில் மண் அணை அமைக்கும் பணி, உபரி நீர் வழிந்தோடி, கால்வாய், மதகு, ஆற்று மதகு, ஆகிய பணிகள் முடிந்துவிட்டன. உபரி நீர்க்கால்வாய் மற்றும் இக்கால்வாயில் மட்டம் தணிக்கும் கட்டுமானங்கள் ஆகியவை நடைபெற்று வருகின்றன. கால்வாய் வெட்டும் பணி எடுத்துக் கொள்ளப்பட உள்ளது. எஞ்சிய பணிகள் நீர்வள ஆதார ஒருங்கிணைப்புத் திட்டத்தின்கீழ் எடுத்துக் கொள்ளப்பட உள்ளது.

### 8.3. நம்பியாறு நீர்த்தேக்கம் (திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டம்)

திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டத்தைச் சார்ந்த இராதாபுரம் வட்டத்திலுள்ள நம்பியாற்றின் குறுக்கே இந்நீர்த்தேக்கம் அமைக்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தினால், இராதாபுரம் வட்டத்தில் 152 எக்டேர் புதிய புன்செய் நிலத்திற்கு பாசன வசதியும், 185 எக்டேர் விடுபட்ட நிலத்திற்கு பாசன வசதியும், 369 எக்டேர் நிலத்திற்கு பாசன உறுதியும் கிடைக்கும்.

இத்திட்டத்தில் மண் அணை அமைக்கும் பணியும் வலதுபுற பிரதான கால்வாய் தலை மதகு கட்டும் பணியும் முடிவடைந்துள்ளது. உபரி நீர்போக்கி, இடது புற கால்வாய் மதகு அமைக்கும் பணிகள் எடுத்துக் கொள்ளப்பட உள்ளது. வலதுபுறக் கால்வாய் வெட்டும் பணி பெரும் பகுதி முடிவடைந்துள்ளது. இடதுபுற பிரதான கால்வாயின் கால்வாய் வெட்டும் பணி பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளன. மீதமுள்ள பணிகள் நீர்வள ஆதார தொகுப்புத் திட்டத்தின் கீழ் எடுத்துக் கொள்ளப்பட உள்ளன.

**8.4. நங்கஞ்சியார் நீர்த்தேக்கம் (திண்டுக்கல்-மன்னர் திருமலை மாவட்டம்)**

திண்டுக்கல்-மன்னர் திருமலை மாவட்டத்தைச் சார்ந்த பழனி வட்டத்திலுள்ள இடயக்கோட்டை கிராமத்தினருகில் அமராவதியாற்றின் கிளையாறான நங்கஞ்சியாற்றின் குறுக்கே இந்நீர்தேக்கம் அமைக்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தினால் ஒட்டன்சத்திரம் மற்றும் தீரன் சின்னமலை மாவட்டம் அரவக்குறிச்சி வட்டங்களில் 24 எக்டேர் பழைய பாசன நிலம் பாசன உறுதியும், 2529 எக்டேர் புதிய நிலம் பாசன வசதியும் பெறும்.

இத்திட்டத்தில் தானியங்கி நீர்வழிந்தோடி அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. மண் அணை அமைக்கும் பணியும் முக்கிய கால்வாய் வெட்டும் பணியும் முடிவடையும் நிலையில் உள்ளது. பகிர்மானக் கால்வாய் வெட்டும் பணி முன்னேற்றத்தில் உள்ளது.

**8.5. இருக்கன்குடி நீர்த்தேக்கம் (காமராசர் மாவட்டம்)**

காமராசர் மாவட்டத்தைச் சார்ந்த சாத்தூர் வட்டத்திலுள்ள இருக்கன்குடி கிராமத்தினருகே வைப்பாறு ஆற்றின் குறுக்கே இந்நீர்தேக்கம் அமைக்கப்பட்டு வருகிறது. இத்திட்டம் சிதம்பரனார் மாவட்டத்தைச் சார்ந்த விளாத்திக்குளம் வட்டத்தில் 3705 எக்டேர் புதிய புன்செய் நிலத்திற்கு பாசன வதியும், 254 எக்டேர் நிலத்திற்கு பாசன உறுதியும், 255 எக்டேர் விடுபட்ட நிலத்திற்கு பாசன வசதியும் கிடைக்க வழிவகைச் செய்கிறது.

இத்திட்டத்தில் முக்கிய கால்வாய் வெட்டும் பணி 100 மீட்டர் முதல் 7660 மீட்டர் முடிய உள்ள பகுதியில் ஜூலை 1994-ல் தொடங்கப்பட்டு 60 சதவீதம் முடிவடைந்துள்ளது. இதற்கிடையில் நில சொந்தக்காரர்கள் நில எடுப்புப் பணிக்காக ஈட்டுத் தொகையை உரிய காலத்தில் வழங்கக்



கோரி மேற்கொண்டு வேலை செய்வதை தடுத்து விட்டனர். நில எடுப்புப் பணி தற்போது நடந்து வருகிறது.

**8.6. இராஜாத்தோப்புகானார் நீர்த்தேக்கம் (வட ஆற்காடு - அம்பேத்கார் மாவட்டம்)**

வட ஆற்காடு அம்பேத்கார் மாவட்டத்தைச் சார்ந்த குடியாத்தம் வட்டத்திலுள்ள செஞ்சி கிராமத்திற்கு அருகில் இராஜாதோப்புகானாறு ஆற்றின் குறுக்கே இந்நீர்த்தேக்கம் அமைந்துள்ளது. இத்திட்டத்தினால் குடியாத்தம், வேலூர், மற்றும் வாணியம்பாடி வட்டங்களில் 202 எக்டேர் நிலப் பரப்பிற்கு பாசன உறுதியும், 17 எக்டேர் விடுபட்ட நிலப்பரப்பிற்கு பாசன வசதியும் ஏற்படும்.

மண் அணை, உபரி நீர் போக்கி, உபரி நீர்ப்பாதை, கால்வாய் மதகு ஆகிய பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. கால்வாய் கற்காரைக்காப்பு, கைப்பிடிச்சுவர், மண் அணை மீது சாலை அமைத்தல் ஆகிய பணிகள் நீர்வளத் தொகுப்புத் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படவுள்ளது.

**8.7. மோர்தானா கிராமத்திற்கருகே கௌன்டின்யா நதியின் குறுக்கே நீர்த்தேக்கம் (வட ஆற்காடு-அம்பேத்கார் மாவட்டம்)**

வட ஆற்காடு - அம்பேத்கார் மாவட்டத்தைச் சேர்ந்த குடியாத்தம் வட்டத்திலுள்ள மோர்தானா கிராமத்திற்கு அருகே கௌன்டின்யா நதியின் குறுக்கே இந்நீர்தேக்கம் அமைக்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தினால் குடியாத்தம், வேலூர், வாணியம்பாடி வட்டங்களில் 2585 எக்டேர் நிலையான பாசன வசதியும், 285 எக்டேர் விடுபட்ட நிலத்திற்கு பாசன வசதியும் ஏற்படும். கல் அணையின் கட்டுமானப் பணி பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்திலுள்ளது. மொத்தத்தில் 40 விழுக்காடு பணிகள் முடிவடைந்துள்ளன. மீதமுள்ள பணிகள் நீர்வளத் தொகுப்புத் திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்படவுள்ளன.

**8.8. அடவிநயினார்கோவில் நீர்த்தேக்கம் (திருநெல்வேலி - கட்டபொம்மன் மாவட்டம்)**

திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டத்தில் செங்கோட்டை வட்டத்திலுள்ள மேக்கரை கிராமத்தில் அனுமாநதி ஆற்றின் குறுக்கே இந்நீர்த்தேக்கம் அமைக்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தினால் செங்கோட்டை மற்றும் தென்காசி வட்டங்களில் 1562 எக்டேர் நிலத்திற்கு

நிலையான பாசன வசதியும், 616 எக்டேர் விடுபட்ட நிலத்திற்கு பாசன வசதியும் 93 எக்டேர் நிலத்திற்கு புதிய பாசன வசதியும் ஏற்படும்.

இத்திட்டத்தின்கீழ் கல் அணையின் கடைக்கால் வெட்டும் பணி முன்னேற்றத்திலுள்ளது. மீதமுள்ள கட்டுமானப் பணிகள் நீர்வளத் தொகுப்புத் திட்டத்தின்கீழ் செயல்படுத்தப்படும். இத்திட்டத்திற்கு 13.70 எக்டேர் வனத்துறையினரின் நிலம் கையகப்படுத்த வேண்டியுள்ளது. இவ்வனத் துறை நிலத்தினை இத்திட்டத்திற்கென ஒதுக்க இந்திய அரசின் சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை அமைச்சகம் கொள்கையளவில் ஒப்புக்கொண்டுள்ளது.

**8.9. அம்பலத்தாடி கிராமத்தில் கிருதமால் ஆற்றின் குறுக்கே அணைக் கட்டுதல் (பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் மாவட்டம்)**

பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் மாவட்டம், மானாமதுரை வட்டத்திலுள்ள அம்பலத்தாடி கிராமத்தின் அருகில் கிருதமால் ஆற்றின் குறுக்கே இந்த அணைக்கட்டு கட்டப்பட்டு வருகிறது. இவ்வணைக் கட்டினால் மானாமதுரை வட்டத்தில் இராங்கியம் மற்றும் இடைமறிச்சான் கண்மாய்களுக்கும், காமராசர் மாவட்டத்தைச் சேர்ந்த திருச்சுழி வட்டத்திலுள்ள 20 கண்மாய்களுக்கும், தண்ணீர் வழங்கப்படவுள்ளது. இதனால் மொத்தம் 1587 எக்டேர் பாசன நிலம் பயனடையும். சுமார் 90 விழுக்காடு பணிகள் நிறைவேறியுள்ள நிலையில் மீதமுள்ள பணிகள் முன்னேற்றத்திலுள்ளன.

**8.10. அத்திக்குளம் கிராமத்தினருகே கிருதமால் ஆற்றின் குறுக்கே அணைக்கட்டுதல் (காமராசர் மாவட்டம்)**

இத்திட்டம் காமராசர் மாவட்டம் அத்திக்குளம் கிராமத்தின் அருகிலுள்ள கிருதமால் ஆற்றின் குறுக்கே அமைக்கப்பட்டு வருகிறது. இத்திட்டம் திருச்சுழி வட்டத்தில் இருஞ்சிறை, உள்ளக்குடி மற்றும் ஆறு கண்மாய்கட்கு நீர் வழங்கவும், 943 எக்டேர் நன்செய் நிலங்களுக்கு நிலையான பாசன வசதியும் 323 எக்டேர் விடுபட்ட நிலங்களுக்கு பாசன வசதியும் அளிக்கும்.

இத்திட்டத்தில் இதுவரை ஆற்றின் இருபக்கமும் வெள்ளக்காப்புக் கரை அமைக்கும் பணி 1400 மீட்டர் நீளத்திற்கு முடிவு பெற்றுள்ளது. இருஞ்சிறை வரத்து வாய்க்காலுக்கு மேம்பாட்டு பணிகள் முடிவுற்றது. எஞ்சியுள்ள அனைத்து வேலைகளையும் நீர்வள ஆதாரத் தொகுப்புத்



திட்டத்தின்கீழ் எடுத்துக் கொள்ளப்பட உள்ளது. நிலம் கையகப் படுத்தும் பணி பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளது.

**8.11. வடக்கு பச்சையாறு நீர்த் தேக்கத் திட்டம் (திருநெல்வேலி - கட்டபொம்மன் மாவட்டம்)**

இத்திட்டம் திருநெல்வேலி - கட்டபொம்மன் மாவட்டத்தில் நாங்குனேரி வட்டத்திலுள்ள மஞ்சுவிளை கிராமம் அருகே பச்சையாற்றின் துணை ஆறான வடக்குப் பச்சையாற்றின் குறுக்கே அமைக்கப்படுகிறது. இத்திட்டத்தினால் நாங்குநேரி வட்டத்தில் 574 எக்டேர் நிலத்திற்கு நிலையான பாசனமும், 464 எக்டேர் விடுபட்ட நிலத்திற்கு பாசன வசதியும் மற்றும் 45 கண்மாய்களின் கீழ் உள்ள 769 எக்டேர் நிலங்களுக்கு புதிய பாசன வசதியும் செய்ய வழிவகுக்கப்பட்டுள்ளது. மேலும் ஒரு போகமே விளையும் 1568 எக்டேர் நிலங்களுக்கு இரண்டாவது போகமாக புன்செய் பயிர்கள் சாகுபடி செய்யவும் பாசன வசதி செய்யப்படும். அணையின் பல்வேறு கட்டுமானங்களுக்கான விவர வடிவமைப்பு தயாரிக்கப்பட்டு வருகிறது. இத்திட்டம் நீர்வள ஆதார தொகுப்பு திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்பட உள்ளது.

**8.12. மலட்டார் அணைக்கட்டுத் திட்டம் (இராமநாதபுரம் மாவட்டம்)**

இராமநாதபுரம் மாவட்டம் கமுதி வட்டம், செங்கப்படை கிராமம் அருகாமையில் கமுதி நீர் கட்டுப்பாடு மதகிற்கு கீழ்ப் புறமாகவும், கிருதுமால் மற்றும் பரலயாறுகள் மலட்டாறுடன் சங்கமிக்கும் இடத்திற்கு கீழ் மலட்டாற்றின் குறுக்கே அணைக்கட்டு ஒன்று கட்டப்படவுள்ளது. இத்திட்டத்தின் மூலம் 1758 எக்டேர் நிலங்களுக்கு நிலையான பாசனமும், கமுதி மற்றும் கடலாடி வட்டங்களில் 54 கண்மாய்களின் கீழ் 156 எக்டேர் விடுபட்ட நிலங்களுக்கு பாசன வசதியும் அளிக்க வகை செய்யப்பட்டுள்ளது.

இத்திட்டத்தினை அணைக்கட்டுக்குப் பதிலாக நீர்தேக்கத் திட்டமாக மாற்றி அமைக்கக் கோரிய விண்ணப்பம் ஒன்று சமீபத்தில் பெறப்பட்டுள்ளது. இப்புதிய கருத்துருவின் படி பலமாற்றங்கள் தேவைப்படுமென்பதால் அதனை அமைப்பதற்கான சாத்தியக் கூறுகளை தொழில்நுட்பம் மற்றும் பொருளாதார ரீதியாக நீர்வள அமைப்பு ஆழ்ந்து பரிசீலித்து வருகிறது.

**8.13. கொள்ளிடம் ஊற்று நீரை கான்சாகிப் கால்வாய்களுக்குத் திருப்பி விடுதல் (தென்னாற்காடு - வள்ளலார் மாவட்டம்)**

இத்திட்டத்தின் படி, கொள்ளிடம் ஆற்றில் கொரம்பு ஒன்று அமைத்து ஆற்றின் ஊற்று நீரை, கருப்பேரி கிராமத்திலிருந்து அமைக்கப்படும் கால்வாய் மூலம் கான்சாகிப் கால்வாய்க்கு திருப்பிவிட்டு, சிதம்பரம் வட்டத்தில் 2023 எக்டேர் நிலங்களுக்கு நிலையான பாசனமளிக்க வழி வகை செய்யப்பட்டுள்ளது. நிலம் கையகப்படுத்தும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

**9. சிறு பாசனத் திட்டங்கள் (2000 எக்டேருக்கு குறைவான பாசன நிலங்களுக்கு பாசனமளிக்கும் நீர்த்தேக்கங்கள், அணைக்கட்டுகள் கட்டுதல்)**

**9.1. சோத்துப்பாறை (வராக நதி) நீர்த்தேக்கம் (மதுரை மாவட்டம்) நீர்வளத் தொகுப்புத் திட்டம்**

மதுரை மாவட்டத்தில் பெரியகுளம் வட்டத்திலுள்ள தென்கரை கிராமத்தின் அருகில் வராக நதியின் குறுக்கே இந் நீர்த்தேக்கம் கட்டப்பட்டு வருகிறது. இத்திட்டத்தினால் பெரியகுளம் வட்டத்தில் 739 எக்டேர் நன்செய் நிலத்திற்கு நிலையான பாசனமும், 27 எக்டேர் விடுப்பட்ட நிலத்திற்கு பாசனமும் 405 எக்டேர் புன்செய் நிலத்திற்கு புதிய பாசன வசதியும் அளிக்கப்படும்.

கல்லணையின் கட்டுமானப் பணிகளின் ஒரு பகுதி முடிந்துள்ளது. கல்லணையின் எஞ்சிய பணிகள் கால்வாய் வெட்டும் வேலைகள் நீர்வளத் தொகுப்புத் திட்டத்தின் கீழ் செயலாக்கப்படும்.

**9.2. மதுராந்தகம் வலது கரை கால்வாய்த் திட்டம். (அண்ணா மாவட்டம்).**

மதுராந்தகம் ஏரியிலிருந்து கால்வாய் வெட்டி மதுராந்தகம் மற்றும் செய்யூர் வட்டங்களில் இரண்டாம் போக சாகுபடிக்கு 211 எக்டேர் நிலங்களுக்கு புதிய பாசன வசதி அளிப்பதோடல்லாமல், 478 எக்டேர் நிலங்களுக்கு உறுதியான பாசனம் அளிப்பதும் இத்திட்டத்தின் நோக்கமாகும்.

இத்திட்டத்தில் சில இறுதி சிறு பணிகள் தவிர அனைத்துப் பணிகளும் முடிக்கப்பட்டு விட்டன.





**9.3. சண்முகா நதி நீர்த்தேக்கம் (மதுரை மாவட்டம்)**

மதுரை மாவட்டம் உத்தமபாளையம் வட்டத்திலுள்ள ராயப்பன்பட்டி கிராமத்தருகே சண்முகாநதியின் (வரட்டாறு) குறுக்கே இந்நீர்த்தேக்கம் அமைக்கப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தினால் உத்தமபாளையம் வட்டத்தில் 664 எக்டேர் புதிய புன்செய் நிலங்களுக்கு பாசன வசதியளிக்கப்படும். மண் அணையின் கட்டுமானம் ஏறக்குறைய முடிவடைந்துவிட்டது. மிகைநீர் போக்கி மற்றும் மதகு பகுதிகளில் பணிகள் முன்னேற்றத்திலுள்ளன. மொத்தமாக 60 விழுக்காடு பணிகள் முடிவடைந்துள்ளன.

**9.4. கொடுமுடியார் நீர்த்தேக்கம் (திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டம்) நீர்வளத் தொகுப்புத் திட்டம்**

திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டம் நாங்குநேரி வட்டத்தில் திருக்குருங்குடி கிராமத்தில், கொடுமுடியாறும், கோம்பையாறும் கூடுமிடத்தில் இந்நீர்த்தேக்கம் அமைக்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தினால் இராதாபுரம், நாங்குநேரி வட்டங்களில், 791 எக்டேர் நிலையான பாசன வசதியும், 779 எக்டேர் விடுபட்ட நிலங்களுக்கு பாசனமும், 193 எக்டேர் ஒரு போக நிலங்களுக்கு இருபோக பாசன வசதியும் கிடைத்திட வழிசெய்யப்பட்டுள்ளது.

கால்வாய் மேம்பாட்டுப் பணிகள் ஏறக்குறைய முடிவடைந்துவிட்டன. நீர்த்தேக்க கட்டுமான பணிகள் நீர்வள தொகுப்புத் திட்டத்தின் கீழ் எடுக்கப்பட உள்ளன. இத்திட்டத்திற்காக வனத்துறைக்குச் சொந்தமான நிலங்களும் கணிசமான பட்டா நிலங்களும் கையகப்படுத்த வேண்டியுள்ளது. நிலம் கையகப்படுத்தும் வேலைகள் முடிந்தபின் நீர்வளத் தொகுப்புத் திட்டத்தின் கீழ் இப்பணிகள் எடுத்துக் கொள்ளப்படும்.

**9.5. 1996-97-ல் அறிவிக்கப்பட்ட திட்டங்களும் அவைகளின் முன்னேற்றமும்**

**9.5.1. செண்பகத் தோப்பு நீர்த்தேக்கத் திட்டம் (திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டம்)**

இத்திட்டம் திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டம் போளூர் வட்டத்தில் செண்பகத் தோப்பு கிராமத்தில் கமண்டலாற்றின் குறுக்கே

அமையவுள்ளது. இத்திட்டத்தினால் ஆரணி மற்றும் போளூர் வட்டங்களில் 2067 எக்டேர் நிலங்களுக்கு நிலையான பாசன வசதியும், 642 எக்டேர் விடுபட்ட நிலங்களுக்கு பாசன வசதியும் கிடைக்கும். மேலும் இத்திட்டம், பருவ மழையை மட்டுமே நம்பியிருக்கும் இப்பின் தங்கிய பகுதியின் நீண்ட நாளைய தேவையான பாசன வசதியை நிறைவேற்றுவதுடன் சிறு விவசாயிகளின் வாழ்க்கைத்தரமும் மேன்மையடைய வழி செய்யும்.

இத்திட்டப் பணியின் கால்கோள் விழா 1997 சனவரித் திங்களில் நடத்தி வைக்கப்பட்டது. பணிகளைத் துவக்குவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இத்திட்டத்திற்கு "நாபார்டு" வங்கி கடனுதவி செய்ய முன்வந்துள்ளது.

### 9.5.2. ஆண்டியப்பனூர் ஓடை திட்டம்

வடாற்காடு - அம்பேத்கர் மாவட்டத்தில் வாணியம்பாடி வட்டத்தில் ஆண்டியப்பனூர் கிராமத்தினருகே ஆண்டியப்பனூர் ஓடையின் குறுக்கே ஒரு நீர்த்தேக்கம் அமைக்க இத்திட்டம் வகை செய்கிறது.

இத்திட்டம் செயல்படுத்தப்படுவதால் 810 எக்டேர் பாசன நிலம் இருபோக புன்செய் சாகுபடியின் கீழ்வரும்.

இத்திட்டத்தை நிறைவேற்ற ரூ.1828 இலட்சங்களுக்கு ஒப்புதல் வழங்கியுள்ளது.

விரிவான ஆய்வுப் பணிகளும் செயலாக்க மதிப்பீடுகள் தயாரிக்கும் பணிகளும் நடந்து வருகின்றன.

### 9.5.3. வரட்டாறு - குப்பத்து ஓடை திட்டம்

இத்திட்டம் திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டத்தில் வரட்டாறு மற்றும் குப்பத்து ஓடை என்ற காட்டாறுகளின் குறுக்கே ஒரு நீர்த்தேக்கம் அமைக்க வகை செய்கிறது. இத்திட்டம் நிறைவேற்றப்படுவதால் தென்காசி மற்றும் வி.கே. புதூர் வட்டங்களில் கார் பருவத்தில் 88 எக்டேர், பிசானம் பருவத்தில் 77 எக்டேர் நிலத்திற்கு பாசன வசதியும், கார் பருவத்தில் 0.55 எக்டேர், பிசானம் பருவத்தில் 77 எக்டேர் நிலம் பாசன



உறுதியும் பெறும். மேலும் நிலத்தடி நீர்ப் பெருக்கத்தால் 375 எக்டேர் நிலமும் பயனடையும்.

ரூ. 878 லட்சத்திற்கு அரசு இத்திட்டத்திற்கு அங்கீகாரம் அளித்துள்ளது. ஆனால் விரிவான ஆய்வுப் பணிகள் தொடங்க பொதுமக்கள் எதிர்ப்பு தெரிவித்து நீதிமன்றத்திலே இது தொடர்பாக வழக்கு ஒன்று நிலுவையில் உள்ளது. முன் ஆய்வுப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

### 9.5.4. மதுரை மாவட்டத்தில் உசிலம்பட்டி வட்டத்தில் 58 கிராமங்களுக்கு பாசன வசதி அளித்தல்.

வைகை அணையின் வழிந்தோடியிலிருந்து 2,425 மீட்டர் தூரத்தில் வைகை அணையின் வலது கோடியில் ஒரு உயர் மட்ட கால்வாய் 27.20 கி.மீ. நீளத்திற்கு அமைக்க இத்திட்டம் வகை செய்கிறது. லைனிங் செய்யப்படாத இக்கால்வாய் இராமநாதபுரம் பெரிய கண்மாய் மற்றும் வைகை அணை நிரம்பி வழியும்போது உபரி வெள்ள நீரைப் பயன்படுத்தி உசிலம்பட்டி வட்டத்தில் உள்ள 58 கிராமங்களுக்கு பாசன வசதியளிக்க உள்ளது. இத்திட்டத்தில் மூன்று புதிய கண்மாய்கள் அமைப்பதும் அடங்கியுள்ளது. இத்திட்டச் செயலாக்கத்தினால் 570 எக்டேர் நஞ்சை நிலத்திற்கு நிலையான பாசன வசதி கிடைக்கிறது. மேலும் உசிலம்பட்டி வட்டத்தில் உள்ள மூன்று கசிவுநீர் குட்டைகள், 29 கண்மாய்களின் கீழ் உள்ள நன்செய் நிலங்கள் 128 எக்டேர் விடுபட்ட நிலங்கள் பயனடையும். இவை தவிர புதிதாக உருவாக்கப்படவுள்ள 3 கண்மாய்கள் மூலமாக 227 எக்டேர் புதிய புஞ்சை நிலமும் பாசன வசதி பெறும்.

அரசு இத்திட்டத்திற்கு ரூ.3381 இலட்சம் ஒப்புதல் வழங்கியுள்ளது. திட்டப் பணிகளின் துவக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

## 10. கூடுதல் பாசன வசதி

நடுத்தர பாசனத் திட்டங்களினால் 1997-98 ஆம் ஆண்டில் 2.183 எக்டேர் நிலங்களுக்கு பாசன வசதியளிக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

[1997 மார்ச் 24

## 11. 1997-98-ம் ஆண்டில் எடுத்துக்கொள்ளப்படும் புதிய திட்டங்கள் (பகுதி II திட்டங்கள்)

| வ.எண் திட்டத்தின் பெயர் | மதிப்பீடு ரூபாய் லட்சத்தில் | 1997-98 ஆண்டிற்கு நிதி ஒதுக்கீடு ரூபாய் லட்சத்தில் |
|---|---|---|
| **சிறுபாசன திட்டம்** | | |
| 1. திருவள்ளுவர் மாவட்டம் பெரம்பலூர் வட்டம் மலையாளப்பட்டி கிராமமருகே கல்லாறு ஆற்றின் குறுக்கே ஒரு புதிய ஏரி அமைத்தல். | 310.00 | 25.00 |
| **கடலரிப்பு தடுப்புத் திட்டங்கள்** | | |
| 2. நாகை–காயிதே மில்லத் மாவட்டம் மயிலாடுதுறை வட்டம் தரங்கம்பாடியில் கற்குவியல் கடலரிப்பு தடுப்புச் சுவர் கட்டுதல். | 56.06 | 15.00 |
| 3. இராமநாதபுரம் மாவட்டம் இராமநாதபுரம் வட்டம் கிழக்கரையில் கற்குவியல் கடலரிப்பு தடுப்புச் சுவர் கட்டுதல். | 86.54 | 20.00 |
| **சிறப்பு சிறுபாசனத் திட்டங்கள்** | | |
| 4. வடாற்காடு - அம்பேத்கர் மாவட்டம் திருப்பத்தூர் வட்டம் ஏ.கே. மோட்டூர் கிராமத்தில் ஒரு குட்டை அமைத்தல். | 2.90 | 0.90 |
| 5. வடாற்காடு - அம்பேத்கர் மாவட்டம் வாணியம்பாடி வட்டம் வலயம்பட்டு கிராமத்தின் சிற்றூரான லாலா ஏரி அருகில் ஒரு குட்டை அமைத்தல். | 16.80 | 5.00 |



1997 மார்ச் 24]

| வ.எண் திட்டத்தின் பெயர் | மதிப்பீடு ரூபாய் லட்சத்தில் | 1997-98 ஆண்டிற்கு நிதி ஒதுக்கீடு ரூபாய் லட்சத்தில் |
|---|---|---|
| 6. திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டம் செங்கம் வட்டம் அரட்டவாடி கிராமத்தில் ஒரு குட்டை அமைத்தல் | 2.15 | 0.60 |
| 7. தர்மபுரி மாவட்டம் ஊத்தங்கரை வட்டம் மாவத்தூர் ஏரியிலிருந்து ஆனந்தூர் ஏரிக்கு வரத்துக் கால்வாய் வெட்டுதல். | 8.40 | 2.50 |
| 8. திருச்சி மாவட்டம் லால்குடி வட்டம் தாப்பாய் கிராமமருகே உள்ள ஓடையின் குறுக்கே ஒரு புதிய ஏரி அமைத்தல். | 35.90 | 10.00 |
| 9. தஞ்சாவூர் மாவட்டம் பட்டுக்கோட்டை வட்டம் மதுக்கூர் கிராமத்தில் உள்ள கருப்பேரி கண்மாய்க்கு நீர் வழங்க பட்டுவனாச்சி ஓடையின் குறுக்கே மகாதேவிபுரம் கிராமத்தில் ஒரு அணைக்கட்டு கட்டுதல். | 31.90 | 9.60 |
| 10. புதுக்கோட்டை மாவட்டம் ஆவுடையார் கோயில் வட்டம் பரிவீரமங்கலம் மற்றும் தாளனூர் ஏரிகளுக்கு நீர் வழங்க கொழுவனாற்றின் குறுக்கே ஒரு அணைக்கட்டு கட்டுதல். | 39.35 | 11.80 |

| வ.எண் | திட்டத்தின் பெயர் | மதிப்பீடு ரூபாய் லட்சத்தில் | 1997-98 ஆண்டிற்கு நிதி ஒதுக்கீடு ரூபாய் லட்சத்தில் |
|---|---|---|---|
| 11. | பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் மாவட்டம் காரைக்குடி வட்டம் நென்மேனி, களத்தூர் மற்றும் இதர ஏரிகளுக்கு நீர் வழங்க கொட்டகுடி ஆற்றின் குறுக்கே ஒரு அணைக்கட்டு கட்டுதல். | 53.65 | 16.00 |
| 12. | காமராசர் மாவட்டம் விருதுநகர் வட்டம் எரிச்சநத்தம் மற்றும் இதர ஏரிகளுக்கு நீர் வழங்க உப்போடையின் குறுக்கே அழகாபுரி கிராமமருகே ஒரு அணைக்கட்டு கட்டுதல். | 62.00 | 18.60 |
| 13. | தஞ்சாவூர் மாவட்டம் பட்டுக்கோட்டை வட்டம் மகாதேவபுரம் கிராமத்தில் பழைய ஏரியை புனரமைத்தல். | 25.00 | 7.50 |
| 14. | புதுக்கோட்டை மாவட்டம் ஆவுடையார் கோயில் வட்டம் கானூர் ஏரிக்கு நீர் வழங்க கொழுவனாற்றின் குறுக்கே தற்போதுள்ள மண் அணையை கல்லணையாக மாற்றுதல். | 15.50 | 4.70 |
| 15. | இராமநாதபுரம் மாவட்டம் திருவாடனை வட்டம் உருவட்டி மற்றும் இதர ஏரிகளுக்கு நீர் வழங்க சருகனி ஆற்றின் குறுக்கே ஒரு அணைக்கட்டு கட்டுதல். | 60.75 | 18.20 |





**11. மாண்புமிகு முதல்வர் அவர்கள் நிதிநிலை அறிக்கையில் அறிவித்த பின்வரும் திட்டங்களும் 1997-98 ஆம் ஆண்டு செயல்படுத்தப்பட உள்ளன.**

**11. அ.1. பத்தலப்பள்ளி மலட்டாறு நீர்த் தேக்கத் திட்டம்**

வடாற்காடு–அம்பேத்கர் மாவட்டம், குடியாத்தம் வட்டம், பத்தலபள்ளி கிராமம் அருகே மலட்டாறு நீர்த்தேக்கத் திட்டம், இறுதி திட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ. 25.49 கோடியில் செயல்பாட்டிற்கு எடுத்துக் கொள்ளப்பட உள்ளது. இத்திட்டம் மூன்றாண்டுகளில் செயல்படுத்தப்படும்.

இத்திட்டத்தினால் குடியாத்தம் வட்டத்தில் 1064 எக்டேர் நிலங்களுக்கு பாசன உறுதியும் 61 எக்டேர் விடுபட்ட பாசன நிலங்களுக்கு பாசனமும் கிடைக்கப் பெறும். இத்திட்டத்தில் பேரணாம்பட்டு நகரம் மற்றும் வழியில் அமைந்துள்ள கிராமங்களுக்கு குடிநீர் வசதியும் மற்றும் தொழிற்சாலைகளுக்கு நீர் வழங்கவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது. மேலும் தோல் பதனிடும் தொழிற்சாலைகளினால் பாதிக்கப்பட்ட கிணறுகள் காலப் போக்கில் மீண்டும் பாசனத்திற்கும் குடிநீருக்கும் ஏற்றதாக மாறும்.

**11. அ.2. குப்பநத்தம் நீர்த் தேக்கத் திட்டம்**

திருவண்ணாமலை–சம்புவராயர் மாவட்டம், செங்கம் வட்டம், குப்பநத்தம் கிராமமருகே செய்யாற்றின் குறுக்கே ஒரு நீர்த்தேக்கம் அமைக்கும் திட்டம் ரூ. 35.46 கோடியில் செயல்பாட்டிற்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது. இத்திட்டம் மூன்றாண்டுகளில் செயல்படுத்தப்படும்.

இத்திட்டத்தினால் திருவண்ணாமலை மற்றும் செங்கம் வட்டத்தில் உள்ள 22 ஏரிகள், செய்யாற்றின் குறுக்கே உள்ள ஐந்து அணைக்கட்டுகள், மற்றும் இரண்டு நேரடி கால்வாய்களின் மூலம் 2528 எக்டேர் நிலங்களுக்கு பாசன உறுதியும், 580 எக்டேர் விடுபட்ட பாசன நிலங்களுக்கு பாசனமும் கிடைக்கப் பெறும். இத்திட்டத்தினை செயல்படுத்துவதால் நெடுங்காலமாக பின்தங்கிய பருவகால மழைநீரையே எதிர்பார்த்து கொண்டிருக்கும் இப்பகுதிக்கு பாசன வசதி கிடைக்க வாய்ப்புள்ளது. மேலும் இத்திட்டத்தினால் சிறு விவசாயிகளின் வாழ்க்கைத்தரம் உயரவும் வாய்ப்புள்ளது.

[1997 மார்ச் 24

**11. அ.3. வரட்டாறு - வள்ளி மதுரை நீர்த் தேக்கத் திட்டம்**

தர்மபுரி மாவட்டம், அரூர் வட்டம், வள்ளி மதுரை கிராமம் அருகே நீர்த்தேக்கம் அமைக்கும் திட்டம் ரூ.19.20 கோடியில் செயல்பாட்டிற்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது. இத்திட்டம் மூன்றாண்டுகளில் செயல்படுத்தப்படும்.

இத்திட்டத்தினால் அரூர் வட்டத்தில் உள்ள ஆறு கிராமங்களில் 1,047 எக்டேர் ஒரு போக புன்செய் பயிர் செய்வதற்கும், மேலும் கீரைப்பட்டி அணைக்கட்டு, எல்லப்புடயாம்பட்டி அணைக்கட்டு மற்றும் மாங்குப்பம் ஏரி ஆகியவற்றின்கீழ் பாசனம் பெறும் 110 எக்டேர் நன்செய் நிலங்களுக்கு பாசன உறுதியும் கிடைக்கும். இத்திட்டம் விவசாயத்தை மேம்படுத்துவதுடன், இப்பகுதியில் உள்ள ஏழை மக்களின் பொருளாதார நிலையையும் உயர்த்தும்.

**11. அ.4. கால்வாய் சடையநேரி**

சிதம்பரனார் மாவட்டம், சாத்தான்குளம் வட்டத்தில் உள்ள கால்வாய் சடையநேரி வாய்க்காலை அகலப்படுத்துதல் மற்றும் விரிவுபடுத்தும் திட்டம் ரூ. 1,2.33 கோடியில் தாமிரபரணியில் வெள்ள நீர் மிகுதியாக போகும் காலங்களில் இவ்வாற்றின் குறுக்கே உள்ள மருதூர் அணைக்கட்டின் வலதுபுறமாக செல்லும் மருதூர் மேலக்கால் கால்வாய் வழியாக திருப்பி விடுவதற்காக புத்தன்தருவை வரை விரிவுபடுத்தப்பட உள்ளது. இத்திட்டத்தினால் சடையநேரி வாய்க்கால் மூலம் பாசனம் பெறும் 17 ஏரிகளின்கீழ் உள்ள 314 எக்டேர் நன்செய் நிலங்களுக்கு பாசன உறுதியும், மேலும் சாத்தான்குளம் வட்டத்தில் வைரவன்தருவை, புத்தன்தருவை வாய்க்கால் பகுதிகளில் உள்ள 634 கிணறுகளுக்கு நிலத்தடி நீர் அதிகரிப்பும் ஏற்பட வாய்ப்பு உள்ளது. இதனால் 405 எக்டேர் தென்னை சாகுபடிக்கு தண்ணீர் உறுதியாக கிடைக்கும். மேலும் மிகுதியாகும் வெள்ள நீரை திருப்புவதால் இப்பகுதியில் நிலத்தடி நீரில் கடல் நீர் உட்புகுவதைத் தடுப்பதுடன், குடிநீர் பிரச்சினை தீரவும் வாய்ப்பு ஏற்படும்.



1997 மார்ச் 24]

**12. தமிழ்நாடு நீர்வள ஆதாரத் தொகுப்புத் திட்டம்**

(1) தமிழ்நாடு நீர்வள ஆதாரத் தொகுப்புத் திட்டமானது ரூ. 1,140 கோடிக்கு தயாரிக்கப்பட்டு உலக வங்கியால் 1995 ஆம் ஆண்டு ஜூன் திங்களில் அங்கீகரிக்கப்பட்டது. தமிழக அரசு இத்திட்டத்திற்கு அடிப்படை விலையின்படி ரூபாய் 807.49 கோடிக்கு நிர்வாக ஒப்புதல் வழங்கியுள்ளது.

(2) இத்திட்டம் மாநிலம் தழுவிய பகுதி முதலீட்டுத் திட்டமாக நடைமுறைப்படுத்தப்படும். இத்திட்டம் தமிழ்நாட்டுப் பாசனப் பிரிவின் நீடித்த வளர்ச்சி மூலம் உற்பத்தியைப் பெருக்க உதவும். பாசனப் பிரிவின் நீடித்த வளர்ச்சியானது வேளாண் மக்களை பாசன மேலாண்மையில் ஈடுபடுத்துதல், நீர்வள அபிவிருத்தி, நீர் மேலாண்மை மற்றும் நீர்வளத் திட்டமிடல் போன்றவற்றில் நிறுவனம் மற்றும் தொழில்நுட்பத் திறனை வலுப்படுத்துதல் ஆகியவற்றிற்குப் பெரிதும் உதவும்.

(3) இத்திட்டம் 4 மில்லியன் வேளாண் மக்களுக்கு நேரடிப் பயனளிக்கும். இத்திட்டம் 0.7 மில்லியன் எக்டேர் நிலத்தில் வேளாண் உற்பத்தியைப் பெருக்கும். (இது இம்மாநிலத்தின் பாசனப் பரப்பில் 50 விழுக்காடாகும்.) பாசன ஆதாரங்களைப் புனரமைத்து நவீனப்படுத்துவதன் மூலமும் முன்னேறிய பராமரிப்பு மற்றும் நீர் மேலாண்மை இவற்றில் வேளாண் மக்களை இணைப்பதன் மூலமும் பாசனம் ஒரு நீடித்த வளர்ச்சியிலான அடித்தளத்தில் அமையும்.

(4) இத்திட்டம் காவிரி பெரும்பாசனத் திட்டம் தவிர ஏனைய அனைத்துப் பாசன திட்டங்களின் புனரமைப்பு மற்றும் நவீனப்படுத்தலுக்கு வழி கோலும். மேலும் சிறுபாசனத் திட்டங்களான பொய்கையாறு, நம்பியாறு, சோத்துப்பாறை, மோர்தானா, ராசாத்தோப்புக் கானாறு, கொடுமுடியாறு `வடக்குப் பச்சையாறு' அடவிநயினார்கோயில், கிருதமால் ஆகிய நிறைவேறி வரும் பாசனத் திட்டங்களை முடிப்பதற்கும் வழிகோலும்.

(5) இந்த அரசு இத்திட்டத்திற்கு முக்கியத்துவம் அளித்து 6/96 முதல் 1/97 முடிய ரூ.137.91 கோடி மதிப்பீட்டில் 22 பணிகளுக்கு ஒப்புதல் வழங்கியுள்ளது. இந்த மதிப்பீடுகளின் விவரம் பின்வருமாறு :—

ரூ. லட்சங்களில்

| வரிசை எண் | திட்டம்/பணியின் பெயர் | தொகை |
|---|---|---|
| 1. | புனரமைப்பு மற்றும் நவீனப்படுத்தும் பணிகள் முதல் கட்டம் | |
| | **செய்யாறு அணைக்கட்டுத் திட்டம்** | |
| | செய்யாறு மற்றும் போளூர் வட்டங்களில் உள்ள அணைக்கட்டுகள், கால்வாய்கள் புனரமைக்கும் பணி | 95.47 |
| | **சித்தாறு அணைக்கட்டுத் திட்டம்** | |
| | பாவூர், திருச்சிற்றம்பலம், மாறாந்தை வீராணம், உக்கிரன் கோட்டை, அழகியபாண்டியபுரம் ஆகிய அணைக்கட்டுகள் மற்றும் கால்வாய்களை புனரமைக்கும் பணி | 287.00 |
| | **மஞ்சளாறு பாசனத் திட்டம்** | |
| | அணைக்கட்டுகள், ஊட்டுக்கால்வாய்கள் மதகுகள் முதலியவற்றின் புனரமைக்கும் பணி | 39.20 |
| | **பாலாறு அணைக்கட்டு பாசனம்** | |
| | வடாற்காடு அம்பேத்கர் மாவட்டத்திலுள்ள மகேந்திரவாடி வாய்க்கால், காவேரிப்பாக்கம் கீழ் உள்ள சிறுவாய்க்கால்கள், செய்யார் வட்டத்தில் உள்ள தூசி மாமண்டூர் சீரமைத்தல் மற்றும் ராஜாக்கால் தலைமதகு புனரமைக்கும் பணி | 236.00 |
| | **பரம்பிக்குளம்—ஆளியாறு பாசனத் திட்டம்** | |
| | வேட்டைக்காரன் புதூர், பெரிய குமார பாளையம் | |



ரூ. லட்சங்களில்

| வரிசை எண் | திட்டம்/பணியின் பெயர் | தொகை |
|---|---|---|
| | கொடுவை அழகுமலை, உடுமலைப்பேட்டை பிரதானக் கால்வாய், பூலான்கிணர் புதுப்பாளையம், மனுப்பட்டி, திருப்பூர் மற்றும் பொள்ளாச்சி கால்வாய்கள், பரம்பிக்குளம் பிரதான கால்வாய் மற்றும் சமமட்டக் கால்வாய் புனரமைக்கும் பணி | 3795.52 |
| | **பொய்னை அணைக்கட்டுத் திட்டம்** | |
| | புனரமைத்தல், கூடுதல் மதகு கட்டுதல் மற்றும் மதகு உயர்த்தல் பணிகள் | 35.90 |
| | **திருக்கோவிலூர் அணைக்கட்டுத் திட்டம்** | |
| | ராகவையன் வாய்க்கால், மலட்டார், எல்லிஸ்சத்திரம் அணைக்கட்டு, ரெட்டி, பம்பை, அலங்கல் வாய்க்கால்கள் மற்றும் கிளை வாய்க்கால்களை புனரமைக்கும் பணி | 401.78 |
| | **வைகை பழைய பாசனப் பகுதி** | |
| | வீரகனூர் மதகின் கீழ் உள்ள இடது பிரதான வாய்க்கால் புனரமைக்கும் பணி | 598.90 |
| | **சிறுபாசனத் திட்டங்கள்** | |
| | கிருஷ்ணகிரி, ஈச்சம்பாடி, பாம்பார், வாணியாறு, குல்லூர் சந்தை மற்றும் கோல்வார்பட்டி நீர்த் தேக்கங்கள் மற்றும் மெகமத்தூர் மற்றும் விருசூலியார் அணைக்கட்டுகள் மற்றும் சர்குணியார் பாசன அமைப்புகளின் புனரமைக்கும் பணிகள் | 865 11 |

[1997 மார்ச் 24

ரூ. லட்சங்களில்

| வரிசை எண் | திட்டம்/பணியின் பெயர் | தொகை |
|---|---|---|
| | **இரண்டாம் கட்டம்** | |
| | கோதையார் பாசன அமைப்பு | |
| | கோதையார் இடது கால்வாய், சித்தார் ஊட்டுக் கால்வாய், புத்தன் அணைக்கட்டு, பட்டிணங்கால், பாண்டியன்கால், தோவாளைகால், அனந்தனார்கால், அனந்தனார் என்பி. பிபி கால்வாய்கள் மற்றும் கிளைகால்வாய்கள் புனரமைக்கும் பணி | 1442.84 |
| | மருதாநதி பாசன அமைப்பு | |
| | மருதாநதி அணை, வலது மற்றும் இடது பிரதான கால்வாய், பழைய மற்றும் புதிய ஆயக்கட்டுகளின் பாசன அமைப்பு, வரத்துக் கால்வாய்கள், கண்மாய்கள் புனரமைக்கும் பணி | 79.15 |
| | சாத்தனூர் பாசன அமைப்பு | |
| | சாத்தனூர் வலது மற்றும் இடது கரை பிரதான கால்வாய், கிளை கால்வாய்கள் புனரமைக்கும் பணி | 732.64 |
| | தாமிரபரணி பாசன அமைப்பு | |
| | கடம்பா மாற்று வாய்க்காலில் குறுக்கு கட்டுமானப் பணிகள், வட மற்றும் தென் கொடைமேலழகியான் அணைக்கட்டுகள், கன்னடியன் அணைக்கட்டு, பலவூர் அணைக்கட்டு மற்றும் கால்வாய்கள், பாளையம் வாய்க்கால், கிளை வாய்க்கால்களை புனரமைக்கும் பணி | 739.90 |



1997 மார்ச் 24]

ரூ. லட்சங்களில்

| வரிசை எண் | திட்டம்/பணியின் பெயர் | தொகை |
|---|---|---|
| | **பெரியார் வைகை திட்டம்** | |
| | பெரியார் பிரதான கால்வாயின் 1 முதல் 6, 9வது கிளைகால்வாய்கள் மற்றும் 8வது பிரிவு வாய்க்கால், திருமங்கலம் பிரதான வாய்க்கால்களை புனரமைத்தல் மற்றும் ஏரிகளுக்கு மாற்று கால்வாய் அமைத்தல் | 535.40 |
| | **விவசாய சங்கங்கள் அமைத்தல்** | |
| | பாசன பராமரிப்பு பணிகளை விவசாயிகளிடம் ஒப்படைப்பது தொடர்பான ஆலோசனை வழங்கும் பணிக்கான ஒப்பந்தங்களை அண்ணா பல்கலைக் கழகம் மற்றும் அரசுசாரா அமைப்புகளிடம் ஒப்படைப்பது தொடர்பாகவும், மதுரை மற்றும் திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் விவசாய கருத்தரங்குகள் நடத்தவும் | 86.79 |
| | **பாசன மேலாண்மை பயிற்சி நிலையம்-திருச்சி** | |
| | பயிற்சி நிலையத்தை மேம்படுத்தும் பணிகளுக்காக | 112.00 |
| | **இயக்கம் மற்றும் பராமரிப்புக்கான தளவாடங்கள்** | |
| | கனரக இயந்திரங்கள் வாங்க, நில அளவு உபகரணங்கள் தொலைத் தொடர்பு அமைப்புக்கு ஆலோசனை வழங்க | 535.84 |
| | **நீர்திட்டமிடுதல்** | |
| | தரமணி நீர்வள ஆராய்ச்சி மையத்திற்கு சுற்றுச் சுவர் கட்டுதல் மற்றும் ஜன்னல்களுக்கு கிரில் அமைக்கும் பணிக்காக | 11.41 |
| | பூண்டியிலுள்ள நீரியியல் மற்றும் நீர்நிலையியல் ஆய்வு மையத்தை பலப்படுத்தும் பணிகளுக்காக | 522.44 |

[1997 மார்ச் 24

ரூ. லட்சங்களில்

| வரிசை எண் | திட்டம் / பணியின் பெயர் | தொகை |
|---|---|---|
| | *துறை பலப்படுத்தும் பணிகள்* | |
| | முதன்மை தலைமைப் பொறியாளர் மற்றும் சென்னையில் உள்ள சிறப்பு தலைமைப் பொறியாளர்கள் அலுவலகங்கள் மற்றும் மண்டல பொறியாளர்கள் அலுவலகக் கட்டடங்கள் கட்டவும், அலுவலர்கள் குடியிருப்பு கட்டவும், நீர்வள ஆதார அமைப்பின் பொறியாளர்கள் முதுகலை பட்ட மேற்படிப்பு பயிலவும் | 888.11 |
| | நீர்வள ஆதார அமைப்பிலுள்ள தலைமை மற்றும் கண்காணிப்புப் பொறியாளர் அலுவலகங்களுக்கு கணிப் பொறிகள் வாங்குவதற்காக | 492.70 |
| | நீர்வள ஆதார அமைப்பிலுள்ள அலுவலகங்களுக்கு வாகனங்கள் ·வாங்குவதற்காக | 1256.70 |
| | | 13790.80 |
| | | (அ) ரூ. 137.91 கோடிகள் |

(6) 1997-98 ஆம் ஆண்டிற்கு ரூ.171.62 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 13. பெரியாறு வைகை மேம்பாடுத் திட்டம்

பாசன நீர் வாய்க்கால் வழி ஓடும்போதும் கழனியில் பயன்படுத்தும் பொழுதும் வீணாவதை, கால்வாய் அமைப்பைப் புதுப்பித்தல் மூலமும், பாசன அமைப்பை நவீனப்படுத்துதல் மூலமும் குறைக்க இத்திட்டம் வகை செய்கிறது. இவ்வாறு சேமிக்கப்படும் பாசன நீர் பாசன வசதிகளை விரிவுபடுத்தப் பயன்படுத்தப்படுகிறது. இத்திட்டம் இரு நிலைகளில் நிறைவேற்ற எடுத்துக் கொள்ளப்பட்டது.

இத்திட்டத்தின் முதல் நிலைப் பணிகள் ஜூலை 1977 இல் துவக்கப்பட்டு ரூ. 46.40 கோடி செலவில் உலக வங்கி கடனுதவியுடன் ஆகஸ்டு 1984-ல் முடிவுபெற்றது. இதனால் மதுரை மற்றும் பசும்பொன்



1997 மார்ச் 24]

முத்துராமலிங்கத் தேவர் மாவட்டங்களில் 10,305 எக்டேர் கூடுதல் நிலப்பரப்பு பாசன வசதி பெற்றுள்ளது.

திட்டத்தின் இரண்டாம் நிலைப் பணிகள் 35 மில்லியன் அமெரிக்க டாலர் (33.20 மில்லியன் எஸ்.டி.ஆர்.) உலக வங்கி கடனுதவியுடன் 8,539 எக்டேர் மதுரை மற்றும் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் மாவட்டங்களில் பாசன வசதி ஏற்படுத்துவதற்கு 1983 அக்டோபர் திங்கள் முதல், முதல்நிலைப் பணிகளுடன் இணைந்து செயல்படுத்தப்பட்டது.

திட்டத்தின் இரண்டாம் நிலைப் பணிகளின் மறு மதிப்பீடு ரூ. 148 கோடியாகும். 1995-96 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் முடிய மொத்த செலவினம் ரூ. 136.14 கோடி.

பெரியாறு பிரதான கால்வாயில் வண்டல படிவதைத் தடுக்கவும் பாசன அமைப்பின் நிலையை செம்மைப்படுத்தவும் வைகை அணைக்கு 1 கி.மீ. கீழேயுள்ள எடுப்பு (பிக் அப்) அணையையும் பேரணை அருகே பெரியாறு பிரதான வாய்க்காலையும் இணைப்பதற்கு இணைப்பு வாய்க்கால் அமைக்கும் பணி 1991 ஆம் ஆண்டு ரூ. 25 கோடி மதிப்பீட்டில் எடுத்துக் கொள்ளப்பட்டு, பணி முடிவு பெற்று உபயோகத்தில் உள்ளது. உலக வங்கி கடனுதவி 1993 ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்துடன் முடிவுற்றது.

அக்டோபர் 1993-க்குப் பின்னால் இணைப்புக் கால்வாயில் உள்ள எஞ்சிய பணிகள் தொடரப்பட்டு இப்பொழுது முடிக்கப்பட்டுள்ளன.

இணைப்புக் கால்வாய் பகுதியில் மதுரை மற்றும் திண்டுக்கல்-மன்னர் திருமலை மாவட்டங்களில் 1,620 எக்டேர் கூடுதல் பாசனப் பரப்பிற்கு பாசன வசதி அளிக்க பங்கீடு அமைப்புகள் மற்றும் கடைகோடி கால்வாய்கள் அமைக்கும் பணிகள் தமிழ்நாடு நீர்வள ஆதார தொகுப்பு திட்டத்தின் கீழ் எடுத்துக் கொள்ளத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. மேலும் பெரிய கண்மாய்கள் சீரமைப்புப் பணிகட்கும் நேரடி வாய்க்கால்களுக்கும், குறுக்கு வடிகால் பணிகட்கும் நீரளவை கருவிகளுக்கும் ஆக ரூ. 8.33 கோடியையும் சேர்த்து பெரியார் வைகை திட்டப் பணிகளுக்கு மொத்தமாக ரூ. 20 கோடிக்கு தமிழ்நாடு நீர்வள ஆதார ஒருங்கிணைப்புத் திட்டத்தின்கீழ் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.

திட்டப் பாசன பகுதியின் கடை கோடி பகுதியில் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் மாவட்டம் திருப்பத்தூர் வட்டத்தில் உள்ள

திருப்பத்தூர் கண்மாய் மற்றும் அதன்கீழ் உள்ள 13 கண்மாய்கள் சிவகங்கை வட்டத்தில் உள்ள மறவமங்கலம் கண்மாய் மற்றும் அதன் கீழ் உள்ள 40 கண்மாய்கள் இவைகளின் மூலம் 2,183 எக்டேர் பாசன வசதி அளிக்க மொத்தம் ரூ.8.84 கோடி செலவில் வேலைகள் நடைபெற்று வருகின்றன.

**14. பாசனக்கணிப்பு மற்றும் செயல் திட்டம் (பாசன வாரச்சந்தை) :**

வேளாண் மக்களுக்கும், நீர்வள அமைப்பின் அலுவலர்களுக்கும் இடையே நெருங்கிய ஒத்துழைப்பையும் பிணைப்பையும் ஏற்படுத்தும் ஒரு சிறப்பான திட்டத்தை நடைமுறைப்படுத்த இந்த அரசு முடிவெடுத்துள்ளது. "பாசனக் கணிப்பு மற்றும் செயல் திட்டம்" என்னும் இத்திட்டத்தின் கீழ், பிரிவு மட்டத்திலுள்ள நீர்வள அமைப்பின் அலுவலர் தனது ஆளுமைக்கு உட்பட்ட பகுதியிலுள்ள வேளாண் மக்களை தனது அலுவலகத்தில் ஒவ்வொரு திங்கட்கிழமையும் மாலை 3-00 மணிக்குச் சந்திப்பார். வேளாண் பெருங்குடி மக்கள் பாசனம் தொடர்பான தங்கள் குறைகளை பிரிவு அலுவலரிடம் தெரிவித்தால், அக்குறைகளை விரைவில் நீக்குவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படும். மேலும் நீர் வழங்கலும் மற்றும் பங்கீடு செய்வதும் வேளாண் மக்களின் கருத்துக்களின் அடிப்படையில் செய்யப்படும்.

மேலும் வேளாண் மக்களின் குறைகள் ஒரு பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டு அக்குறைகளை அகற்ற எடுக்கப்பட்ட நடவடிக்கையும் பதிவேட்டில் பதிவு செய்யப்படுவதுடன் இப்பதிவேடு உயர்மட்ட அலுவலர்களால் ஆய்வு செய்யப்படும்.

**15. பாசன ஆதாரங்களிலுள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றுதல் :**

பாசன ஆதாரங்களான ஆறுகள், அணைகள், நீர்த்தேக்கங்கள், ஏரிகள், வாய்க்கால்கள், கண்மாய்கள், வரத்துக்கால்வாய்கள் ஆகியவற்றை ஆக்கிரமிப்பது என்பது ஒரு கொடிய நச்சு நோயாகப் பரவி வருகிறது.

இத்தகைய ஆக்கிரமிப்புகளை அகற்றி, பாசன ஆதாரங்களை செம்மைப்படுத்தி, பாசன நீர் வினியோகம் திறம்பட நடந்திடத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் இந்த அரசு எடுத்திட உள்ளது.

இது தவிர, பாசன ஆதாரங்களில் வளர்ந்து காடாய் மண்டியுள்ள கருவேல மரங்கள், பிற வகை செடிகளை உடனடியாக அகற்றி, பாசன



ஆதாரங்களை, அவற்றின் திட்டமிடப்பட்ட கொள்ளளவுக்குக் கொண்டு வருவது என்பதை இவ்வரசு தலையாய நோக்கமாகக் கொண்டுள்ளது.

**16. சிறுபாசனம் :**

**16.1. ஐரோப்பிய குழு உதவியுடன் ஏரிகள் நவீனப்படுத்தும் திட்டம் : முதல் கட்டம்**

200 எக்டேருக்குக் குறைவான பாசனப் பரப்புடைய மழை நீர் பெறும் 206 ஏரிகள் ரூ. 52.44 கோடி செலவில் சீரமைக்கப்பட்டன. இத்திட்டம் 1984-ம் ஆண்டு சூலைத் திங்களில் துவக்கப்பட்டு 1991-ம் ஆண்டு செப்டம்பர் திங்களில் நிறைவுற்றது. இதன் மூலம் 4,002 எக்டேர் நிலங்கள் பாசனவசதி பெறுவதுடன் மொத்தம் 28,780 எக்டேர் நிலங்கள் பயன் பெறுகின்றன.

இத்திட்டம் அண்ணா, எம்.ஜி.ஆர். வடஆற்காடு—அம்பேத்கர், தென்னாற்காடு—வள்ளலார், திருவண்ணாமலை—சம்புவராயர், புதுக்கோட்டை, பசும்பொன் விழுப்புரம்—இராமசாமி படையாச்சியார், முத்துராமலிங்கத் தேவர், இராமநாதபுரம், காமராஜர் மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டது.

**16.2. ஐரோப்பிய குழு உதவியுடன் ஏரிகள் நவீனப்படுத்தும் திட்டம்— இரண்டாம் கட்டம்.**

100 எக்டேர் முதல் 200 எக்டேர் வரை பாசனப் பரப்புடைய மழை நீர் பெறும் ஏரிகளையும், 4 எக்டேர் முதல் 50 எக்டேர் வரை பாசனப் பரப்புடைய முன்னாள் சமீன் ஏரிகளையும் நவீனப்படுத்தும் திட்டம் 1989-ம் ஆண்டு ஆகஸ்டு திங்களில் துவக்கப்பட்டது. இத்திட்டத்தின் திருத்திய மதிப்பீடு ரூ. 115 கோடி ஆகும். 1995-96-ம் நிதி ஆண்டு வரை 266 மழைநீர் பெறும் ஏரிகளிலும், 80 முன்னாள் சமீன் ஏரிகளிலும், வேலைகள் எடுத்துக்கொள்ளப்பட்டு ரூ. 86.28 கோடி செலவில் 192 பெரிய ஏரிகளிலும், 80 முன்னாள் சமீன் ஏரிகளிலும் வேலைகள் நிறைவுற்றன. இதன் மூலம் 4,736 எக்டேர் நிலங்கள் கூடுதல் பாசன வசதி பெற்றன. 400 எக்டேர் நிலங்கள் கூடுதல் பாசன வசதி பெறுவதுடன் மொத்தம் 2,023 எக்டேர் நிலங்கள் பயனடைகின்ற வகையில் 1996-97ம் ஆண்டு 15 மழைநீர் பெறும் ஏரிகளில் பணிகள் முடித்திட திட்டமிடப்பட்டது.

இத்திட்ட விரிவாக்கத்தின் கீழ் மேலும் 100 பெரிய ஏரிகளை நவீனப்படுத்த ஐரோப்பிய குழு அனுமதி அளித்துள்ளது. இதில் 50 ஏரிகளில் ரூ.8.63 கோடி மதிப்பீட்டில 1996-97-ல் பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டன.

1997-98ம் ஆண்டுக்கு இத்திட்டத்திற்கு ரூ.17.89 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 40 ஏரிகளில் வேலைகள் நிறைவுற்று சுமார் 1,080 எக்டேர் நிலங்கள் கூடுதல் பாசனவசதி பெறுவதுடன் 5,380 எக்டேர் நிலங்கள் பயன்பெறும். இத்திட்டம் 1999-ம் ஆண்டு டிசம்பர் திங்களில் நிறைவடையும்.

இத்திட்டத்தில், அண்ணா, எம்ஜி.ஆர்., வட ஆற்காடு—அம்பேத்கர் திருவண்ணாமலை-சம்புவராயர், தென்னாற்காடு—வள்ளலார், விழுப்புரம்-இராமசாமி படையாச்சியார், திருச்சி-பெரும்பிடுகு முத்தரையர், பெரம்பலூர்-திருவள்ளுவர், கரூர்-தீரன் சின்னமலை, திண்டுக்கல்-மன்னர் திருமலை, மதுரை, வைகை-வீரன் அழகுமுத்து, பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர், இராமநாதபுரம், காமராஜர், சிதம்பரனார் மற்றும் திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டங்களில் செயல்படுத்தப்படுகிறது.

**16.3. ஐரோப்பிய குழு உதவியுடன் கிராம முன்னேற்றத்திற்காக ஏரிகள் மேம்படுத்தும் திட்டம் - மூன்றாம் கட்டம்.**

40 எக்டேர் முதல் 100 எக்டேர் வரை பாசனப் பரப்புடைய 3,000 மழைநீரை நம்பியுள்ள ஏரிகளை மேம்படுத்த ரூ. 270 கோடி மதிப்பீட்டில் திட்டம் ஒன்று ஐரோப்பிய குழுவிற்கு ஆகஸ்டு 1996-ல் அனுப்பி வைக்கப்பட்டது. இத்திட்டம் சென்னை மற்றும் நீலகிரி மாவட்டங்கள் தவிர மற்ற அனைத்து மாவட்டங்களிலும் செயல்படுத்தப்படும். இத்திட்டத்தின் மூலம் சுமார் 7,417 எக்டோ நிலங்கள் கூடுதல் பாசன வசதி பெறுவதுடன் மொத்தம் 1,51,800 எக்டேர் நிலங்கள் பயனடையும்.

**16.4 ஜப்பானிய உதவியுடன் கிராம முன்னேற்றத்திற்காக ஏரிகளை புனரமைக்கும் திட்டம்.**

40 எக்டேர் முதல் 400 எக்டேர் வரை பாசனப பரப்புடைய 2.500 மழை நீரை நம்பியுள்ள ஏரிகளை ரூ. 270 கோடி செலவில் புனரமைக்கும் திட்ட அறிக்கையொன்று மத்திய அரசுக்கு செப்டம்பர் 1994-ல் அனுப்பி வைக்கப்பட்டது. "ஜப்பான் ஓவர்சீஸ் எகனாமிக் கோவாபரேசன் நிதி"யிலிருந்து இத்திட்டத்திற்கு உதவி பெறும் பொருட்டு, திட்டம்



விரிவாக ஆய்வு செய்யப்பட வேண்டும் என்ற மைய அரசு ஆலோசனையின் பேரில், விரிவாக ஆய்வு செய்ய ஆகஸ்டு 1996-ல் ஒப்பந்தம் ஆனது. அந்த ஒப்பந்தத்தின்படி "ஜப்பான் இண்டர்நேஷனல் கோவாபரேசன் ஏஜென்சி"யின் ஆய்வுக் குழு முதல் கட்டமாக விரிவான ஆய்வை 5-12-1996 முதல் 17-2-1997 வரை மேற்கொண்டது. இரண்டாம் கட்டமாக மே 1997 முதல் செப்டம்பர் 1997 வரை ஆய்வு மேற்கொள்ளப்படும்.

இந்த ஆய்வுக்குப்பின் திட்ட அறிக்கை 1997 செப்டம்பர் திங்களில் இறுதியாக்கப்பட்டு "ஜப்பான் ஓவர்சீஸ் எகனாமிக் கோவாபரேசன் நிதி"யிலிருந்து உதவி பெற அனுப்பி வைக்கப்படும். இத்திட்டத்தின் மூலம் சென்னை மற்றும் நீலகிரி மாவட்டங்கள் தவிர மற்ற அனைத்து மாவட்டங்களில் உள்ள ஏரிகள் பயன்பெறும். இத்திட்டத்தின் மூலம் 17,250 எக்டேர் நிலங்கள் கூடுதல் பாசனம் பெறுவதுடன் மொத்தம் 1,41,450 எக்டேர் நிலங்கள் பயன் பெறும்.

**16.5 உலக வங்கி உதவியுடன் கிராம முன்னேற்றத்திற்காக சிறுபாசன ஏரிகள் புனரமைக்கும் திட்டம்.**

இம்மாநிலத்தில் 39,202 ஏரிகள் உள்ளன. இதில் 5,242 மழைநீரை நம்பியுள்ள ஏரிகளும் 3,697 சீராக நீர்பெறும் ஏரிகளும் பொதுப்பணித் துறையின்கீழ் உள்ளன. மேலும் 9,850 முன்னாள் ஜமீன் ஏரிகளும், 20,413 ஊராட்சி ஒன்றிய ஏரிகளும் உள்ளன.

எந்தத் திட்டத்திலும் சீர் செய்யவும், நவீனப்படுத்தவும் எடுத்துக் கொள்ளப்படாத ஏரிகளை நன்கு ஆய்வு செய்து, அவற்றை மேம்படுத்துவதற்கான வழிமுறைகளைக் கண்டறிய ஓர் உயர்மட்டக் குழுவை அரசு அமைத்துள்ளது. இக்குழுவின் அறிக்கையின் அடிப்படையில் 8000 மழைநீர் பெறும் ஏரிகளை சீரமைக்க ரூ 2,570 கோடி மதிப்பீட்டில் திட்ட அறிக்கை உலக வங்கி நிதி உதவி பெற பிப்ரவரி 1997-ல் மைய அரசுக்கு அனுப்பிவைக்கப்பட்டது. இத்திட்டத்தில் ஏரிகளில் தூர் எடுத்தல், கரைகளை வலுப்படுத்துதல், மதகுகளைப் புதுப்பித்தல் மற்றும் சீர் செய்தல், வரத்துக் கால்வாய் மற்றும் பாசன கால்வாய்களை சீர்செய்தல் போன்ற பணிகள் எடுத்துக் கொள்ளப்படும்.

இத்திட்டத்தின் வாயிலாக சென்னை மற்றும் நீலகிரி மாவட்டங்கள் தவிர அனைத்து மாவட்டங்களிலுள்ள ஏரிகள் பயன்பெறும். இதன் மூலம் சுமார் 1,07,500 எக்டேர் நிலம் கூடுதல் பாசனவசதி பெறுவதுடன் மொத்தம் 4,51,500 எக்டேர் நிலங்கள் பயன்பெறும்.

## 16.6 மாநில ஏரிப்பாசனத் திட்டம்

தமிழ்நாட்டில் பொதுப்பணித் துறைக்கு சொந்தமான 8,939 ஏரிகளும் 9,850 முன்னாள் ஜமீன் கண்மாய்களும் உள்ளன. ஏரிகளைத் தரப்படுத்தவும், நவீனப்படுத்தவும் மட்டுமே தமிழ்நாடு அரசு 1995-96இல் இத்திட்டத்தினை அமுல்படுத்தியது.

இத்திட்டம் இரு பிரிவுகளைக் கொண்டது. முதல் பிரிவு முன்னாள் ஜமீன் ஏரிகளைத் தரப்படுத்தி மேம்படுத்துவது ஆகும். இரண்டாவது பிரிவு பொதுப்பணித் துறையின் பொறுப்பில் உள்ள மற்ற ஏரிகளை தரப்படுத்துவதும் மேம்படுத்துவதும் ஆகும். அனைத்து முன்னாள் ஜமீன் ஏரிகளையும் தரப்படுத்திய பிறகு மேற்கொண்டு பராமரிப்பிற்காக ஊராட்சி ஒன்றியங்களுக்கோ அல்லது பொதுப்பணித் துறைக்கோ பாசனப் பரப்பிற்கு தகுந்தாற்போல் ஒப்படைக்கப்படும்.

இத்திட்டத்தின்கீழ், 1996-97 ஆம் ஆண்டு முன்னாள் ஜமீன் ஏரிகளுக்காக ரூ.500 இலட்சமும், பொதுப்பணித் துறை ஏரிகளுக்காக ரூ.500 இலட்சமும் ஒதுக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கு 1997-98-ம் ஆண்டு ரூ.980 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 16.7 சிறப்புச் சிறுபாசனத் திட்டம்.

இத்திட்டத்தின்கீழ் பாசன உறுதியளிக்கக் கூடியதும் கூடுதல் பாசனம் அளிக்கக்கூடியதுமான புது ஏரிகள் அமைத்தல், அணைக்கட்டு கட்டுதல், இணைப்புக் கால்வாய் வெட்டுதல், பழுதடைந்த ஏரிகளை புனரமைத்தல், குட்டைகள் அமைத்தல் போன்ற பணிகள் அடங்கும். தூர் வாரி புனரமைக்கும் திட்டங்களில் வண்டல் படிவினால் கொள்ளளவு குறைந்துபோன ஏரிகளைத் தூர்வாரியும் ஏரியின் எதிர்வாயில் உள்ள நிலம் ஏரித் தண்ணீரால் மூழ்காவண்ணம் நிலத்தை சீர் செய்யும் பணியும் அடங்கும்.

1996-97ஆம் ஆண்டில் சிறப்பு சிறுபாசனத் திட்டம் மற்றும் தூர்வாரி புனரமைக்கும் திட்டத்திற்கான நிதி ஒதுக்கீட்டுத் தொகை முறையே ரூ.559 இலட்சம், ரூ.1.2 இலட்சம் ஆகும். இதனால் 750 எக்டேர் நிலங்கள் பாசன வசதி பெறும்.



1996-97-ல் இத்திட்டத்தின்கீழ் 40 பழைய பணிகள் செயலாக்கத்தில் இருந்தன. அரசு 1996-97-ல் 13 புதிய பணிகளுக்கு மொத்தம் ரூ.294.35 லட்சத்திற்கு ஒப்புதல் அளித்தது.

750 எக்டேர் நிலப்பரப்பில் கூடுதல் பாசன வசதி செய்யும்பொருட்டு 1997-98ஆம் ஆண்டில் ரூ.345.40 இலட்சம் சிறப்பு சிறுபாசனத்திற்கும் ரூ.8.95 இலட்சம் தூர்வாரி ஏரிகளை சீரமைக்கும் திட்டத்திற்கும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 16.8 ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டம்

பழங்குடி மக்களின் தரத்தை உயர்த்தவும் அவர்களுக்கு மேம்பட்ட பாசன வசதிகளை அளிப்பதற்காகவும் ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டம் ஒன்றை மத்திய அரசு உதவியுடன் மாநில அரசு தொடங்கியுள்ளது. தமிழ்நாடு அரசு கீழ்க்கண்ட மாவட்டங்களில் உள்ள மலைப் பகுதிகளை "பழங்குடியினர் பகுதியாக " தேர்ந்தெடுத்துள்ளது.

1. வட ஆற்காடு - அம்பேத்கர்
2. திருவண்ணாமலை - சம்புவராயர்
3. விழுப்புரம் - ராமசாமி படையாச்சியார்
4. சேலம்
5. இராஜாஜி
6. தர்மபுரி
7. பெரம்பலூர் திருவள்ளுவர்

இத்திட்டத்தின்கீழ் மலைப்பகுதிகளில் பாசன வசதியை மேம்படுத்த தடுப்பு அணைகள் கட்டுதல், கசிவு நீர் குட்டைகள் அமைத்தல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

1997-98ஆம் ஆண்டில் இப்பணிக்கு ரூ.19.30 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 16.9 மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டம்

மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம் நீலகிரி மாவட்டத்தில் 1978-79ஆம் ஆண்டிலிருந்து செயல்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ்

மத்திய அரசின் 100 சதவிகித நிதி உதவியுடன் காட்டோடைகளின் குறுக்கே தடுப்பு அணைகள் கட்டப்படுகின்றன.

உதக மண்டலத்தில் உள்ள ஏரியை தூர்வாரும் பொருட்டு ரூ.196.52 இலட்சத்திற்கு தமிழக அரசு நிர்வாக ஒப்புதல் அளித்துள்ளது. இதுவரை 80 விழுக்காடு வேலைகள் முடிக்கப்பட்டுள்ளன. எஞ்சிய வேலைகளை முடிக்க 1997-98-ல் ரூ. 100 இலட்சம் நிதி ஒதுக்கீடு கோரப்பட்டுள்ளது.

### 16.10 மேற்கு தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டம்

1986-87ஆம் ஆண்டு முதல் கோயம்புத்தூர், பெரியார், திண்டுக்கல், மன்னர் திருமலை, மதுரை, காமராசர், திருநெல்வேலி - கட்டபொம்மன் மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களின் 24 வட்டங்களை தெரிந்தெடுத்து மேற்கு தொடர்ச்சி மலை மேம்பாட்டுத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. தடுப்பு அணைகள் கட்டுதல், குட்டைகள் அமைத்தல், வரத்துக் கால்வாய்களை மேம்படுத்துதல் போன்ற பணிகள் 100 விழுக்காடு மத்திய அரசு நிதி உதவியுடன் செயல்படுத்தப்படுகிறது.

1997-98-ஆம் ஆண்டிற்கு ரூ.22 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 17. வேளாண் பெருங்குடி மக்களுக்கு பாசன மேலாண்மையில் பயிற்சியளித்தல்

பாசனக் கட்டமைப்புகள் பராமரித்தல் மற்றும் பாசன நீர் மேலாண்மையில், வேளாண் பெருங்குடி மக்கள் ஈடுபடுவதை ஊக்குவிக்கும் வகையில், வேளாண் பெருங்குடி மக்களுக்கு பயிற்சி அளிக்கும் பெரும் பணியில் திருச்சி மாவட்டம் துவாக்குடியில் உள்ள பாசன மேலாண்மை மற்றும் பயிற்சி நிலையம் ஈடுபடுத்தப்பட்டுள்ளது. இப்பயிற்சி திட்டத்தை விரிவாக்கி தேசிய நீர் மேலாண்மைத் திட்டத்தின்கீழ் கட்டப்பட்ட பயிற்சி மையங்களிலும் பயிற்சி அளிக்கப்படும்.

### 18. மாவட்டந்தோறும் பாசன கருத்தரங்குகள் நடத்துதல்

வேளாண் மக்களுக்கு பயிற்சியளிப்பதோடல்லாமல் அவர்களுடன் நல்ல தொடர்பினை ஏற்படுத்திக் கொள்ளும் வகையிலும், பாசன வசதிகள் பற்றிய விவசாயிகளின் கருத்துக்களை அறிந்து கொள்ளும் வகையில் அரசின் பாசனம் மற்றும் விநியோகம் பற்றிய கொள்கைகளை





விவசாயிகள் தெரிந்து கொள்ளும் வகையிலும் நீர்ப்பாசனக் கருத்தரங்குகளை முன்பு இந்த அரசு நடத்தியது. சென்ற ஆட்சியில் இத்தகைய கருத்தரங்குகளை நடத்துவது மிகவும் தொய்வடைந்துவிட்டது. இந்த ஆண்டு முதல் விவசாயக் கருத்தரங்குகள் மாவட்டம் தோறும் நடத்தப்படும். முதற்கட்டமாக, இத்தகைய கருத்தரங்குகள் திருநெல்வேலி-கட்டபொம்மன், மதுரை மற்றும் வைகை-வீரன் அழகுமுத்து ஆகிய மாவட்டங்களில் நடைபெறவுள்ளன.

இவ்வாறு நடக்கவுள்ள கருத்தரங்கு வேளாண்பெருங்குடி மக்களும், பாசனத்திலும் வேளாண்மையிலும் செயல்படும் அலுவலர்களும் வல்லுநர்களும் தங்கள் கருத்துக்களையும் அனுபவங்களையும் பரிமாறிக் கொள்ளவும், உள்ள பிரச்சனைகளை நன்கு கலந்துரையாடி பாசனத்தில் மேம்பாடு அடைந்திடவும் அதன் மூலமாக பசுமைப் புரட்சி ஓங்கிடவும் வழி வகுக்கும்.

### 19. காவிரி டெல்டாப் பகுதிகளில் கனரக இயந்திரங்களைக் கொண்டு தூர் எடுத்தல்

காவிரியாற்றின் டெல்டா பகுதியில் ஆறுகள், வடிகால்கள் மற்றும் வாய்க்கால்களில் அவ்வப்போதைய வெள்ள நீர் வரத்துக் காரணமாக தூர்சேர்ந்து விடுகிறது. மேலும், நெய்வேலி காட்டாமணக்குச் செடிகளின் அபரிமிதமான வளர்ச்சியும் இந்நீர் ஆதாரங்களின் பாசன மேலாண்மையிலும் வெள்ளக் கட்டுப்பாட்டு பணிகளிலும் சிக்கல்களை ஏற்படுத்துகின்றன. இந்த தடங்கல்களினால் பாசன காலங்களில் கடைகோடி பகுதிக்கு பாசனநீர் கிடைப்பதில் குறைவும் வெள்ளக் காலங்களில் பயிர்கள் வெள்ளத்தில் மூழ்கி விடும் நிலையும் இருந்துவருகின்றன.

எனவே ஒவ்வொரு ஆண்டும், வேளாண்மை பொறியியல் துறையிலிருந்தும் மற்றும் தனியார் நிறுவனங்களிடமிருந்து புல்டோசர்களை வாடகை அடிப்படையில் தருவித்து, தூர்வாருவதும் காட்டாமணக்கு செடிகள் அகற்றுவதும் வாடிக்கையாய் உள்ளது. கடந்த வருடம் (1996-97) 615 கி.மீ. நீளத்திற்கான வாய்க்கால்கள் ரூ.231 இலட்சம் செலவில் தூர்வாரி காட்டாமணக்குச் செடிகள் அகற்றப்பட்டன. வேளாண்மை பொறியியல் துறையினின்று 40 புல்டோசர்கள் இதற்காக வாடகைக்கு அமர்த்தப்பட்டன.

இவ்வாறான பணிகளுக்கு, ஆண்டுதோறும் மராமத்து செலவுக்காக ஒதுக்கீடு செய்யப்படும் தொகை போதுமானதாக இல்லை என்பதால் 1997-98 ஆண்டிற்கு சிறப்பு ஒதுக்கீடு செய்ய அரசால் முடிவெடுக்கப்பட்டுள்ளது.

காவிரி டெல்டா பகுதியில் தூர் வாரப்படவுள்ள ஆறுகள், 1569 கி.மீ. நீளத்திற்கும் வடிகால்கள் 784 கி.மீ. நீளத்திற்கும் மற்றும் வாய்க்கால்கள் 1100 கி.மீ. நீளத்திற்கும் உள்ளன. இவற்றில், இவ்வாண்டில் உடனடியாக கவனம் செலுத்தி துரித நடவடிக்கைகளை எடுக்கப்பட வேண்டிய பகுதிகளில் பணிகள் மேற்கொள்ளப்படும்.

500 கி.மீ. நீளத்திற்கு ஆறுகள் மற்றும் வடிகால்களிலும் 1470 கி.மீ. நீளத்திற்கு வாய்க்கால்களிலும் மேலும் 100 ஏரிகளிலும், புல்டோசர்களைப் பயன்படுத்தி தூர்வாரி காட்டாமணக்குச் செடிகள் அகற்றப்படுவதுடன், ஆங்காங்கே கட்டுப்பாட்டு கட்டுமானங்களில் (Control Structures) நேர்ந்துள்ள பழுதுபார்ப்புப் பணிகளும் செய்யப்படவுள்ளன.

நீர்ப்பங்கீடு நிர்வாகம் செவ்வனே நடைபெற நீர்க்கட்டுப்பாட்டு அமைப்புகள், மதகுகள், படுகை அணைகள் இவைகளைப் பழுதுபார்ப்பதோடு அல்லாமல் மதகு அடைப்பான்களைப் பழுதுபார்த்தலும் மற்றும் புதுப்பித்தலும் இப்பணியில் அடங்கும்.

இதற்காக 157 புல்டோசர்கள், 5 மண் எடுக்கும் கனரக இயந்திரம், 13 தானியங்கி லாரிகள் முதலியன வேளாண்மை பொறியியல் துறையினரிடமிருந்தும், தனியாரிடமிருந்தும் பெற்று இப்பணிகட்கு உபயோகிக்கப்படவுள்ளன. இந்தப் பணி 1997 மார்ச் திங்களில் தொடங்கி ஜூன் 1997க்குள் முடிக்கப்படும்.

மேற்கண்ட பணிகளுக்காக அரசு 1997-98ம் ஆண்டில் ரூபாய் 1000 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

**20. கிருஷ்ணா குடிநீர் வழங்கும் திட்டம்.**

தற்பொழுது சென்னை நகரின் குடிநீர்த் தேவைக்கு நாள் ஒன்றுக்கு 440 மில்லியன் லிட்டர் மட்டும் கிடைக்கிறது. சென்னை நகர குடியிருப்பு, வணிக மற்றும் தொழிற்சாலைப் பயன்பாட்டுக்காக கி.பி.2000 ஆண்டின் தேவை நாள் ஒன்றுக்கு 1294 மில்லியன் லிட்டர் ஆக இருக்கும் என்று கணக்கிடப்பட்டுள்ளதால் வெளியிலுள்ள நீராதாரங்களின் உதவியை நாடுவது தவிர்க்க முடியாததாகியுள்ளது.



இந்தப் பின்னணியில் 18-4-1983 அன்று தமிழ்நாடு அரசும் ஆந்திர அரசும் இணைந்து ஒரு கூட்டுத் திட்டத்தை மேற்கொள்ள உடன்படிக்கை செய்துகொண்டன. இதன் அடிப்படையில், ஆந்திர மாநிலம் ஆண்டுதோறும் குறிப்பிட்ட 8 மாதங்களில் மொத்தமாக 15 ஆ.மி.க. கிருஷ்ணா நீரை (இதில் வழியில் சேதமாகும் 3 ஆ.மி.க. அடங்கும்) ஆந்திரா—தமிழ்நாடு எல்லையில் வழங்க வேண்டும். இத்திட்டத்தின் ஆந்திர எல்லைக்குட்பட்ட பணிகள் "தெலுங்கு கங்கைத் திட்டம்" என்றும், தமிழ்நாடு எல்லைக்குட்பட்ட பணிகள் 'கிருஷ்ணா குடிநீர் வழங்கும் திட்டம்' என்றும் வழங்கப்படுகின்றன.

1996-97-ம் ஆண்டு விலை வீதப்படி கிருஷ்ணா குடிநீர் வழங்கும் திட்டத்தின் மதிப்பீடு ரூ.182.12 கோடியாகும். இதுவரை 151.96 கோடி செலவிடப்பட்டுள்ளது.

தெலுங்கு கங்கைத் திட்டத்ினுடைய மொத்த மதிப்பீடு ரூ.2190 கோடியாகும். (தெலுங்கு கங்கைத் திட்டம் ரூ.1405 கோடி மற்றும் சோமசிலா இரண்டாம் கட்டப்பணி ரூ.785 கோடி) இரு மாநிலங்களிடையே நீரின் பயன்பாட்டு வீத அடிப்படையில், தெலுங்கு கங்கைத் திட்ட மதிப்பீடான ரூ.2190 கோடியில் தமிழ்நாட்டின் பங்கு ரூ.521 கோடியாகும்.

புதிய அரசு பொறுப்பேற்றதும் தமிழக முதல்வர் முதல் நடவடிக்கையாக பொதுப் பணித் துறை அமைச்சரை ஆந்திரா முதல்வருடன் கலந்துரையாடி, பணிகளை விரைவு படுத்தி, விரைவில் சென்னைக்கு கிருஷ்ணா குடிநீர் வழங்கும் வழிவகைகளை ஆராய அனுப்பி வைத்தார். இவ்விருவரிடையே 8-6-1996 அன்று நிகழ்ந்த இந்த உரையாடலின் முடிவில் ஒரு கூட்டறிக்கை வெளியிடப்பட்டது. அதில் ஆந்திர அரசு தமிழ் நாட்டுக்கு அதன் எல்லையில் ஆகஸ்ட், செப்டம்பர் மாதங்களில் 3 ஆ.மி.க நீரையும், எஞ்சியுள்ள 9 ஆ.மி.க நீரை தொடர்ந்து 2 தவணைகளில் முறையே 4 ஆ.மி.க 5 ஆ.மி.க. என்ற அளவிலும் வழங்க ஒப்புக்கொண்டது. தமிழ்நாடும் தெலுங்கு கங்கைத் திட்டப் பணிகளுக்காக தன் பங்கில் மேலும் ரூ.50 கோடி வழங்கும் என்று அறிவித்தது. அவ்வாறே, 1996ம் ஆண்டு ஜூலை, ஆகஸ்ட் செப்டம்பர் மாதங்களில் ரூ.60 கோடி வழங்கவும் செய்தது. இதையும் சேர்த்து தமிழ்நாடு இதுவரை ஆந்திராவுக்கு மொத்தம் ரூ.512 கோடி வழங்கியுள்ளது. தொடர்ந்து பின் 29-9-1996 அன்று நிகழ்ந்த உரையாடல்களுக்குப் ஊத்துக்கோட்டையை அடுத்த தமிழ்நாடு எல்லையில் மேற்சொன்னவாறு 3 ஆ.மி.க நீர்வழங்க உறுதி அளிக்கப்பட்டது.

அதன்படியே 29-9-1996 அன்று காலை ஆந்திரா-தமிழ்நாடு எல்லையில் ஆந்திர முதல்வர் கிருஷ்ணா நீரை முறைப்படி திறந்துவிட, தமிழக் முதல்வர் பெற்ற கோலாகல நிகழ்வுடன், அன்று மாலையே சென்னையில் ராஜாஜி கூடத்தில் சென்னை நகருக்கு கிருஷ்ணா குடிநீர் வரப்பெற்றதைக் கொண்டாடும் மிகப்பெரும் விழா ஒன்றும் நடந்தேறியது. கிருஷ்ணா நீர் தொடர்ந்து வழங்கப்பட்டு, 16-10-1996 வரை மொத்தம் 73.366 மி.க.அ. நீர் வந்து சேர்ந்த நிலையில், ஆந்திரப் பகுதியிலுள்ள கண்டலேறு-பூண்டி கால்வாயில் ஏற்பட்ட சில இடர்பாடுகள் காரணமாக நீர்வரத்து நிறுத்தப்பட்டது.

இக்கால்வாயில் வரதபாளையம் அருகேயும் சக்தியவேடு அருகேயும் ஏற்பட்ட பெரும் நீர்க்கசிவு காரணமாகவும், இடையில் முற்றிலும் தகர்த்து அகற்றப்படாத பாறைப்பகுதி காரணமாகவும் கால்வாயில் நீர் ஒழுக்கும் தமிழக எல்லையில் நீர் வரத்தும் பாதிக்கப்பட்டன. மேலும் கால்வாயில் நீர் வரத்து முழு அளவை எட்டும் வேளையில், 8-10-1996 அன்று கொன்னாலி கிராம எல்லையில் கால்வாயின் வலது கரையில் ஏற்பட்ட உடைப்பு காரணமாக கண்டலேறு அணையிலிருந்து நீர் வரத்து முற்றிலுமாக நிறுத்த வேண்டியதாயிற்று. இதனைத் தொடர்ந்து அக்டோபர் 1996ல் ஆந்திர பகுதிகளில் ஏற்பட்ட புயல் வெள்ளம் காரணமாகவும் கால்வாயில் மேலும் பல உடைப்புகளும் சேதங்களும் ஏற்பட்டன.

இவை அனைத்தும் காரணமாக, திட்டமிட்டப்படி தமிழகத்துக்கு நீர் வரத்தை உறதிசெய்யவும் எஞ்சியுள்ள பணிகளை முடிக்கவும், சேதங்கள் ஏற்பட்ட பகுதிகளைப் பழுது பார்க்கவும் அதற்குத் தேவையான மதிப்பீட்டை முடிவுசெய்யவும் அடுத்து கால்வாயில் நீர் திறந்துவிடும் நாளை முடிவு செய்யவும் இரு அரசு அலுவலர்களும் அடங்கிய ஒரு கூட்டுத் தொழில்நுட்ப வல்லுநர் குழுவை அமைத்தன. இக்குழு கால்வாயை நெடுகிலும் பார்வையிட்டு ஆந்திர அரசால் முடிக்கப்படவேண்டிய பணிகளைப்பற்றி வழங்கிய பரிந்துரைகளின் அடிப்படையில் ஆந்திர அரசும் ரூ. 5 கோடி மதிப்புள்ள கூடுதல் பணிகளைச் செய்ய ஒப்புதல் வழங்கியது.

இதனைத் தொடர்ந்து ஒரு செயல் திட்டத்தை தெலுங்கு கங்கைத் தலைமைப் பொறியாளருடன் கலந்து முடிவு செய்த ஆந்திர அரசு ஜூன் 1997-க்குள் அனைத்துப் பணிகளும் முடிக்கப்படும் என்றும், சென்னை நகருக்கு கிருஷ்ணா நீரை வழங்க கண்டலேறு பூண்டி





கால்வாயில் ஜூலை முதல் நாளன்று நீர் திறந்துவிடப்படும் என்றும் அறிவித்தது.

கால்வாயின் அனைத்துப் பகுதிகளிலும் இப்பணிகள் துவக்கப்பட்டு விட்டன. கடந்த 1-3-1997 அன்று ஸ்ரீகாளஹஸ்தியில் ஒரு கலந்துரையாடல் கூட்டம் நிகழ்ந்தது. குடிநீர் திட்டத் தலைமைப் பொறியாளர் ஆகியோர் இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில் 1997ல் ஜூலை முதல் நாளன்று நீர் வழங்க முன்னர் அறிவித்ததை மாற்றி, அதற்கும் முன்னதாகவே-ஜூன் முதல் நாளன்றே நீர் திறந்து விடப்படும் என்று ஆந்திர அரசு ஒப்புக்கொண்டது.

## 21. மாநில நில மற்றும் மேற்பரப்பு நீர் ஆதார விவரக்குறிப்பு மையம்

நீர்வளம் குழுமத்தின் மாநில நில மற்றும் மேற்பரப்பு நீர் ஆதார விவரக் குறிப்பு மையம், இயற்கையில் கிடைத்திருக்கும் நில நீர் வளத்தைக் கணக்கிடவும் நிலநீர் உபயோக வளர்ச்சியை மேம்படுத்த நிலநீர் வழங்கல் மற்றும் நீர் மேலாண்மைக்காகவும் தமிழகத்தின் அனைத்து இடங்களிலும் முறையான அறிவியல் ரீதியாக ஆய்வுப் பணிகளை மேற்கொண்டு வருகிறது. 1996-97-ம் ஆண்டில் இதற்கான திட்ட மதிப்பீடு ரூ. 10.87 இலட்சங்களாகும். தமிழகம் முழுவதிலும் மேற்பரப்பு நீர் ஆதார விவங்களைச் சேகரிப்பதிலும் இத்துறை பொறுப்பு வகிக்கிறது.

1996-97ம் ஆண்டில், மாநில முழுவதிலும் உள்ள சுமார் 2500 பார்வைக் கிணறுகளின் நிலநீர்மட்ட ஏற்றத் தாழ்வுகளை மாதந்தோறும் கண்காணிப்பதும் நிலநீர் மற்றும் மேற்பரப்பு ஆகியவற்றின் தன்மைகளைக் கண்காணிக்க 9,000 நீர் மாதிரிகளைச் சேகரிப்பதும் ஆகிய ஆய்வுப் பணிகள் நடைபெற்றுள்ளன. நிலத்தின் கீழ் பரப்பில் உள்ள நிலவியல் நிலநீர் நிலவியல் இயல்புகளை அறிய தீவிர நிலவியல், நிலநீர் நிலவியல், நிலவியல் மற்றும் நிலவியற்பின் ஆய்வுகள் நடத்தப் பெற்றுள்ளன. செயற்கைக் கோள் படங்கள் மற்றும் தொலை உணர் நிழற்படங்களையும் பயன்படுத்தி, 24,000 சதுர கி.மீ. பரப்புள்ள நிலமேற்பரப்பு மற்றும் நிலப் பயன்பாட்டு வரைபடங்கள், நிலவியல் வரை படங்கள், ஆகியன தயாரிக்கப்பட்டு 12,000 சதுர கி.மீ. பரப்புள்ள பகுதிகளில் நிலநீர் உபயோக வளர்ச்சிக்கான இடங்களை துல்லியமாக அறிய நேரடியாக சரிபார்த்து முடிக்கப் பெற்றுள்ளது.

கீழ்க்கண்ட சிறப்பாய்வுகள் நடத்தப்பட்டுள்ளன :

1. செயற்கை முறையில் நிலநீர் கொள்திறனுக்கான ஆய்வு

2. நீர்த் தேக்கங்கள் மற்றும் தாங்கல்களின் பாசனப் பரப்பில் மேற்பரப்பு நீரையும் நில நீரையும் சேர்த்து பயன்படுத்தும் ஆய்வுப்பணி.

3. கடற்கரையோரப் பகுதிகளில் நன்னீர் படுகையினுள் கடல் நீர் உட்புகுதலைக் கண்காணித்தல்.

4. தொழிற்சாலைகளில் இருந்து வெளியேறும் கழிவுகள், விளைநிலங்களுக்கு உரமிடுதலால் நில நீரின் தன்மையில் ஏற்படும் கேடுகளை அறிந்து அளவிடல்.

வேளாண் மக்கள், பொதுமக்கள், அரசுத் துறைகள் மற்றும் அரசுத் துறைகளைச் சார்ந்த நிறுவனங்கள் ஆகியோரின் நிலநீர்த் தேவைக்காக கிணறுகள், துளைக் கிணறுகள் அமைக்கவும் ஏற்கனவே உள்ள கிணறுகளை ஆழப்படுத்தவும் சுமார் 576 இடங்களில் ஆலோசனை ஆய்வுப் பணிகள் ஆற்றப்பட்டுள்ளன. இவை தவிர, பொதுப் பணித் துறையின் நில நீர்ப்பிரிவின் பெரும் சாதனைகளில் சில கீழே தரப்பட்டுள்ளது :

1. நில நீர் உபயோக வளர்ச்சிக்காக நிதி நிறுவனங்கள் அளிக்கும் சிறுபாசனத் திட்டத்தினை நிறைவேற்றுவதற்கு இத்துறை நிலநீர் தடையின்மைச் சான்றுகளை வழங்கியுள்ளது. 1996-97ம் ஆண்டில் 23,000 அலகுகள் இவ்வாறு வழங்கப்பட்டுள்ளது, (ஒரு அலகு என்பது மின் இயந்திர வசதியுடன் கூடிய ஒரு கிணறு ஆகும்) சிறுபாசனத் திட்ட நோக்கில், வேளாண்மை மக்கள் கிணறு அமைக்க இந்த ஆண்டிற்கான நிதி நிறுவன உதவியாக ரூ. 5 கோடிகள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

2. இத்துறை 171 ஆய்வுத் துளைக் கிணறுகளை அமைத்துள்ளது. இவற்றின் அதிக அளவு நீர் அளிப்புத்திறன் உள்ள பல ஆய்வுத் துளைக் கிணறுகள், ஊராட்சி ஒன்றியங்கள், நகரவை மன்றங்கள், மற்றும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் ஆகியவற்றின் ஊரக மற்றும் நகர குடிநீர் வழங்கு திட்டங்களை செயல்படுத்துவதற்காக இலவச அடிப்படையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

3. அண்ணா மாவட்டத்தில் பனங்காட்டுச் சேரியில் அமைக்கப்பட்ட துளைக் கிணறுகள் மூலம் கல்பாக்கம் அணுமின் திட்டத்திற்கு நாள்





ஒன்றுக்கு 3 மில்லியன் காலன்கள் நிலநீர் வழங்குவதன் மூலம் ரூ. 90 லட்சங்கள் வருவாயாக பெறப்பட்டுள்ளது.

**21.1. உலக வங்கியின் நிதி உதவியில் தமிழகத்தில் நீர்வளத் திட்டம்.**

தமிழகம் உள்ளிட்ட எட்டு மாநிலங்களில் நீர்வளத் திட்டம் ஒன்றை ஏற்படுத்தி செயல்படுத்த இந்திய அரசுக்கு நிதியுதவி செய்வதற்கு உலக வங்கி முன்வந்துள்ளது. இத்திட்டமானது மேற்பரப்பு நீர் நிலநீர் மற்றும் அவற்றின் தன்மைகளை ஆராய்ந்து சேகரித்தல், பரிமாற்றம் செய்துகொள்ளுதல், முறைப்படுத்திப் பாதுகாத்தல் மற்றும் பயன்பெறும் வண்ணம் நிறுவனத்திறனை மேம்படுத்த செயலாற்றப்பட வேண்டும். இத்திட்டத்திற்காக உலக வங்கி அளித்துள்ள நிதியுதவி ரூ. 38.647 கோடிகளாகும்.

இத்திட்டத்தின் மூலம், தமிழகத்தில் கீழ்க்கண்ட ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப்படும் :

- தமிழகம் முழுவதிலும் நிலநீர் மட்ட ஏற்றத் தாழ்வினைக் கண்காணிக்க சுமார் 738 துளைக் கிணறுகள் அமைத்தல் மற்றும் 603 தானியங்கி நீர்மட்டக் கருவிகளை நிறுவுதல்.
- சென்னை, மதுரை மற்றும் தஞ்சாவூர் ஆகிய இடங்களில் உள்ள நில நீர் வேதியியல் ஆய்வகங்களை மேம்படுத்தி பொள்ளாச்சியில் புதிய ஆய்வகம் ஒன்றை ஏற்படுத்துதல்.
- 24 நீர்ப்பிரி முகடு நிலையங்கள் மற்றும் மூன்று தானியங்கி வானிலை ஆய்வு நிலையங்களை ஏற்படுத்தி வானிலை ஆய்வு விவரங்கள் சேகரித்தல்.
- வெவ்வேறு ஆற்றுப் படுகைகளில் நீரோட்டத்தினை அளந்து கணக்கீடு செய்ய 100 புதிய நீர் அளவை நிலங்கள் ஏற்படுத்தல்.
- கோட்ட அளவில் கணினிகள் நிறுவி ஆய்வு விவரங்களை நவீன முறையில் மேலாண்மை செய்தல்.

1996-97 ஆம் ஆண்டில் நூறு துளைக் கிணறுகள் நிறுவப்பட்டுள்ளன. சென்னை, திருச்சி, பொள்ளாச்சி, மற்றும் மதுரை ஆகிய நகரங்களில் உள்ள ஆய்வகங்கள், அலுவலகங்களுக்கு கட்டட வசதி ஏற்படுத்தித்தர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

சுமார் ரூ. 2 கோடி பெறுமான நீர்மட்ட அளவுக் கருவிகள், நீரோட்டமானிகள், கம்பியில்லா செய்தித் தொடர்பு கருவிகள் (Wireless

[1997 மார்ச் 24

sets) ஆய்வகக் கருவிகள் மற்றும் வாகனங்கள் வாங்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தின் கீழ் 1997-98 ஆண்டிற்காக ரூ. 12 கோடி வழங்கப்பட்டுள்ளது.

## 22. அணை பாதுகாப்பு உறுதியளிப்பு மற்றும் புனரமைப்பு திட்டம்

அணைகள் நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு உறுதுணையாக இருப்பதாலும் அவற்றினால் நாட்டிற்கு ஏற்படும் பலன்களைக் கருத்தில் கொண்டு கட்டப்படுவதாலும் அவைகள் தேசிய உடமையாக கருதப்படுவதாலும் அணைகளின் பாதுகாப்பை பேண வேண்டியது மிகவும் இன்றியமையாததாக கருத்தப்படுகிறது. மேற்கண்டவற்றை கருத்தில் கொண்டு உலக வங்கி உதவியுடன் ரூ. 70.60 கோடி மதிப்பீட்டிலான அணை பாதுகாப்பு உறுதியளிப்பு மற்றும் புனரமைப்புத் திட்டம் 1991ம் ஆண்டில் துவக்கப்பட்டு இதற்காக அரசு ரூ. 41.85 கோடி நிர்வாக அனுமதி வழங்கியுள்ளது. இத்திட்டத்தின் முக்கிய பகுதிகள் கீழ்வருமாறு :

1. நிறுவன அமைப்பு வலுப்படுத்துதல்
2. அணைத்தளங்களில் அடிப்படை வசதிகளை மேம்படுத்துதல்
3. அணைகளில் புனரமைப்பு பணிகள் கவனித்தல்

### 22.1. நிறுவன அமைப்புகளை வலுப்படுத்துதல்

அணைகளின் பாதுகாப்பு தன்மையை கண்காணிப்பதற்காக மாநிலத்தில் அணை பாதுகாப்பு இயக்ககம் செயல்பட்டு வருகிறது. இதுவரை வெளிநாட்டில் பயிற்சியளித்தல் உட்பட 8 பணியிடைப் பயிற்சி வகுப்புகள் சுமார் ரூ.10.00 இலட்சம் செலவில் நடத்தப்பட்டுள்ளன. இத்திட்ட அறிக்கையில் ரூ.448 இலட்சம் இப்பணிக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. இந்தப் பகுதியின் கீழ் ஜனவரி 1997 வரை ரூ. 200 இலட்சம் செலவழிக்கப்பட்டுள்ளது.

### 22.2. அணைத்தளங்களில் அடிப்படை பாதுகாப்பு வசதிகளை மேம்படுத்துதல்

அணைத்தளங்களில் இணைப்புச்சாலைகள், மாற்று மின்வசதி, தகவல் தொடர்பு மற்றும் கண்காணிப்புக்கருவி போன்ற அடிப்படை வசதிகளின் மேம்பாட்டிற்காக கீழ்க்கண்ட 17 அணைகள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன. இதற்காக ரூ. 811 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

1. பெரியாறு அணை
2. குடகனாறு அணை



1997 மார்ச் 24]

3. சாத்தனூர் அணை
4. பேச்சிப்பாறை அணை
5. மணிமுத்தாறு அணை
6. வீடூர் அணை
7. கோமுகிநதி அணை
8. உப்பாறு அணை
9. பொன்னியாறு அணை
10. பரம்பிக்குளம் அணை
11. சோலையாறு அணை
12. மேட்டூர் அணை
13. பெருஞ்சாணி அணை
14. குண்டேரிப்பள்ளம் அணை
15. சித்தமல்லி அணை
16. வில்லிங்டன் அணை
17. மணிமுக்தாநதி அணை

இதுவரை 14 அணைகளில் ரூ. 58.00 இலட்சம் செலவில் இணைப்புச் சாலைகள் அமைக்கப்பட்டுள்ளன. 9 அணைகளில் ரூ. 55.00 இலட்சம் செலவில் மாற்று மின் வசதி இயந்திரம் பொருத்தப்பட்டுள்ளது. ரூ. 224.00 இலட்சம் செலவில் 19 தொலைதூர தொடர்பு கருவி, 63 குறுகிய தொலைதூர தொடர்பு கருவி மற்றும் 32 வாகனத்தில் இயங்கும் கருவி ஆகியவற்றுடன் தகவல் தொடர்பு இணைப்புத் தொடர் வசதி அமைக்கப்பட்டுள்ளது. அணைகளின் பல்வேறு இலக்குகளை கண்காணிக்க நவீனமான, சிறந்த விஞ்ஞான முறையில் கணிக்கக் கூடிய கருவிகள் ரூ. 178.00 இலட்சம் செலவில் அமைத்திட திட்டமிடப்பட்டுள்ளது.

[1997 மார்ச் 24

**22.3 அணைகளின் புனரமைப்புப் பணிகள்:**

பொதுப்பணித்துறையின் கட்டுப்பாட்டிலுள்ள 57 பெரிய ஏரிகள் அணைகளில் கீழ்க்கண்ட 15 அணைகள் புனரமைப்புப் பணிகளுக்காக கண்டறியப்பட்டுள்ளன. அவையாவன :

1. பெரியாறு அணை
2. குடகனாறு அணை
3. சாத்தனூர் அணை
4. பேச்சிப்பாறை அணை
5. மணிமுத்தாறு அணை
6. வீடூர் அணை
7. கோமுகி அணை
8. உப்பாறு அணை (பெரியார் மாவட்டம்)
9. பொன்னியாறு அணை
10. மணிமுக்தாநதி அணை
11. குண்டேரிப்பள்ளம் அணை
12. பெருஞ்சாணி அணை
13. சித்தமல்லி அணை
14. வில்லிங்டன் அணை
15. சோலையாறு அணை

திட்ட அறிக்கையில் ரூ. 5801 இலட்சம் இப்பணிக்காக ஒதுக்கப்பட்டுள்ளது. முதலில் குறிப்பிட்ட இரண்டு அணைகளில் புனரமைப்புப் பணிகள் அணைப்பகுதியில் முடிவடைந்துவிட்டன.

1996-97ம் ஆண்டில் ரூ. 2200.00 இலட்சம் செலவில் 14 பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளன.



1997 மார்ச் 24]

பெரியாறு அணையில் 3 கூடுதல் வழிந்தோடிகளின் கீழ் உள்ள விசை குறைப்பு அமைப்பு கட்டும் பணி ரூ. 380.00 இலட்சம் செலவில் தற்போது நடைபெற்று வருகிறது.

நவீனமான முறையில் அவசர கால கரையும் வழிந்தோடி வீடூர் அணையில் ரூ. 40.00 இலட்சம் செலவில் நாட்டிலேயே முதல் முறையாக கட்டப்பட்டு வருகிறது. இத்திட்டம் செப்டம்பர் 1997-ல் முடிக்கப்பட வேண்டும். இத்திட்ட காலத்தை மேலும் இரண்டாண்டுகள் நீட்டிக்க மத்திய அரசின் மூலமாக உலக வங்கியிடம் நாடப்பட்டுள்ளது.

இந்த திட்டத்தில் சனவரி 1997 வரை ரூ. 1067.00 இலட்சம் செலவழிக்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்திற்காக 1996-97ம் ஆண்டு வரவு செலவு மதிப்பீட்டில் ரூ. 442.00 இலட்சமும் திருத்திய மதிப்பீட்டில் ரூ.461.00 இலட்சமும் ஒதுக்கப்பட்டுள்ளன. இந்தத் திட்டத்தில் 4/96 முதல் 1/97 முடிய ரூ. 134.00 இலட்சம் செலவழிக்கப்பட்டுள்ளது.

1997-98ம் ஆண்டில் இந்த திட்டத்திற்காக ரூ. 2528.58 இலட்சம் செலவழிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

**23. பரம்பிக்குளம் ஆழியாறு திட்டம்.**

1958-ல் கேரளம் மற்றும் தமிழ்நாட்டிற்குமிடையே ஏற்பட்ட ஒப்பந்தம் 1988 லிருந்து இதுநாள்வரை இரு மாநிலத்திற்கிடையே பரிசீலனையில் உள்ளது.

இத்திட்டம் குறித்த ஒப்பந்த விதிகள் பற்றிய பரிசீலனை பற்றி கேரளம் மற்றும் தமிழ்நாடு அரசு அதிகாரிகள் அளவிலும் அமைச்சர்கள் அளவிலும் விவாதிக்கப்பட்டது. ஆனைமலையாற்றை திருப்பி விடுவதற்குரிய துணை ஒப்பந்தத்தை நிறைவேற்றும் வகையிலுள்ள தமிழ்நாட்டின் கோரிக்கையை நிறைவேற்றுமாறு கேரள அரசிடம் கேட்டுக் கொள்ளப்பட்டது. 1992 நரம்பரில் இரு மாநில அமைச்சர்கள் அளவில் இப்பொருள் பற்றி விவாதிக்கப்பட்டது. பரம்பிக்குளம் ஆழியாறு திட்ட ஒப்பந்தத்தை மறு பரிசீலனை செய்வதற்காக மேற்படி கூட்டத்தில் ஒவ்வொரு மாநிலத்திலிருந்தும் ஆறுபேர் அடங்கிய கூட்டுக்குழு அமைப்பது என்று முடிவெடுக்கப்பட்டது.

இதற்கிடையில் பரம்பிக்குளம் ஆழியாறு திட்டம் ஒப்பந்தம் குறித்து பல்வேறு அம்சங்களை ஆய்வு செய்வதற்காக கேரள சட்டமன்றம், 19 சட்டமன்ற உறுப்பினர்கள் அடங்கிய தற்காலிக குழு ஒன்றை

## 25. மேற்கு நோக்கிப் பாயும் ஆறுகளின் மிகை நீரைத் தமிழகத்திற்குத் திருப்புதல்

### பம்பா-அச்சன்கோவில்-வைப்பார் இணைப்புத் திட்டம்

மத்திய அரசால் நியமிக்கப்பட்ட தேசிய நீர்வளக் குழுமம், தேசிய தொலைநோக்குத் திட்டத்தின் ஒரு பகுதியான தீபகற்ப ஆறுகளின் வளர்ச்சிப் பணிகளின்கீழ், பம்பா-அச்சன்கோவில்-வைகை இணைப்புத் திட்டத்தை உருவாக்கியது. அத்திட்டத்தின்படி, கேரளத்தில் மேற்கு நோக்கிப் பாயும் பம்பா மற்றும் அச்சன்கோவில் ஆறுகளின் உபரி நீரில் சுமார் 22 டி.எம்.சி. தமிழ்நாட்டின் வைகை ஆற்றுக்குத் திருப்பப்பட்டு அதனால் காமராஜர், நெல்லை. கட்டபொம்மன் மற்றும் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் மாவட்டங்களில் சுமார் ஒரு லட்சம் எக்டேர் நிலத்திற்கு பாசன வசதி அளிக்க இயலும்.

இத்திட்டம் தமிழ்நாட்டிற்கு மிக்க பயன் தருவதாக கருதியதால் தமிழ்நாடு அரசு இத்திட்டத்தை ஏற்றுக்கொண்டது. இருப்பினும் திருப்பப்படும் நீரின் அளவை அதிகரிக்கவும், கால்வாயினை உயர் மட்டத்தில் அமைக்கும்படியும் தேசிய நீர்வளக் குழுமததினை தமிழ்நாடு அரசு கேட்டுக் கொண்டது. மேலும் குகைவழிப் பாதைகளின் நீளத்தைக் குறைப்பதனால் திட்டத்தில் மொத்த செலவை குறைக்க இயலும் எனவும் கருத்து தெரிவிக்கப்பட்டது.

பம்பா மற்றும் அச்சன்கோவில் ஆறுகளின் உபரி நீரைத் தமிழகத்திற்குத் திருப்புவதற்கு கேரளத்திற்கு உடன்பாடு இல்லாததால், உபரி நீர் ஏதுமில்லை என்ற கருத்தைத் தெரிவித்தது. மேலும், பம்பா மற்றும் அச்சன்கோவில் ஆறுகள் பாயும் படுகையில் வேறு ஆறுகளும் பாய்வதாகவும், படுகையில் ஒட்டுமொத்தமாக நீர் இருப்பைக் கணக்கிடு செய்யும் ஆய்வுப் பணியினைக் கேரளம் மேற்கொண்டுள்ளதாகவும், ஆய்வு முடிந்த பின்னரே கருத்து தெரிவிக்க இயலும் என்றும் தெரிவித்தது.

ஆறுகள் இணைப்புக்கு மாநில அரசுகள் கொண்டுள்ள மாறுபாடான கருத்துகளைப் போக்கி, இணைப்புத் திட்டத்திற்கான ஆய்வுப் பணிகளுக்கு மாநில அரசுகளை இசைய வைக்கும் பணிக்காக மத்திய அரசு ஒரு "துணைக் குழு"வை அமைத்துள்ளது. அக்குழுமம் பம்பா-அச்சன்கோவில் இணைப்புத் திட்டத்தின் பணிகளைப்பற்றி பேச்சுவார்த்தை நடத்த தமிழ்நாடு மற்றும் கேரள மாநிலங்களின் பிரதிநிதிகளை 10-3-1993-ல் டெல்லிக்கு அழைத்திருந்தது. கேரளம் இதில் கலந்து கொள்ளவில்லை.



தமிழ்நாடு இதில் கலந்து கொண்டதுடன் திட்டத்தின் பயன்பாடுகளை அதிகரிக்கச் செய்யும் விதமான கருத்துகளைத் தெரிவித்தது.

"துணைக்குழு" விரிவான ஆய்வுக்குப்பிறகு மாற்று திட்டங்களை ஆராயும்படி தேசிய நீர்வளக் குழுமத்தைப் பணித்தது. அவ்வாரே தேசிய நீர்வளக் குழுமமும் மாற்றுத் திட்டங்களை ஆய்வு செய்து, ஆய்வின் முடிவில் பம்பா-அச்சன்கோவில்-வைகை இணைப்பை பம்பா - அச்சன் கோவில்-வைப்பார் இணைப்பாக மாற்றியமைத்தது. மாற்றுத்திட்டம் முந்திய திட்டத்தை விட மிகவும் பயனுள்ள திட்டமாக உள்ளது. மாற்றுத் திட்டத்தின்படி தமிழ்நாட்டிற்கு 22 டி.எம்.சி. மிகை நீர் கிடைக்கும். மேலும் உச்ச அளவு மின் உற்பத்தி செய்வதற்கும், கேரளத்திலுள்ள வெம்பநாடு ஏரியின் உப்புத் தன்மையை நீக்குவதற்கும் இத்திட்டம் வகை செய்கிறது.

இந்த மாற்றுத் திட்டமான பம்பா-அச்சன்கோவில்-வைப்பார் இணைப்புத் திட்டத்திற்கு தமிழ்நாடு அரசு ஒப்புதல் அளித்து திட்ட அறிக்கையினை மத்திய நீர்வளக் குழுமத்தின் ஒப்புதலுக்காக அனுப்பிவைத்துள்ளது.

## 26. காவிரி டெல்டா பாசனத் திட்டத்தை நவீனப்படுத்துதல்

காவிரி டெல்டா பாசனம் சுமார் 2000 ஆண்டுகள் பழமையானது. இதிலுள்ள அடிப்படை வசதிகள் நவீனப்படுத்தப்பட்டால்தான் இப்பாசனத் திட்டம் திறம்படச் செயல்படும். முதன் முதலில் 1970 ஆம் ஆண்டில் தமிழக அரசு வெள்ளக் கட்டுப்பாடு மற்றும் வடிகால்கள் புனரமைப்பு உள்ளிட்ட காவிரி டெல்டா பாசனத் திட்ட நவீன மயமாக்கும் பணிக்கும் ஒரு "பெரும் திட்டம்" (மாஸ்டர் பிளான்) தயாரிக்கப்பட்டது. இருந்தாலும் மாநிலங்களுக்கிடையே பிரச்சினை உள்ளதால் இத்திட்டத்திற்கு மைய அரசின் நீர்வள அமைச்சகத்தின் இசைவு கிடைக்கமாற்போனது. அதனால் இத்திட்டத்திற்கு வெளிநாட்டு உதவி ஏதும் கிடைக்கவில்லை. இருப்பினும் பாசனம், வெள்ளக் கட்டுப்பாடு, மற்றும் வடிகால்கள் இவற்றின் அவசரத்தேவைகளுக்காக காவிரி டெல்டாப் பகுதியில் சிறு பணிகள் அவ்வப்போது மாநில அரசின் நிதி ஒதுக்கீட்டின் மூலம் நிறைவேற்றப்பட்டன. இம்முயற்சிகள் காவிரி டெல்டாப் பாசனத் திட்டத்தின் தேவைகளை முழுமையாக நிறைவு செய்யவில்லை.

[1997 மார்ச் 24

எனவே, காவிரி டெல்டாப் பாசனப் பகுதி நவீன மயமாக்கும் திட்டத்தை 3 பகுதிகளாக நிறைவேற்ற உத்தேசிக்கப்பட்டுள்ளது. தற்போது இதன் முதற் பகுதியாக 460 கோடி ரூபாய்க்கு ஒரு திட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. முதற்பகுதியில் பின்வரும் பணிகள் உள்ளடங்கியுள்ளன :

1. 70,000 எக்டேர் பாசனப் பரப்பு பயனடையும் வகையில் 10 ஆறுகளை புனரமைப்புச் செய்து நவீன மயமாக்கல்.

2. 323 கால்வாய்களை புனரமைப்புச் செய்து நவீன மயமாக்கல்

3. 109 வடிகால்களை மேம்படுத்துதல்.

4. 23.02 கோடி மதிப்புக்கு வெள்ளக் கட்டுப்பாட்டுப் பணிகளை நிறைவேற்றுதல்.

5. ஏனைய பல்வகைப் பணிகள் நிறைவேற்றுதல்.

இந்த முதல் கட்டப் பணிகள் நிறைவேற்றம் 70,000 எக்டேர் பாசனப் பரப்பில் மேலான, நியாயமான, சமமான, நம்பத்தகுந்த பாசன வசதிக்கு வழி வகுக்கும்.

## 27. காவிரி நதி நீர்ப் பிரச்சினை

தமிழக அரசு கேட்டுக் கொண்டதற்கு இணங்கவும் உச்ச நீதி மன்றத்தின் அறிவுரைகளின்படியும், மத்திய அரசு மாநிலங்களுக்கான நதி நீர்த் தாவா சட்டம் 1956-ன் கீழ் காவிரிநீர் நடுவர் மன்றத்தை 1990ம் வருடம் ஜூன் மாதம் நியமித்தது. பாதிக்கப்பட்ட மாநிலங்களின் கருத்துரைகளைக் கேட்டபின், இந்நடுவர் மன்றம், ஒரு பாசன ஆண்டில், கர்நாடக மாநிலத்தில் உள்ள நீர்த் தேக்கங்களில் இருந்து 205 டி.எம்.சி. நீர் மேட்டூர் நீர்த் தேக்கத்திற்குக் கிடைக்குமாறு, தண்ணீரைத் திறந்து விடுமாறு கர்நாடகத்திற்கு 25-6-1991-ம் நாள் இடைக்கால ஆணை ஒன்றைப் பிறப்பித்தது. இந்த இடைக்கால ஆணையில் மாதந்தோறும் அனுப்ப வேண்டிய நீரின் அளவு குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் மாதந்தோறும் அனுப்பப்படவேண்டிய நீர் வாரந்தோறும் சமமாக பங்கிட்டு வழங்கப்படவேண்டும் எனவும், ஒரு வாரத்தில் நிர்ணயிக்கப்பட்ட அளவு நீர் அனுப்பப்படவில்லையெனில், இது அடுத்த வாரத்தில் நிர்ணயிக்கப்பட்ட அளவு நீருடன் சேர்த்து அனுப்பப் படவேண்டும் எனவும், இடைக்கால உத்தரவில் குறிப்பிடப்பட்டுள்ளது.



1997 மார்ச் 24]

இவ்வாறு நடுவர் மன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட இடைக்கால உத்தரவை முறியடிக்கும் நோக்கத்துடன் கர்நாடக அரசு சட்டம் ஒன்றை தனது சட்டமன்றத்தில் இயற்றியது. உச்சநீதிமன்றத்திலும் இந்த இடைக்கால உத்தரவு செல்லத் தக்கதல்ல என அறிவிக்குமாறு கோரி மனு தாக்கல் செய்தது. உச்ச நீதிமன்றம் இந்திய அரசியலமைப்பு சட்டம் 143-ல் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ள அதிகார எல்லையின் கீழ் நடுவர் மன்ற இடைக்கால உத்தரவு வருவதால் கர்நாடக மாநிலத்தால் இயற்றப்பட்ட சட்டம் செல்லத்தக்கதல்ல; மேலும் நடுவர் மன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட இடைக்கால உத்தரவு மாநிலங்களுக்கான நதி நீர் தாவா சட்டம் பிரிவு 5(2)ன் கீழ் வரும் அறிக்கை மற்றும் முடிவானதாகும் என பதிலளித்தது. உச்ச நீதிமன்றத்தின் மேற்கூறிய பதிலைத் தொடர்ந்து கர்நாடக அரசு தனது மனுவை திருப்பப் பெற்றுக் கொண்டது. உச்சநீதிமன்றமும் 5-4-1995 அன்று கர்நாடக அரசு மனுவை திரும்பப் பெறப்பட்டதாகக் கூறி இதனை தள்ளுபடி செய்தது.

மாநிலங்களுக்கான நதி நீர்த் தாவா சட்டத்தின்படி, நடுவர் மன்றம் முடிவு எடுக்கலாமே தவிர, அந்த முடிவை செயல்படுத்தும் அதிகாரம் அதற்கு இல்லை. எனவே, தமிழக அரசு நடுவர் மன்றத்தின் இடைக்காலத் தீர்ப்பை அரசியலமைப்புச் சட்டம் பிரிவு எண் 131ன் படி கர்நாடக மாநிலத்தை செயல்படுத்த அறிவுறுத்துமாறு உச்ச நீதிமன்றத்தில் வழக்கு ஒன்றை (வழக்கு எண் 1/1992) பதிவு செய்தது. மாநிலங்களுக்கு இடையிலான நதி நீர்த் தாவா சட்டம் 1956 பிரிவு 6இன் படி இடைக்கால தீர்ப்பை செயல்படுத்துவதற்கான திட்டம் ஒன்றை மத்திய அரசு வகுக்க வேண்டும் எனவும் அறிவுரைகள் வழங்கவேண்டும் எனவும் உச்ச நீதிமன்றத்தில் தமிழக அரசு கோரியது. 1996ம் ஆண்டு ஏப்ரல் மாதம் தமிழ்நாடு மற்றும் கர்நாடக மாநிலங்களின் கருத்துக்களை கேட்டறிந்து பின்னர் உச்ச நீதிமன்றம் தனது உத்தரவை நிறுத்தி வைத்துள்ளது.

மேற்குறிப்பிட்ட மனு நிலுவையில் இருக்கும்போதே, காவிரி ஆற்றின் நீர் ஓட்டம் முழுவதையும் கர்நாடக அரசு தனது நீர்த் தேக்கங்களில் சேமித்ததால் காவிரி டெல்டா பாசனப் பரப்பில் தண்ணீர் பற்றாக்குறை ஏற்பட்ட காலங்களில் எல்லாம், நடுவர் மன்றத்தின் இடைக்காலத் தீர்ப்பின்படி தண்ணீர் திறந்து விட கர்நாடக அரசுக்கு உத்தரவு இடக் கோரி தமிழக அரசு பல மனுக்களை உச்ச நீதிமன்றத்தில் பதிவு செய்தது. இவ்வாறு கோரும் மனு 1996-ம் ஆண்டு ஜூலைத் திங்களில் கடைசியாக பதிவு செய்யப்பட்டது. 30-7-1996 அன்று இம் மனுவை

பரிசீலித்த உச்சநீதிமன்றம், தமிழ்நாடு மற்றும் கர்நாடக மாநில முதல்வர்கள் சந்தித்து தமிழகத்தில் உடனடி பயிர் தேவைகளுக்காக கர்நாடகம் தண்ணீர் திறந்து விடுவது குறித்து ஒரு நடைமுறைத் திட்டத்தை வகுக்கலாம் எனக் கருதியது.

இதனைத் தொடர்ந்து 1996-ம் ஆண்டு ஆகஸ்டு முதல் ஐந்து சுற்று பேச்சு வார்த்தைகள் நடைபெற்றன. 1997-ம் ஆண்டு சனவரித் திங்கள் 5-ம் தேதி கடைசிச் சுற்று பேச்சு வார்த்தை நடைபெற்றது.

இந்தப் பேச்சு வார்த்தைகளின்போது, தமிழகத்திற்கு உரிய நீர்வரத்து 1996-ம் ஆண்டு ஜூன் மற்றும் ஜூலைத் திங்களில் கர்நாடக மாநில நீர்த்தேக்கங்களிலிருந்து கிடைக்கப்பெறாததால் 4 லட்சம் ஏக்கர் பரப்பில் குறுவை பயிரிடாமல் தமிழகத்திற்கு பெருத்த நஷ்டம் ஏற்பட்டுள்ளதாகவும், ஆகஸ்டு திங்களிலிருந்தாவது கர்நாடக மாநிலம் தனது நீர்த்தேக்கங்களிலிருந்து தமிழகத்திற்கு உரிய நீரை அனுப்பவேண்டும், இல்லையேல் தமிழகத்தில் சம்பா பயிருக்கு பெருத்த நஷ்டம் ஏற்படும் என்பதையும் மாண்புமிகு தமிழக முதல்வர் கர்நாடக முதல்வருக்கு பேச்சு வார்த்தைகளின்போது மிகவும் விளக்கமாக எடுத்துக்கூறினார். இதற்கிடையில் கர்நாடக மாநிலத்திலுள்ள கபினி நீர்த்தேக்கம் நிரம்பி வழியத் தொடங்கியதால் மேட்டூர் நீர்த்தேக்கத்திற்கு நீர்வரத் தொடங்கியது. அதிர்ஷ்டவசமாக, தமிழகத்திலுள்ள காவிரி டெல்டா பாசனப் பரப்பிலும் வடகிழக்கு பருவமழை சாதகமாக பொழிந்தது. மேற்கூறிய காரணங்களால் 1996 ஆகஸ்டு மாதம் மிகவும் சிரமமான நிலையிலிருந்து சம்பா பயிர் தேவைகளுக்கான நீர்த்தேவை முன்னேற்றமடைந்து நிலைமை சமாளிக்கப்பட்டது. தமிழக அரசும் உச்சநீதி மன்றத்தில் இரு மாநில முதல்வர்களுக்கு இடையே நடைபெற்ற பேச்சு வார்த்தைகளின் முன்னேற்றம் குறித்து விவர அறிக்கையை 4-2-1997 அன்று உச்ச நீதிமன்றத்தில் தற்போது நிலைவையில் உள்ள மனு ஓ.எஸ்.எண் 1/1992 மீது தக்க தீர்ப்பு வழங்குவதற்கு ஏற்ப தாக்கல் செய்துள்ளது.

காவிரி நதி நீர்ப் பிரச்சினைக்கு ஒரு நிரந்தர முடிவு கிடைப்பதற்கு ஏதுவாக உண்மையான பிரச்சினைகளை நன்கு விரிவாக ஆராய்ந்து உத்தரவை பிறப்பிப்பதற்காக, இப்பிரச்சினையை நடுவர் மன்ற தீர்ப்புக்கு விடுவதே சாலச் சிறந்தது என தமிழகம் கருதுகிறது.

நடுவர் மன்றத் தலைவர், நீதிபதி திரு. சித்ததோஸ் முகர்ஜி 1-7-1996 முதல் தனது பதவியை ராஜினாமா செய்ததால் அன்று முதல் நடுவர் மன்றம் செயல்படவில்லை. தொடர்ந்து பிரதமரை மாண்புமிகு



முதலமைச்சர் தனிப்பட்ட முறையில் வற்புறுத்தி கேட்டுக்கொண்டதற்கு இணங்க புதிய தலைவரை மத்திய அரசு நியமித்தது. புதிய தலைவர் நீதிபதி திரு.என்.பி.சிங் பதவி ஏற்றதைத் தொடர்ந்து 1996 டிசம்பர் முதல் நடுவர் மன்றம் தனது பணியை மீண்டும் துவக்கியது.

தமிழகத்தைச் சேர்ந்த ஒன்பது நபர்களை குறுக்கு விசாரணை செய்யும் பணி செப்டம்பர் 95ல் முடிவுற்றது, இதர மாநிலங்களைச் சேர்ந்தவர்களை குறுக்கு விசாரணை செய்யும் பணி விரைவில் மேற்கொள்ளப்படும் எனக் கருதப்படுகிறது. தமிழக காவிரி டெல்டா பாசன விவசாயிகளின் நலன்களைப் பாதுகாக்க நடுவர் மன்றம் தனது இறுதி உத்திரவை வழங்குமென்று தமிழக அரசு மிகவும் ஆவலுடன் எதிர்பார்க்கிறது.

## 28. பக்கிங்ஹாம் கால்வாயைத் தூர்வாரிச் சீரமைக்கும் பணி

கூவம் கழிமுகத்துக்கும் அடையாறு கழிமுகத்துக்கும் இடைப்பட்ட பக்கிங்ஹாம் கால்வாயின் 7.2 கி.மீ நீளப் பகுதி, மழைக்காலங்களில் இவ்வாறுகளில் ஏற்படுத்தும் வெள்ளப்பெருக்கைத் தணித்து, கால்வாயின் மருங்கிலுள்ள சேப்பாக்கம், திருவல்லிக்கேணி, மயிலாப்பூர், இராசா அண்ணாமலைபுரம் ஆகிய பகுதிகளின் வெள்ளத்தை வடிக்கும் கால்வாயாகப் பயன்பட்டுவருகிறது. ஆனால், கூடவே ஆண்டுமுழுவதும் இப்பகுதிகளிலிருந்து வெளியேறும் கழிவுநீரும் கால்வாயில் கலப்பதால் அருகாமையிலுள்ள குடியிருப்புகளின் சுற்றுச்சூழல் மிகவும் பாதிக்கப்படுகிறது.

இவை தவிர சேப்பாக்கத்திலிருந்து லஸ் வரை கால்வாயோடு பிணைந்தாற்போல் அமைக்கப்பட்டு வரும் துரித இரயில் பாதைத் திட்டப் பணிகளுக்கான தூண்கள், இணைப்பு விட்டங்கள், அடுத்தடுத்துள்ள இரயில் நிலையங்கள் ஆகியவற்றின் கட்டுமானக் கூளங்கள் விழுந்து, கால்வாயின் நீரோட்டம் பெரிதும் தடைப்பட்டுள்ளது. இவை தவிர, 1996 ஜுன் மாதம் பெய்த அடைமழையும் சேர்ந்து ஏற்படுத்திய வெள்ளத்தினால் கால்வாயில் சேதங்கள் ஏற்பட்டு, சேப்பாக்கம், திருவல்லிக்கேணி, மயிலாப்பூர் ஆகிய பகுதிகளில் வாழும் மக்கள் பல நாள் பெரும் அல்லலுக்கு ஆளாயினர்.

இத்தகைய இடர்பாடுகளைத் தவிர்க்க, கூவம் கழிமுகத்திலிருந்து லஸ் ஆர்.கே.மடம் சாலை வரையிலான 4 கி.மீ. நீளம் கொண்ட இக்கால்வாய்ப் பகுதியை அடிவரையிலும் தூர்வாரிச் செப்பனிட தமிழக அரசு ரூ.190 இலட்சம் மதிப்பீட்டுக்கு ஒப்புதல் வழங்கியது. இத்திட்டத்தை

நிறைவேற்றியதால், இப்பகுதியில் குடியிருக்கும் மக்கள் டிசம்பர் மழைக்காலம் முழுதும் அல்லலிருந்து முற்றிலுமாக விடுபட்டனர்.

இப்பணிகளுக்கான செலவினை திரும்பப்பெற, மைய அரசின் தரைவழிப் போக்குவரத்து அமைச்சகத்தின் கீழுள்ள 'இந்திய உள்நாட்டு நீர்வழிகள் மேலாணையம்' என்னும் அமைப்பின் பொருளுதவி நாடி கருத்துரு மைய அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

## 29. கடலரிப்பு தடுப்புப் பணிகள்

சென்னை இராயபுரம் மீன்பிடிப்பு துறைமுகத்திலிருந்து வடக்கே எண்ணூர் விரைவுசாலை நெடுகிலும் கிட்டத்தட்ட 9.08 கி.மீ. தொலைவுக்கு கடற்கரை கடலரிப்பினால் பாதிக்கப்பட்டுள்ளது. இக்கரைப்பகுதியையும், எண்ணூர் விரைவுசாலையையும் கற்குவியல் சுவரெழுப்பிப் பாதுகாக்கும் பல கட்டச் செயல்திட்டமொன்றை தமிழக அரசு மேற்கொண்டுள்ளது.

இதற்காக அரசு நடப்பாண்டு 1996-97க்குரிய திருத்திய மதிப்பீட்டில் ரூ.125.48 இலட்சம் நிதி ஒதுக்கியது. தற்போது முன்னேற்றத்தில் உள்ள இந்த கரைப் பாதுகாப்புப் பணிகள் மார்ச்சு 1997-ல் முற்றுப்பெறும். தொடர்ந்து இத்தகைய பணிகளுக்காக மேலும் ரூ.180 இலட்சத்துக்கு ஒப்புதல் வழங்க தமிழக அரசு கருதியுள்ளதன் அடிப்படையில், வரும் 1997-98ஆம் ஆண்டுக்கும் ரூ.28.67 இலட்சம் நிதி ஒதுக்கியுள்ளது.

கடலரிப்பினைத் தடுக்க நீடித்துப் பயனளிக்கக் கூடிய தீர்வு ஒன்றைக் காணும் நோக்கத்துடன் கடந்த 21-11-1996 அன்று நம் நாட்டு வல்லுநர்களுடன் நெதர்லாந்து நாட்டு வல்லுநர்களும் கலந்துகொண்ட செயற்கருத்தரங்கு ஒன்றை பொதுப்பணித்துறை சென்னையில் நடத்தியது. இக்கருத்தரங்கில், விரிவான விவாதங்கள் -கருத்துப் பரிமாற்றங்களுக்குப் பின்னர், நெதர்லாந்து வல்லுநர்களுடனான ஒரு கூட்டுமுயற்சியாக, சென்னைக் கடற்கரைக் கோட்டிற்குச் செங்கிடையாக பல விடங்களில் கரைக்குறடுகள் (கிராயின்கள்) அமைக்கும் பணிக்குரிய வடிவமைப்பை முடிவுசெய்ய சிற்றுரு ஆராய்ச்சிகள் மேற்கொள்வதென முடிவு செய்யப்பட்டது.

நெதர்லாந்து அரசு கரைக்குறடுகள் அமைக்கும் இப்பணிக்களுக்காகும் செலவில் 40 சதவீதம் ஏற்றுக்கொள்ள முன்வந்துள்ளது. இக்கருத்துரு தற்பொழுது தமிழக அரசின் தீவிர ஆய்வில் உள்ளது.



## 30. தமிழ்நாடு கொதிகல ஆய்வகம்

தமிழ்நாடு கொதிகலன்கள் ஆய்வகம், தலைமை கொதிகலன்கள் ஆய்வாளரின் நேரடி கட்டுப்பாட்டின்கீழ் செயல்படுவதற்கு உறுதுணையாக மூன்று துணைத் தலைமை கொதிகலன்கள் ஆய்வாளர்கள் வட்டார அளவில், சென்னை, திருச்சி மற்றும் கோயம்புத்தூர் ஆகிய ஊர்களில் பணியாற்றி வருகிறார்கள். மேலும் பல்வேறு மாவட்டங்கள் அளவில் பனிரெண்டு கொதிகலன்கள் ஆய்வாளர்கள் (இதில் ஆறு கொதிகலன்கள் ஆய்வாளர்கள், தனிப்பொறுப்பில்), கொதிகலன்கள் மற்றும் கொதிகலன்களின் உதிரி உறுப்புகளின் பிரத்தியேக ஆய்விற்கென மாநில அளவில் பனிரெண்டு உதவி கொதிகலன்கள் ஆய்வாளர்களுடன் ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

கொதிகலன்கள் ஆய்வகம் முற்றிலும் பாதுகாப்புச் சட்டங்களை நடைமுறைப் படுத்துகிற துறையாகும். நடைமுறைகள் யாவும் முழுமையான தொழில் நுட்ப பணிகளை சார்ந்ததாகும்.

மத்திய அரசின் இந்திய கொதிகலன்கள் சட்ட விதிகள், 1923 மற்றும் இந்திய கொதிகலன்கள் ஒழுங்கு முறை விதிகள், 1950, ஆகியவைகளை மாநில அரசுகளின் ஆணைப் பொறுப்பின் கீழ் தலைமை கொதிகலன்கள் ஆய்வாளரினால் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மேலும் இது தொடர்பான தமிழ்நாடு கொதிகலன்கள் விதிகள், 1972, தமிழ்நாடு எக்னாமைசர் விதிகள், தமிழ்நாடு கொதிகலப் பணியாளர்கள் விதிகள், 1964 மற்றும் தமிழ்நாடு கொதிகல இயக்கப் பொறியாளர் விதிகள், 1965 ஆகிய விதிகளும் இவ்வாய்வகத்தினால் அமுல்படுத்தப்பட்டு வருகிறது.

பல்வேறு தொழிற்சாலைகளில் தயாரிக்கப்பட்டு வரும் அனைத்து கொதிகலன்களும், அதன் சார்பு உறுப்புகளும் வடிவமைப்பு நிலையிலிருந்து மூலப்பொருட்கள், பொருத்துதல், பற்றவைப்பு, சேதமில்லா சோதனை, ஆய்வுகூட சோதனை நீர் அழுத்த சோதனை முழுவதுமாக தயாரித்து முடிக்கப்படும் வரையிலும் பல்வேறு நிலைகளில் இவ்வாய்வகத்தின் ஆய்வாளர்களினால் ஆய்வு மேற்கொள்ளப்படுகிறது. தயாரித்து முடிக்கப்பட்ட கொதிகலன்களை சம்பந்தப்பட்ட இடத்தில் உபயோகத்திற்காக நிறுவப்பட்ட நிலையிலும் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு, பதிவு செய்து இத்துறையினால் சான்றுகள் வழங்கப்படுகிறது.

கொதிகலன்கள் ஆய்வகக் கட்டுப்பாட்டில் நீராவி சம்பந்தப்பட்ட பாதுகாப்பு அடைப்பான் உட்பட அனைத்து அடைப்பான்களும், கொதிகலன்கள் உபகரணங்கள், குழாய் அமைப்பு, நிறுவனப் பணிகள், பற்ற வைப்பு கம்பிகள் தயாரிப்பு ஆகியவை தொடர்பாக பல்வேறு நிலைகளில் நிலை ஆய்வு ஆய்வாளர்களால் மேற்கொள்ளப்படுகிறது.

மேலும் தமிழ்நாட்டில் பல்வேறு ஆலைகளில் இயக்கத்தில் உள்ள கொதிகலன்கள் ஆண்டுக்கொருமுறை ஆய்வு செய்து கொதிகலன்களில் பாதுகாப்பு நிலையினை அறிந்து அவைகளை இயக்குவதற்கு சான்றிதழ் வழங்கப்பட்டு வருகிறது.

1995-96-ஆம் ஆண்டில் 2,390 கொதிகலன்கள் இவ்வாறு ஆய்வு செய்யப்பட்டு உபயோகத்திற்கென சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளன. மேற்கண்ட கொதிகலன்கள், அரிசி ஆலைகள், எண்ணெய் ஆலைகள், நூலாலைகள், எண்ணெய் சுத்திகரிப்பாலைகள், சர்க்கரை ஆலைகள், உரத் தொழிற்சாலைகள், பொறியியல் கல்லூரிகள், மருத்துவமனைகள், உணவு விடுதிகள் மற்றும் அனல் மின் நிலையங்கள் ஆகியவைகளில் நிறுவப்பட்டு உபயோகப்படுத்தப்பட்டு வருகின்றது.

இந்தியாவிலேயே மிகப் பெரும் கொதிகலன்கள் தயாரிப்பு நிறுவனமான "பாரத மிகு மின் நிலையம்" தமிழ்நாட்டில் திருச்சியில் அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கதாகும். இது தவிர இந்தியாவிலேயே தமிழ்நாட்டில் தான் அதிக எண்ணிக்கையில் கொதிகலன்கள் தயாரிப்பு நிறுவனங்களும், உயர் அழுத்த அடைப்பான் தயாரிப்பு நிறுவனங்களும், பற்ற வைப்பு கம்பிகள் தயாரிப்பு நிறுவனங்களும் அமைந்துள்ளதும் குறிப்பிடத் தக்கதாகும்.

உயர் அழுத்த கொதிகலன்கள் தயாரிப்பில் முன்னோடியாக தமிழகம் திகழ்ந்து வருவதுடன், மிக அதிக அளவில் வார்ப்பட தொழிற்சாலைகள், குழாய் தயாரிப்பு நிறுவனங்களும் அமைந்துள்ளதும் குறிப்பிடத்தக்கதாகும். மேற்கண்ட அனைத்து தொழிற்சாலைகளிலும், இந்திய கொதிகலன்கள் ஒழுங்குமுறை விதிகள், 1950-ஐ அமுல்படுத்தி பல்வேறு நிலைகளில் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

உயர் அழுத்த கொதிகலன்கள் தயாரிப்பு நிறுவனங்கள் மற்றும் பழுது பார்க்கும் நிறுவனங்களில் பணிபுரியும் பற்ற வைப்பாளர்களுக்கு பிரத்தியேகமாக தேர்வு நடத்தி தேர்ச்சி பெற்றவர்களுக்கு இத்துறையினால் சான்றிதழ்கள் வழங்கப்படுகின்றன. 1995-96-ஆம் ஆண்டு 1,362 பற்ற வைப்பாளர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளது.



இவ்வாய்வகம், கொதிகலப் பணியாளர் தேர்வு மற்றும் கொதிகலன்கள் இயக்கப் பொறியாளர்கள் தேர்வுகள் நடத்தி சான்றிதழ்கள் வழங்கி வருகின்றது. இந்திய கொதிகலன்கள் சட்ட விதிகள் 1923-ன்படி, தேர்ச்சி பெற்ற கொதிகலப் பணியாளர்களே கொதிகலன்களை இயக்க வேண்டுமென்ற நடைமுறையையும் செவ்வனே அமுல்படுத்தப்பட்டு வருகிறது.

கொதிகலன்கள் ஆய்வுக்கட்டணமாக வசூல் செய்வதின் மூலம் மாநில அரசுக்கு அதிக அளவில் வருவாய் ஈட்டித் தரவும் தமிழ்நாடு கொதிகலன்கள் ஆய்வகம் வழிகோலியுள்ளது. இவ்வகையில் 1995-96 ஆண்டு ஆய்வுக் கட்டணமாக ரூ. 1,22,83,711 மாநில அரசுக்கு ஆய்வுக் கட்டணமாக பெறப்பட்டுள்ளது. அதே காலத்தில் இவ்வாய்வகம் இயக்குவதற்கு ரூ. 40,52,990.00 மட்டும் செலவு செய்யப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

1996-97ம் ஆண்டிற்கு எதிர்பார்க்கப்படும் செலவினம் ரூ.54 லட்சம் எனவும், எதிர்பார்க்கப்படும் ஆய்வுக் கட்டண வருவாய் ரூ.120 லட்சம் எனவும் கணக்கிடப்பட்டுள்ளது.

1995-96ம் ஆண்டிலும் தமிழகத்தில் உபயோகத்தில் உள்ள எந்த ஒரு கொதிகலனுக்கும் விபத்து ஏதும் ஏற்படவில்லை என்பது இவ்வாய்வகம் திறம்பட செயலாற்றி வருவதற்கு எடுத்துக்காட்டாக அமைந்துள்ளது.

### 31. பொதுப் பணித் துறை-கட்டட அமைப்பு

பொதுப்பணித் துறையின் கட்டட அமைப்பு 1-4-1996 முதல் 15 வட்டங்களுடனும் 51 கோட்டங்களுடனும் செயல்பட்டு வருகிறது.

31.1 தமிழ்நாடு பொதுப்பணித் துறை, கட்டட அமைப்பு, அரசு துறைகளான வருவாய், காவல், சட்டம், நீதி, கால்நடை, விவசாயம், வணிகவரி, பொது, சமூக நலம் மற்றும் சிறைச்சாலை ஆகியவற்றிற்கான கட்டடங்கள் கட்ட வடிவமைத்தல், நிலம் கையகப்படுத்துதல் மற்றும் கட்டுமானப் பணிகளை மேற்கொண்டு திறம்பட செயல்பட்டு வருகிறது. மேலும் இத்துறை அரசு நினைவு இல்லங்கள், ஸ்தூபிகள், சதுக்கங்கள் கட்டும் பணிகளையும் நிறைவேற்றுகிறது. மத்திய மற்றும் மாநில சார்பு துறைகளான தொழிலாளர் ஈட்டுறுதிக் கழகம், பல்கலைக் கழகங்கள், மலைவாழ் மக்கள் மேம்பாட்டுத் திட்டம், ஆடுகள் வளர்ப்புத் திட்டம், டானிடா, வளர்ச்சித் திட்டம், ஐரோப்பிய பொருளாதார வளர்ச்சிக்

குழு திட்டத்தில் இந்திய மக்கள் தொகை திட்டம்-(ஐ.பி.பி.5) உலக வங்கி உதவி பணிகள் நகர்புற வளர்ச்சி திட்டப் பணிகள் (ஐடிஎம்.எஸ்டி) ஆகிய பிரிவுகளின்கீழ் வரும் கட்டடப் பணிகளை வைப்பு நிதி மற்றும் செலுத்து தொகை பணிகளாக நிறைவேற்றுகிறது. மேலும் இக்கட்டட அமைப்பு மாவட்ட ஆட்சித் தலைவரால் கொடுக்கப்படும் பாராளுமன்ற உறுப்பினர்கள் பரிந்துரை செய்யும் அப்பகுதி மேம்பாட்டு பணிகள் மற்றும் மாவட்ட சார்பு நிதியிலிருந்து அளிக்கப்படும் பணிகளையும் மேற்கொள்கிறது.

31.2 இத்துறை அரசு கட்டிடங்கள், நினைவுச் சின்னங்கள், அரசினர் தோட்டம், ஆளுநர் மாளிகை, அமைச்சர்கள் மற்றும் மிக முக்கியமானவர்கள் இல்ல கட்டட பராமரிப்பு பணிகளை மேற்கொள்கிறது, தமிழகத்தில் உள்ள பொதுப் பணித் துறை ஆய்வு மாளிகைகள், சுற்றுலா மாளிகைகளின் பராமரிப்பு மற்றும் மெரினா கடற்கரை பராமரித்தல் போன்ற பணிகளையும் மேற்கொள்கிறது. மேலும், புயல் வெள்ளம் மற்றும் இயற்கை சீற்றத்தால் ஏற்படும் அரசு கட்டடங்களின் பாதிப்புகளை செப்பனிடும் பணியினையும் துரிதமாக மேற்கொண்டு செயல்படுத்துகிறது.

31.3. பொதுப்பணித் துறை கட்டட அமைப்பு அலுவலர்கள் காவல் துறை புலனாய்வு குழுமம் மற்றும் நீதி மன்றம் கோரும் கட்டடம் மற்றும் சொத்து மதிப்பீடுகளை செய்து தருகிறார்கள். குறிப்பாக, இவ்வருடம், இவ்வகையில் மிக அதிக அளவில், இப்பணிகள் குறைந்த கால அளவில் முடிக்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

**31.4. 1996-97 ஆம் ஆண்டு அறிவிக்கப்பட்ட புதிய பணிகள்**

நடப்பு நிதியாண்டு 1996-97ல் நீதித் துறை அடிப்படை வசதி மேம்பாட்டு வசதிக்காக, நீதிமன்றக் கட்டடங்கள் மற்றும் நீதிபதி குடியிருப்புகள் கட்ட மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ரூபாய் 28.32 கோடிகளுக்கு மத்திய, மாநில சம பங்கு திட்டத்தின்கீழ் அங்கீகாரம் வழங்கியுள்ளார்கள். [அரசு ஆணை எண் 1206, உள்துறை, (நீதிமன்றம்,) நாள் 29-8-1996 மற்றும் அரசு ஆணை எண் 1775, உள்துறை, (நீதி மன்றம்,) நாள் 26-11-1996]



அரசு, நீதித் துறைக்காக கீழ்க்கண்ட கட்டட பணிகளுக்கு அனுமதி அளித்துள்ளது :—

| | | (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | விருதுநகர் காமராஜர் மாவட்டத்தில் ஒருங்கிணைந்த நீதி மன்றம் கட்டுதல் .. | 310 |
| 2. | உதகமண்டலத்தில் நீதிமன்ற கட்டடம் மற்றும் குடியிருப்பு கட்டடம் கட்டுதல் .. | 789 |
| 3. | கடலூரில் நீதிமன்றக் கட்டடம் குடியிருப்புக் கட்டடம் கட்டுதல் .. | 132 |
| 4. | கோயம்புத்தூரில் ஒருங்கிணைந்த நீதி மன்ற கட்டிடம் கட்டுதல் .. | 929 |
| 5. | திருத்தணியில் ஒருங்கிணைந்த நீதிமன்றம் கட்டுதல் .. | 127 |
| 6. | நாகர்கோவிலில் நீதிமன்ற வக்கீல்கள் சங்க கட்டடம் கட்டுதல் .. | 38 |
| 7. | சென்னையில் சிட்டி சிவில் கோர்ட் கட்டடங்களின் மாற்றங்கள் செய்யவும் தமிழ்நாடு நிர்வாக தீர்ப்பாயத்திற்கு கட்டடம் கட்டுதலும் .. | 7 |

மேற்கண்ட கட்டட பணிகளை விரைவில் துவக்கி முடிக்க எல்லாவிதமான முயற்சிகளும் எடுக்கப்பட்டு வருகிறது.

**31.5 தமிழ்நாட்டில் புதிய ஆரம்ப சுகாதார நிலையங்கள் கட்டுதல் :**

தமிழ்நாட்டில் 300 இடங்களில் ஆரம்ப சுகாதார நிலைய கட்டடங்கள் கட்டுவதற்கு ரூ.18.00 கோடிகளுக்கு அரசு ஆணை எண்417, சுகாதார மற்றும் குடும்ப நலத்துறை, நாள் 5-9-1996 அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. இவற்றில் 250 இடங்களில் பணிகள் நடைபெற்றுவருகிறது.

**31.6 உலக வங்கி நிதியுதவி திட்டத்தின்கீழ் கண்நோய்த் தடுப்பு திட்ட பணிகள் :**

உலக வங்கி நிதியுதவி திட்டத்தின் கீழ் கண்நோய்த் தடுப்பு திட்ட பணிகளுக்காக அரசு ரூ.10.66 கோடிகள் செலவில் தமிழ்நாட்டில் பல்வேறு இடங்களில் உள்ள 26 மருத்துவ மனைகளில் கண் நோய் சிகிச்சை பிரிவு கட்டடங்கள் கட்ட நிர்வாக ஒப்புதல் அளித்துள்ளது. இக்கட்டட பணிகள் உலக வங்கியின் ஒப்புதல் பெற்று விரைவில் தொடங்கப்படவுள்ளது.

**31.7 உலக வங்கி நிதியுதவியின் கீழ் நீர்வள தொகுப்பு திட்ட கட்டடப் பணிகள்:**

உலக வங்கி நிதியுதவியின் கீழ் நீர்வள தொகுப்பு திட்ட கட்டட பணிகள் ரூபாய் 52.50 கோடிகள் அளவில் தொடங்கப்படவுள்ளன.

**31.8 1997-98-ஆம் ஆண்டில் தொடங்க இருக்கும் பெரிய கட்டட பணிகள்:**

(ரூ. இலட்சத்தில்)

| | | |
|---|---|---|
| 1. | சென்னை தரமணியில் உள்ள நீர் ஆராய்ச்சி மையத்தில் நூலகம், கணிப்பொறி மையம், விரிவுரை அறை ஓய்வு அறை மற்றும் ஊர்திகள் காப்பகம் கட்டுதல் .. | 178 |
| 2. | காயிதே மில்லத் மாவட்டம் நாகப்பட்டணத்தில் பெருந்திட்ட வளாகம் அமைத்தல் .. | 250 |
| 3. | ஏ.டி. பன்னீர் செல்வம் மாவட்டம் திருவாரூரில் பெருந்திட்ட வளாகம் அமைத்தல் .. | 250 |
| 4. | தீரன் சின்னமலை மாவட்டம் கரூரில் பெருந்திட்ட வளாகம் அமைத்தல் .. | 250 |
| 5. | எம்.ஜி.ஆர். மாவட்டம், திருவள்ளூரில் பெருந்திட்ட வளாகம் அமைத்தல் .. | 250 |
| 6. | ராஜாஜி மாவட்டம் நாமக்கல்லில் பெருந்திட்ட வளாகம் அமைத்தல் .. | 250 |
| 7. | வைகை வீரன் அழகு முத்துக்கோன் மாவட்டம் தேனியில் பெருந்திட்ட வளாகம் அமைத்தல் .. | 250 |
| 8. | சென்னையில் ஐந்து அமைச்சர்கள் இல்லங்கள் கட்டும் பணி .. | 200 |
| 9. | மருத்துவக் கல்லூரிகளை மேம்படுத்துதல்— தங்கும் அறைகள், நூலகம், மின்விசிறி பொருத்துதல் அரிய பணிகள் பல்வேறு இடங்களில் .. | 378 |
| 10. | தமிழ்நாட்டில் அரசு உயர்நிலைப் பள்ளிகளுக்கு 98 இடங்களில் வகுப்பறைகள் கட்டுதல் | 398 |



(ரூ. இலட்சத்தில்)

| | | |
|---|---|---|
| 11. | தமிழ்நாட்டில் 80 உயர்நிலை பள்ளிகளுக்கு விஞ்ஞான ஆய்வு கூடங்கள் கட்டுதல் .. | 396 |
| 12. | தமிழ்நாட்டில் உள்ள கலை மற்றும் விஞ்ஞான கல்லூரிகளுக்கு கூடுதல் வகுப்பறைகள் கட்டும் பணி | 500 |
| 13. | சென்னை ஆளுநர் மாளிகையில் கொலுமண்டபம் (Darbar Hall) மற்றும் பொழுதுபோக்கு கூடம் கட்டுதல் | 189 |

**31.9 1997-98 பகுதி-2 திட்ட பணிகள்:**

| | | மதிப்பீட்டுத் தொகை (ரூபாய் இலட்சத்தில்) | நிதி ஒதுக்கீடு 1997-98 (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1. | சென்னையில் 3 அமைச்சர் இல்லங்கள் கட்டும் பணி | 134.88 | 54.00 |
| 2. | மதுரையில் கண்காணிப்புப் பொறியாளர் (மின்னியல்) அலுவலக கட்டடம் கட்டுதல் | 29.00 | 9.60 |
| 3 | (1) நாகப்பட்டினத்தில் சுற்றுலா மாளிகை கட்டுதல் | 46.70 | 18.50 |
| | (2) தேனியில் சுற்றுலா மாளிகை கட்டுதல் | 46.30 | 18.50 |
| | (3) திருவாரூரில் சுற்றுலா மாளிகை கட்டுதல் | 66.70 | 18.50 |
| 4. | (1) ராணிப்பேட்டையில் இரண்டு அறைகள் கொண்ட ஆய்வு மாளிகை கட்டுதல் | 19.00 | 7.00 |
| | (2) பாபநாசத்தில் இரண்டு அறைகள் கொண்ட ஆய்வு மாளிகை கட்டுதல் | 11.00 | 3.00 |
| 5. | ஊட்டி, திருவண்ணாமலை, வேலூர், விருதுநகர், ஈரோடு ஆகிய இடங்களில் உள்ள ஆய்வு மாளிகைக்கு ஊர்தி ஓட்டுநர் தங்கும் அறைகள் கட்டுதல் | 12.50 | 12.50 |

[1997 மார்ச் 24

# இணைப்பு 1

## நீர்வள ஆதார அமைப்பு—வடிநிலப்பகுதி வாரியாக பிரிக்கப்பட்ட விவரம்

### சென்னை மண்டலம்

| வடிநில எண் (1) | வடிநில ஆறு (2) | கிளையாறு (3) | கிளையாற்றின் கிளையாறு (4) |
|---|---|---|---|
| 1. | ஆரணியாறு | 1.1 இளம் கால்வாய் | |
| 2. | கொரட்டலையாறு | 2.1 நகரியாறு | |
| | | 2.2. நந்தியாறு | |
| | | 2.3 அக்கூறு ஆறு | |
| 3. | கூவம் | | |
| 4. | அடையாறு | | |
| 5. | பாலாறு | 5.1 கல்லாறு | |
| | | 5.2 மலட்டாறு | 5.2.1 கொட்டார்வங்கா |
| | | | 5.2.2 கொட்டார்வங்கா |
| | | 5.3 கௌண்டன்யநதி | 5.3.1 கொட்டாறு |
| | | 5.4 புண்ணியதீர்த்த நதி | 5.4.1 குண்டகல்லன் ஆறு |
| | | | 5.4.2 உத்திரகாவேரி ஆறு |
| | | 5.5 மலைகானாறு | |
| | | 5.6 பொன்னையாறு | |
| | | 5.7 செய்யாறு | 5.7.1 கரவணாறு |
| | | | 5.7.2 காட்டாறு |
| | | | 5.7.3 கமண்டலாறு |
| | | | 5.7.3.1 நந்தியாறு |
| | | | 5.7.4 கலவை மடுவு |
| | | 5.8 கிளியாறு | |
| 6. | ஓங்கூர் ஆறு | | |
| 7. | வராகநதி | 7.1 தொண்டியாறு | |
| | | 7.2 பம்பையாறு | |



1997 மார்ச் 24]

| வடிநில எண் (1) | வடிநில ஆறு (2) | கிளையாறு (3) | கிளையாற்றின் கிளையாறு (4) |
|---|---|---|---|
| 8. | மலட்டாறு | 8.1 மலட்டாறு | |
| 9. | பெண்ணையாறு | 9.1 சின்னாறு-1 | |
| | | 9.2 சின்னாறு-2 | |
| | | 9.3 மார்கண்டநதி | 9.3.1 நாச்சிகுப்பநதி |
| | | | 9.3.2 வேப்பம்பட்டி நதி |
| | | 9.4 புள்ளம்பட்டி ஆறு | 9.4.1 செம்மான் குப்பனாறு |
| | | 9.5 பாம்பாறு | 9.5.1 மட்டூர் ஆறு |
| | | | 9.5.2 பர்கூர் ஆறு |
| | | | 9.5.3 கானாறு |
| | | 9.6 வாணி ஆறு | 9.6.1 கல்லாறு |
| | | | 9.6.2 வரட்டாறு |
| | | 9.7 கல்லாறு | 9.7.1 கோவிலாறு |
| | | 9.8 பாம்பன் ஆறு | |
| | | 9.9 முசுகுந்தா நதி | |
| | | 9.10 துரிஞ்சலாறு | |
| 10. | கெடிலம் | | |
| 11. | வெள்ளாறு | 11.1 வசிஷ்டநதி | 11.1.1 ஆனைமடுவாறு |
| | | | 11.1.2 கரியகோவிலாறு |
| | | | 11.1.3 சிங்கபுர மாறு |
| | | | 11.1.4 மல்லியகரை ஆறு |
| | | | 11.1.5 மாங்கனியாறு |
| | | 11.2 கல்லாறு | 11.2.1 எட்டலாறு |
| | | | 11.2.2 சுவேதாநதி |
| | | 11.3 சின்னாறு | 11.3.1 கோனேரி ஆறு |
| | | | 11.3.2 ஏல ஊர் ஆறு |
| | | 11.4 காட்டோடை | |
| | | 11.5 மணிமுக்தாநதி | 11.5.1 கோமுகிநதி |
| | | | 11.5.2 மயூரநதி |

[1997 மார்ச் 24

## இணைப்பு-2

### திருச்சி மண்டலம்

| வடிநில எண் (1) | வடிநில ஆறு (2) | கிளையாறு (3) | கிளையாற்றின் கிளையாறு (4) |
|---|---|---|---|
| 12. காவேரி | | 12.1 சந்தான முத்து ஹல்லா | |
| | | 12.2 தொட்டஹல்லா ஆறு | |
| | | 12.3 சின்னாறு | |
| | | 12.6 பாலாறு | |
| | | 12.7 தொப்பூர் ஆறு | |
| | | 12.8 சரபங்காநதி | |
| | | 12.12 பொன்னணியாறு | 12.12.1 இருமணி முத்தாறு |
| | | 12.15 புங்காறு | |
| | | 12.14 கரைப்பட்டணாறு | |
| | | 12.16 அய்யாறு | |
| | | 12.17 அரியலூராறு | 12.17.1 கோரையாறு |
| | | 12.18 குழையாறு | |
| | | 12.19 நந்தியாறு (கிளைநதிகள்) | |
| | | 12/2 காவேரி | |
| | | 12/2-1 குடமுருட்டி | |
| | | 12/2-2 அரசலாறு | |
| | | 12/2-3 வீரசோழனாறு | |
| | | 12/2-4 விக்ரமனாறு (கிளை நதிகள்) | |
| | | 12/3 வெண்ணாறு | |
| | | 12/3-1 வெட்டாறு | |
| | | 12/3-2 வடவாறு | |
| | | 12/3-3 கோரையாறு | |
| | | 12/3-4 பாமணியாறு | |
| | | 12/3-5 பாண்டவை ஆறு | |
| | | 12/3-6 வெள்ளையாறு | |
| | | 12/1 கொள்ளிடம் (கிளைநதி) | |
| | | 12.20 ஆண்டி ஓடை | |



1997 மார்ச் 24]

| வடிநில எண் (1) | வடிநில ஆறு (2) | கிளையாறு (3) | கிளையாற்றின் கிளையாறு (4) |
|---|---|---|---|
| | | 12.21 மருதயாறு | |
| 13. அக்னியாறு | | 13.1 மகாராஜசமுத்திரம் | |
| 14. அம்புலியாறு | | | |
| 15 வெள்ளாறு | | | |
| 16. கொலுவனாறு | | | |
| 17. பாம்பாறு | | | |

## இணைப்பு-3

### பொள்ளாச்சி மண்டலம்

| வடிநில எண் (1) | வடிநில ஆறு (2) | கிளையாறு (3) | கிளையாற்றின் கிளையாறு (4) |
|---|---|---|---|
| 12. காவேரி | | 12.13 அமராவதி | 12.13.3. உப்பார் ஓடை |
| | | | 12.13.4 நல்லதங்கையாறு |
| | | | 12.13.5 வரட்டுகரை |
| | | | 12.13.6 வட்டமலைக் கரை |
| | | | 12.13.6 பெரும்பள்ளம் |
| | | | 12.13.7 ஆண்டான்கரை |
| | | | 12.13.8 நங்கஞ்சியாறு |
| | | | 12.13.8.1 ஓடைகரை |
| | | | 12.13.8.2 பரப்பலாறு |
| | | | 12.13.1 குதிரையாறு |
| | | | 12.13.2 சண்முகாநதி |
| | | | 12.13.2.1 பச்சையாறு |
| | | | 12.13.2.2 பொறந்தலாறு |
| | | | 12.13.2.3. பாலாறு |
| | | | 12.13.9 கொடகனாறு |
| | | | 12.13.10 சன்தனவர்த்தனி |

[1997 மார்ச் 24

| வடிநில எண் (1) | வடிநில ஆறு (2) | கிளையாறு (3) | கிளையாற்றின் கிளையாறு (4) |
|---|---|---|---|
| 12.9 பவானி | | 12.9.9 வறட்டுபள்ளம் | |
| | | 12.9.9.1. வழுக்குப்பாறை பள்ளம் | |
| | | | 12.9.1 மோயாறு |
| | | | 12.9.1.1 அம்பார் ஹல்லா |
| | | | 12.9.1.2 பைக்காரா |
| | | | 12.9.1.3 அவரை ஹல்லா |
| | | | 12.9.1.4 சிங்கூர் |
| | | | 12.9.1.5 கேதர் ஹல்லா |
| | | | 12.9.1.6 குன்ட ரஹட் ஹல்லா |
| | | | 12.9.1.7 குக்கல் துறை ஹல்லா |
| | | | 12.9.2 சிறுவாணி ஆறு |
| | | | 12.9.3 குந்தா |
| | | | 12.9.4 நிகலபள்ளம் |
| | | | 12.9.5 பில்லூர்பள்ளம் |
| | | | 12.9.6 தண்ணீர்பள்ளம் |
| | | | 12.9.7 பொம்மபள்ளம் |
| | | | 12.9.8 குன்டேரிபள்ளம் |
| | | 12.11 நொய்யல் | 12.11.1 சின்னார் |
| | | | 12.11.2 சங்கனூர் பள்ளம் |
| | | 12.10 கொரங்கம் பள்ளம் | 12.11.3 நல்லார் |
| | | 12.4 பாலாறு | 12.4.1 கதலா ஹல்லா |
| | | | 12.4.2 தட்ட ஹல்லா |
| | | | 12.4.3 மணியார் ஹல்லா |
| | | 12.5. பெரியபள்ளம் | |
| 34 மேற்கு நோக்கி பாயும் ஆறுகள் | | | |



1997 மார்ச் 24]

# இணைப்பு-4

## மதுரை மண்டலம்

| வடிநில எண் (1) | வடிநில ஆறு (2) | கிளையாறு (3) | கிளையாற்றின் கிளையாறு (4) |
|---|---|---|---|
| 18. மணிமுத்தாறு | | 18.1 விருகனி ஆறு | 18.1.1 பாலாறு |
| | | 18.2 திருமணிமுத்தாறு | |
| 19. கோட்டக்கரை | | 19.1 சருகணியாறுயாறு | |
| 20. வைகை | | 20.1 கோட்டகுடியாறு | |
| | | 20.2 சுருளியாறு | |
| | | 20.3 மாலுத்து ஓடை | |
| | | 20.4 வராகநதி | |
| | | 20.5 மஞ்சளாறு | 20.5.1 மருதாநதி |
| 21. உத்திரகோச மங்கையாறு | | | |
| 22. குண்டாறு | | 22.1 மரத்தனாறு | 22.1.1 கானல் ஓடை |
| | | 22.2 வேகவதி | 22.2.2 பரணையாறு |
| 23. வேம்பாறு | | | |
| 24. வைப்பாறு | | 24.1 சிவலப்பேரி | |
| | | 24.2 நீச்சப்பநதி | 24.2.1 தேவி ஆறு |
| | | 24.3 அர்ச்சுன நதி | 24.3.1 மன்னர் கோட்டை |
| | | 25.1 மலட்டார்ஓடை | |
| 25. கல்லார் | | | |
| 26. கோரம்பள்ளம் ஆறு | | | |
| 27. தாமிரபரணி | | 27.1 பாம்பார் | |
| | | 27.2 சேர்வலாறு | |
| | | 27.3 மணிமுத்தாறு | 27.3.1 பெரியாறு |
| | | | 27.3.2. கீழமணிமுத்தாறு |
| | | 27.4 கடனாநதி | 27.4.1. ராமநதி |
| | | 27.5 பச்சையாறு | |
| | | 27.6 சித்தாறு | 27.6.1 கருப்பாநதி |
| | | | 27.5.2 உப்போடை |
| 28. கரமணியாறு | | 29.1 கோம்பையாறு | |
| 29. நம்பியாறு | | | |
| 30. அனுமாநதி | | | |
| 31. பழையாறு | | | |
| 32. வள்ளியாறு | | | |
| 33. கோதையாறு | | 33.1 பரலயாறு | |

# இணைப்பு II

## பொதுப் பணித் துறை

### கட்டிடப் பணிகள் பற்றிய ஆய்வுரை-1996-97

கடந்த 1-4-94 முதல் நீர்வள மேம்பாட்டு அமைப்பு உருவாக்கப்பட்டதின் விளைவாக பொதுப்பணித் துறை கட்டிட பிரிவு "கட்டிட அமைப்பு" என்ற ஒரு தனி அமைப்பாக 1-4-96-லிருந்து இயங்குகிறது. ஏற்கனவே இருந்த கட்டிட வட்டங்கள் மற்றும் கட்டிட கோட்டங்களை மாற்றி அமைத்து 15 கட்டிட வட்டங்களில் 52 கட்டிட கோட்டங்களுடன் இந்த அமைப்பு செயல்பட ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

2. பொதுப்பணித்துறை கட்டிட அமைப்பு அரசு துறைகளான வருவாய், காவல், மருத்துவம், சட்டம், விவசாயம், விற்பனை வரி, பொது, நீதி, கால்நடை மற்றும் சிறைச்சாலை ஆகியவற்றிற்கான கட்டிடங்கள் கட்ட அத்துறையின் தேவைக்கேற்ப வடிவமைத்து கட்டுமான பணிகளை மேற்கொண்டு நிறைவேற்றுகிறது. இவையன்றி, நினைவு இல்லங்கள், ஸ்தூபிகள், சதுக்கங்கள் கட்டும் பணியையும் இவ்வமைப்பு மேற்கொள்கிறது.

3. மேலும், இக்கட்டிட அமைப்பு மத்திய மற்றும் மாநில அரசு சார்பு துறைகளான தொழிலாளர் ஈட்டுறுதி கழகம், பல்கலைக் கழகங்கள், மலைவாழ்மக்கள் மேம்பாட்டுத் திட்டம் ஆகியவற்றிற்கான கட்டிடங்கள், இந்திய மக்கள் தொகை திட்டம் 5. உலக வங்கி உதவிப் பணிகளான தமிழ்நாடு வேளாண்மை மேம்பாட்டுத்திட்டம், நகர்புற வளர்ச்சி திட்டப் பணிகள், கண்நோய் தடுப்பு மருத்துவப் பணிகள், நீர்வள மேம்பாட்டு கட்டிடப் பணிகள் ஆகிய பிரிவுகளின் கீழ் வரும் கட்டிடப் பணிகளை வைப்புநிதி மற்றும் செலுத்து தொகை பணிகளாக நிறைவேற்றுகிறது.

4. இக்கட்டிட அமைப்பு, அரசு கட்டிடங்கள், நினைவு சின்னங்கள் மற்றும் மெரினா கடற்கரையினை பராமரித்தல் போன்றவற்றையும் புயல் வெள்ள மற்றும் இயற்கை சீற்றத்தினால் ஏற்படும் அரசு கட்டிடங்களின் பாதிப்புகளை சீர் செய்யும் பணிகளையும் நிறைவேற்றி வருகிறது.





5. ஆளுநர் மாளிகை, அரசினர் தோட்டம், அமைச்சர்கள், நீதிபதிகள் மற்றும் மிகமுக்கியமானவர்கள் இல்ல கட்டிட பராமரிப்பு பணிகளையும் ஆய்வு மாளிகை, சர்க்யூட் இல்லம் பராமரித்தல் போன்ற வேலைகளையும் மற்றும் இக்கட்டிடத்திற்கு உண்டான தொலைபேசி, மின்சார கட்டணம் கட்டுவது உள்ளிட்ட பணிகள் இந்த அமைப்பால் கவனிக்கப்படுகிறது.

6. மாவட்ட வளர்ச்சி நிதிப்பணிகள், பாராளுமன்ற உறுப்பினர்களால் பரிந்துரை செய்யப்படும் அப்பகுதி மேம்பாட்டுப் பணிகள் மற்றும் மாவட்ட ஆட்சியர்களால் ஒப்படைப்பு செய்யப்படும் பணிகளையும் செய்து வருகிறது. மேலும், ஒழுக்கக்கண்காணிப்பு குழு மற்றும் நீதிமன்றத்தால் அறிவிக்கப்படுகின்ற சர்ச்சைக்குட்பட்ட சொத்துக்களின் கட்டிட மதிப்பீட்டுப் பணியை இத்துறை அலுவலர்கள் செய்துவருகிறார்கள்.

7. மேலும் இந்த கட்டிட அமைப்பினால் 1996-97 ஆம் நிதியாண்டில் ரூ.136.50 கோடிகள் செலவில் பல்வேறு அரசு துறை கட்டிடங்கள் கட்டுவதற்கும் ஏற்கனவே உள்ள அரசு கட்டிடங்களை பராமரிப்பதற்கும் இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இப்பணிகளானது வைப்பு நிதி பணிகள் திட்டப்பணிகள், திட்டம் சேராப் பணிகள், மத்திய உதவி பணிகள் மத்திய மாநில சம நிதி பங்குப் பணிகள் மற்றும் செலுத்து தொகை பணிகள் மூலம் நிறைவேற்றப்படுகிறது. 1996-97-ல் இத்துறை ரூ.80 கோடி செலவில் 650 முக்கிய பெரிய கட்டிடப் பணிகளை கட்டி முடிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. அதனில் 576 கட்டிடப்பணிகள் 28-2-97 வரை முடிவடைந்துள்ளது.

**8. உலக வங்கி உதவித் திட்டப் பணிகள் :**

**(1) தமிழ்நாடு வேளாண்மை வளர்ச்சி திட்டப் பணிகள் :**

உலக வங்கி உதவி திட்ட பணிகளின் கீழ் தமிழ்நாடு வேளாண்மைத் துறை முன்னேற்றத்திற்காக ரூ.1761 இலட்சங்கள் செலவில் 1991-92-ஆம் ஆண்டிலிருந்து ஏழு வருட திட்ட பணிகளாக செயல்பட்டு வருகிறது. இத்திட்டத்தில் 31-12-96 முடிய மொத்த செலவினம் ரூ.1675 இலட்சங்களாகும். இத்திட்டப் பணிகள் 31-3-97-க்குள் முடிவடையவிருக்கின்றன.

[1997 மார்ச் 24

**(2) உலக வங்கி உதவி திட்டத்தின்கீழ் கண்நோய் தடுப்பு திட்டப்பணிகள்**

உலக வங்கி உதவி திட்டப் பணிகளுக்காக இந்திய அரசு கடிதம் நாள் 6-5-96-ல் ரூ.10.66 கோடி செலவில் மாவட்ட தலைமை மருத்துவமனை மற்றும் தாலுக்கா மருத்துவ மனைகளில் கண் நோய் சிகிச்சை பிரிவு கட்டிடங்கள் கட்ட நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இப்பணிகள் விரைவில் எடுத்துக் கொள்ளப்பட உள்ளன.

**(3) உலக வங்கி உதவி திட்டத்தின் கீழ் நீர்வள ஆதார அமைப்பு திட்டப்பணிகள்**

உலக வங்கி நிதி உதவியின் கீழ் நீர்வள ஆதார அமைப்பு திட்ட கட்டிட பணிகளுக்காக ரூ.52.50 கோடிகள் செலவில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. பணிகள் விரைவில் துவக்கப்பட உள்ளன.

9. இவ்வமைப்பு பல்வேறு வகைப்பட்ட கட்டிடங்களை குறைந்த செலவிலும், உறுதியுள்ளதாகவும், கட்டி முடித்திட நவீன தொழில் நுட்பங்களை பயன்படுத்தி வருகிறது. சென்னை தரமணியில் நிறுவப்பட்டுள்ள கட்டிட ஆராய்ச்சி நிலையம் மேற்கண்ட நோக்கங்களை அடைய சிறப்பாக செயல்பட்டு வருகிறது.

10. மேலும் பொதுப்பணித்துறை கட்டிட அமைப்பு, மானியக் கோரிக்கை எண் 36 மற்றும் எண் 55 மூலமும் கட்டிட பணிகளை மேற்கொள்கிறது.

**10(அ). மானியக் கோரிக்கை எண் 36. பொதுப்பணிகள் கட்டிடங்கள்.**

இக்கோரிக்கை மூலம் பொதுப்பணித் துறையின்கீழ் உள்ள கட்டிடங்கள் பராமரிப்பு மேம்பாட்டு பணிகள் மற்றும் சிறப்பு பழுதுபார்ப்புப் பணிகளின் செலவினங்கள் மற்றும் இத்துறையின் கீழுள்ள கட்டிடங்களுக்கான வரி செலுத்துதல் ஆகியவை நிறைவேற்றப்படுகின்றன. 1996-97-ஆம் ஆண்டிற்கான இக்கோரிக்கையினை மொத்த ஒதுக்கீடு ரூ.50.76 கோடிகளாகும். இதில் 1996-97-ஆம் ஆண்டிற்கான பகுதி 2 திட்ட மூலதனம் இதனில் அடங்கும். பல்வேறு துறைகளின் சரிசம வீதத்தில் ஒதுக்கப்படும் (புரோரேட்டா) ஒதுக்கீடு இதனில் அடங்காது



1997 மார்ச் 24]

**10(ஆ). மானியக் கோரிக்கை எண் 55, கட்டிடங்கள் மீதான மூலதனக் கணக்கு**

ரூபாய் ஒரு இலட்சத்திற்கு மேலுள்ள பெரிய கட்டிட பணிகள் யாவும் இம்மானியக் கோரிக்கையின் கீழ் அடங்கும். 1996-97-ம் ஆண்டிற்கான இக்கோரிக்கையின் மொத்த ஒதுக்கீடு ரூ. 84.15 கோடிகளாகும். இதில் 1996-97-ஆம் ஆண்டிற்கான பகுதி.–2 திட்ட மூலதனம் அடங்கும். பல்வேறு துறைகளால் சரிசம வீதத்தில் ஒதுக்கப்படும். (புரோரேட்டா) மூலதனம் ஆகியவை இதனில் அடங்காது.

**11(அ). கீழ்க்கண்ட பெரிய கட்டிடப் பணிகள் 1996-97-ல் சிறப்பாக கட்டி முடிக்கப்பட்டுள்ளன.**

| | | ரூபாய் கோடியில் |
|---|---|---|
| 1. | சென்னை மாவட்ட ஆட்சியருக்கான கட்டிடம் கட்டுதல் | 6.95 |
| 2. | உலக வங்கி உதவியின் மூலம் அவசர சிகிச்சை பிரிவு கட்டிடங்கள் கட்டும் பணி | |
| | (அ) சென்னை எழும்பூரில் குழந்தை நல மருத்துவமனை கட்டுதல் | 1.96 |
| | (ஆ) சென்னை கீழ்ப்பாக்கம் மருத்துவமனையில் அவசர சிகிச்சை பிரிவுக் கட்டிடம் கட்டுதல். | 1.68 |
| 3. | சென்னை சேப்பாக்கத்தில் வேளாண்மை இயக்குநருக்காக கூடுதல் அலுவலக கட்டிடம் கட்டுதல் | 1.80 |
| 4. | சென்னை உயர்நீதி மன்ற வளாகத்தில் மூன்றாம் மாடி கட்டிடம் சிவில் நீதிமன்றத்திற்காக கட்டுதல் | 1.37 |
| 5. | விழுப்புரம் இராமசாமி படையாச்சியார் மாவட்டத்தில் ஏ. சாத்தனூர் கிராமத்தில் தமிழ்நாடு சிறப்பு காவல் துறைக்கான அடிப்படை வசதி கட்டிடங்கள் கட்டுதல் | 1.65 |
| 6. | தமிழ்நாட்டில் பல்வேறு இடங்களில் 10 காவல் நிலையங்கள் கட்டுதல் | 1.33 |
| 7. | தமிழ்நாட்டில் பல்வேறு இடங்களில் நீதிமன்றங்கள் மற்றும் நீதித்துறையினர்களுக்கான குடியிருப்புகள் கட்டுதல் | |
| | (11) நீதி மன்றங்கள் மற்றும் 35 குடியிருப்புகள்) | 17.20 |

[1997 மார்ச் 24

ரூபாய் கோடியில்

(ஆ) கீழ்வரும் மிகப்பெரிய கட்டிடப் பணிகள் 1996-97-ல் துரிதமாக நடைபெற்று வருகிறது.

| | | |
|---|---|---|
| 1. | திருச்சி அபிஷேகபுரத்தில் 50 படுக்கை வசதிகள் கொண்ட இ.எஸ்.ஐ. மருத்துவமனை கட்டுதல் (முடிக்கப்பெறும் நிலையில் உள்ளது) | 2.11 |
| 2. | புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் கூடுதல் கட்டிடங்கள் கட்டுதல் | 1.00 |
| 3. | சென்னை அரசினர் தோட்ட வளாகத்தில் தமிழ்நாடு தேர்வாணை குழுவிற்காக கூடுதல் கட்டிடம் கட்டும்பணி | 1.21 |
| 4. | பவானிசாகரில் அரசு அமைச்சுப் பணியாளர்கள் பயிற்சி பள்ளியில் ஆண்கள் மற்றும் பெண்களுக்காக பயிற்சியாளர் விடுதி கட்டிடம் கட்டுதல் | 1.00 |
| 5. | விழுப்புரத்தில் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் கட்டுதல் | 3.00 |
| 6. | விழுப்புரத்தில் ஆயுதம் தாங்கிய காவலர் அலுவலக கட்டிடம் கட்டுதல் | 2.00 |
| 7. | தூத்துக்குடியில் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் கட்டுதல் | 4.00 |
| 8. | அரசு உயர்நிலை பள்ளிகளுக்காக வகுப்பறைகள் தமிழ்நாட்டில் 98 இடங்களில் கட்டும் பணி | 3.98 |
| 9. | தமிழ்நாட்டில் 80 உயர்நிலை பள்ளிகளுக்கு அறிவியல் ஆய்வு கூடங்கள் கட்டுதல் | 3.96 |
| 10. | தமிழ்நாட்டில் 333 இடங்களில் உள்ள அரசு உயர்நிலை பள்ளிகளில் கழிப்பறைகள் கட்டுதல் | 2.00 |
| 11. | தமிழ்நாட்டில் கமுதி, பாப்பிரெட்டியாபட்டி பேரையூர் திருச்செந்துறை, குன்னம் மற்றும் அரவக்குறிச்சி ஆகிய இடங்களில் புதிய தாலுக்கா அலுவலக் கட்டிடங்கள் கட்டுதல் | 4.14 |



1997 மார்ச் 24]

ரூபாய் கோடியில்

| | | |
|---|---|---|
| 12. | சென்னை உயர்நீதிமன்றத்தில் கூடுதல் வக்கீல் சங்க கட்டிடம், பத்திரிகை அலுவலகம், பணிமேற் பார்வையாளர்கள் இல்லம் ஆகிய கட்டிடங்கள் கட்டும் பணி | 5.00 |

11(இ). 1996-97-க்கான பகுதி இரண்டு திட்டத்தில் ஒப்பளிப்பு செய்யப்பட்ட கீழ்க்கண்ட கட்டிடங்கள் கட்டும் பணி துரிதமாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

ரூபாய் இலட்சத்தில்

| | | |
|---|---|---|
| 1. | சென்னையில் பொதுப்பணித்துறை பணியாளர் பயிற்சி நிலையம் கட்டும் பணி | 18.39 |
| 2. | நெல்லை கட்டபொம்மன் மாவட்டம் குற்றாலத்தில் உள்ள சுற்றுலா மாளிகைக்கு தண்ணீர் விநியோக வசதி செய்வது | 4.14 |
| 3. | வடஆற்காடு அம்பேத்கார் மாவட்டம் திருப்பத்தூரில் உள்ள ஆய்வு மாளிகை மேம்பாட்டு பணி | 2.47 |

---

தமிழ்நாடு ஆவணக் காப்பக நூலகம்
216647
சென்னை-600 008

Copies can be had from the
Assistant Director,
Government Publication Depot,
816, Anna Salai,
Chennai-600 002.

©

Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Director of Stationery and Printing, Chennai-600 002.